# இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி)**

**தமிழாக்கம்:**

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

**வெளியிடுவோர்**

நஸாரத் நஷ்ரோ இஷாஅத்

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்

குர்தாஸ்பூர், பஞ்சாப்-143 516

**Tamil Translation of**

# Khatm-e-Nubuwwat ki Haqeeqat

**'Iruthi Nabiththuvam Enbathan Unmai Nilai'**

| | |
|---|---|
| Written By | : Hazrar Mirza Basheer Ahmad[ra] M.A |
| First Edition | : 2019 |
| Copies | : 1000 |
| Translated by | : Moulavi O.M.Muzzammil Ahmad H.A |
| Published By | : Nazarat Nashr-o-Isha'at<br>Sadr Anjuman Ahmadiyya, Qadian<br>Gurdaspur, Punjab - 143 516 |
| Printed at | : Fazl-e-Umar Printing Press, Qadian |

Website: www.alislam.org\tamil

Noorul Islam Toll Free Number : 1800 30102131

Tamil Toll Free Number : 1800 425 40000

பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தூய நபி (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற அந்தஸ்து | 10 |
| 2. | ஒவ்வோர் ஒளியுடனும் இருளின் நிழல் இணைந்திருக்கிறது | 11 |
| 3. | முஹம்மதிய்ய உம்மத்தில் கலீஃபாக்களின் தொடர் | 11 |
| 4. | முஜத்திதுகளின் தொடர் | 12 |
| 5. | மஸீஹுக்கு ஒப்பானவர் பற்றிய முன்னறிவிப்பு | 13 |
| 6. | இமாம் மஹ்தியின் தோற்றம் பற்றிய முன்னறிவிப்பு | 14 |
| 7. | இமாம் மஹ்தி பாரசீக வமிசத்திலிருந்து தோன்ற வேண்டியதிருந்தது | 15 |
| 8. | ஆன்மீக சூரியனின் ஆன்மீக சந்திரன் | 16 |
| 9. | கருத்து வேறுபாட்டின் உண்மை நிலை | 17 |
| 10. | கருத்து வேறுபாட்டின் மையக் கருத்து | 18 |
| 11. | நுபுவ்வத்தின் மூன்று வகைகள் | 19 |
| 12. | நுபுவ்வத்தின் வகைகள் பற்றிய மரபுப் பெயர்கள் | 22 |
| 13. | நுபுவ்வத்தின் வகைகள் பற்றி நமது மற்றும் மாற்று கருத்து கொண்டவர்களின் கோட்பாடுகள் | 24 |
| 14. | கத்மே நுபுவ்வத் பற்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆணையிட்டுக் கூறிய அறிவிப்பு | 26 |
| 15. | கத்மே நுபுவ்வத் என்பதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அளித்த விளக்கம் | 27 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 16. | கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வு காண 4 சாத்தியமான வழிமுறைகள் | 30 |
| 17. | திருக்குர் ஆனின்படி கத்மே நுபுவ்வத்திற்கான தீர்வு | 32 |
| 18. | திருக்குர் ஆனின் எந்தவொரு வசனமும் நுபுவ்வத்தின் வாசலை அடைக்கவில்லை | 33 |
| 19. | சூரா ஃபாத்திஹாவின் வலுவான சான்று | 35 |
| 20. | இறையருளைப் பெரும் நான்கு வகையினர் | 36 |
| 21. | இந்த உம்மத்தில் இறையருள்களின் எல்லா வழிகளும் திறந்திருக்கின்றன | 38 |
| 22. | ஷரீஅத்துடைய நுபுவ்வத்தின் வாசல் ஏன் தடை செய்யப்பட்டுள்ளது? | 40 |
| 23. | மஅ (உடன்) என்ற சொல்லுக்கான விளக்கம் | 47 |
| 24. | மஅ (உடன்) என்ற சொல்லை மேற்கொண்டதன் ஞானம் | 49 |
| 25. | இறைதூதர்களின் வருகை பற்றிய தெளிவான வாக்குறுதி | 51 |
| 26. | காத்தமுன் நபிய்யீன் வசனம் இறங்கியதன் பின்னணி | 55 |
| 27. | காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்தின் இரு சாத்தியக்கூறான பொருள்கள் | 57 |
| 28. | லாக்கின் (ஆனால்) என்பதன் விளக்கம் | 58 |
| 29. | காத்தம் என்ற சொல்லிற்கான விளக்கம் | 61 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 30. | இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாகி இருப்பார் | 68 |
| 31. | இந்த ஹதீஸ் பற்றி முல்லா அலி காரீ அவர்களின் விளக்கம் | 72 |
| 32. | ஹஸ்ரத் அபூபக்ர் இந்த உம்மத்தில் மிகச் சிறந்தவர் ஆவார்-ஒரு நபி வந்தாலேயொழிய | 76 |
| 33. | இறுதி காலத்தில், நுபுவ்வத் வழியில் கிலாஃபத் பற்றிய குறிப்பு | 81 |
| 34. | இந்த ஹதீஸில் நுபுவ்வத் பற்றிய குறிப்பு மறைத்து வைக்கப்பட்டதன் காரணம் | 84 |
| 35. | ஹதீஸில் வரக் கூடிய மஸீஹை நபி என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது | 87 |
| 36. | ஈஸா அல்லாஹ்வின் நபியாக வருவார் | 92 |
| 37. | முபஷ்ஷிராத் அதிகமாகக் காணப்படுவதன் மறு பெயர்தான் நபித்துவம் | 100 |
| 38. | முஹம்மதிய்ய உம்மத்தின் சிறப்பானவர்களுக்கு இறையறிவிப்பின் தொடர் | 102 |
| 39. | முபஷ்ஷிராத்தைக் கொண்ட ஒரு நபி பற்றிய முன்னறிவிப்பு | 104 |
| 40. | எனக்குப் பிறகு நபி இல்லை என்ற நபிமொழியின் பொருள் | 113 |
| 41. | பஃதீ (எனக்குப் பிறகு) என்ற சொல்லுக்கான விளக்கம் | 117 |
| 42. | ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்று | 122 |
| 43. | ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ அவர்களின் சான்று | 125 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 44. | நான் கடைசி நபியாக இருக்கிறேன் என்பதன் விளக்கம் | 129 |
| 45. | மூன்று விதமான நபி | 130 |
| 46. | இறுதி நபி மற்றும் இறுதி பள்ளிவாயில் | 133 |
| 47. | இறுதி என்பதன் பொருள் முழுமை என்பதுமாகும் | 136 |
| 48. | எனக்குப் பிறகு ஒரு நபி இருப்பாரென்றால் அவர் உமர் ஆவார் என்ற ஹதீஸின் பொருள் | 137 |
| 49. | நுபுவ்வத் முடிந்து விட்டது என்ற ஹதீஸுக்கான விளக்கம் | 142 |
| 50. | ஹஸ்ரத் முஹ்யுத்தீன் (ரஹ்) அவர்களின் நுட்பமான சான்று | 144 |
| 51. | நானே அந்த செங்கல் என்ற ஹதீஸின் விளக்கம் | 145 |
| 52. | முப்பது பொய்யர்கள் தோன்றுவார்கள் என்ற ஹதீஸின் விளக்கம் | 150 |
| 53. | முப்பது பொய்யர்களின் எண்ணிக்கை நிறைவடைந்து விட்டது | 153 |
| 54. | நுபுவ்வத் விவகாரத்தில் எப்போது தவறான எண்ணம் ஏற்பட்டது? | 159 |
| 55. | ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் நுட்பமான வழிகாட்டல் | 166 |
| 56. | ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வழிகாட்டல் | 168 |
| 57. | ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் வழிகாட்டல் | 170 |
| 58. | ஹஸ்ரத் மவ்லானா ரூமி (ரஹ்) அவர்களின் சாட்சி | 177 |
| 59. | ஹஸ்ரத் இமாம் முஹம்மது தாஹிர் அவர்களின் சாட்சி | 179 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 60. | இமாம் அலி பின் முஹம்மது சுல்தானுல் காதிரியின் சான்று | 181 |
| 61. | ஹஸ்ரத் முஜத்திது அல்ஃபு ஸானீ (ரஹ்) அவர்களின் சான்று | 182 |
| 62. | ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) அவர்களின் சான்று | 183 |
| 63. | ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது காஸிம் நானோத்வி அவர்களின் சாட்சி | 184 |
| 64. | இறுதி காலத்தில் தோன்றும் மஸீஹ் நுபுவ்வத்தின் அந்தஸ்தில் இருப்பார் - இமாம் சுயூத்தி | 189 |
| 65. | அல்லாமா இக்பால், மவ்தூதி ஆகியோரின் சாட்சி | 195 |
| 66. | வானம், பூமி ஆகியவற்றின் வலுவான சாட்சி | 196 |
| 67. | எந்தக் கொள்கை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு ஏற்றதாகும்? | 198 |
| 68. | இக்கால முஸ்லிம்களின் கொள்கை | 199 |
| 69. | அஹ்மதிகளின் கொள்கை | 199 |
| 70. | நுபுவ்வத் என்றால் நமது கருத்து மற்ற முஸ்லிம்களிடம் இருக்கும் அந்த கருத்து அன்று | 202 |
| 71. | வாதத்தின் சுருக்கம் | 204 |
| 72. | பைஅத்தின் நிபந்தனைகள் | 209 |

## நண்பர்களே! இறைவனுக்காக, படைப்பினங்களின் தலைவர் முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்காக ஒரு பார்வை!

அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக இக்காலத்தில் பரப்பப்பட்டுள்ள தவறான எண்ணங்களில் அநேகமாக அதிகம் தீங்கை உருவாக்கும் தவறான எண்ணம் அஹ்மதிய்யா ஜமாஅத் கத்மே நுபுவ்வத்தை மறுக்கிறது; மேலும் இந்த ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை எத்தகைய நபி என ஏற்றுக் கொள்கிறது என்றால் அதனால் ‘எனக்குப் பிறகு நபி இல்லை’ ‘ நான் கடைசி நபியாக இருக்கிறேன்’ ஆகிய ஹதீஸுகளின் கருத்து பொய்யானதாகி விடுகிறது என்ற அவதூறுடன் தொடர்புடையதாகும். ஆக, அனைத்துலக தலைவரும், பெருமைக்குரியவரும், காத்தமுன் நபிய்யீன் ஆகவும் இருக்கும் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் காலகட்டத்தை முடித்து விட்டு ஒரு புதிய மார்க்கத்திற்கான, புதிய தூதுத்துவத்திற்கான அடிக்கல் நாட்டப்படுகிறது என்று அவதூறு கூறப்படுகிறது. இந்த நூல் முழுக்க முழுக்க இந்த பொய்யான குற்றச்சாட்டையும் முழுக்க முழுக்க அடிப்படையற்ற அவதூறையும் நீக்கும் நோக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. பஞ்சாபில் சென்றகால நெருக்கடியான நிலைமையின் காரணமாக கவனத்தில் கணிசமான சீர்குலைவு ஏற்படும் நிலை உருவாகி இருந்தது. மேலும் போதுமான அளவுக்கு ஒற்றுமை இல்லாதிருந்தது. ஆயினும் இந்த நூலில் இந்த விவகாரம் தொடர்பான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகள், எங்களின் கொள்கைகளுக்கான சான்றுகள் அந்த சான்றுகளுக்கான ஞானங்கள் ஆகியவற்றைப் புரிவதற்கு தேவையான அனைத்து அவசியமான அம்சங்களும் இறைவனின் அருளால் சுருக்கமாக வந்து விட்டன என நான் உறுதி கொள்கிறேன்.

ஆனால் எந்த ஒரு சான்றும் அது எந்த அளவுக்கு ஒளிமிக்கதாகவும், உறுதி மிக்கதாகவும் இருந்தாலும் ஒருவர் தனது உள்ளம் மற்றும் மூளையின் ஜன்னல்களை திறந்து வைத்து எந்த பழித்துரைப்பவரின் பழித்துரைத்தலுக்கும் அஞ்சாமல் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகாத வரை எந்தவொரு மனிதரின்

உள்ளத்திலும் அது இடம்பிடிக்க முடியாது என்பது வெளிப்படையானதாகும். எனவே இந்த நூல் சென்றடைகின்ற, உண்மையை நாடுகின்ற ஒவ்வொரு மனிதரிடமும் கம்பீரமிக்க இறைவன் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட ரஸூல் (ஸல்) அவர்களை முன்னிறுத்தி இந்த நூலை எழுதுகின்ற எளியவன் வேண்டுவது என்னவெனில், அவர் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை இதை விருப்பு வெறுப்பின்றி படிக்க முயற்சி செய்ய வேண்டும் . அத்துடன் இந்த நூலின் கருத்து உண்மையையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்றால் இதை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவாயாக என இறைவனிடம் கையேந்தி துஆ செய்தும் வாருங்கள். ஏனெனில் உள்ளத்தின் நிம்மதிக்கான திறவுகோல் இறைவனிடம் மட்டுமே இருக்கிறது. மேலும் இந்த எளியவன் அவன் பக்கமே திரும்புகிறேன். வாசகர்களையும் திரும்புமாறு அழைப்பு விடுக்கின்றேன். வநிஃமல் மவ்லா வநிஃமன் நஸீர். (அவனே மிகச் சிறந்த பாதுகாவலனும் மிகச் சிறந்த உதவியாளனும் ஆவான்).

எளியவன்

**மிர்ஸா பஷீர் அஹ்மது**

30.04.1953

# இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## தூய நபி (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற அந்தஸ்து

பலவீனமான மனிதனை இந்த உலக அண்ட சராசரங்களின் மையப் புள்ளியாகக் குறிப்பிட்டு அவனுக்கு படைப்பினங்களிலேயே மிகச் சிறந்த படைப்பினம் என்ற அந்தஸ்தை வழங்கிய அந்த கண்ணியமிக்க, மேலான இறைவனுக்கே எல்லாப் புகழும் உரியது! பின்னர் மனிதனுடைய நேர்வழிக்காக இறை தூதுத்துவத்தை தொடரச் செய்து, நமது எஜமானரும், நபிமார்களில் பெருமைக்குரியவரும், தலை சிறந்தவரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் (என் உயிர் அன்னாருக்கு அர்ப்பணமாகட்டுமாக) அவர்களிடம் நுபுவ்வத்தின் முழுமைத் தன்மைகளை முன்னவர்களிலோ, பின்னவர்களிலோ எந்த மனிதனும் அடைய இயலாத உச்ச கட்ட உயர்வு வரை சென்றடைய வைத்தான். அவர் உலகிற்கு ஒளி தரும் சூரியனாக விளங்கினார். அவரிடத்தில் இறை ஒளிகளின் தொகுப்பு தனது முழுமையை எட்டி விட்டது. மேலும் அந்த ஒளி தரும் சூரியனின் ஒளி மறுமை வரைக்கும் மனித குலத்திற்கு நேர்வழிக்கான வழிகோலாக விளங்கியது! *அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ பாரிக் வ ஸல்லிம். வப் அஸ்ஹு மகாமம் மஹ்மூத னில்லதீ வஅத்தஹு.*

(பொருள்: அல்லாஹ்வே! முஹம்மது அவர்களின் மீது நீ அருளை வழங்குவாயாக. மேலும் அவர்கள் மீது பேரருள் புரிவாயாக. மேலும் நீ அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியின்படி, புகழ் பெற்ற அந்தஸ்தில் அவர்களை நிலைபெறச் செய்வாயாக.)

## ஒவ்வோர் ஒளியுடனும் இருளின் நிழல் இணைந்திருக்கிறது !

ஒவ்வோர் ஒளியுடனும் இருள் இணைந்திருப்பது போன்று, ஞானம் மிக்கவனும், மிக்க அறிந்தவனுமாகிய இறைவன், வானவர்கள் எனும் ஒளிமயமானவர்களுடனும் இப்லீஸ் எனும் கருப்பு நிழலை தொடர்ந்து வைத்துள்ளான். ஒவ்வொரு பகலுக்குப் பிறகும் இரவு வருவது போன்று நமது எஜமானர் (ஸல்) அவர்களின் ஒளிமிக்க சூரியன் எல்லா காலத்திற்கும்,எல்லா சமுதாயங்களுக்கும் ஒளியை வழங்குவதற்காக உதயமானது; எனினும் இறைவன் நேர்வழிக்கான தனது தொன்மையான சட்டத்தின்படி, அன்னார் (ஸல்) அவர்களின் அந்த நிரந்தர கால கட்டத்திலும் மக்களின் பேறிழந்த தன்மையின் காரணமாக அவ்வப்போது இருள் மற்றும் இருண்ட காலங்கள் வந்து கொண்டிருக்கும் என்பதை நிர்ணயித்திருந்தான். மேலும் இந்த இருள் சூழ்ந்த நாட்களிலும் என் இறைவன் என் உம்மத்தை மறந்து விட மாட்டான்; மாறாக, நேர்வழி எனும் எனது சூரியனிடமிருந்து பிரதிபலிக்கும் ஒளியின் மூலமாக தேவைக்கேற்றபடி, ஆன்மீக சந்திரனை உருவாக்கிக் கொண்டே செல்வான்; அவர்களில் சிலர் சந்திரனின் முதல் இரவு பிறையான ஹிலாலைப் போன்று இருப்பார்கள்; இன்னும் சிலர் அதைவிடப் பெரியவர்களாகவும், மேலும் சிலர் அதை விடப் பெரியவர்களாகவும் இருப்பார்கள்; மேலும் சிலர் 14-ஆம் இரவின் ஒளிமிக்க சந்திரனைப் போன்று முழுமையான ஒளிமிக்கவர்களாக விளங்குவார்கள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்கு நற்செய்தி வழங்கிச் சென்றுள்ளார்கள். எப்படியிருந்த போதிலும் இந்த சிறிய, பெரிய சந்திரன்கள் அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) எனும் சூரியனைச் சுற்றியே வலம் வரக் கூடியவர்களாக இருப்பார்கள்!

## முஹம்மதிய்ய உம்மத்தில் கலீஃபாக்களின் தொடர்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலமாகவே இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். (அதன் கருத்து மொழியாக்கம் இதுவாகும்):

وَعَدَ اللّٰهُ الَّذِينَ آمَنُوا مِنكُمْ وَعَمِلُوا الصَّالِحَاتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْأَرْضِ
كَمَا اسْتَخْلَفَ الَّذِينَ مِن قَبْلِهِمْ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَىٰ لَهُمْ
وَلَيُبَدِّلَنَّهُم مِّن بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا يَعْبُدُونَنِي لَا يُشْرِكُونَ بِي شَيْئًا وَمَن كَفَرَ
بَعْدَ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الْفَاسِقُونَ ○

முஹம்மதிய்ய உம்மத்தைச் சேர்ந்த மக்களே! உங்களில் முழுமையான நம்பிக்கை கொண்டு, உயர்ந்த செயல் செய்கின்றவர்களை, உங்களுக்கு முன்னுள்ள நபிமார்களின் சமுதாயங்களில் கலீஃபாக்களை நியமித்தது போன்று, உங்களையும் உலகத்தில் மார்க்கத் தொண்டிற்காக கலீஃபாக்கள் ஆக்குவதாக அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின்றான். மேலும் அல்லாஹ் அந்த கலீஃபாக்கள் மூலமாக அவர்களுக்காக அவன் விரும்பிய இஸ்லாம் மார்க்கத்தை உலகில் உறுதியாக்கி விடுவான். மேலும் அவர்களின் அச்ச நிலையை அமைதி நிலையாக மாற்றி விடுவான். இந்த தூய கலீஃபாக்கள் என்னையே வணங்குவார்கள். மேலும் எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். ஆனால் இந்த ஏற்பாடு இருந்தபோதிலும் எவர் என்னை நிராகரிப்பார்களோ, நன்றிகெட்ட வழியை மேற்கொள்வாரோ அவர் இறைவனிடத்தில் வாக்குமீறியவராகக் கருதப்படுவார்.'' *(திருக்குர்ஆன் 24:56)*

## முஜத்திதுகளின் தொடர்

இந்தக் குர்ஆன் வசனத்தின் விளக்கமாக நமது எஜமானர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

اِنَّ اللّٰهَ يَبْعَثُ لِهٰذِهِ الْاُمَّةِ عَلٰى رَأْسِ كُلِّ مِائَةِ سَنَةٍ مَنْ يُّجَدِّدُ لَهَا دِيْنَهَا

*" இன்னல்லாஹ யப்அஸு லிஹாதிஹில் உம்மத்தி அலா ரஃஸி குல்லி மிஅதி ஸனதின் மன்ய் யுஜத்திது லஹா தீனஹா."*

அதாவது, இறைவன் என் உம்மத்திற்காக ஒவ்வொரு

நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு சீர்திருத்தவாதியை எழுப்புவான்; அவர் இந்த மார்க்கத்தை புதுப்பித்து, இதற்கு இடைப்பட்ட காலத்தில் சீர்குலைந்து போன முஸ்லிம்களின் கொள்கைகளையும், செயல்களையும் சீர்திருத்துவார். *(அபூ தாவூது. தொகுதி 2 பாபுல் மலாஹிம்)*

## மஸீஹுக்கு ஒப்பானவர் பற்றிய முன்னறிவிப்பு

பொதுவான முஜத்திது (சீர்திருத்த வாதி)கள் தவிர, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட இருண்ட காலத்தைப் பற்றியும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதில் அசாதாரணமான தஜ்ஜாலிய ஃபித்னாக்கள் (குழப்பங்கள்) வெளிப்படுவது விதிக்கப்பட்டிருந்தது. மேலும் மாபெரும் ஃபித்னாவை (குழப்பத்தை) அகற்றுவதற்கு மாபெரும் சீர்திருத்தவாதியின் தேவையும் இருக்கிறது! எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் காலத்தில் ஒரு மகோன்னதமான முஜத்திது (சீர்திருத்தவாதி) அதாவது ஈஸா மஸீஹுக்கு ஒப்பான ஒருவர் வருவார் என்ற முன்னறிவிப்பையும் செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

وَالَّذِيْ نَفْسِيْ بِيَدِهٖ لَيُوْشِكَنَّ اَنْ يَّنْزِلَ فِيْكُمُ ابْنُ مَرْيَمَ حَكَمًا عَدْلًا
فَيَكْسِرُ الصَّلِيْبَ وَ يَقْتُلُ الْخِنْزِيْرَ وَ يَضَعُ الْجِزْيَةَ... كَيْفَ اَنْتُمْ اِذَا
نَزَلَ ابْنُ مَرْيَمَ فِيْكُمْ وَاِمَامُكُمْ مِنْكُمْ

***"வல்லதீ நஃப்ஸீ பியதிஹீ லயூஷிகன்ன அன்ய் யன்ஸில ஃபீக்குமுப்னு மர்யம ஹகமன் அத்லன். ஃபயக்ஸிருஸ் ஸலீப வ யக்துலுல் கின்ஸீர வ யழவுல் ஜிஸ்யத்த............கய்ஃப அன்த்தும் இஸா நஸலப்னு மர்யம ஃபீக்கும் வ இமாமுக்கும் மின்க்கும்."*** *(சஹீஹ் புகாரி. கிதாபு பதயில் கல்க். பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம்)*

அதாவது, ''எவன் கையில் என் உயிர் உள்ளதோ அ(ந்த இறை)வன் மீது ஆணையாக! மஸீஹிப்னு மர்யம் உங்கள் மத்தியில் கண்டிப்பாக (தமக்கு ஒப்பான ஒருவர் மூலமாக) தோன்றுவார். அவர் எல்லா மார்க்க கருத்து வேறுபாடுகளுக்கும் தீர்ப்பளிப்பவராக ஆகி தீர்ப்பு கூறுவார். அவரது தீர்ப்பு உண்மை மற்றும் நீதியின் தீர்ப்பாக இருக்கும். அவர் சிலுவை ஃபித்னா (குழப்பம்) வலுவுற்றிருக்கும் காலத்தில் தோன்றுவார். மேலும் அவர் அந்த ஃபித்னாவை

(குழப்பத்தை) தூள் தூளாக்கி விடுவார். மேலும் அக்காலத்தில் பன்றிகளின் அசிங்கங்களும், அசுத்தங்களும் உலகத்தில் மேலோங்கியிருக்கும். மஸீஹ் அந்த அசிங்கமானவர்களை அழித்து விடுவார். ஆனால் இந்த அனைத்து பணிகளும் ஆதாரங்கள், சான்றுகள் மற்றும் ஆன்மீக அடையாளங்கள் ஆகியவற்றின் மூலமாக நடைபெறும். ஏனெனில் மார்க்கப் போரும், ஜிஸ்யாவும் அக்காலத்தில் இல்லாமற் போய்விடும்.........'' *( தமிழாக்கம் புகாரி. பாகம் 2 பக்கம் 1381. ஹதீஸ் எண்: 3448 ரஹ்மத் பதிப்பகம் காண்க).*

“மஸீஹ் உங்கள் மத்தியில் தோன்றும் போது உங்களின் நிலை எவ்வளவு நன்றாக இருக்கும்! மேலும் அவர் உங்களிலிருந்தே தோன்றி உங்களுக்கு இமாமாக இருப்பார்.'' *( தமிழாக்கம் புகாரி. பாகம் 2 பக்கம் 1382 ஹதீஸ் எண்: 3449 காண்க).*

## முஹம்மத் (ஸல்) அவர்களின் நிழலாகிய இமாம் மஹ்தியின் தோற்றம் பற்றிய செய்தி

இதே முன்னறிவிப்பின் இன்னோர் அம்சத்தை எடுத்துக் கூறியவாறு இறைவன் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُو عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ
وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِن كَانُوا مِن قَبْلُ لَفِي ضَلَالٍ مُّبِينٍ ۝
وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ

இறைவன் அரபியர்களின் மத்தியில் அவர்களிலிருந்தே தனது ஒரு தூதரை அனுப்பினான். அவர் அவர்களுக்கு இறைவனின் வசனங்களைப் படித்துக் காட்டுகிறார். அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார். வேதத்தையும், ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றார். அவர்கள் இதற்கு முன் மிகத் தெளிவான வழிகேட்டில் இருந்தனர். மேலும் இதுவரை இவர்களுடன் சேராத பின்னவர்கள் மத்தியிலும் ஒருவரை எழுப்புவான். (திருக்குர்ஆன் 62:3,4 காண்க)

அந்தப் பின்னவர்களின் ஜமாஅத், இன்னும் உலகில் தோன்றி சஹாபிகளின் ஜமாஅத்துடன் இணையவில்லை என்றாலும், இனி ஒரு காலத்தில் கண்டிப்பாக வெளிப்படும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## மஸீஹ் மற்றும் மஹ்தி பாரசீக வம்சத்திலிருந்து தோன்ற வேண்டியதிருந்தது !

புகாரியின் ஒரு ஹதீஸில் வருகிறது. மேலே குறிப்பிட்ட, சூரா ஜுமுஆவின் இந்த வசனங்கள் இறங்கியபோது ஒரு நபித்தோழர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த ஆகரீன் (பின்னவர்கள்) என்பவர்கள் யார்? எனக் கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது நெருக்கமான சஹாபியாகிய பாரசீகத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் ஸல்மான் அவர்களின் தோள் மீது கை வைத்தவாறு கூறினார்கள்:

لَوْ كَانَ الْإِيمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهُ رَجُلٌ مِّنْ هٰؤُلَاءِ

*"லவ் கானல் ஈமானு இந்தஸ் ஸுரய்யா லனாலஹு ரஜுலுன்ம் மின் ஹாவுலாயி."*

அதாவது, "ஒரு காலத்தில் ஈமான் உலகத்திலிருந்து மறைந்து கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் இந்த பாரஸீக வம்சத்திலிருந்து ஒருவர் அதைத் திரும்பக் கொண்டு வருவார்." ***(புகாரி கிதாபுத் தஃப்ஸீர் பாபு தஃப்ஸீர் சூரா ஜுமுஆ)***

மேலும் இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

سَلْمَانُ مِنَّا أَهْلِ الْبَيْتِ

*"ஸல்மானு மின்னா அஹ்லில் பைத்."*

அதாவது, பாரசீகத்தைச் சேர்ந்த ஸல்மான் நம்மைச் சேர்ந்தவர். அதாவது நமது அஹ்லே பைத்தைச் சேர்ந்தவர். ***(திப்ரானீ கபீர் மற்றும் முஸ்தத்ரிக் ஹாகிம் -ஜாமிவுஸ் ஸகீரில்)***

இந்த ஹதீஸில், வரக் கூடிய மஸீஹ், மஹ்தி பாரசீக வம்சத்திலிருந்து தோன்றுவார் என்பது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் மஹ்தியைப் பற்றி, அவர் அஹ்லே பைத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்ற இன்னொரு முன்னறிவிப்பும் நிறைவேறி விட்டது.

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

## ஆன்மீக சூரியனின் ஆன்மீக சந்திரன்

எப்படியிருப்பினும், முஹம்மதிய்ய உம்மத்தில் ஆன்மீக கலீஃபாக்கள் தோன்றுவது தொன்றுதொட்டே நியமிக்கப்பட்டு விட்டிருந்தது என்பது இந்த திருக்குர்ஆன் வசனங்களிலிருந்தும், இந்த ஹதீஸுகளிலிருந்தும் மிக உறுதியாக நிரூபணமாகின்றது. மேலும் இந்த பௌதீக உலகில் இறைவனால் உருவாக்கப்பட்ட சந்திரன், அவனுடைய சூரியனின் ஒளியிலிருந்தே ஒளியைப் பெற்று பூமியை ஒளிமயமாக்குவது போன்று, அந்த எல்லா கலீஃபாக்களும் தத்தமது அந்தஸ்திற்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளியிலிருந்தே ஒளியைப் பெற்று உலகத்தை ஒளியூட்ட வேண்டியிருந்தது. பின்னர் பல்வேறு இரவுகளின் சந்திரன் பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட ஒளிகளை எடுத்துக் கொண்டு உதயமாவது போன்றே ஆன்மீக உலகிலும் நமது ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடமிருந்து ஒளியினைப் பெறுகின்றவர் களுக்கும், அன்னாரைச் சுற்றி வருபவர்களுக்கும் பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட ஒளிகள் நியமிக்கப்பட்டிருந்தன. நமது நபி கரீம் (ஸல்) அவர்களின் எல்லா கலீஃபாக்களும், அனைத்து முஜத்திதுகளும் இறைவனின் அருளால் ஆன்மீகசந்திரனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் என்பது நமது ஈமான் ஆகும்; மேலும் நாம் அவர்கள் அனைவரையும் உளப்பூர்வமான கண்ணியத்துடனும், உளப்பூர்வமான கொள்கைப் பிடிப்புணர்வோடும், உளப்பூர்வமான நேசத்தின் பார்வையோடும் பார்க்கின்றோம். ஆயினும் எந்த சந்திரன் 14-ஆம் நூற்றாண்டில் உதயமானதோ அதுதான் தனது சூரியனின் வடிவத்தை மேற்கொண்டவாறு அதன் புறமிருந்து நிழலான நுபுவ்வத்தின் ஆடையை பெற்ற பத்ரே முனீர் எனும் ஒளிமயமான முழு நிலாவாகும்! மேலும் இங்கிருந்துதான் நமக்கும் நமது எதிரிகளுக்கும் கருத்து வேறுபாடு ஆரம்பமாகின்றது.

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கும் பிற முஸ்லிம்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாட்டின் உண்மை நிலை

இந்த கருத்து வேறுபாட்டின் உண்மை நிலை என்னவெனில், நமது எதிரிகள் அதாவது இக் காலத்தின் மவ்லவி சாஹிபுகள் கூறுவதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) எனும் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று முதல் இரவின் பிறை ஆகலாம்; இரண்டாம் பிறை ஆகலாம்; மூன்றாம் பிறை ஆகலாம். எதுவரையென்றால், 11-ஆவது, 12-ஆவது, 13-ஆவது பிறையாகக் கூட ஆகலாம். ஆனால் ஆக முடியாதென்றால், அது 14-ஆவது பிறைதான்! ஏனெனில், 14-ஆம் இரவுப் பிறை தனது சுற்று வட்டத்தை முழுமை செய்து விட்டு, சூரியனின் வடிவத்தைப் பெற்று விடுகிறது.மேலும் அப்படிப்பட்ட சந்திரன் உதயமாவதில் இறைவனின் சூரியனுக்கு அவமதிப்பாகும்.

அந்தோ! ஒளியை இருளாகவும், சிறப்பை குறையாகவும், கண்ணியத்தை கண்ணியக் குறைவாகவும் கருதுவது எவ்வளவு அபத்தமான சிந்தனையாகும்!! தத்தளிக்கின்ற நமது இந்த நண்பர்களின் கண்களை அல்லாஹ் திறப்பானாக. இந்த பௌதீக உலகில் 14-ஆம் இரவில் தோன்றும் முழு நிலவு சூரியனின் கண்ணியக் குறைவுக்குக் காரணமாக இருக்கிறதா என்ன? அப்படி இருக்கும்போது - நமக்கு நன்மை செய்யும்(?) இந்த நண்பர்கள் ஆன்மீக உலகில் சந்திரன் தோன்றுவதை மட்டும் சூரியனுக்கு ஏற்படும் கண்ணியக் குறைவாகக் கருதுகிறார்களே!

சகோதரர்களே! கேளுங்கள்; பாருங்கள். சந்திரன் சூரியனைப் பின்பற்றிச் செல்லும்போது - அது சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுக் கொண்டிருக்கும்போது - அது சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கும்போது அதன் சிறப்பு அந்த சூரியனின் சிறப்பே ஆகும்; சந்திரனின் சொந்த சிறப்பு அல்ல. ஏனெனில் அது நிழல்தான்; அசல் அல்ல! கட்டுப்பட்டதுதான்; சுதந்திரமானது அல்ல!! பிறகு, சூரியனின் அதிக சிறப்பு முதலாவது பிறையையும், இரண்டாவது பிறையையும், மூன்றாவது பிறையையும் தோற்றுவிப்பதில் இருக்கிறதா? அல்லது சூரியனின் ஒளியையே எடுத்துக் கொண்டு அதன் வடிவத்திலேயே தோன்றுகின்ற தனது அதிகபட்ச ஒளியுடன் முழு உலகையும் ஒளிமயமாக்குகின்ற 14-ஆவது பிறையை தோற்றுவிப்பதில் இருக்கிறதா? என்பதையும் சிந்தியுங்கள்; புரியுங்கள்.

### இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## கருத்து வேறுபாட்டின் மையக் கருத்து

எப்படியிருந்த போதிலும் இதுதான் மையக் கருத்தாகும். இதன் ஆழத்திலேயே இன்றைய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கும், இக் காலத்தின் பிற பொது முஸ்லிம்களுக்கும் கருத்து வேறுபாடு மையம் கொண்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்துடைய நபியோ, ஷரீஅத் இல்லாத நபியோ, நிழலான நபியோ, நிரந்தரமான நபியோ, பின்பற்றக் கூடிய நபியோ, சுதந்திரமான நபியோ வர முடியாது என நமது எதிர்தரப்பு மவ்லவிமார்கள் கூறுகின்றனர்.

(நமது எதிர்தரப்பினர் தமது கொள்கைக்கு மாற்றமாகவே ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை வானத்திலிருந்து இறக்கி அவர்களுடைய நுபுவ்வத்தின் அரியணையை எந்நிலையிலும் நிலைநிறுத்த விரும்புகின்றனர்.)

இதற்கு நேர் மாற்றமாக நமது கொள்கை என்னவெனில், சந்தேகமின்றி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத் கடைசி ஷரீஅத்துதான். மேலும் அன்னாருக்குப் பிறகு எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியோ அல்லது சுதந்திரமான நபியோ ஒருபோதும் வர முடியாது. மேலும் இந்த வாசல் மறுமை வரை அடைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் 14-ஆம் இரவின் சந்திரன், சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று, சூரியனைப் பின்பற்றி சூரியனுடனேயே இணைந்து தோன்றுவது போன்றே , ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று அன்னாரின் நிழலாக மாறி, அன்னாரின் ஷரீஅத்திற்கு தொண்டு செய்பவராக மாறி நுபுவ்வத்திற்கான சிறப்புகளைப் பெற முடியும் என்பதாகும். அத்தகைய சந்திரன் தோன்றுவதை எந்த ஓர் அறிவுள்ள மனிதரும் சூரியனுக்கு அவமரியாதை எனக் கருத முடியாது. இன்னும் சொல்லப்போனால், இந்த சந்திரன் சூரியனின் முழுமைத்தன்மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இந்த சந்திரன் சூரியனின் நிழலேயாகும்; அசல் அல்ல. சூரியனைப் பின்பற்றக் கூடியதேயாகும்; சுதந்திரமானதல்ல.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## நுபுவ்வத்தின் மூன்று வகைகள்

இந்த அறிமுக உரைக்குப் பிறகு, கத்மே நுபுவ்வத்தின் விளக்கத்துடனும், தெளிவுடனும் தொடர்புடைய உண்மையான கருத்தின் பக்கம் வருகின்றேன். திருக்குர்ஆனிலிருந்தும், ஹதீஸுகளிலிருந்தும் நிரூபணமாவதைப் போன்று, நபிமார்கள் மூன்று வகைப்படுவர் என்பது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கையாகும். வரலாறும் இதற்கு சாட்சி பகர்கின்றது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

**ஒன்று,** இறைவன் புறமிருந்து ஷரீஅத்தைக் கொண்டு வருகின்ற நபி. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தவ்ராத் எனும் ஷரீஅத்தைக் கொண்டு வந்தார்கள். அல்லது நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் (என் உயிர் அவருக்கு அர்ப்பணமாகட்டுமாக)திருக்குர்ஆன் எனும் ஷரீஅத்துடன் அனுப்பப்பட்டார்கள். இத்தகைய நபிமார்கள் ஷரீஅத்தைக் கொண்ட நபி என்று அழைக்கப் படுகின்றார்கள்.

**இரண்டவது வகை நபி**, எந்தவொரு புதிய ஷரீஅத்தையும் கொண்டு வருவதில்லை; மாறாக, அவர்கள் ஏதாவது முந்தைய ஷரீஅத்திற்கு தொண்டு செய்வதற்காக அனுப்பப்படுகிறார்கள். ஆயினும் அவர்களின் நுபுவ்வத் சுதந்திரமான நுபுவ்வத்தாக இருக்கின்றது; அது அவர்களுக்கு எந்தவொரு முந்தைய நபியைப் பின்பற்றியதன் காரணத்தினால் கிடைப்பதில்லை. மாறாக, அது அவர்களுக்கு இறைவன் புறமிருந்து நேரடியாகக் கிடைக்கின்றது. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் தாவூது (அலை), ஹஸ்ரத் சுலைமான் (அலை), ஹஸ்ரத் ஸகரிய்யா (அலை), ஹஸ்ரத் யஹ்யா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை) ஆகியோர் தோன்றினார்கள். திருக்குர்ஆன், தவ்ராத், இஞ்சீல் ஆகியவற்றிலிருந்து நிரூபணமாவதைப் போன்று, இந்த எல்லா நபிமார்களும் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தைப் பின்பற்றுபவர்களாக நிச்சயம் இருந்தனர்; அதற்கு தொண்டு செய்வதற்காக அனுப்பப்பட்டனர்.அவ்வாறு இருந்தபோதிலும் அவர்கள் சுதந்திரமான நபியாக இருந்தனர்.

ஏனெனில் அவர்கள் நுபுவ்வத்தைப் பெறுவதில், ஹஸ்ரத் மூஸா

(அலை) அவர்களைப் பின்பற்றுவதுடன் எவ்வித சம்பந்தமும் இருந்ததில்லை! மாறாக, அவர்கள் இந்த அருட்கொடையை இறைவன் புறமிருந்து நேரடியாக தமது சொந்த தகுதியின் அடிப்படையில் பெற்றனர். மேலும் அவர்கள் மூஸாவின் ஷரீஅத்திற்குத் தொண்டாற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட்டனர். இத்தகைய நபிமார்கள் ஷரீஅத்தைக் கொண்டிராத வர்களாக இருந்தாலும் அவர்கள் சுதந்திரமான நபி என அழைக்கப்பட்டனர். இதன் காரணமாகத்தான் அத்தகைய நபிமார்கள் தமது முந்தைய ஷரீஅத்தைக் கொண்ட நபியைப் பின்பற்றுபவராக இருந்தாலும், அவருடன் யாதொரு தொண்டு மனப்பான்மையுடன் கூடிய தொடர்பு ஏதும் இருப்பதில்லை!(இது குறிப்பிடத் தகுந்த ஒரு நுண்ணிய கருத்தாகும்; இதனை நினைவில் கொள்ள வேண்டும்.) உதாரணமாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தின் கீழ் உள்ளவராக இருந்தபோதிலும், அவருக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் எந்தவொரு சிறப்பான நேசமோ, கொள்கைப் பிடிப்பான ஓர் ஈடுபாடோ தென்படுவதில்லை.மாறாக, அவர்களின் விவகாரம் எப்படி தென்படுகிறதென்றால்,உதாரணமாக, ஒரு மாவட்டத்தின் ஒரு மாஜிஸ்ட்ரேட்டை அல்லது E.A.C - ஐ தேவைக்கேற்றபடி வேறொரு மாவட்டத்திற்கு மாற்றி, அந்த மாவட்டத்தின் டிபுடி கமிஷனரின் கீழ் தொண்டு செய்ய வைப்பதைப் போன்று இருக்கிறது.

**மூன்றாவது வகை நபி,** ஷரீஅத்தைக் கொண்டவராகவும் இருப்பதில்லை; மேலும் அவர் யாதொரு நிரந்தர தகுதியைப் பெற்றவாறு எந்தவொரு முந்தைய நபியைப் பின்பற்றாமல் நேரடியாக நுபுவ்வத்தின் அருட்கொடையைப் பெறுவதுமில்லை. மாறாக, அவருடைய நுபுவ்வத், அவர் பின்பற்றிய நபியின் நிழலாகவும், அவருடைய பிரதி பிம்பமாகவும், அவருடைய பகுதியாகவுமே இருக்கிறது! அதாவது, பின்பற்றத் தகுந்த அந்த நபியைப் பின்பற்றியதன் விளைவாக அவரிடமிருந்தே அருளைப்பெற்று அவருடைய ஒளியிலிருந்தே ஒளியினைப் பெற்று நுபுவ்வத்தின் அருட்கொடையைப் பெறுவதாகும்.

அதற்குரிய உதாரணம் எப்படிப்பட்டதென்றால், ஒரு தோட்டக்காரர் தனது தோட்டத்தைப் பாதுகாப்பதற்காக

வெளியிலிருந்து அந்நிய தோட்டக்காரர் ஒருவரை கொண்டு வருவதற்குப் பதிலாக அவருடைய மகனையே உதவியாளராக நியமிப்பது போன்றதாகும். ஒரு மகனுக்கு தனது தந்தையுடனும், தனது தந்தையால் உருவாக்கப்பட்ட தோட்டத்துடனும் எத்தகைய பிடிப்பும், நேசமும், அக்கறையும், தூயமனப்பான்மையும் இருக்குமோ அது வெளியிலிருந்து கொண்டு வந்து உதவியாளராக நியமிக்கப்படுகின்ற அந்நியருக்கு ஒருபோதும் இருக்காது என்பது வெளிப்படை.

எனவேதான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தூய தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருக்கும் அசாதாரணமான பிடிப்பையும், நேசத்தையும், தூய மனப்பான்மையுடன் கொண்ட உணர்வையும் நாம் பார்க்கின்ற போது அதன் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட பனீ இஸ்ராயீல் நபிமார்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மீது இருந்ததாக நாம் பார்க்க முடியவில்லை! இதற்குக் காரணம், பனீ இஸ்ராயீல் நபிமார்கள் ஹஸ்ரத் மூஸா (அலை)அவர்களின் தோட்டத்தைக் கண்காணிப்பதற்காக வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட தோட்டக்காரர்களாக இருக்கின்ற அதே சமயத்தில், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் அல்லாஹ்வின் அருளினாலும், கருணையினாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாணவராகவும், அன்னாரின் ஆன்மீக மகனாகவும், அன்னாரின் நிழலாகவும் இருந்தார்கள். இதன் காரணமாகத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஆழமான நேசத்தைக் காண முடிகிறது. அதற்கு உதாரணத்தை வேறெங்கும் காண முடியாது. மேலும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் நூல்களைப் படிக்கின்ற ஒவ்வொருவரும், அதற்கெதிரில் இஞ்சீலில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் கூற்றுகளைப் படிக்கும்போது நமது இந்த வாதத்தின் உண்மை பகல் வெளிச்சம் போன்று அவருக்கு வெளிப்பட்டு விடும். உதாரணமாக, கீழ் வரும் கவிதைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசத்தில் எவ்வளவு மெய்மறந்த நிலையில் ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் பாருங்கள்: (உருது கவிதையின் பொருள்):

''அவரே நம் தலைவர். அவர் மூலமாகவே முழுவதும் ஒளியாக விளங்குகிறது.

அவரது பெயர் முஹம்மது (ஸல்). எம் உள்ளம் கவர்ந்தவர் அவரே!

இறை தூதர்கள் எல்லாரும் தூயவரே! ஒருவர் மற்றவரில் சிறந்தவரே!

ஆயினும் இறை தூதருள் உயர்ந்தவர் அவரே! படைப்பினத்தில் சிறந்தவர் அவரே!

என் உயிர் ஒளியாகிய அவருக்கு அர்ப்பணம். அதற்காகவே நான் தோன்றினேன்.

அவர்தான் அசல்; எனக்கென்று என்ன அந்தஸ்து இருக்கிறது? ஆயினும் இறை தீர்ப்பு இதுவே!

அவரிடமிருந்தே எல்லாம் நாம் பெற்றோம். இறைவா! நீ இதற்கு சாட்சி ஆவாய்.

உண்மை எனும் இறைவனைக் காட்டித் தந்தவர் அவரே! இறை சந்திப்பு எனும் பானத்தை அருந்தத் தந்தவர் அவரே!

எப்பொழுதும் உனது வேதத்தை முத்தமிட வேண்டும் என உள்ளம் நாடுகிறது.

திருக்குர்ஆனைச் சுற்றி வர வேண்டும் என்ற ஆசை இருக்கிறது;

ஏனெனில் எனது கஃபா திருக்குர்ஆன்தான்.''

## நுபுவ்வத்தின் வகைகள் பற்றிய மரபுப் பெயர்கள்

சுருக்கமாக, நுபுவ்வத் மூன்று வகைப்படும். இறைவன் திருக்குர்ஆனில் கூறுவதுபோன்று பல்வேறு நபிமார்களின் அந்தஸ்தில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்றாலும், அடிப்படையைப் பொருத்த அளவில் எல்லா நபிமார்களும் இந்த மூன்று வகையான நுபுவ்வத்துகளில் ஏதாவதொரு வகையைச் சேர்ந்தவராக இருக்கின்றனர்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

1. ஒன்று,ஷரீஅத்துடைய நுபுவ்வத் அதாவது, அவருடன் புதிய ஷரீஅத்து இறங்கியிருக்கிறது. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆகியோரின் நுபுவ்வத். இத்தகைய நுவுவ்வத் சில சமயங்களில் உண்மையான நுபுவ்வத் என்ற பெயரில் நினைவு கூறப்படுகிறது. மேலும் அதற்கு இந்தப் பெயர் ஏன் கொடுக்கப்படுகிறதென்றால், நுபுவ்வத்துடைய ஒவ்வொரு தொடரின் துவக்கமும் ஷரீஅத்துடைய நுபுவ்வத்தின் மூலமாகவே ஏற்படுகிறது. எஞ்சிய இரண்டு நுபுவ்வத்துகளும் அதன் பின்னால் வருகின்றது. எனவே கவனித்துப் பார்த்தால், உண்மையில் ஷரீஅத்துடைய நுபுவ்வத்துதான் உண்மையான நுபுவ்வத் எனும் பெயரினைப் பெறும் தகுதியைக் கொண்டிருக்கிறது!

2. இரண்டாவது, ஷரீஅத் இல்லாத சுதந்திரமான நுபுவ்வத். அதாவது, அந்த நுபுவ்வத்துடன் எந்தவொரு புதிய ஷரீஅத்தும் வருவதில்லைதான்; ஆயினும் அது இறைவனிடமிருந்து நேரடியாகக் கிடைக்கும் ஒரு சுதந்திரமான நுபுவ்வத்தாக இருக்கிறது. அதற்கு எந்தவொரு முந்தைய நபியிடமிருந்து அருளைப் பெறுவதுடன் எவ்வித சம்பந்தமுமில்லை. உதாரணமாக, ஹஸ்ரத் தாவூது (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை) ஆகியோரின் நுபுவ்வத். அவர்கள் மூஸாவின் ஷரீஅத்திற்கு தொண்டாற்றுபவர்களாக நிச்சயம் இருந்தார்கள்தான்; ஆயினும் அவர்களின் நுபுவ்வத்தில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடமிருந்து அருளைப் பெறுவதுடன் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. மாறாக, அவர்கள் சுதந்திரமான முறையில் (இறைவனிடமிருந்து) நேரடியாக நுபுவ்வத்தின் அருளைப் பெற்றனர். இந்த நுபுவ்வத் சுதந்திரமான நுபுவ்வத் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. ஏனெனில் சுதந்திரமானது என்பதன் கருத்து, பிறிதொன்றின் ஆதரவில்லாமல் சுயமாகவே நிலைத்திருத்தல் என்பதாகும்.

3. மூன்றாவது, முந்தைய நபியைப் பின்பற்றியதனால் அவரிடமிருந்து ஒளியினைப் பெற்று, அவரிடம் தன்னை மாய்த்துக் கொண்டவாறு நிழலாகக் கிடைக்கின்ற ஷரீஅத் அல்லாத நிழலான நுபுவ்வத் ஆகும். உதாரணமாக, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின்

நுபுவ்வத். இதனை அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாசராக விளங்கியதனால் பெற்றார்கள். இந்த நுபுவ்வத் நிழலான நுபுவ்வத் என்று அழைக்கப்படுகிறது. மேலும் இத்தகைய நபி ஒரு வகையில் நபி என அழைக்கப்பட்டாலும் வேறொரு வகையில் அவர் உம்மத்தீ (உம்மத்தைச் சேர்ந்தவர்) ஆகவும் இருக்கிறார்.

## நுபுவ்வத்தின் வகைகள் பற்றி நமது மற்றும் நமது எதிரிகளின் கோட்பாடுகள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த மூன்று வகையான நுபுவ்வத்தும் முற்றிலுமாக நின்று விட்டது; மேலும் அன்னாருக்குப் பிறகு மறுமை வரை எந்தவிதமான நுபுவ்வத்துடனும் எவரும் வர முடியாது என்பது நமது எதிரிகளின் கொள்கையாகும். அதாவது, முஹம்மதிய்ய உம்மத்தை சேர்ந்த எந்த ஒரு நபரும் - அவர் எவ்வளவு முழுமையானவராக இருந்தாலும் நிழலாகக் கூட நுபுவ்வத்தின் மேன்மை களுக்கு வாரிசாக முடியாது எனக் கூறுகிறார்கள். நமது கருணையுள்ள எதிரிகள் தமது கொள்கைக்கு மாற்றமாகவே (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு 600 ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஷரீஅத்திற்கு தொண்டு செய்வதற்காக சுதந்திரமான நுபுவ்வத்துடன் அனுப்பப்பட்ட) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கொஞ்ச காலத்திற்காக தமது முந்தைய நுபுவ்வத்துடன் முஹம்மதிய்ய உம்மத்தை சீர்திருத்துவதற்காக திரும்ப வருவார் என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர்.

இதற்கு நேர்மாற்றமாக, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கை என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நிச்சயமாக முதல் இரண்டு வகையான நுபுவ்வத்தின் வாசல் முற்றிலுமாக அடைக்கப்பட்டு விட்டது. அதாவது, இனி ஷரீஅத்தைக் கொண்ட நபி வர முடியாது. ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத் இறுதியானதாகும். அவ்வாறே ஷரீஅத் அல்லாமலேயே ஒருவர் சுதந்திரமான முறையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தை விட்டும் சுதந்திரமாக இருந்தவாறு நுபுவ்வத்தைப் பெற்ற எந்தவொரு நபியும் வர முடியாது. ஏனெனில், ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்)

அவர்களின் அருளை விட்டும் வெளியில் இருந்து கொண்டு நுபுவ்வத்தின் மேன்மைகளுக்கு வாரிசாவது நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழுமையான, நிறைவான நுபுவ்வத்திற்கு இழுக்காகும்.

ஆனால் நிழலான, உம்மத்தி நபி என அழைக்கப்படும் மூன்றாவது வகையான நபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு, அன்னாரிடமிருந்து அருளைப் பெற்றவாறு அன்னாரின் ஒளியிலிருந்து ஒளியினைப் பெற்று அன்னாரின் தாசராக நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பெற முடியும்.ஏனெனில் அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழுமையான, நிறைவான நுபுவ்வத்திற்கு எவ்வித இழுக்கும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், அன்னாரின் ஒளிமிக்க சூரியன் தனது ஒளியின் வல்லமையினால் தன்னைப் போன்ற வடிவத்தை கொண்ட, தன்னையே சுற்றி வருகின்ற ஒரு முழு நிலாவை உருவாக்கி இருக்கிறது என்ற வகையில் அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் மேன்மைக்கு சான்றாகும்!

மேலும் நமது கொள்கைப்படி, இந்த வகையான நுபுவ்வத்தினால் கத்மே நுபுவ்வத் (இறுதி நபித்துவம்) எனும் முத்திரையும் ஒருபோதும் உடைவதில்லை; மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி என்பதிலும் எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை. ஏனெனில், தொண்டு செய்யப்படுபவர், பின்பற்றப்படுபவர், அருளைத் தருபவர் என்ற வகையில் இந்நிலையிலும் அன்னார் (ஸல்) அவர்களே இறுதி நபியாக இருக்கின்றார்கள். சந்திரன் தோன்றுவதனால் சூரியனின் ஆட்சி முடிந்து விட்டது எனக் கருதப்படுவதில்லை. மாறாக, அதனால் சூரியனின் ஆதிக்கம் மேலும் அதிகமாக பகிரங்கமான முறையில் தென்படத் தொடங்குகிறது.

இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே நாம் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் தோன்றுவதை கத்மே நுபுவ்வதிற்கு முரணானதாகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு எதிரானதாகவும் கருதுகிறோம். ஏனெனில், ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்னரே (இறைவனிடமிருந்து) நேரடியாக நுபுவ்வத்தின் பதவியைப் பெற்றார்கள். எனவே, எவருடைய நுபுவ்வத் ஹஸ்ரத் நபி (ஸல்)

அவர்களின் நுபுவ்வத்தின் மூலமாகக் கிடைக்கவில்லையோ அப்படிப்பட்டவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தை சீர்திருத்துவதற்காக நியமிக்கப்படுவது என்பது மிகத் தெளிவாக நமது எஜமானர் (ஸல்) அவர்களுக்கு அவமதிப்பும், கத்மே நுபுவ்வதின் முத்திரையை உடைக்கக் கூடியதுமாகும். ஃபஃப்ஹம் வ ததப்புர். வலா தகுன் மினல் மும்தரீன் (எனவே புரிந்து கொள்ளுங்கள்; சிந்தியுங்கள். ஐயம் கொள்பவர்களைச் சேர்ந்தவர்களாகிவிட வேண்டாம்.)

## கத்மே நுபுவ்வத் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சத்தியம் செய்து கூறிய அறிவிப்பு

ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைக்கு ஆதரவாக சான்றுகளை எடுத்து வைப்பதற்கு முன், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களிலேயே அதன் கொள்கையை எடுத்துரைப்பது பொருத்தமாகத் தெரிகிறது. அப்போது சான்றுக்கு முன்னர் வாதத்தின் உண்மை நிலை தெளிவடையும். நமது வாசகர்கள் வாதிப்பவரின் சொற்களிலேயே அவருடைய வாதத்தைக் கேளுங்கள். அப்போதுதான் இதற்குப் பிறகு எந்தவொரு குழப்பத்தை ஏற்படுத்தும் மனிதனும் நம்முடன் தொடர்புபடுத்தி நம் சார்பாக தவறான விஷயங்களைக் கூறி இறை படைப்பினங்களை ஏமாற்ற முடியாது.

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

“இறைவனின் கண்ணியத்தின் மீதும், கம்பீரத்தின் மீதும் ஆணையாக! நான் நம்பிக்கை கொண்டவனும், முஸ்லிமும் ஆவேன். மேலும் நான் அல்லாஹ்வின் மீதும், அவனது வேதங்கள் மீதும், அவனது தூதர்கள் மீதும், அவனது வானவர்கள் மீதும், மரணத்திற்குப் பிறகு எழுப்பப்படுவதன் மீதும் ஈமான் கொண்டுள்ளேன். மேலும் நமது ரஸூல் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களையும் விட மேலானவர் என்றும், காத்தமுன்னபிய்யீன் என்றும் நான் ஈமான் கொள்கிறேன்.” *(ஹமாமத்துல் புஷ்ரா .ரூஹானீ கஸாயின் தொகுதி 7 பக்கம்184)*)

| இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை |
|---|

**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

“நாங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என ஏற்றுக் கொள்வதில்லை என்று என் மீதும், எனது ஜமாஅத்தின் மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டு எங்கள் மீது சுமத்தப்படும் மாபெரும் இட்டுக்கட்டாகும். நாங்கள் எத்தகைய வல்லமையுடனும், உறுதி மனப்பான்மையுடனும், ஞானத்துடனும், அகப்பார்வையுடனும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என ஏற்றுக் கொள்கின்றோமோ, உறுதி கொள்கின்றோமோ அதில் இலட்சத்தில் ஒரு பகுதி கூட (குற்றம் சாட்டும்) இந்த மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை!” ***(அல் ஹகம் 17 மார்ச் 1905)***

## கத்மே நுபுவ்வத் என்பதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கம்

**ஆணையிட்டுக் கூறிய இந்த வாதத்திற்கு விளக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

‘‘இறுதி வேதம், இறுதி ஷரீஅத் திருக்குர்ஆன்தான் என்பது நமது ஈமான் ஆகும். இதற்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்டவர் என்ற பொருளிலோ அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் இறையறிவிப்பைப் பெற முடியும் என்ற பொருளிலோ மறுமை வரை எந்த நபியுமில்லை.......... இதன் விபரம் என்னவெனில், இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என வாக்குறுதி வழங்கியிருக்கின்ற அதே சமயத்தில், அன்னார் தமது ஆன்மீகத்தின் காரணமாக சாலிஹானவர்களுக்கு தந்தை யாக இருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கின்றான். (சாலிஹான) அவர்களின் ஆன்மாக்கள் (அன்னாரைப்) பின்பற்றுவதன் மூலமாக முழுமை செய்யப்படுகின்றன. மேலும் அவர்களுக்கு இறைவனின் வஹி மற்றும் அவனுடன் உரையாடும் சிறப்பு வழங்கப்படுகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِّن رِّجَالِكُمْ وَلَٰكِن رَّسُولَ اللَّهِ وَخَاتَمَ
النَّبِيِّينَ وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا ○

*‘மாகான முஹம்மதுன் அபா அஹதின்ம் மிர்ரிஜாலிக்கும் வலாக்கின்ர் ரஸூலல்லாஹி வ காத்தமன்னபிய்யீன்.’* அதாவது, முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உங்களில் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆயினும் அவர் அல்லாஹ்வின் தூதரும், நபிமார்களுக்கு காத்தம் ஆகவும் இருக்கின்றார்கள். *லாக்கின்* (ஆனால்) என்ற சொல் அரபு மொழியில் *‘இஸ்தித்ராக்’* என்பதற்காக வரும் என்பது வெளிப்படை. அதாவது முன்னர் சொன்ன விஷயத்திற்கு எதிர்மறையான அம்சத்தை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே இந்த வசனத்தின் முற்பகுதியில் எந்த விஷயம் எதிர்மறையாகக் கூறப்பட்டுள்ளதோ - அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இல்லாத ஒன்றாகக் கூறப்பட்டதோ - அது பௌதீகமான முறையில் ஓர் ஆணுக்குத் தந்தையாக இருப்பதுதான். எனவே *லாக்கின்* (ஆனால்) என்ற சொல்லின் மூலம் இல்லாத அந்த விஷயம் எவ்வாறு ஈடு செய்யப்பட்டுள்ளதென்றால், அன்னார் காத்தமுல் அன்பியாவாக ஆக்கப்பட்டுள்ளார்கள். அதன் பொருள், அன்னாருக்குப் பிறகு நுபுவ்வத்தின் அருள் நேரடியாகப் பெறுவது தடுக்கப்பட்டு விட்டது. மேலும் இனி, எவர் தமது செயல்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றினார் என்ற முத்திரையைக் கொண்டிருப்பாரோ அவருக்கு மட்டுமே நுபுவ்வத்தின் மேன்மை கிடைக்க முடியும். மேலும் அவர் இவ்விதமாக, (ஆன்மீகமான முறையில்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகனாகவும், வாரிசாகவும் இருப்பார்.

சுருக்கமாக, ‘நிச்சயமாக உமது எதிரி சந்ததியில்லாதவர்’ (108:4) என்பதில் குறிப்பிடப்பட்ட எதிரிகளின் ஆட்சேபணையை நீக்குவதற்காக இந்த வசனத்தில் ஒருபுறம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தந்தை என்பது மறுக்கப் பட்டிருக்கின்ற அதே சமயத்தில், மறுபுறம் (வேறு வகையில்) தந்தை ஆக இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனத்திலிருந்து கிடைக்கும் கருத்து என்னவெனில்,நுபுவ்வத் - அது ஷரீஅத் அல்லாததாக இருந்தாலும் ஒருவர் நேரடியாக அந்த நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பெற முடியும் என்ற வகையில் அது தடுக்கப்பட்டதாகும். ஆயினும் முஹம்மதிய்ய விளக்கிலிருந்து உழைத்துப் பெறுகின்ற, அதிலிருந்து பயன்பெறுகின்ற நுபுவ்வத் என்ற வகையில் அது தடுக்கப்பட்டதல்ல.’’ ***(ரிவியூ பர் முபாஹிஸா சக்டால்வி வ அஹ்லே ஹதீஸ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 213)***

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''காத்தமுன்னபிய்யீன் என்பதன் பொருள், (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நபிமார்களுக்கு முத்திரை ஆவார்கள் என்பதாகும்) அன்னாரின் முத்திரை இல்லாமல் எந்த நுபுவ்வத்தும் உண்மைப்படுத்தப்பட முடியாது. (ஒரு தாளில்) முத்திரை பதிந்து விடும் போது அந்தத் தாள் சான்றிதழ் ஆகிவிடுகிறது. மேலும் உண்மைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. அவ்வாறே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முத்திரை, உண்மைப்படுத்துதல் ஆகியவை எந்த நுபுவ்வத்தில் இல்லையோ அது சரியானதல்ல.'' ***(அல்ஹகம் 17.10.1902)***

**இன்னோரிடத்தில் அவர்கள் கூறுகிறார்கள்:**

''அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தம் உடையவராக ஆக்கினான். அன்னார் முழுமையான முறையில் பயன் தருவதற்காக எத்தகைய முத்திரையை அன்னாருக்கு வழங்கினான் என்றால், அது வேறு எந்த நபிக்கும் ஒருபோதும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே அன்னாரின் பெயர் காத்தமுன்னபிய்யீன் என்றானது. அதாவது, அன்னாரைப் பின்பற்றுவது நுபுவ்வத்தின் மேன்மைகளை வழங்குகின்றது! அன்னாரின் ஆன்மீகக் கவனம் நபியை உருவாக்க வல்லது!! இந்த பரிசுத்தமாக்கும் ஆற்றல் வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை!!!'' ***(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 100)***

## தற்போது முஹம்மதிய்ய நுபுவ்வத்தைத் தவிர மற்றெல்லா நுபுவ்வத்துகளும் முடிந்து விட்டன

**பிறகு தமது வாதத்திற்கு சிறப்பான விளக்கம் அளித்தவாறு அவர்கள் கூறுகிறார்கள்:**

''இந்த சிறப்பு எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதனால் கிடைத்துள்ளது. நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவனாக இல்லாதிருந்தால், அன்னாரைப் பின்பற்றாமலிருந்தால் பின்னர் எனது செயல்கள் உலகத்திலுள்ள எல்லா மலைகளுக்கு சமமானதாக இருந்தாலும் நான் இறைவனுடன் உரையாடும் இந்தச் சிறப்பை ஒருபோதும் பெற்றிருக்க

மாட்டேன். ஏனெனில், தற்போது முஹம்மதிய்ய நுபுவ்வத்தைத் தவிர எல்லா நுபுவ்வத்துகளும் முடிந்து விட்டன. ஷரீஅத்தைக் கொண்ட நபி எவரும் வர மாட்டார். ஷரீஅத் அல்லாத நபி வர முடியும்; ஆனால் முதலில் எவர் உம்மத்தீ (உம்மத்தைச் சேர்ந்தவர்) ஆக இருக்கின்றாரோ அவர்தான். எனவே இந்த அடிப்படையில் நான் உம்மத்தீ ஆகவும் இருக்கின்றேன்; நபி ஆகவும் இருக்கின்றேன்.'' *(தஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 412)*

## கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வு காண நான்கு சாத்தியமான வழிமுறைகள்

கத்மே நுபுவ்வத்தைப் பற்றி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் இக்காலத்தின் பிற பாமர முஸ்லிம்களுக்கும் இடையிலான கொள்கையில் உள்ள கருத்து வேறுபாடுகளை எடுத்துக் கூறிய பிறகு, இப்போது நான்,இந்த கருத்து வேறுபாட்டிற்கு என்ன தீர்வு என்பதைக் கூற விரும்புகிறேன். இந்த விவகாரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை சரியானதா அல்லது இக்காலத்தின் பிற முஸ்லிம்களின் கொள்கை சரியானதா என்பதை நாம் எப்படித் தீர்மானிப்பது?

ஒரு முஸ்லிமுக்கு எல்லா மார்க்க விவகாரங்களிலுள்ள கருத்து வேறுபாட்டிற்கான தீர்வு நான்கு முறையிலேயே ஏற்பட சாத்தியமுள்ளது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்று, திருக்குர்ஆன். இது உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவதற்கு எல்லாவற்றையும் விட அதிக உறுதி கொண்டதும், அதிக நம்பகத்தன்மை கொண்டதுமான உரை கல்லாக இருக்கிறது. அதைப் பற்றி அல்லாஹ்வே திருக்குர் ஆனில், 'அல்லாஹ் மற்றும் அவனது வசனங்கள் ஆகியவற்றின் சாட்சிக்கு எதிராக மக்கள் எந்த ஹதீஸை (கூற்றை) ஏற்றுக் கொள்வார்கள்?' எனக் கூறுகின்றான். (45:7)

இரண்டாவது அந்தஸ்தில் ஹதீஸ் இருக்கின்றது. அல்லாஹ்வின் வேதத்திற்கு இருக்கும் உறுதியானதும், உயர்தரமானதுமான அந்த உறுதித்தன்மையும், உயர் தகுதியும் ஹதீஸுக்கு இல்லைதான்; மேலும் எந்த ஒரு ஹதீஸைப் பற்றியும், இது கண்டிப்பாக சொல்லுக்குச் சொல்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வார்த்தைதான் என உறுதியாகக் கூற முடியாதுதான். ஆனால் அப்படியிருந்த போதிலும் இஸ்லாமிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு திருக்குர்ஆனுக்கு அடுத்தபடியாக ஹதீஸ் ஒரு சிறந்த வழிமுறையாகும். எனினும் நாம் இந்த களத்தில் பல்வேறு ஹதீஸுகளின் படித்தரங்களையும், சஹீஹானவை, பலவீனமானவை ஆகியவற்றின் வித்தியாசங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டி வரும்.

மூன்றாவது இடத்தில், இஸ்லாத்தின் கடந்த கால சாலிஹீன் (நல்லடியார்கள்), முஜத்திதீன்(மார்க்க சீர்திருத்த வாதிகள்) மற்றும் இமாம்களின் அந்தஸ்து ஆகும். ஏனெனில், இந்த அருளுக்குரிய பிரிவினர் மனித பலவீனங்களிலிருந்து தூய்மையானவர்கள் அல்ல என்றாலும், அவர்கள் பாமர முஸ்லிம்களை விட மிக அதிகமான நம்பிக்கைக்குரியவர்கள் என்ற அந்தஸ்தைக் கொண்டவர்களாவர். மேலும் இந்த சான்றோர்களின் கூற்றுகள் தற்போதைய கருத்து வேறுபாடுகளுக்கும், தற்போதைய விவாதத்திற்கும் முந்தைய காலத்தில் உள்ளவை. எனவே துரதிஷ்டவசமாக தற்போதைய முஸ்லிம்களின் உள்ளங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்திக்கு எதிராக காணப்படுகின்ற காழ்ப்புணர்ச்சியின் பாதிப்பிலிருந்தும் அவர்கள் தூயவர்கள் ஆவர். மேலும் அவர்களின் ஞானம் மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் அந்தஸ்தும் நிச்சயமாக தற்காலத்து மவ்லவிகளை விட பன் மடங்கு சிறந்ததும், பன் மடங்கு உயர்ந்ததுமாகும்.

நான்காவது படித்தரத்தில் மனிதனின் அறிவு இருக்கிறது. இது சாத்தியமுள்ள தடுமாற்றங்களைக் கொண்டுள்ள போதிலும், இது இறைவனால் உருவாக்கப்பட்ட அகத்திலுள்ள ஒளியாகும்; இதன் மூலமாக உலகின் பெரும்பாலான பணிகள் நடக்கின்றன. இடையில் ஏதாவது இருளின் திரை தடையாக நிற்காதவரை அசலையும் போலியையும் பிரித்தறிவதற்கு அறிவு ஒரு மிகச் சிறந்த பயனுள்ள கருவியாகும் என்பதில் ஐயமில்லை.

நமது கண்ணியத்திற்குரிய வாசகர்கள் இந்த விவகாரத்தில் தீர்ப்பைப் பெறத்தக்க விளைவை சென்றடைய வேண்டும் என்பதற்காக தற்போது இந்த எளியவன் இறையருளால் இந்த நான்கு தகுதிகளின் அடிப்படையில் கத்மே நுபுவ்வத் என்பது பற்றிய கேள்வியைப்

பரிசீலிக்கின்றேன்.வமா தவ்ஃபீகீ இல்லா பில்லாஹில் அழீம். நிஃமல் மவ்லா வ நிஃமல் வகீல்.(எனது நல்வாய்ப்பு மகத்தான அல்லாஹ்விடமிருந்தேயன்றி வேறெங்குமில்லை; அவன் அழகிய எஜமானன்; மேலும் அழகிய பாதுகாவலன்)

## திருக்குர்ஆனின்படி கத்மே நுபுவ்வத் என்பதற்கான தீர்வு

### திருக்குர்ஆனின் அருளுக்குரிய உரைகல்

நான் ஏற்கனவே முன்னர் குறிப்பிட்டது போன்று எல்லாவற்றையும் விட உயர்வான அந்தஸ்து திருக்குர்ஆனுக்குத்தான் இருக்கின்றது. மேலும் அந்த அருளுக்குரிய உரைகல்லிலிருந்தே நாம் இந்த சுருக்கமான விவாதத்தைத் துவக்குகின்றோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் வாசல் அடைபட்டு விட்டது என நிரூபணமாகும் எந்த ஒரு வசனமும், இன்னும் சொல்லப்போனால் வசனத்தின் ஒரு பகுதியும், இன்னும் சொல்லப்போனால் ஒரு சொல் கூட திருக்குர்ஆனில் காணக்கிடைப்பதில்லை என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வோர் இடத்திலும் இறை அருள்கள் மற்றும் இறை அருட்கொடைகள் எனும் ஆறு ஓடுவதைப் பார்க்கின்றோம். முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு சிறப்புடன் இறை அருட்கொடைகளின் நீரூற்றுகள் மிக அதி வேகத்துடன் பெருகி ஓடத் துவங்கின. நுபுவ்வத் தொடர்வதை மறுப்பவர்கள் *'வலாக்கின்ர் ரஸூலல்லாஹி வ காத்தமன்னபிய்யீன்'* என்ற வசனத்தை மட்டுமே எடுத்து வைக்கின்றனர். ஆனால் இந்த வசனமோ வாதத்திற்குட்பட்டதாகும். மேலும் வாதத்திற்குட்பட்ட விஷயத்தில் அந்த வாதத்திற்குட்பட்ட வசனத்தையே எடுத்து வைப்பது ஒருபோதும் போதுமானதாகக் கருதப்பட முடியாது.

திருக்குர்ஆன் ஏதாவது முக்கியமான உண்மையை எடுத்துக் கூறும்போது ஒரு வசனத்தை போதுமானதாகக் கொள்வதில்லை; மாறாக, அதற்கு சான்றாக பல்வேறு இடங்களில் பல்வேறு கோணங்களில் பல வசனங்களை கொண்டு வந்து சான்றுகள் மற்றும் சாட்சிகளின் ஒரு சூரியனையே உதிக்கச் செய்து விடுகின்றது. ஏனெனில் திருக்குர் ஆனே கூறுகின்றது:

''மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், தவறிழைத்து விடக் கூடாது என்பதற்காகவும் நாம் குர்ஆனில் ஒரு கருத்தை மீண்டும் மீண்டும் பல்வேறு வடிவங்களில், பல்வேறு கோணங்களில் எடுத்துரைக்கின்றோம்.'' (17: 42 பார்க்க)

எனவே இந்த முக்கியமான கருத்து பற்றி திருக்குர்ஆன், *'வலாக்கின்ர் ரஸூலல்லாஹி வ காத்தமன்னபிய்யீன்'* என்ற ஒரேயொரு வசனத்தை மட்டும் எடுத்துக் கூறிவிட்டு முற்றிலும் மவுனமாகிவிடுவதும், எதிர் சிந்தனை கொண்ட நமது சகோதரர்கள் இந்த வசனத்திலிருந்து பெற விரும்புகின்ற கருத்தை வேறு எந்த இடத்திலும் திருக்குர்ஆன் எடுத்து வைக்காதிருப்பதும், அது மட்டுமின்றி, பல்வேறு இடங்களில் அதற்கு நேர்மாற்றமாக எடுத்துரைப்பதும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருள்களை மற்றெல்லா நபிமார்களை விடவும் அதிக பரந்ததாகவும், உயர்ந்ததாகவும், உயர்வானதாகவும் எடுத்துரைத்திருப்பதும் ஆகிய இவை யெல்லாம், தடுமாறித் திரிகின்ற நமது நண்பர்கள் காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்திற்கு கொடுக்கும் பொருள் ஒருபோதும் சரியன்று என்பதற்கு திடமான, உறுதியான சான்றாகும். தடுமாற்றமடைந்துள்ள நமது நண்பர்கள் இதன் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருள்களையும், அருட்கொடைகளையும் அவர்களுக்குப் பிறகு இறை அருட்கொடைகள் வெளிப்படுவதையும் எல்லைக் குட்பட்டதாகவும், வரையறைக்குட்பட்ட தாகவும் ஆக்க விரும்புகின்றனர்.

## திருக்குர்ஆனின் எந்தவொரு வசனமும் நுபுவ்வத்தின் வாசலை அடைக்கவில்லை!

எவ்வாறாயினும் நமது வாதம் என்னவென்றால், காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்தைத் தவிர, (தற்போது வாதத்தின் கீழ் இருக்கும் காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்திற்கும் நமது எதிரிகள் கொடுக்கின்ற அந்தப் பொருள் அல்ல என்பதையும் நாம் நிரூபிப்போம்.) நமது எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பிறகு எல்லாவிதமான நுபுவ்வத்தின் வாசலும் அடைபட்டு விட்டது என நிரூபணமாகும் எந்தவொரு வசனமும் அல்லது எந்தவொரு சொல்லும்

திருக்குர் ஆனில் இல்லை! மாறாக இதற்கு நேர்மாற்றமாக ஈருலக தலைவரும், பெருமைக்குரியவரும், ஆதமின் மக்களின் தலைவரும் ஆகிய ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு இறைவனுடைய அருட்கொடைகள், கருணைகள், அருள்கள் ஆகியவற்றின் வாசல்கள் முன்னரை விடவும் அதிகமாக பரந்த அளவில் திறந்து விட்டன என்று திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளது.

தற்போது காத்தமுன்னபிய்யீன் என்ற வசனம் பற்றிய விஷயம் மட்டுமே எஞ்சியுள்ளது. அதற்கும் நமது எதிரிகள் வலுக்கட்டாயமாகக் கொடுக்க விரும்பும் அந்தப் பொருள் ஒருபோதும் அல்ல என்பதையும் நாம் இப்போது நிரூபித்துக் காட்டுவோம்-இன்ஷா அல்லாஹ். இன்னும் சொல்லப்போனால் இந்த வசனமும் மற்ற பல வசனங்களைப் போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிகரற்ற அருள்கள், அரிதான அருட்கொடைகள் எனும் ஒரு பரந்த வாசலைத் திறந்து கொண்டிருக்கிறது. அதை நமது கருணையுள்ள நண்பர்கள் தமது குறைபாடுள்ள அகப்பார்வையின் காரணமாக பார்ப்பதற்கும், அடையாளம் கண்டுகொள்வதற்கும் ஆயத்தமாக இல்லை.

எனவே திருக்குர்ஆனின் உரைகல்லின்படி நமது முதல் சான்று என்னவெனில், நுபுவ்வத்தின் வாசலை அடைக்கக்கூடிய, அல்லது காத்தமுன்னபிய்யீன் வசனத்திற்கு நமது எதிரிகள் கூறுகின்ற அந்த பொருளுக்கு ஆதரவளிக்கக் கூடிய எந்த ஒரு திருக்குர்ஆன் வசனமும் இல்லை!

ஆனால் திருக்குர்ஆனின் விதிமுறைப்படி, காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்திற்கு இக்காலத்தின் மவ்லவிமார்கள் கொடுக்கின்ற பொருளே சரியானதென்றால், திருக்குர்ஆன் தனது வேறு பல வசனங்களில் இந்தக் கருத்தை பல்வேறு கோணங்களில் திரும்பத் திரும்ப எடுத்துரைத்து அதற்கான சான்றுகள் மற்றும் ஆதாரங்கள் எனும் ஒரு சூரியனையே உதிக்கச் செய்திருக்க வேண்டும்! ஆனால் விவகாரம் இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. ஏனெனில் நமது எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பிறகு இறைவனின் அருட்கொடைகள், அருள்கள் ஆகியவற்றின் வாசல் முன்னரை விட அதிகமாக பரந்து விரிந்து விட்டது எனத் திருக்குர்ஆன் உரத்த குரலில்

சாட்சி பகர்ந்து கொண்டிருக்கிறது. அந்தோ!இஸ்லாமிய நண்பர்கள் இந்த நுண்ணிய கருத்தைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!!

## ஸூரா ஃபாத்திஹாவின் வலுவான சான்று

இதற்குப் பிறகு திருக்குர்ஆனின் மிகச் சிறந்த சூராவில் கூறப்பட்டுள்ள திருக்குர்ஆன் வசனத்தை எடுத்துரைக்கின்றேன். திருக்குர்ஆன் தனது முதல் சூராவில் இந்த மகத்தான துஆவை நமக்குக் கற்றுத் தருகின்றது:

இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம். *(சூரா ஃபாத்திஹா வசனம் 6,7)* இதன் கருத்து மொழியாக்கம் இதுவாகும்:

எங்களிடம் முஹம்மது (ஸல்) அவர்களை தனது நபியாக அனுப்பிய எங்கள் இறைவா! நீ எங்களை நேரான பாதையில் வழிநடத்துவாயாக. உன்னிடமிருந்து அருட்கொடைகளைப் பெற்றவர்களின் பாதையில் எங்களை வழிநடத்துவாயாக.

திருக்குர்ஆனில் முற்றிலும் துவக்கத்தில் அமைந்துள்ளதும்,செயல்படுகின்ற ஒவ்வொரு முஸ்லிமும் நாள்தோறும் குறைந்தது 30 முறை ஓதுகின்றதுமான இந்த வசனம், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுபவர்களுக்கு ஒரு மகத்தான நற்செய்தியை வழங்குகின்றது. உங்களுக்கு முன்னுள்ள சமுதாயங்களில் அருட்கொடைகளைப் பெற்ற மக்களுக்கு நான் வழங்கி வந்திருக்கின்ற அந்த எல்லா அருட்கொடைகளையும் நீங்கள் என்னிடம் கேளுங்கள் என்ற துஆவை இறைவன் இந்த வசனத்தில் முஸ்லிம்களுக்குக் கற்றுத் தருகின்றான். இந்த துஆவில் நேர்வழியை வேண்டுவது மட்டும் நோக்கமல்ல என்பது வெளிப்படை. ஏனெனில், இதுவே நோக்கமாக இருக்குமென்றால், இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம் (எங்களுக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக) என்று மட்டும் கூறுவது போதுமானதாக இருந்திருக்கும். அத்துடன், ‘நீ அருட்கொடை புரிந்தவர்களின் வழியில்’ என்ற சொற்களைச் சேர்க்க வேண்டிய தேவை ஒருபோதும் இருந்திருக்காது. இந்த சொற்களை அதிகப்படுத்துவது தெளிவாகத் தெரிவிப்பது

என்னவென்றால், பொதுவான நேர்வழியை வேண்டுமாறு போதிப்பது இங்கு நோக்கமன்று. மாறாக முந்தைய அருட்கொடைகளைப் பெற்றவர்களின் அருட்கொடைகளின் பக்கம் கவனமூட்டியவாறு முஸ்லிம்களின் உள்ளங்களில் அந்த அருட்கொடைகளை வேண்டுகின்ற, மேலும் அவற்றைப் பெறுகின்ற துடிப்புணர்வை உருவாக்குவதே இதன் உண்மையான நோக்கமாகும். மேலும் முஹம்மதிய்ய சமுதாயத்தின் தகுதியை மேலோங்கச் செய்து முஸ்லிம்களிடம், முந்தைய சமுதாயங்களுக்கு தனித்தனியாகக் கிடைத்துக் கொண்டிருந்த அவ்வனைத்து அருட்கொடைகளையும் உங்களிடத்தில் நிறைவான முறையில் ஒன்று சேர்த்திருக்கின்றோம் என்பதன் பக்கம் கவனமூட்டுவதாகும். இதற்கு விளக்கமாக திருக்குர்ஆனில் இன்னோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَن يُطِعِ اللَّهَ وَالرَّسُولَ فَأُولَٰئِكَ مَعَ الَّذِينَ أَنْعَمَ اللَّهُ عَلَيْهِم
مِّنَ النَّبِيِّينَ وَالصِّدِّيقِينَ وَالشُّهَدَاءِ وَالصَّالِحِينَ وَحَسُنَ
أُولَٰئِكَ رَفِيقًا ○

''அல்லாஹ்வுக்கும், இத்தூதருக்கும் உண்மையான முறையில் கட்டுப்பட்டு நடப்பவர்கள், அல்லாஹ் அருள்புரிந்தவர்களான நபிமார்கள், சித்தீக்குகள், ஷஹீதுகள்,சாலிஹுகள் ஆகியோரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மேலும் அருள் பெறக் கூடிய இந்த அனைத்து கூட்டத்தினரும் தங்களுக்குள் மிக்க அருளுக்குரிய நண்பர்களும், மிகச் சிறந்த தோழர்களும் ஆவார்கள்.'' *(திருக்குர்ஆன் அதிகாரம் 4 வசனம் 70)*

## இறையருள்களைப் பெறும் நான்கு வகையினர்

இந்த வசனத்தில் அல்லாஹ் இறையருளைப் பெறும் பல்வேறு வகையினரைப்பற்றிக் குறிப்பிடுகின்றான். மேலும் மார்க்க வழியில் இறை அருளைப் பெறுபவர்கள் நான்கு வகையினர் என்றும் குறிப்பிடுகிறான். ஒன்று, நபி; இரண்டாவது சித்தீக்; மூன்றாவது ஷஹீது; நான்காவது சாலிஹ். அதாவது ஒருவர் தனது தகுதி மற்றும் அதிகப்படியான நன்மை செய்யும் மனப்பான்மையின் அடிப்படையில்

காலத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப நுபுவ்வத்தின் அருளைப் பெற்று விடுகின்றார். மேலும் இறைவனுடன் அதிகமாக உரையாடுகின்ற, மறைவான செய்திகளை அதிகமாகப் பெறுகின்ற சிறப்புத் தன்மையைப் பெற்று இறை படைப் பினங்களின் பக்கம் அனுப்பப்படுகின்றார்.

மேலும் ஒருவர் சித்தீக் ஆகி விடுகின்றார். அவருடைய கொள்கைகளும் செயல்களும் உண்மையின் வடிவாக மாறிவிடுகின்றன. அவருடைய சொல்லிலும், செயலிலும் எவ்வித மாறுதலும் எஞ்சியிருப்பதில்லை.

மேலும் சிலர் ஷஹீதின் அந்தஸ்தைப் பெற்றுவிடுகின்றனர். அவருடைய வாழ்வும், மரணமும் மார்க்க வழியில் சாட்சியின் வடிவாக மாறிவிடுகிறது.

சிலர் சாலிஹ் ஆகி விடுகின்றனர். அவருடைய செயல்கள் நன்மையின் வழியை மேற்கொண்டவாறு இந்த வழியில் உறுதியாக நிலைபெற்று விடுகின்றன.

இப்போது பாருங்கள். ஒரு பக்கம் இறைவன் சூரா ஃபாத்திஹாவில், முஸ்லிம்களே! எவர்கள் உங்களுக்கு முன்னர் இறைவனிடமிருந்து அருளைப் பெற்றார்களோ அந்த மக்களின் வழியைத் தேடுங்கள்; அந்த மக்களின் அருள்களை வேண்டுங்கள்; இன்னும் சொல்லப்போனால், முந்தைய சமுதாயங்கள் இந்த அருட்கொடைகளை பல்வேறு கால கட்டத்தில் பெற்றன என்றால், நீங்கள் இந்த எல்லா அருட்கொடைகளையும் உங்களிடத்தில் ஒன்று சேர்த்து வைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள் என்ற துஆவைக் கற்றுத் தந்துள்ளான். மறு பக்கம் இறை அருட்கொடைகளைப் பெறுபவர்கள் என்றால், நபி, சித்தீக், ஷஹீது, சாலிஹ் ஆகியோர் என இறைவனே அதற்கு விளக்கமளித்து விட்டான்.

இப்போது இந்த (1:7&4:70ஆகிய) இரு வசனங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, இறைவனின் அருளால் எல்லா உம்மத்துகளையும் விட மிகச் சிறந்த உம்மத்தான முஹம்மதிய்ய உம்மதிற்கு நுபுவ்வத்தின் வாசலை அல்லாஹ் திறந்து வைத்துள்ளான் என்பது பகல் வெளிச்சம் போன்று தெளிவாகின்றது. அவ்வாறில்லாமல், ஒரு பக்கம் இறைவா! நீ எங்களை அருட்கொடை பெறும் மக்களுடன்

இணைப்பாயாக என்ற துஆவை சூரா ஃபாத்திஹாவில் கற்றுத் தந்து, அருட்கொடை பெற்றவர்கள் என்பது நபி, சித்தீக், ஷஹீது, சாலிஹ் என அவனே அதற்கு விளக்கமும் தந்து அதற்குப் பிறகு தனது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் உம்மத்தின் மீது அருள்களின் வாசலை அடைப்பதென்பது ஒருபோதும் சாத்தியமன்று!

அன்பிற்குரியவர்களே! நண்பர்களே! சிந்தியுங்கள். உங்கள் உள்ளம் மற்றும் மூளையின் கதவுகளை திறந்து சிந்தியுங்கள். ஒரு பக்கம், எங்களை இறை அருட்கொடை பெற்றவர்களில் இணைத்தருள்வாயாக என்ற துஆவை இறைவன் நமக்குக் கற்றுத் தருகின்றான்; மறு பக்கம் இறை அருட்கொடைகளைப் பெற்றவர்கள் என்பதன் கருத்து நபி, சித்தீக், ஷஹீது, சாலிஹ் ஆகியோர் என இறைவனே கூறுகின்றான். திருக்குர் ஆனின் இந்த இரு வசனங்களையும் இணைத்துப் பெறும் கருத்திலிருந்து, இறையருளால் மிகச் சிறந்த சமுதாயமாக இருக்கின்ற இந்த சமுதாயத்திற்கு எவ்வாறு சித்தீக், ஷஹீது, சாலிஹ் ஆகிய இறையருட்கள் திறந்திருக்கிறதோ அவ்வாறே நுபுவ்வத்திற்கான அருட்கொடையும் திறந்திருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த விஷயமாவது நிரூபணமாகிறதா? அல்லது நிரூபணமாக முடியுமா?

இல்லையென்றால் நமது பரிசுத்தமான இறைவன் ஒரு பக்கம் நீங்கள் என்னிடம் இதனைக் கேளுங்கள்; நான் தருவேன் என தானே கூறுகின்றான்; அதனைப் பெற ஆர்வமூட்டுகின்றான்; மறு பக்கம் நான் இதனை உங்களுக்குத் தர மாட்டேன் என்றவாறு தன் கையை இழுத்துக் கொள்கின்றான் என்ற குற்றச்சாட்டு அந்த இறைவன் மீது விழும்-நவூது பில்லாஹ் (இதிலிருந்து அல்லாஹ்விடம் நாம் பாதுகாப்புத் தேடுகின்றோம்.) மேலான கண்ணியமிக்க இறைவன் மீதுதானா இப்படிப்பட்ட விளையாட்டு விளையாட வேண்டும்? அந்தோ பரிதாபம்!

## இந்த சமுதாயத்தில் இறையருள்களின் எல்லா வழிகளும் திறந்திருக்கின்றன

பின்னர் நுட்பமான விஷயம் என்னவெனில் மேலும் இது உண்மையிலேயே திருக்குர்ஆனின் ஒரு சிறப்பாகும். நாம் மேலே குறிப்பிட்டது போன்று இந்த இரு வசனங்களையும் இணைந்ததாகக்

கருதாவிட்டாலும் இந்த இரு வசனங்களும்-அதாவது சூரா ஃபாத்திஹாவின் 7-ஆவது வசனமும் சூரா நிஸாவின் 70-ஆவது வசனமும் மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் முஹம்மதிய்ய சமுதாயத்தில் நுபுவ்வத்தின் வாசலைத் திறந்து கொண்டிருக்கின்றது. நாம் பார்த்தது போன்று சூரா ஃபாத்திஹாவின் வசனம் இதுவாகும்:

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். சிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம்.

அதாவது, எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக.நீ அருட்கொடை புரிந்தவர்களின் வழியில் எங்களை நடத்துவாயாக.

நாம் மேலே குறிப்பிட்டுள்ள சூரா நிஸாவின் வசனத்தில் (4:70)இந்தக் கருத்து இல்லாவிட்டாலும் சூரா ஃபாத்திஹாவிலுள்ள (1:6) இந்த வசனமே, முந்தைய சமுதாயங்களுக்கு ஒட்டு மொத்தமாகக் கிடைத்து வந்த இறையருள்களின் அனைத்து வாசல்களும் முஸ்லிம்களுக்கு திறந்துள்ளது என்பதற்கு உறுதியான, நம்பத்தகுந்த சாட்சியாக இருக்கிறது! ஏனெனில், இறைவனே ஒரு துஆவைக் கற்றுத் தருகின்றான். மேலும் அந்த துஆவில் இறையருளைப் பற்றிய குறிப்பை சுதந்திரமாக வைத்துள்ளான். அத்துடன் எவ்வித நிபந்தனையும் வைக்கப்படவில்லை என்றால், கண்டிப்பாக அதன் பொருள், துஆ செய்பவர்களுக்கு எல்லா விதமான இறைருளையும் பெறுவதற்கான வாசல் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதேயாகும். இல்லையென்றால், அப்படிப்பட்ட துஆவைக் கற்றுக் கொடுப்பது முற்றிலும் பயனற்றதாகும். இன்னும் சொல்லப்போனால், கிண்டலடிப்பதாகி விடும்.

எனவே இறையருளைப் பெறுபவர்களின் வகையினரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள சூரா நிஸாவின் வசனம் இல்லாவிட்டாலும், முந்தைய மக்களுக்கு வழங்கிய அந்த அருட்கொடைகளை எங்களுக்கு வழங்கு வாயாக என்ற துஆ கற்றுத்தரப்பட்டிருப்பதே, முஹம்மதிய்ய சமுதாயத்தில் முந்தைய சமுதாயங்களின் எல்லா இறையருட்கொடை களின் வாசலும் திறந்துள்ளது என்பதற்கு போதுமான, தெளிவான சான்றாகும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்துடைய, சுதந்திரமான நுபுவ்வத்தின் வாசல் ஏன் தடை செய்யப்பட்டுள்ளது?

முந்தைய சமுதாயங்களுக்குக் கிடைத்த இறையருள்களில் ஷரீஅத்துடைய நுபுவ்வத்தும், சுதந்திரமான நுபுவ்வத்தும் இருந்தனவே அப்படியிருந்தும் தற்போது இப்படிப்பட்ட நுபுவ்வத்தின் வாசல் அடைபட்டுள்ளதே என்ற சந்தேகம் எவருடைய உள்ளத்திலாவது எழுமென்றால், அதற்குரிய விடை, உண்மையான கேள்வி நுபுவ்வத்தைப் பற்றியதாகும். இவ்வாறான நுபுவ்வத்; அவ்வாறான நுபுவ்வத் என்பது பற்றி அல்ல. நுபுவ்வத்தின் வாசல் இப்போதும் திறந்துள்ளது. மற்றபடி, ஷரீஅத்துடைய நுபுவ்வத், சுதந்திரமான நுபுவ்வத் பற்றிய கேள்வி மட்டுமே எஞ்சியுள்ளது. நுபுவ்வத்தின் வகை பற்றிய கேள்வி சீரமைப்பு சம்பந்தப்பட்ட ஒன்றாகும். அதற்கு இறை அருள் என்ற அம்சத்துடன் யாதொரு தொடர்புமில்லை. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன் உலகிலுள்ள பல்வேறுபட்ட சமுதாயங்களுக்கு அவர்களின் நிலைமைகளுக்கேற்ப தனித்தனியான ஷரீஅத்தின் தேவை இருந்தபோது இறைவன் பல்வேறு நபிமார்களுக்கு தனித்தனியான ஷரீஅத்தை இறக்கினான். ஆனால் உலகத்தின் நிலைமை மாறிவிட்டபோது, அனைத்துலகத் தலைவர் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் தோற்றத்துடன் எல்லா காலங்களுக்கும், எல்லா சமுதாயங்களுக்கும் ஓர் இறுதியான, உலகளாவிய ஷரீஅத் இறங்கி விட்டபோது அதற்குப் பிறகு இயல்பாகவே புதிய ஷரீஅத் இறங்குவது நின்று விட்டது.

அவ்வாறே நமது நபி (ஸல்) அவர்கள் முழுமையான, முழுமைபடுத்தப்பட்ட நபியாக இருந்தார்கள். மேலும் ஒரு மகத்தான பரிசுத்தமாக்கும் தன்மை கொண்ட ஆற்றலுடன் தோன்றினார்கள். அதன் அருளினால் ஒரு நபர் நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பெற முடியும். எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு சுதந்திரமான நுபுவ்வத் அதாவது நேரடியாகப் பெறும் நுபுவ்வத்தின் வாசல் மூடப்பட்டு விட்டது. ஆனால் பொதுவான நுபுவ்வத்தைப் பொருத்தவரை, அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நிழலான நுபுவ்வத் என்ற வகையில் திறந்துள்ளது! அது ஒருபோதும் மூடப்படவில்லை!!

### இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எனவே அசல் கேள்வி, நுபுவ்வத் பற்றியதுதானே தவிர இவ்வாறான நுபுவ்வத்; அவ்வாறான நுபுவ்வத் என்பது பற்றி அல்ல. நுபுவ்வத்தின் வகை பற்றிய கேள்வி தனிப்பட்ட ஒன்றாகும். அது காலத்தின் தேவைகள் மற்றும் நிலைமைகளுடன் தொடர்புடையதாகும். மேலும் நாம் கூறியிருப்பதைப் போன்று ஹஸ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்துடைய, சுதந்திரமான நுபுவ்வத்தின் தேவை எஞ்சியிருக்கவில்லை. ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் முழுமையானதும் நிரந்தரமனதுமாகும். இதற்குப் பிறகு எந்தவொரு புதிய ஷரீஅத்தின் தேவையுமில்லை. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முழுமையான, எல்லையற்ற, பரிசுத்தமான தன்மை கொண்ட நபியாவார்கள். அதற்குப் பிறகு சுதந்திரமான நுபுவ்வதிற்கான கேள்விக்கே இடமில்லை! சுருக்கமாக, அசல் கேள்வி பொதுவான நுபுவ்வத் பற்றியதாகும். நுபுவ்வத்தின் வகை பற்றியதன்று. பொதுவான நுபுவ்வத் இப்போதும் தொடர்கின்றது; அது ஒருபோதும் நின்றுவிடவில்லை.

உதாரணமாக, ஒரு மாவட்டத்தில் எந்தவோர் அரசு கருவூலமும் இல்லையென்றால், அங்கு கருவூல அலுவலராக எந்தவொரு E.A.C யும் நியமிக்கப்பட மாட்டார் என்பது வெளிப்படை. ஆனால் அதற்காக அந்த மாவட்டத்தில் E.A.C யின் பதவியே ரத்தாகி விட்டது என்று அதற்குப் பொருளன்று. ஏனெனில், தேவைக்கேற்றபடி மற்ற தொண்டுகளில் E.A.C வழக்கப்படி பணி செய்து கொண்டிருப்பார்கள். இது சாதாரணமாகப் புரிந்து கொள்ளும் ஒரு விஷயமாகும். இது எந்தவோர் அறிவுள்ளவரின் வழியிலும் தடையாக இருக்கக் கூடாது.

## நபிமார்கள் குறைவாக இருந்த போதிலும் முஹம்மதிய்ய சமுதாயம் எவ்வாறு எல்லா சமுதாயங்களை விடவும் மிகச் சிறந்ததாக இருக்கிறது?

ஆனால் இங்கு இன்னொரு கேள்வி எழுகின்றது. அது என்னவெனில், كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ (மக்களின் பயனுக்காக உருவாக்கப்பட்ட நீங்கள் மிகச் சிறந்த சமுதாயமாக இருக்கின்றீர்கள் 3:111) என்ற திருக்குர்ஆன் வசனத்தின்படி, முஹம்மதிய்ய சமுதாயம் எல்லா சமுதாயங்களை விடவும் மிகச் சிறந்தது என்றால், பின்னர்

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தில் ஹஸ்ரத் தாவூது (அலை), ஹஸ்ரத் சுலைமான் (அலை), ஹஸ்ரத் ஸகரிய்யா (அலை), ஹஸ்ரத் யஹ்யா (அலை), மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) ஆகிய பல நபிமார்கள் வந்தனர். ஆனால் முஹம்மதிய்ய சமுதாயத்தில் இதுவரை ஒரேயொரு நபிதானே தோன்றியிருக்கிறார்? இதற்கு என்ன காரணம்? நுபுவ்வத் உண்மையிலேயே ஓர் இறை அருள் என்றால், மேலும் முஹம்மதிய்ய சமுதாயம் உண்மையிலேயே சிறந்தது என்றால் பிறகு இந்த சமுதாயத்தில் அவர்களை விட அதிகமான நபிமார்கள் வந்திருக்க வேண்டுமல்லவா? என்பதே அக்கேள்வி.

இதற்குரிய விடை என்னவெனில், சந்தேகமின்றி ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தில் பல நபிமார்கள் வந்தனர். ஆனால் அந்த நபிமார்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றியதன் விளைவாகவோ, அருளின் விளைவாகவோ இருக்கவில்லை. மாறாக, அல்லாஹ் அவர்களை நேரடியாக நுபுவ்வத் எனும் அருளை வழங்கி மூஸவிய்ய ஷரீஅத் மற்றும் மூஸவிய்ய சமுதாயத்திற்கு தொண்டு செய்வதில் ஈடுபடுத்தியிருந்தான். எனவே அந்த நபிமார்களின் வருகை மூஸவிய்ய சமுதாயத்தின் சிறப்பிற்கு அடையாளமாக இருக்கவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக எந்த நபி முஹம்மதிய்ய சமுதாயத்தில் தோன்றியுள்ளாரோ அவர் முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அருளைப் பெற்றவராகவும், அன்னாரின் ஆன்மீக மகனும் ஆவார்கள். மேலும் அவர் பெற்றதெல்லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மாணவர் என்ற முறையிலும், தாசர் என்ற முறையிலும் பெற்றிருக்கிறார். எனவே அவர் ஒருவராக இருந்தாலும் அவர் வருவது நிச்சயமாக முஹம்மதிய்ய சமுதாயத்திற்கு சிறப்பிற்கான சான்றாகும். இந்த விதமான ஆட்சேபணைக்கு விடையளித்தவாறு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் என்ன அருமையாகக் கூறுகிறார்கள்! அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தில் பல நபிமார்கள் வந்திருக்கிறார்கள். (முஹம்மதிய்ய சமுதாயத்தில் இதுவரை ஒரு நபிதான் வந்திருக்கிறார்.) எனவே இந்நிலையில் மூஸா சிறந்தவராக இருப்பது கட்டாயமாகி விடுகிறது என்ற கேள்வி இங்கு

இயல்பாக எழலாம். இதற்குரிய விடை என்னவெனில், (ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சமுதாயத்தில்) எந்த அளவுக்கு நபிமார்கள் வந்துள்ளார்களோ அவர்கள் அனைவரையும் இறைவன் நேரடியாக தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இதில் எவ்வித தொடர்பும் இருந்ததில்லை. ஆனால் இந்த சமுதாயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் அருளால் ஆயிரக்கணக்கான வலிமார்கள் (இறை நேசர்கள்) தோன்றியுள்ளனர். மேலும் அதில் ஒருவர் உம்மத்தி (உம்மத்தைச் சேர்ந்தவர்) ஆகவும், நபியாகவும் தோன்றியுள்ளார். வேறு எந்த நபியிடமும் இது போன்ற பெரும் இறை அருள்களின் நிகர் காணக் கிடைக்காது.இஸ்ரவேல் நபிமார்களை தவிர்த்து, மூஸாவின் சமுதாயத்தில் பெரும்பாலும் எல்லா மக்களும் குறைபாடுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். இப்போது நபிமார்கள் பற்றிய விஷயம் மட்டும் எஞ்சியுள்ளது. அவர்களைப் பற்றி நாம் இப்போது குறிப்பிட்டோம்: அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடமிருந்து எதனையும் பெறவில்லை. மாறாக, அவர்கள் நேரடியாக நபியாக்கப்பட்டார்கள். ஆனால் முஹம்மதிய்ய சமுதாயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்) பின்பற்றியதன் காரணமாக மட்டுமே வலிமார்கள் (இறை நேசர்கள்) ஆக்கப்பட்டிருக்கிறார்கள். (மேலும் உம்மத்தியாகவும், நபியாகவும் இருக்கும் ஒருவரும் தோன்றினார்.)'' ***(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 3 0 அடிக்குறிப்பு)***

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த நுட்பமான பதிலுக்கு வேறு எந்த அதிக விளக்கமும் தேவையில்லை. ஆயினும் இவ்விடத்தில் அதிக ஆர்வம் கொண்டவர்களுக்கு இத்துடன் தொடர்புடைய இன்னொரு விஷயத்தை நான் கண்டிப்பாகக் கூற விரும்புகிறேன். அது என்னவென்றால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த பதில் எத்தகைய உண்மையுடன் தொடர்புடையதென்றால் அது பற்றிய ஞானம் என்பது, அறிவு அல்லது வரலாற்றின் விளைவாக ஒருபோதும் கிடைக்க முடியாது. மாறாக, இந்த பதில் கூர்மையான அறிவு மற்றும் இறை ஞானத்துடன் தொடர்புடையதாகும். எனவே சிந்தித்துப்

பார்த்தால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த பதில் அன்னாரின் உயர்ந்த ஆன்மீக அந்தஸ்திற்கும் சான்றாகும். ஏனெனில் சுய அனுபவமுள்ளவராலும், பரிசுத்தமான இறைவனின் சிறப்பான நெருக்கத்தைக் கொண்டவராலும்தான் இத்தகைய நுணுக்கமான பதிலைத் தெரிந்திருக்க முடியும். மேலும் அத்துடன் அவர் இறைநெருக்கத்தைப் பெற்றவர்களின் அந்தஸ்தைப் பற்றி அறிந்தவராகவும், புரிந்தவராகவும் இருக்க வேண்டும். மற்றபடி, இந்த மாதிரியான நுணுக்கமான விஷயங்கள் பற்றிய செய்தி மற்றவர்களுக்குத் தெரியவே முடியாது. இவ்விஷயங்களை ஒன்று இறைவன் அறிகின்றான். அவனுக்கு எவ்விஷயமும் மறைவானதல்ல. அல்லது எவர்களுக்கு தூய இறைவன் வரை தொடர்பு இருக்குமோ அவர்கள் அறிவார்கள். ஏனெனில் உட்புறமானதை வெளியிலுள்ளவர்களால் அறியவும் முடியாது; இறைவனின் சன்னிதியில் உள்ள விஷயங்கள் மற்றவர்களுக்குத் தென்படவும் முடியாது.

எனவே இறைவன் நமக்கு எத்தகைய உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட இமாமை வழங்கியிருக்கிறான் என்றால், அவர் தனது தூய எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக முந்தைய மக்கள் இறைவனிடமிருந்து நேரடியாகப் பெற்றிருந்த அனைத்து இறையருள்களையும் பெற்று விட்டார்கள்- அல்ஹம்து லில்லாஹ். இந்த இறையருளைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன அருமையாக (பாரசீகக் கவிதையில்) குறிப்பிடுகிறார்கள்:

''ஒவ்வொரு நபிக்கும் எத்தகைய கோப்பையை இறைவன் அருந்தக் கொடுத்தானோ அந்த அனைத்து கோப்பைகளையும் முழுமையாக அவன் எனக்கு அருந்தக் கொடுத்தான்.

அவன் என் உள்ளத்தை எடுத்துக் கொண்டு தனது அன்பை எனக்கு வழங்கினான். மேலும் தனது வஹியின் மூலமாக அவனே எனக்கு ஆசிரியன் ஆகி விட்டான்.

நான் (இறையன்பு என்ற) நெருப்பிலேயே என் உள்ளத்தை எரித்து விட்டேன். நான் இதன் காரணமாகவே இறைவனை அடையாளம் கண்டு கொண்டேன்.

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

(வெளிப்படையாக எனது) நன்மையை நாடுபவர்களுக்கு எனது நிலை பற்றி ஒன்றும் தெரியாது. எனக்குக் கிடைத்த இறையன்பு எவ்வளவு இனிப்பானது! இந்த வழியை கடந்து செல்லாதவர்களுக்கு இதன் அருமை பற்றி என்ன தெரியும்?''

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர் எல்லா அருள்களுக்கும் வாரிசாவார்கள்

சூரா ஃபாத்திஹாவின் வசனம் தனிப்பட்ட முறையிலும் முந்தைய சமுதாயங்களுக்குக் கிடைத்த எல்லா இறை அருட்கொடைகளின் வாசலை முஹம்மதிய்ய சமுதாயத்திற்கும் திறந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இதுவரைக் குறிப்பிட்டேன். இப்போது நான் சூரா நிஸாவின் வசனத்தையும் தனியாக எடுத்துரைத்து, அதுவும் இந்த வாசலை தெளிவாகத் திறக்கின்றது என்பதை நிரூபிக்கின்றேன். இந்த வசனம் முன்னுள்ள வாதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று இவ்வாறு உள்ளது:

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ
مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ وَحَسُنَ
اُولٰٓئِكَ رَفِيْقًا ۝

''அல்லாஹ்வுக்கும், இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருட்கொடை புரிந்தவர்களான நபிமார்கள், சித்தீக்குகள், ஷஹீதுகள், சாலிஹுகள் ஆகியோரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்கள் மிக்க நல்ல தோழர்களாவர்.'' *(திருக்குர்ஆன் 4:70)*

இப்போது பாருங்கள். இந்த வசனம் தனிப்பட்ட முறையிலும், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உண்மையான முறையில் பின்பற்றி நடப்பவர்களுக்கு இறைவனின் அனைத்து அருட்கொடைகளின் வழியும் திறந்துள்ளது என்பதை எவ்வளவு தெளிவாக அறிவிக்கின்றது! அதாவது அவர்கள் தமது தகுதிக்கேற்ப, அந்தஸ்திற்கேற்ப நபியும் ஆகலாம்; சித்தீக்கும் ஆகலாம்; ஷஹீதும் ஆகலாம்; சாலிஹும் ஆகலாம். மேலும் இவர்கள் எத்தகையோர் என்றால், அவர்களின் நட்பு ஒருவர் இன்னொருவருக்கு அருளுக் குரியதாகவும், தூய்மையானதாகவும் இருக்கிறது.

ஆக, இந்த வசனத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து எவ்வளவு உயர்ந்ததும், உயர்வானதும் என்றால், அன்னார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது மனிதனை மிகப் பெரிய ஆன்மீக அருட்கொடைகளுக்கு வாரிசாக்கி விடலாம்! மேலும் அன்னார் (ஸல்) அவர்களை உண்மையாகப் பின்பற்று பவருக்குக் கிடைக்க முடியாத எந்தவோர் இறை அருளும் இல்லை!!

இதற்கு நேர்மாற்றமாக, அல்லாஹ் இன்னொரு வசனத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைத் தவிர மற்ற நபிமார்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றான். அங்கு, நுபுவ்வத் என்ற அருட்கொடையைப் பற்றிய குறிப்பை விட்டு விட்டு சித்தீக், ஷஹீது பற்றி குறிப்பிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்கிறான். அல்லாஹ் கூறுகிறான்:

وَالَّذِيْنَ آمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖٓ اُولٰٓئِكَ هُمُ الصِّدِّيْقُوْنَ وَالشُّهَدَآءُ عِنْدَ رَبِّهِمْ

''எவர்கள் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர்கள் மீதும் நம்பிக்கை கொண்டார்களோ அவர்கள் இறைவனிடத்தில் தகுதிக்கேற்ப சித்தீக்குகள், ஷஹீதுகள் என்ற அந்தஸ்தைப் பெற்று வந்தனர்.'' ***(திருக்குர்ஆன் 57:20)***

இந்த (4:70 மற்றும் 57:20 ஆகிய) இரு வசனங்களில் உள்ள சொற்களிலும், கருத்திலும் காணப்படுகின்ற வித்தியாசம், முந்தைய நபிமார்களைப் பின்பற்றிய வர்களுக்கு சித்தீக், ஷஹீது ஆகுவதற்கான அருட்கொடை மட்டுமே திறந்திருந்தது என்பதையும், அவர்கள் பின்பற்றப்பட வேண்டிய தமது நபியைப் பின்பற்றியதன் காரணமாக நபித்துவத்தின் அருட்கொடையைப் பெற முடியாதிருந்தது என்பதையும், ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு அன்னார் (ஸல்) அவர்களின் தாசராக இருப்பதனால் ஒருவரது அந்தஸ்திற்கேற்ப சித்தீக், ஷஹீது ஆகிய அருட்கொடைகள் மட்டுமல்லாது நுபுவ்வத்திற்கான அருட்கொடையும் திறந்துள்ளது என்பதையும் ஒவ்வோர் அறிவுள்ள மனிதருக்கும் உறுதியூட்டுவதற்குப் போதுமானதாக இருக்கிறது. இது அல்லாஹ்வின் அருளாகும்; அதை, தான் நாடுபவருக்கு அவன் கொடுகின்றான். மேலும் அல்லாஹ் அருள் மிக்கவனும், மகத்தானவனும் ஆவான்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## மஅ (உடன்) என்ற சொல்லுக்கான விளக்கம்

சூரா நிஸாவில் (4:70 வசனத்தில்) 'ம அ' (உடன்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றக் கூடியவர்கள் நபி ஆக முடியாது; மாறாக, நபிமார்களுடன் இருக்கும் நிலையை மட்டுமே அடைய முடியும் என எவருக்காவது இவ்விடத்தில் சிந்தனை தோன்றுகிறதென்றால் அது மிகவும் குருட்டுத்தனமான ஓர் ஆட்சேபணையாக இருக்கும். ஏனெனில் முதலில் இந்த வசனத்தில் 'மஅ' (உடன்) என்ற சொல் நபிமார்களுடன் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, அன்அமல்லாஹு அலைஹிம் (அல்லாஹ் அருள்புரிந்தவர்கள்) என்ற சொல்லுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் நபி, சித்தீக், ஷஹீது, சாலிஹ் அனைவரும் அடங்குவர்.

எனவே 'மஅ' (உடன்) என்ற சொல்லின் காரணமாக இந்த வசனத்திற்கு, ஒரு முஸ்லிம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாசராக இருப்பதனால் அன்னாரைப் பின்பற்றுவதனால் நுபுவ்வத்தின் அருளைப் பெற முடியாது; மாறாக, நபிமார்களுடன் வெளிப்படையான முறையில் சேர்ந்திருப்பதை மட்டுமே குறிக்கும் எனப் பொருள் கொண்டால், பின்னர் அத்துடன் எந்த முஸ்லிமும் இறை அருட்கொடையைப் பெற்ற குழுவில் இணையவே முடியாது என்பதையும் கண்டிப்பாக ஒப்புக்கொள்ள வேண்டியது வரும். மேலும் நபி ஆவது ஒருபுறமிருக்கட்டும்; சித்தீக்காகவோ, ஷஹீதாகவோ, சாலிஹாகவோ கூட ஆக முடியாது என ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். மேலும் இது வெளிப்படையில் அபத்தமானது என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் புரிந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமல்லாமல் அரபி மொழி சொல் வழக்கின்படி, சில இடங்களில் 'மஅ' (உடன்) என்ற சொல் 'மின்' (சேர்ந்தவராக இருத்தல்) என்ற பொருளிலும் வந்துள்ளது என்பதும் நிரூபணமாகின்றது. திருக்குர்ஆனே இவ்வாறு கூறுகிறது:

رَبَّنَا إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُنَادِي لِلْإِيمَانِ أَنْ آمِنُوا بِرَبِّكُمْ فَآمَنَّا رَبَّنَا
فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ ○

(ரப்பனா ஃபக்ஃபிர்லனா துனூபனா வகஃப்பிர் அன்னா சய்யிஆத்தினா வதவஃப்பனா ம அல் அப்ரார்.)

பொருள்: ''எங்கள் இறைவா! எங்கள் பாவங்களுக்காக எங்களை மன்னிப்பாயாக.எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக. மேலும் எங்களை **நல்லடியார்களுடன்** (அதாவது நல்லடியார்களாக ஆக்கி) மரணிக்கச் செய்வாயாக.'' ***(திருக்குர்ஆன் 3:194)***

இந்த வசனத்தில் **'மஅல் அப்ரார்'** (நல்லடியர்களுடன்) என்ற சொல் வந்துள்ளது. இதன் பொருள், எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக என்பதன்று. அதாவது ஒரு நல்ல மனிதர் மரணிக்கும் போது அந்த நேரத்தில் எங்கள் உயிரையும் எடுத்துக் கொள்வாயாக என்று பொருளன்று. மாறாக, இந்த இடத்தில் 'மஅ' (உடன்) என்பதன் பொருள் நிச்சயமாக 'மின்' (சேர்ந்தவராக இருத்தல்) என்பதேயாகும். மேலும் வசனத்தின் பொருள், எங்களை நல்லடியார்களாக மாற்றி மரணிக்கச் செய்வாயாக; நாங்கள் பாவங்களின் நிலைமையில் மரணிக்கக் கூடாது என்பதாகும்.

அவ்வாறே இப்லீஸ் சஜ்தா செய்யாததைப் பற்றிக் குறிப்பிடும்போது திருக்குர்ஆன் ஓரிடத்தில் 'மின்' (சேர்ந்தவராக இருத்தல்) என்ற சொல்லை பயன்படுத்தியவாறு, லம் யகுன் மினஸ் ஸாஜிதீன் எனக் கூறுகிறது. (7:12) அதாவது, இப்லீஸ் சஜ்தா செய்பவர்களைச் சேர்ந்தவனாக இருக்கவில்லை. மேலும் இன்னோரிடத்தில் இந்த சம்பவத்தைக் குறிப்பிடும் போது 'மஅ' என்ற சொல்லை பயன்படுத்தியவாறு 'அபா அன்ய்யகூன மஅஸ் ஸாஜிதீன்' எனக் குறிப்பிடுகிறது. (15:32) அதாவது, இப்லீஸ் சஜ்தா செய்பவர்களுடன் இருக்க மறுத்து விட்டான். இவ்வாறு 'மஅ' (உடன் இருத்தல்) என்ற சொல் சில நேரங்களில் 'மின்' (சேர்ந்தவராக இருத்தல்) என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றது என திருக்குர்ஆனே தீர்ப்பளித்திருக்கிறது! அதுவே அதன் கருத்தாகும்.

சுருக்கமாக, 'மஅ' (உடன் இருத்தல்) என்ற சொல்லை 'மின்' (சேர்ந்தவராக இருத்தல்) என்ற பொருளில் உபயோகிப்பது அரபி மொழியில் மிகவும் பொதுவானதாகும். அதனை சாதாரண அறிவுடைய மனிதராலும் மறுக்க முடியாது. மேலும் இந்த மாதிரியான சொல் வழக்கு

எல்லா மொழியிலும் காணப்படுகிறது. உதாரணமாக, உருதுவிலும், இன்னார் முஸ்லிம் லீக்குடன் இருக்கின்றார் என்று கூறுகிறோம். அவர் லீக்கிலிருந்து தனியாக இருந்து அதன் வெளிப்படையான, பௌதீகமான முறையில் உடன் இருக்கிறார் என்று இதற்கு ஒருபோதும் பொருள் அன்று. மாறாக, கண்டிப்பாக இதன் பொருள், அவர் முஸ்லிம் லீக்கின் ஓர் உறுப்பினராவார்; முஸ்லிம் லீக்கிகைச் சேர்ந்த ஒருவர் ஆவார் என்பதேயாகும். ஆனால் இக்காலத்தின் மவ்லவிமார்கள் திருக்குர்ஆனைப் பற்றி சிந்திப்பதைக் கைவிட்டு விட்டார்கள்; மேலும் மேலோட்டமான விஷயங்களில் அல்லது எடுத்தெழுதப்பட்ட கதைகளில் சிக்கித் தவிக்கிறார்கள் என்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். அவ்வாறல்லாமல், அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் மஅ (உடன் இருத்தல்) என்ற இந்த சொல்லில் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருப்பதற்கும், தடுமாற்றம் அடைவதற்கும் அவர்களுக்கு எந்தக் காரணமும் இல்லை!

## மஅ என்ற சொல்லை மேற்கொண்டதன் ஞானம்

உண்மை என்னவெனில், 'மின்' (சேர்ந்து இருத்தல்) என்ற சொல்லை விட்டு விட்டு 'மஅ' (உடன் இருத்தல்) என்ற சொல்லை கையாண்டதில் மிகப் பெரும் ஞானம் இருக்கிறது. அது என்னவெனில், 'மின்' மற்றும் 'மஅ' ஆகிய இரு சொற்களும் இணைவதால் கிடைக்கும் கருத்தை இந்த வசனத்தில் உருவாக்க வேண்டும் என்பதேயாகும். அதாவது இந்த இடத்தில், 'மஅ' என்ற சொல் ஒரே நேரத்தில் 'மஅ' மற்றும் 'மின்' ஆகிய இரு சொற்களின் பொருளைத் தர வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

கருத்துச் செறிவுள்ள இக்கூற்றின் விளக்கம் என்னவென்றால், *அல் அர்வாஹு ஜுனூதும் முஜன்னதா* ***(ஸஹீஹ் புகாரி. பாகம் 2 பக்கம் 1232 ஹதீஸ் எண்: 3336)*** – அதாவது ஆன்மாக்களுக்கும் பல்வேறு குழுக்கள் இருக்கின்றன என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹதீஸில் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, ஒரு வகையான ஆன்மாக்கள் அதே வகையான ஆன்மாக்களின் பக்கம் குனிகின்றன; அவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளன; ஒன்றுபட்டிருக்கின்றன. எனவே இறை அருட்கொடைகளைப் பெறுபவர்கள் நபிமார்கள், சித்தீகுகள், ஷஹீதுகள், சாலிஹுகள் ஆகியோருடன் இணைந்திருப்பது மட்டுமல்லாமல் தம்மிடம்

மஇய்யத் (உடன் இருத்தல்) என்ற கருத்தையும் உருவாக்குவார்கள் என்னும் நுட்பமான உண்மையின் பக்கம் சுட்டிக் காட்டுவதற்காகவே இந்த இடத்தில் *'மின்'* (சேர்ந்து இருத்தல்) என்ற சொல்லை விட்டு விட்டு மஅ (உடன் இருத்தல்) என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு வகையைச் சேர்ந்த மக்களுக்கும் ஒருவருக்கொருவர் முழுமையான ஒற்றுமையும், தொடர்பும், இணைப்பும் இருக்கும். மேலும் அவர்கள் *ஜுனூதும் முஜன்னதா* (பல்வேறு வகையான குழுக்களாக இருத்தல்) என்ற காட்சியை எடுத்து வைப்பார்கள்.

இந்த நோக்கத்திற்காகவே வசனத்தின் கடைசியில் ஹஸுன உலாயிக ரஃபீகா (இவர்கள் அழகிய நண்பர்கள்) என்ற சொற்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இறை அருட் கொடை பெற்ற ஒவ்வொரு ஜமாஅத்திலும் கண்டிப்பாகக் காணப்படுகின்ற, காணப்பட வேண்டிய அந்த ஆன்மீக நட்பு, தொடர்பு மற்றும் ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுவதற்காகவே அந்தச் சொற்கள் வைக்கப்பட் டுள்ளன. இந்தக் கோட்பாட்டின்படியே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் இவ்வாறு கூறுகிறார்கள்:

اَلْاَنْبِيَاءُ اِخْوَةٌ مِّنْ عَلَّاتٍ اُمَّهَاتُهُمْ شَتّٰى وَدِيْنُهُمْ وَاحِدٌ

அல்அன்பியாவு இக்வத்துன் மின் அல்லாத்தின். உம்முஹாத்துஹும் ஷத்தா. வ தீனுஹும் வாஹிதுன். ***(சஹீஹ் முஸ்லிம். பாபு ஃபழாயிலு ஈஸா. ஹதீஸ் எண்: 4362)***

அதாவது, எல்லா நபிமார்களும் எத்தகைய சகோதரர்களாவர் என்றால், அவர்களின் தாய்மார்கள் வெவ்வேறானவர்கள்; ஆனால் தந்தை ஒருவரே ஆவார்; மார்க்கமும் ஒன்றாகும்.

எனவே நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வசனத்திலும் இதே ஆன்மீக ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுவதற்காக மஅ (உடன் இருத்தல்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'மின்' (சேர்ந்தவர்கள்) மற்றும் 'மஅ' (உடன் இருத்தல்) என்பதன் ஒட்டுமொத்தமான கருத்தை உருவாக்கி வசனத்தின் பொருளில் விரிவை ஏற்படுத்துவதற்காகவே அவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் காலத்தின் பெரும்பாலான மவ்லவிமார்கள்

திருக்குர்ஆனின் ஞானங்களையும் ஆழமான கருத்துகளையும் முற்றிலும் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்பது வருத்தத்திற் குரியதாகும். மேலும் கடலில் மூழ்கி அதன் ஆழத்திலிருந்து முத்துக்களை எடுப்பதற்குப் பதிலாக தம்மாலேயே உருவாக்கப்பட்ட அதன் மேலோட்டமான நுரையையும் புற்பூண்டுகளையும் தங்களின் நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு இல்லையென்றால், திருக்குர்ஆனின் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு எழுத்தும் தன்னிடம் பரந்த, ஆழமான பொருள்களைக் கொண்டுள்ளது என்பது அவர்களுக்குத் தெரிய வரும்.

இதன் காரணமாகத்தான் திருக்குர்ஆன் ஒரு பொதுவான சொல்லை விட்டு விட்டு அந்த இடத்தில் இன்னொரு சொல்லைக் கையாள்கிறதென்றால் அதன் மாற்றத்திலும் ஒரு பரந்த ஞானம் பொதிந்துள்ளது. அதன் ஞானத்தை அல்லாஹ்வும், இறைஞானத்தில் உறுதி பெற்றவர்களுமேயன்றி வேறு யாரும் அறிய மாட்டார்கள். எவர்களுடைய உள்ளங்களில் கோணல் இருக்கின்றதோ அவர்கள் உவமை வடிவிலானவற்றைப் பின் தொடர்வர். மேலும் அவர்கள் அதன் மூலமாக கோணலை விரும்புவர்.

## முஹம்மதிய்ய உம்மத்தில் தூதர்களின் வருகை பற்றிய தெளிவான வாக்குறுதி

இதற்குப் பிறகு முஹம்மதிய்ய உம்மத்தில் இறை தூதர்களின் வருகை பற்றி தெளிவாக வாக்குறுதி அளிக்கப்பட்ட ஒரு திருக்குர்ஆன் வசனத்தைக் எடுத்துரைக்கிறேன். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

يَابَنِيْٓ اٰدَمَ اِمَّا يَاْتِيَنَّكُمْ رُسُلٌ مِّنْكُمْ يَقُصُّوْنَ عَلَيْكُمْ اٰيَاتِيْ فَمَنِ اتَّقٰى وَاَصْلَحَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ○

''ஆதமின் மக்களே! இனி வரும் காலத்தில் உங்களிலிருந்தே எனது வசனங்களை ஓதிக்காட்டும் இறைதூதர் உங்களிடம் வந்தால், அவரை நீங்கள் ஒருபோதும் மறுக்கக் கூடாது; மாறாக ஈமான் கொள்ள

வேண்டும். ஏனெனில், இறைதூதர்களின் வருகையின் போது எவர்கள் இறையச்சத்தை மேற்கொள்கிறார்களோ தம்மை சீர்திருத்திக் கொள்கிறார்களோ அவர்கள் அச்சம் மற்றும் வருத்தத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டு விடுகின்றனர்.'' *(திருக்குர்ஆன் 7:36 காண்க)*

இந்த வசனத்தில் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக ஆதமின் எல்லா மக்களையும் விளித்து, இனி ஏதாவது ஒரு காலத்தில் உங்களிலிருந்தே உங்களிடம் (ஏனெனில் இனி மற்றவர்களிலிருந்து இறைதூதர் வரும் வாசல் அடைக்கப்பட்டு விட்டது) ஏதாவதொரு இறைதூதர் வந்தால், நீங்கள் மறுக்கக் கூடாது. மாறாக இறையச்சத்தை மேற்கொண்டவாறு தம்மை சீர்திருத்துவதைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஏனெனில் இதுவே உங்களுக்கு அச்சத்திலிருந்தும் கவலையிலிருந்தும் ஈடேற்றத்தைப் பெறுவதற்கான வழியாகும்.

இப்போது பாருங்கள்: இந்த வசனம் எந்த அளவுக்கு தெளிவாகவும், விளக்கமாகவும், எத்தகைய வலுவான சொற்களிலும் முஹம்மதிய்ய உம்மத்தில் தேவைக்கேற்றபடி இறைதூதர்களின் வருகைக்கான வாசலைத் திறந்துள்ளது! மக்கள் இந்த உண்மைகளைப் பற்றி சிந்தித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!!

மேலும் எவருக்காவது இதில், இந்த வசனம் சென்றகால சமுதாயங்களைப் பற்றியதாகும்; வருங்காலத்தைப் பற்றியதல்ல என்ற சந்தேகம் இருக்குமென்றால், அவரே திருக்குர்ஆனைத் திறந்து, இந்த வசனத்திற்கு முன்னும் பின்னும் நன்றாகப் பார்த்து இந்த இடத்தில் ஏதாவது சென்ற கால சமுதாயத்தைப் பற்றிய அடையாளமாவது காணப்படுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

பின்னர் இந்த வசனம் இனி வருங்காலத்தைப் பற்றியதாகும்; முந்தைய சமுதாயத்தைப் பற்றியதல்ல என்பது நிரூபணமாகி விட்டால், நுபுவ்வத் தொடர்கிறது என்பதற்கு இதை விடப் பெரிய சான்று ஏதும் இருக்க முடியுமா என சிந்தித்துப் பார்ப்பது ஒவ்வொரு நேர்மையான மனிதருக்கும் கடமையாகும். திருக்குர்ஆனே உரத்த குரலில், ஆதமின் மக்களே! எச்சரிக்கையாக இருங்கள்; இனி வரும் காலத்திலும் உங்களிடம் இறைதூதர் வர முடியும் என்பதை கேட்டுக் கொள்ளுங்கள்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

ஆனால் அவர் எந்நிலையிலும் உங்களிலிருந்தே தோன்றுவார். மேலும் உங்கள் நபியைப் பின்பற்றியவராகவும் அவரிடமிருந்து பயன் பெறுபவராகவும் இருப்பார் எனக் கூறுகிறது.

நண்பர்களே! சகோதரர்களே!! இறைவனுக்காகப் பாருங்கள்; கேளுங்கள். மார்க்க விவகாரம் எந்தவொரு கேளிக்கையோ, விளையாட்டோ அல்ல. இதில் மிகவும் கவனமாக சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. எனவே இறைவனுக்காக திருக்குர்ஆனின் இந்த வசனத்தில் சென்ற காலத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறதா? அல்லது வருங்காலத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறதா என கவனமாக சிந்தித்துப் பாருங்கள். வருங்காலத்தை பற்றிய குறிப்பு இருக்கிறதென்றால் இதில் இறைதூதர்களின் வருகையைப் பற்றிய வாக்குறுதி வழங்கப்படவில்லையா? பின்னர் இந்த வசனத்தில் வருங்காலத்தைய இறைதூதர்கள் பற்றிய வாக்குறுதி இருக்கிறதென்றால் உண்மைக்காகவும், வாய்மைக்காகவும் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் திருக்குர்ஆனை விட பெரிய நேர்வழி வேறேதுமில்லை; மேலும் திருக்குர்ஆனை மறுப்பதை விட பெரிய துரதிஷ்டம் வேறேதுமில்லை.

## ‘இம்மா’ என்ற சொல்லின் விளக்கம்

இங்கு எவருக்காவது இந்த வசனத்தில் *‘இம்மா’* அதாவது ‘வந்தால்’ என்ற சொல் வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் எந்த விஷயம் ஆல் (வந்தால்) என்ற சொல்லால் குறிப்பிடப்படுமோ அது உறுதியானதல்ல; மாறாக, அதில் சந்தேகத்திற்கான அம்சம் இருக்கிறது என்ற சிந்தனை தோன்றுமென்றால் அது அறியாமையின் சந்தேகமாகும் -நவூது பில்லாஹ். ஏனெனில் இந்த இடத்தில் ‘ஆல்’ (வந்தால்) என்ற சொல் சந்தேகத்தை வெளிப்படுத்துவதற்காக வைக்கப் படவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் மறுமை வரை பல தலைமுறைகள் வரவிருந்தன. எனவே *‘இம்மா’* (வந்தால்) என்ற சொல்லை வைத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒவ்வொரு தலைமுறையும் வரவிருக்கின்ற இறைதூதருக்காக ஆயத்தமாக இருக்க வேண்டும்; ஏனெனில் அவர் எந்த தலைமுறையிலிருந்து தோன்றுவார் எனக் கூற முடியாது என்பதன் பக்கம் கவனமூட்டப்பட்டிருக்கின்றது.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எனவே 'ஆல்' (வந்தால்) என்ற சொல்லில் சந்தேகத்தை வெளிப்படுத்துவது நோக்கமல்ல. மாறாக, ஒவ்வொரு தலைமுறையையும் எச்சரிப்பது நோக்கமாகும். அதாவது, ஒவ்வொரு தலைமுறையையும் தனித்தனியாக விளித்து, உங்களிடம் வந்தால், அல்லது உங்களிடம் வந்தால், அல்லது உங்களிடம் வந்தால் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறல்லாமல், 'ஆல்' (வந்தால்) என்ற சொல்லின் மூலம் சந்தேகத்தை வெளிப் படுத்துவது நோக்கமாக இருந்திருப்பின், அல்லது எந்த இறைதூதரும் வரப்போவதில்லைதான்; ஆனால் ஒருவேளை ஏதாவதோர் இறைதூதர் வந்து விட்டால் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது நோக்கமாக இருந்திருப்பின் அது ஒரு வீணான சொல்லாகவும் - ஏன் - ஒரு விளையாட்டாகவும் ஆகிவிடும். அது திருக்குர்ஆனின் மகத்துவத்திற்கு முற்றிலும் மாறானதாகும்.

இந்த வசனத்தில் *ருஸுல்* (இறைதூதர்கள்) என்ற சொல் இருக்கிறது; அது பன்மையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் முஹம்மதிய்ய உம்மத்தில் இதுவரை ஒரேயொரு இறைதூதர் மட்டும் தானே வந்திருக்கிறார் என்ற ஆட்சேபணை இருக்குமென்றால் அதற்கான பதில், அவசரப்படும் எமது சகோதரர்களே! உலகத்தின் வயது இன்னும் முடிந்து விடவில்லை. இனி வரும் காலத்தில் இன்னொரு உம்மத்தி நபியும் ஒருவேளை வரலாம். உங்களுக்கு என்ன தெரியும்?

அது மட்டுமின்றி, எல்லா மொழியிலும் காணப்படும் பொதுவான ஒரு விதிமுறை என்னவென்றால், எங்கு ஒரு விஷயம் விதிமுறையாகக் கூறப்படுகிறதோ அங்கு சில நேரத்தில் ஒருமைச் சொல்லை விட்டு விட்டு பன்மைச் சொல்லை பயன்படுத்துகிறார்கள்-கூறும் நோக்கம் ஒன்று என்பதாக இருந்தாலும் சரியே!

பிறகு இன்னொரு நுட்பமான விஷயமும் கண்டிப்பாக கவனத்திற்கொள்ளத்தக்கதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதங்களை விரிவாகப் படிக்கும்போது தெரிய வருவதைப் போன்று, அவர்களிடம் பல்வேறுபட்ட இறைதூதர்களின் நிழல்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. எனவே அன்னாரின் தோற்றத்தில் பல்வேறு இறைதூதர்களின் தோற்றம் ஒன்று

சேர்ந்திருக்கின்றன. இந்த உண்மையைத்தான் திருக்குர்ஆனின் வசனமாகிய, وَإِذَا الرُّسُلُ أُقِّتَتْ

(*வயிஸர் ருஸுலு உக்கித்தத்* அதாவது எல்லா தூதர்களும் ஒரே நேரத்தில் ஒன்று சேர்க்கப்படும்போது 77:12) என்பதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்தோ! நமது இந்த சுருக்கமான கட்டுரையில் இவற்றை அதிகமாக விளக்குவதற்கு இடமில்லை!

## காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்தின் உயர்ந்த கோட்பாடு

இப்போது நான் கத்மே நுபுவ்வத் வாதத்தின் மையக் கருத்தாகிய கருத்துச் செறிவுள்ள வசனத்தின் பக்கம் வருகின்றேன். மேலும் உண்மையில் இந்த வசனத்தின் தவறான விளக்கத்தின் அடிப்படையில்தான் நமது எதிரிகள் நுபுவ்வத்தின் வாசல் அடைபட்டு விடுவதாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் தற்போது தெளிவாகவிருப்பதைப் போன்று, இந்த வசனம் நுபுவ்வத்தின் வாசலை அடைப்பதற்கு பதிலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்தை எடுத்துரைக்கிறது. அதனை நபியை உருவாக்க வல்லது எனக் கூற வேண்டும். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِّن رِّجَالِكُمْ وَلَٰكِن رَّسُولَ اللَّهِ وَخَاتَمَ النَّبِيِّينَ وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا ۝

''அதாவது, மக்களே! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உங்களில் எந்த ஆணுக்கும் (அதாவது ஆண் மகனுக்கும்) தந்தை இல்லை. ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றார்கள். மேலும் காத்தமுன் நபிய்யீன் ஆக இருக்கின்றார்கள்.''(33: 41)

## காத்தமுன் நபிய்யீன் வசனம் இறங்கியதன் பின்னணி

ஆனால் இந்த வசனத்தின் விளக்கத்தைக் கூறுவதற்கு முன்னர் அது இறங்கியதன் பின்னணியைக் குறிப்பிடுவது அவசியமானதாகும். அப்போதுதான் நமது எஜமானர் (ஸல்) அவர்களைப் பற்றி எந்த அடிப்படையில், எத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கருத்தில்

கொண்டு காத்தமுன் நபிய்யீன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடியும். எனவே நாம் அறிய வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருக்கும்போதே, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் வயிற்றிலிருந்து பிறந்த அன்னார் (ஸல்) அவர்களின் எல்லா ஆண் பிள்ளைகளும் இறை நியதிக்கேற்ப இறந்து விட்டனர். அப்போது தீய இயல்பு கொண்ட மக்கத்து காஃபிர்கள், அன்னார் (ஸல்) அவர்கள் கனி இல்லாதவர்கள்; சந்ததியற்றவர்கள்; அவர்களின் இறப்புடன் அவர்களின் எல்லா தொடரும் முடிந்து விடும் என தூற்றினர்-நவூது பில்லாஹ். அப்போது அல்லாஹ் இந்த வசனங்களை இறக்கினான்:

إِنَّا أَعْطَيْنَاكَ الْكَوْثَرَ ○ فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ○ إِنَّ شَانِئَكَ هُوَ الْأَبْتَرُ ○

''அதாவது, முஹம்மதே! நாம் உமக்கு மகத்தான அருள்களை இறக்கி இருக்கிறோம். எனவே நீர் இந்த அருள்களுக்கு நன்றி செலுத்தியவாறு நன்றாக இறைவணக்கத்தை நிறைவேற்றுவீராக. மேலும் இறை வழியில் முந்திக் கொண்டவாறு அதிகமதிகமாக தியாகங்களை செய்வீராக. ஏனெனில் துஆக்கள் தியாகங்கள் ஆகியவற்றின் விளைவாக நீர் மேலும் முன்னேற்றம் காண்பீர். மேலும் உம்மை சந்ததியற்றவர் என்று கூறுகின்ற உமது எதிரிதான் சந்ததியற்றவராகவும் கனியற்றவராகவும் இருப்பார்.'' (திருக்குர்ஆன் 108-ஆவது அதிகாரம் அல் கவ்ஸர் காண்க).

இதற்குப் பிறகு மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'என்னால் விடுதலை செய்யப்பட்ட, ஹாரிஸாவின் மகனாகிய ஸய்தை எனது வளர்ப்பு மகனாக ஆக்கியிருந்தேன். அவர் இப்போது இஸ்லாமிய கட்டளையின்படி ஆகுமானவரல்லர்; எனவே இனி எனக்கு ஸய்துடன் எவ்விதமான பௌதீக உறவும் இல்லை' என்று இறை கட்டளைக்கிணங்க அறிவிப்பு செய்தார்கள். (சூரா அஹ்ஸாப் வசனங்கள் 5-7 காண்க.)

தீயவர்களான காஃபிர்கள் இந்த அறிவிப்பினால் பலன் பெற்றவாறு, பிள்ளைகள் ஏற்கெனவே மரணித்து விட்டன; இப்போது வளர்ப்புப் பிள்ளையின் தொடரும் முடிந்து விட்டது. ஆக, நாம் கூறியது

போன்றே ஆண் சந்ததியின்மை என்பது முழுமையாகி விட்டது என்று மீண்டும் தமது முந்தைய பழித்துரையைக் கூறினர். அப்போது காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இறங்கியது. அதன் மூலமாக, சந்தேகமின்றி இறை ஞானத்திற்கேற்ப முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எந்த ஆண் சந்ததியும் இல்லை. ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றார்கள். இந்த வகையில் அவர் அதிக எண்ணிக்கையிலுள்ள ஆன்மீக சந்ததிகளுக்கு தந்தையாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சாதாரண இறைதூதர்களை விட மேலாக அவர்கள் காத்தமுன் நபிய்யீனும் ஆவார்கள். மேலும் அவர்களின் இறக்கைகளின் கீழ் நபியும் ரஸூலும் வளரப் போகின்றார்கள். எனவே அவர்கள் ஒருபோதும் சந்ததியற்றவரோ, கனியற்றவரோ அல்லர். மாறாக, மகத்தான ஆன்மீக தொடரின் தோற்றுநரும், முன்னவர்கள், பின்னவர்களின் தலைவரும் ஆவார்கள் என அறிவிப்பு செய்யப்பட்டது.

## காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்தின் இரு சாத்தியக்கூறான பொருள்கள்

இந்தப் பின்னணியில்தான் காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இறங்கியது. மேலும் இந்த வசனத்தில் காத்தமுன் நபிய்யீன் என்ற சொல், இந்த வசனத்தின் மிக உயர்ந்த சிகரமாகும் என்பது இதிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக மிக உயர்ந்த மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்ற இதே சொல்லை இறைவனின் அருட்கொடையை அடைக்கக் கூடியதாகக் குறிப்பிடப்படுவது மிக மிக வருத்தத்திற்குரியதாகும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் ஆறு நிரந்தரமாக வறண்டு விட்டது எனவும், அன்னாருக்குப் பிறகு அன்னாரின் மாணவராக இருந்தாலும், அன்னாரைப் பின்பற்றுபவராக இருந்தாலும், அன்னாரின் தொண்டராக இருந்தாலும் எவரும் நபியாக முடியாது என இதிலிருந்து தவறாக சான்று எடுக்கப்படுகிறது. ஆனால் நாம் நிரூபிக்கவிருப்பதைப் போன்று, இந்த விளக்கம் சரியானதன்று; ஏனெனில் அரபி மொழியின் விதிமுறைகளின்படியும் - ஏன் - இந்த வசனத்தின் சொற்கள் மற்றும் இந்த வசனம் இறங்கிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு

பார்க்கும்போதும் இந்த வசனத்திற்கு இரண்டே பொருள்கள்தான் இருக்கின்றன. அந்த இரண்டு பொருள்கள் இவையாகும்:

1. மக்களே! முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களில் எந்த ஆண் மகனுக்கும் பௌதீகமான தந்தை இல்லை. ஆனால் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்ற வகையில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களின் ஆன்மீக தந்தை ஆவார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் நபிமார்களுக்கு முத்திரையாக இருக்கிறார்கள். இந்த வகையில் அவர்கள் நபிமார்களுக்கும் தந்தை என்ற அந்தஸ்தில் இருக்கிறார்கள். மேலும் இனி எந்தவொரு நபியும் அன்னாரின் உண்மைப்படுத்தும் சாட்சி முத்திரை இல்லாமல் எவரும் உண்மையாளராக இருக்க முடியாது.

2. மக்களே! முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களில் எந்த ஆண் மகனுக்கும் தந்தை இல்லை. ஆனால் இறைதூதராக இருக்கின்ற வகையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தந்தையாக இருக்கின் றார்கள். இறைதூதரும் எத்தகைய மகத்துவமிக்கவர் என்றால், அவர்களின் மீது நுபுவ்வத்தின் அனைத்து மேன்மைகளும் முடிந்து விட்டன. அதாவது அவர்கள் மிகச் சிறப்பான நபி ஆவார்கள்.

## ‘லாக்கின்’ (ஆனால்) என்பதன் விளக்கம்

அரபி மொழி விதிமுறைகளின்படி இந்த இரண்டு பொருள்களும் சரியானவைதான். ஆயினும் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் நிச்சயமாக மிகச் சரியானதும், வசனத்தின் சொற்கள் மற்றும் வசனம் இறக்கப்பட்ட சூழ்நிலையின்படி மிகப் பொருத்தமானதுமாகும். ஆயினும் சாத்தியக்கூறான இந்த இரு பொருள்களில் எந்தப் பொருளைக் கொடுத்தாலும் அஹ்மதி அல்லாதவர்கள் காட்ட விரும்பும் சான்று எந்நிலையிலும் நிரூபணமாகவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எல்லா வகையான நுபுவத்தின் வாசலும் முற்றிலும் அடைபட்டு விட்டது என்று நிரூபணமாக முடியாது.

உண்மையில் உட்புறமான சாட்சிகளின்படி, இந்த வசனத்தின் திறவுகோல் இரு சொற்களில் இருக்கிறது. அவற்றில் ஒன்று **‘லாக்கின்’ (ஆனால்)** என்ற சொல் ஆகும். இன்னொன்று **‘காத்தம்’** என்பதாகும். மேலும் இந்த இரு சொற்களுக்கும் சரியான விளக்கம் தராமல் வசனத்தின் சரியான பொருளைப் புரிய முடியாது. **‘லாக்கின்’**

**(ஆனால்)** என்ற சொல் அரபிமொழி விதிமுறைகளின்படி, எங்கு ஒரு சொற்றொடர் அல்லது வாக்கியத்திற்குப் பிறகு அதற்கு எதிரான கருத்தை எடுத்துக் கூறுவது நோக்கமாக இருக்குமோ அங்கு பயன்படுத்தப்படுகிறது. அல்லது எங்கு முதல் சொற்றொடரில் ஏதாவது ஒரு சந்தேகம் தோன்றுமோ அங்கு 'லாக்கின்' (ஆனால்) என்பதன் மூலம் இன்னொரு சொற்றொடர் எடுத்துக் கூறப்பட்டு அந்த சந்தேகம் நீக்கப்படுகிறது. உதாரணமாக, ஏதாவதொரு சொற்றொடரில் ஏதாவதொரு எதிர்மறை கருத்து எடுத்துக் கூறப்பட்டிருக்குமென்றால் **'லாக்கின்'(ஆனால்)** என்பதற்குப் பிறகு அதற்கு எதிரான நேர்மறை கருத்தைக் கூறுகிறார்கள். அவ்வாறே ஏதாவதொரு சொற்றொடரில் ஏதாவதொரு நேர்மறை கருத்து குறிப்பிடப்பட்டிருந்தால் **'லாக்கின்'(ஆனால்)** என்பதற்குப் பிறகு அதற்கு எதிரான எதிர் மறை கருத்தைக் கொண்டு வருகிறார்கள்.

**'லாக்கின்'(ஆனால்)** என்ற சொல் உருது மொழியிலும் ஏறக்குறைய அரபி மொழியிலுள்ள கருத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. எனவே இவ்விடத்தில் இதனை விளக்குவதற்கு உருதுவின் உதாரணத்தை எடுத்துக் கூறுவது போதுமானதாகும்.

(இந்த உதாரணம் தமிழுக்கும் பொருந்தும் என்பது உதாரணத்தைப் படிக்கும்போது தெரிய வரும்-மொழிபெயர்ப்பாளர்)

உதாரணமாக, உருதுவில் ஹமீது உடல் அளவில் பலவீனமானவர்தான்; ஆனால் வீரமானவர். இப்போது இந்த சொற்றொடரில் உடல் அளவில் பலவீனமானவர் என்பதற்கு எதிராக 'ஆனால்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டு வீரமானவர் என்ற சொல் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உடல் அளவில் பலவீனமானவர் என்பதன் மூலம் ஹமீது வீரமானவர் இல்லை போலும் என்று எழும் சந்தேகத்தை **'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல் பயன்படுத்தப்பட்டு அது நீக்கப் பட்டுள்ளது. அவ்வாறே உதாரணமாக, அனைவரும் எழுந்தனர்; ஆனால் சயீது எழவில்லை எனக் கூறுகிறோம். இங்கே அனைவரும் எழுந்தனர் என்பதன் மூலம் எவரும் உட்கார்ந்திருக்க வில்லை போலும் என்ற ஒரு சந்தேகம் எழலாம். இந்த சந்தேகத்தை நீக்குவதற்காக**'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல் பயன்படுத்தப்பட்ட

பிறகு இன்னொரு சொற்றொடர் எடுத்துக்கூறி நீக்கப்பட்டுள்ளது. அதாவது அனைவரும் எழுந்தனர்தான்; ஆனால் சயீது எழவில்லை; இன்னும் உட்கார்ந்திருக்கிறான் எனக் கூறப்பட்டுள்ளது.

சுருக்கமாக, **'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல் எங்கு ஒரு சந்தேகம் எழ சாத்தியமிருக்கிறதோ அதனைப் போக்குவதற்காக பயன்படுத்தப்படுகிறது. அல்லது ஒரு விஷயத்திற்குப் பிறகு அதற்கு எதிரான விஷயம் எடுத்துக் கூறுவது நோக்கமாக இருக்கும் போது உபயோகப்படுத்தப்படுகின்றது. இவ்விதமான பயன்பாட்டை அரபி மொழியில் **'இஸ்தித்ராக்'** எனக் கூறுவார்கள். **'லாக்கின்' (ஆனால்)** என்ற இந்தச் சொல் **'இஸ்தித்ராக்'** என்பதற்காக கையாளப்படுகிறது என எல்லா அகராதி நூல்களிலும் எழுதப்பட்டுள்ளது.

இப்போது நன்றாக சிந்தியுங்கள். நமது எதிரிகள் பொருள் கொள்வது போன்று, காத்தமுன் நபிய்யீன் என்பதற்கு நபிமார்களை முடிப்பவர் எனப் பொருள் கொண்டால் இந்த வசனத்தில் **'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல் முற்றிலும் பொருளற்றதாகி விடுகிறது. மேலும் இந்த வசனம் ஓர் அர்த்தமற்ற கூற்றாகி விடுகிறது-நவூது பில்லாஹ். ஏனெனில் இந்நிலையில் இந்த வசனம் இவ்வாறு பொருள்படுகிறது:

''முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உங்களில் எந்த ஆணுக்கும் தந்தை இல்லைதான்; ஆனால் அவர் நபிமார்களை முடிப்பவராவார்.''

இப்போது சிந்தியுங்கள். நன்கு அறிந்தவனும், ஞானம் மிக்கவனுமாகிய இறைவன் ஒரு புறமிருக்கட்டும்; சாதாரண அறிவுள்ள மனிதன்கூட **'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல்லுக்கு முன்னுள்ள சொற்றொடருக்கும் **'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல்லுக்குப் பின்னுள்ள சொற்றொடருக்கும் ஒரே கருத்தைக் கொண்ட இப்படிப்பட்ட அர்த்தமற்ற கூற்றைக் கூறுவானா? மேலும் முந்தைய சந்தேகத்தை நீக்குவதற்கு பதிலாக அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் அது இருக்குமா? இது, 'அனைவரும் எழுந்து விட்டனர்; ஆனால் சயீதும் எழுந்து விட்டான் என்பது போன்ற சொற்றொடராக மாறி விடுகிறது. எந்தவொரு அறிவுள்ள மனிதரும் இப்படிப்பட்ட பொருளற்ற கூற்றைக் கூற முடியுமா? பொருள் செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள வேதமாகிய

திருக்குர்ஆன் இத்தகைய அர்த்தமற்ற வாக்கியத்தைக் கூற முடியுமா? நமது எதிரிகள் கூறுகின்ற பொருளை 'லாக்கின்' (ஆனால்) என்ற சொல் ஒப்புக்கொள்கின்றதா என இறைவனுக்காக சிந்தியுங்கள்; நீதியைக் கைக்கொண்டு சொல்லுங்கள். இதற்கு நேர்மாற்றமாக இந்த வசனத்திற்கு நாம் என்ன பொருள் கொடுக்கிறோமோ அதில் 'லாக்கின்' (ஆனால்) என்ற சொல் முழுவதுமாகப் பொருந்துகிறது. மேலும் எந்த சிக்கலும் இல்லை! ஏனெனில் நாம் கொடுக்கும் பொருள் இதுவாகும்:

''முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உங்களில் எந்த ஆணுக்கும் தந்தை இல்லைதான்; ஆனால் அவர் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தந்தையாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர் நபிமார்களுக்கும் கூட தந்தையாக இருக்கிறார்கள்.''

இந்த பொருளின்படி, **'லாக்கின்' (ஆனால்)** என்ற சொல் இந்த வசனத்தின் கருத்தில், ஓர் உயர்தரமான மோதிரத்தில் அதன் சரியான அளவுக்கேற்ப வைரக்கல் பதிந்திருப்பது போன்று சரியாக இருக்கிறது! எந்த இடைவெளியும் இல்லாதிருக்கிறது!!

## காத்தம் என்ற சொல்லிற்கான விளக்கம்

இந்த வசனத்தில் இரண்டாவது முக்கியமான சொல் **'காத்தம்'** என்பதாகும். இந்தச் சொல் பொதுவான கிரஅத்தில் 'தே' என்ற எழுத்துக்கு மேல் ஸபர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது என்ற போதிலும் பாகிஸ்தானின் அனைத்து திருக்குர்ஆன் பதிப்புகளிலும் - அது அஹ்மதிகளின் கையில் இருந்தாலும் அல்லது அஹ்மதி அல்லாதவர்களின் கையில் இருந்தாலும் இந்தச் சொல்லில் உள்ள 'தே' என்பதன் மேல் ஸபர் தான் போடப்பட்டுள்ளது. மிகவும் அரிதான கிரஅத்தில் 'தே' என்பதில் ஸேர் என்பதும் வந்துள்ளது என்பது உண்மைதான். ஆயினும் எந்த நிலையில் எடுத்துக் கொண்டாலும் இந்த வசனத்திலிருந்து நுபுவ்வத் அடைக்கப்பட்டு விட்டது என்பது எந்நிலையிலும் நிரூபணமாவதில்லை என நாம் கூறுகிறோம்.

இதன் விளக்கம் என்னவெனில், அகராதி நூல்களில் விளக்கமாக எழுதப்பட்டிருப்பதைப் போன்று, 'தே' என்பதில் ஸபருடன் காத்தம்

என்று கூறும்போது அதன் பொருள் முத்திரை என்பதாகும். அரபி அகராதியின் புகழ்பெற்ற நூலான தாஜுல் உரூஸ் என்பதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

***'அல்காத்தமு மா யூழவு அலத் தீனத்தி.'*** அதாவது காத்தம் என்பதன் பொருள், அரக்கு அல்லது மண் அல்லது தாள் ஆகியவற்றில் குத்தப்படும் முத்திரை என்பதாகும்.

உதாரணமாக, ஹதீஸிலிருந்து தெரியவருவதைப் போன்று, நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் கய்ஸர், கிஸ்ரா போன்ற மன்னர்களுக்கு தப்லீக் கடிதம் எழுதி அனுப்பும்போது அந்தக் கடிதங்களின் மீது தமது சாட்சி முத்திரையைப் பதித்தார்கள். இந்த வகையில் வசனத்திற்கு இவ்வாறு பொருள் அமையும்:

'' முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களில் எந்த ஆணுக்கும் பௌதீகமான தந்தை இல்லைதான்; ஆனால் அவர்கள் இறை தூதராக இருக்கின்ற வகையில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஆன்மீகத் தந்தையாக இருக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனல், அவர்கள் நபிமார்களுக்கும் முத்திரையாக இருக்கின்றார்கள். மேலும் இனிமேல் எவருக்கு அன்னார் (ஸல்) அவர்களின் முத்திரையும், உண்மை என்ற உறுதிப்படுத்துதலும் கிடைத்திருக்கின்றதோ அவர்தான் உண்மையான நபியாகக் கருதப்படுவார்.''

இப்போது பாருங்கள். இந்தப் பொருள் எவ்வளவு நேரியதாகவும், தெளிவாகவும் இருக்கிறது! இதனை ஒரு சிறுவனும் எளிதில் புரிந்து கொள்ளலாம். பிறகு பாருங்கள்! இந்தப் பொருளின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எவ்வளவு உயர்ந்த மகத்துவம் நிரூபணமாகின்றது!! அதாவது அவர்கள் சாதாரண இறை தூதர் மட்டுமல்லர். மாறாக, அன்னாரின் முத்திரை, 'நபியை உருவாக்க வல்லது.' மேலும் அன்னாரை முழுமையாகப் பின்பற்றுவதம் மூலமாக, ஆன்மீக கவனத்தின் மூலமாக ஒருவர் நுபுவ்வத்தின் அந்தஸ்து வரை சென்றடைய முடியும். இவ்விதமாக அவர்கள் நபிமார்களுக்கும் ஆன்மீகத் தந்தை ஆவார்கள்.

சுருக்கமாக, இந்த வசனத்தில் ஒருபக்கம் அன்னாரின் பௌதீக சந்ததிகள் மறுக்கப்பட்டிருந்தாலும் மறு பக்கம் **'லாக்கின்' (ஆனால்)**

என்ற வார்த்தை கையாளப்பட்டு அன்னாரின் ஆன்மீக சந்ததிகள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் அதை விட மேலாக அன்னார் (ஸல்) அவர்களின் கையில் நுபுவ்வத்தின் முத்திரை தரப்பட்டு அன்னாரை நபிமார்களுக்கும் ஆன்மீகத் தந்தையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இன்னொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். **காத்தம்** என்பதன் பொருள் உருவகமாக **மோதிரம்** என்பதுமாகும்.(தாஜுல் உரூஸ் அகராதியைப் பார்க்க). மேலும் மோதிரம் என்பது அழகுக்குக் காரணமாக இருக்கிறது. எனவே இந்த வகையில் காத்தமுன் நபிய்யீன் என்பதன் பொருள், அனைத்து நபிமார்களுக்கும் அழகுக்குக் காரணமானவர் என்பதாகும். மேலும் இந்தப் பொருளும் தன்னிடத்தில் மிகவும் நுட்பமானதாகும்.

## காத்திம் என்ற சொல்லின் மற்றொரு கிரஅத்

காத்தம் என்பதன் இன்னொரு கிரஅத்தாக காத்திம் என ஸேர் உடன் மிக அரிதாக வந்துள்ளது என்பது மட்டும் தற்போது எஞ்சியுள்ளது. கவனமாக சிந்தித்துப் பார்த்தால் இந்த அடிப்படையிலும் நுபுவ்வத் முடிந்து விட்டது என்பது ஒருபோதும் நிரூபணமாவதில்லை. ஏனெனில், இந்த வகையில் இந்தச் சொல்லிற்கு நேரடியான, தெளிவான பொருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நபித்துவத்தின் மேன்மைகள் முடிந்து விட்டன என்பதாகும். அதாவது, அன்னார் மிகச் சிறந்த நபியாவார்கள் என்பதாகும். அன்னார் நபித்துவத்தின் அருளையே முடித்து விடுபவர்களாவார்கள்; ஓடிக்கொண்டிருக்கின்ற ஒரு நதியை அடைப்பவர்களாவார்கள் என்பதன்று-நவூது பில்லாஹ். ஏனெனில் புகழ்பெற்ற அரபி அகராதி நூலான அக்ரபுல் மவாரிது என்பதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

خَتَمَ اللهُ لَهُ الْخَيْرَ اَتَمَّهُ

***'கதமல்லாஹு லஹுல் கைர, அதம்மஹு.'*** அதாவது, அல்லாஹ் இன்னாருக்கு மேன்மைகளை முடித்து விட்டான் எனக் கூறப்பட்டால் அதன் பொருள், அவரை மேன்மைகள் வரை

சென்றடைய வைத்து விட்டான் என்பதாகும். அடுத்து உதாரணமாக இன்னாருடன் ஓவியக் கலை முடிந்து விட்டது எனக் கூறினால் அதன் பொருள், அவர் ஓவியக் கலையின் திறமையில் உச்சகட்ட மேன்மையை அடைந்து விட்டார் என்பதேயாகும்; அவருக்குப் பிறகு வேறு எந்த ஓவியரும் உருவாகவே மாட்டார் என்பதன்று என்பதை கல்விக் கூடத்தில் படிக்கும் குழந்தைகளும் அறிவர். இந்த மாதிரியான சொல் வழக்குகள் எல்லா மொழிகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

எப்படியிருந்த போதிலும், ***காத்திம்*** என்பதை ஸேருடன் படித்தாலும் வசனத்தின் பொருள் முற்றிலும் வெளிப்படையாகவும், தெளிவாகவும் இருக்கின்றது. அதில் எவ்விதமான சிக்கலும் இல்லை. இதே பொருளில்தான் **ஹஸ்ரத் மவ்லானா ரூமீ** (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் (அன்னார் மரணமடைந்தது ஹிஜ்ரீ672-ல் ஆகும்) தமது மஸ்னவியில் இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயர் காத்தமுன் நபிய்யீன் என்பது எந்த அடிப்படையில் வைக்கப் பட்டுள்ளது என்றால், அன்னாருக்கு முன்னரும் எந்த நபியும் இறையருளைப் பெறுவதிலும், மேன்மைகளிலும் அன்னாருக்கு நிகரான அந்தஸ்தில் இருக்கவில்லை; அன்னாருக்குப் பிறகும் இருக்கப்போவதில்லை.'' ***(மஸ்னவி ரூமீ பாகம் 6 பக்கம் 6)***

## காத்தமுன் நபிய்யீன் வசனத்தைப் பற்றிய வாதத்தின் சுருக்கம்

சுருக்கமாக, பாகிஸ்தான், இந்தியா மற்றும் பிற நாடுகளில் உள்ள கோடிக்கணக்கான பிரதிகளில் குறிப்பிடப்படுவதைப் போன்று காத்தம் என்ற சொல்லில் 'தே' என்ற எழுத்தில் ஸபர் உள்ளதாகக் கருதினாலும் (அதாவது காத்தம் என்றாலும்) அல்லது சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் விரிவுரைகளில் மிக அரிதாகக் குறிப்பிட்டிருப்பதைப் போன்று காத்தம் என்ற சொல்லில் 'தே' என்ற எழுத்தில் ஸேர் உள்ளதாகக் கருதினாலும்,(அதாவது காத்திம் என்றாலும்) இரு நிலைகளிலும் இந்த வசனத்தினால் நபித்துவம் முடிந்து விட்டது என்பது எவ்விதத்திலும் நிரூபணமாகவில்லை. மாறாக, 'தே' என்பதன் ஸபர் மூலமாக காத்தம் என்பதன் பொருள், நபிமார்களின்

முத்திரை என்பதாகும். மேலும் அதன் கருத்து, இனி எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப்படுத்தும் முத்திரை இல்லாமல் நபி ஆக முடியாது; மாறாக, எவர் அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து அருளைப் பெற்றவராகவும், அன்னாரின் மாணவராகவும், தொண்டராகவும் இருக்கின்றாரோ அவர்தான் நபி ஆக முடியும் என்பதாகும்.

மேலும் 'தே' என்பதன் ஸேர் மூலமாக காத்திம் என்பதன் பொருள், நபித்துவத்தின் மேன்மைகளில் மிக உயர்ந்த மேன்மையை உருவாக்கக் கூடியவர் என்பதாகும். அதன் கருத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த நபி ஆவார்கள்; அன்னாரின் அந்தஸ்தின் உச்சத்தை எவரும் தொட முடியாது என்பதாகும். இந்தத் தெளிவான விளக்கத்திற்குப் பிறகு நமது எதிகளின் கையில் என்ன இருக்கிறது? இந்தக் கேள்விக்கான பதில் அவர்கள் இந்த வசனத்திற்குக் கொடுக்கும் பொருளிலிருந்தே தெளிவாகிறது. அவர்கள் கொடுக்கும் பொருள்:

முஹம்மது (ஸல்) அவர்கள் பௌதீகமான முறையில் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை; ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள்; மேலும் எத்தகைய தூதர் என்றால், அவருக்குப் பிறகு நபித்துவம் எனும் இறையருள் முடிந்து விட்டது.

இந்த குறைந்த, ஒன்றுமற்ற அர்த்தத்திற்கும் நாம் மேலே கூறியிருக்கும் மிக உயர்ந்த மிக மேலான அர்த்தத்திற்கும் அணுவளவாவது தொடர்பிருக்கிறதா? பிடிவாதம் பிடிக்கிறீர்கள் என்றால் அது வேறு விஷயம். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதி நாம் மேலே குறிப்பிட்டுள்ள பொருளில்தான் இருக்கிறது என நீதியை விரும்பும் ஒவ்வொரு மனிதனின் உள்ளமும் கூறும்; மேலும் அவருடைய பாசத்தின் ஒளிச் சுடர் அவருடைய உள்ளத்தை இதன் பக்கமே இழுத்து வரும். ஒரு கவிஞர் என்ன அருமையாகக் கூறினார்:

''கத்மே நுபுவ்வத்தின் அந்தஸ்து இந்த இடத்தில்தான் இருக்கிறது என கராமத் (அற்புதம்) உள்ளத்தை ஈர்க்கிறது.''

சுருக்கமாக, நமது எதிரிகளின் கொள்கையின் அடிக்கல்லாகக் கருதப்படுகின்ற காத்தமுன் நபிய்யீன் வசனமும் நமக்கு சாதகமாகவே

தீர்ப்பளித்திருக்கிறது! ஏனெனில், இந்த வசனத்திலும் நபித்துவத்தின் வாசல் அடைபடுவதற்கு பதிலாக, நமது எஜமானர் (எனது உயிர் அவர்களுக்கு அர்ப்பணமாகட்டும்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மாணவரும், தொண்டரும் கூட அன்னார் (ஸல்) அவர்களின் பரிசுத்தமாக்கும் ஆற்றலினாலும், அன்னாரின் உண்மைப்படுத்தும் முத்திரையினாலும் நபித்துவத்தின் மேன்மைகளைப் பெற முடியும் என்ற அளவுக்கு நமது எஜமானரின் அந்தஸ்து இருக்கிறது என்பதே நிரூபணமாகிறது! இது ஏன் என்றால், அவர்கள் (ஸல்) இறைவனின் அருளால் மிகச் சிறந்த நபி ஆவார்கள்; மேலும் மிகச் சிறந்தவர் தோன்றிய பிறகு மற்றவர்களெல்லாம் அன்னாருக்குக் கீழ் வந்து விடுகின்றனர். மேலும் இது அன்னார் (ஸல்) அவர்கள் ஆண் சந்ததியற்றவர் என்பதால் அல்ல-நவூது பில்லாஹ்; மாறாக, அவர்கள் அல்கவ்ஸர் என்பதற்கு எஜமானராக இருப்பதனால் ஆகும். மேலும் அன்னாரின் ஆன்மீக அருளின் ஒவ்வொரு நீரூற்றும் அருளுக்குரிய அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து வெளிப்படுகிறது. மேலும் அவ்வலீன் (முன்னவர்கள்), ஆகரீன் (பின்னவர்கள்) ஆகியோரின் கழுத்துகள் அன்னாருக்கு முன்னால் குனிகின்றன. எனவேதான் அன்னார், **‘அன ஸய்யிது உலிதே ஆலம் வலா ஃபக்ர்’** எனக் கூறினார்கள். அதாவது, நான் ஆதமின் அனைத்து மக்களுக்கும் தலைவனாக இருக்கின்றேன்; ஆனால் இதில் எனக்குப் பெருமை இல்லை. ஏனெனில் இவையெல்லாம் இறைவனின் அருளாகும். பிறகு அவர்கள் கூறினார்கள்:

لَوْ كَانَ مُوْسٰى وَعِيْسٰى حَيَّيْنِ لَمَا وَسِعَهُمَا اِلَّا اتِّبَاعِىْ

**‘லவ் கான மூஸா வ ஈஸா ஹய்யைனி லமா வஸிஅஹுமா இல்லத்திபாயீ’** எனக் கூறினார்கள். அதாவது, இப்போது மூஸாவும், ஈஸாவும் உயிருடன் இருந்தால் அவர்களுக்கும் என்னைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ***(அல் யவாக்கீத்து வல் ஜவாஹிர் தொகுப்பு இமாம் ஷிஃரானீ தொகுதி 2 பக்கம் 20)***

அல்லாஹ்! அல்லாஹ்!! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எத்தகைய மகத்தான நபியாக இருக்கிறார்கள். மேலும் அவர்களின் அந்தஸ்து

எத்தகைய உயர்வான இடத்தில் இருக்கிறது!!! முந்தைய நபிமார்கள் மட்டுமல்லாமல் எவருடைய கையில் இஸ்லாத்தின் இரண்டாம் காலகட்டத்தின் வெற்றி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ ஒப்புமையுடைய அந்த மஸீஹும் நபி (ஸல்) அவர்களின் தொண்டர்களின் கூட்டத்தில் நிற்கின்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் உண்மைப்படுத்தும் முத்திரை முன்னவர்கள் பின்னவர்கள் இருவரையும் உண்மைப்படுத்தும் பணியை செய்கிறது!!!!

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின்வ் வபாரிக் வஸல்லிம்.

## ஹதீஸின் ஒளியில் கத்மே நுபுவ்வத் என்பதற்கான தீர்வு

கத்மே நுபுவ்வத் விஷயம் தொடர்பாக திருக்குர்ஆனின் அடிப்படையில் சுருக்கமான - ஆயினும் இறையருளால் பரந்த விளக்கத்தை எடுத்துரைத்த பிறகு இப்போது நான் ஹதீஸின் பக்கம் வருகின்றேன். இந்த நூலின் துவக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று, ஒரு ஹதீஸ் வெளிப்படையில் எவ்வளவுதான் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் திருக்குர்ஆனுடன் ஒப்பிடுகையில் அதன் அந்தஸ்து எந்நிலையிலும் யூகத்தின் அடிப்படையில் உள்ளதாகும். ஆனால் எனக்கு எனது எதிர் கருத்து கொண்ட சகோதரர்களை திருப்திப்படுத்துவது நோக்கமாகும். மேலும் இந்த சுருக்கமான நூலில் விரிவாக விவாதிக்க இடமும் இல்லை. எனவே நான் இந்த இடத்தில் பல்வேறு ஹதீஸுகளைப் பற்றி அவை சஹீஹானவையா? அல்லது பலவீனமானவையா? என்ற வாதத்திற்குச் செல்ல மாட்டேன். மாறாக, சான்றுக்காக இந்த இடத்தில் எடுத்து வைக்கப்படுகின்ற அந்த எல்லா ஹதீஸுகளையும் சஹீஹானவை எனக் கருதி அவற்றிக்கு பொருத்தமான விளக்கத்தை எடுத்துரைக்க முயற்சி செய்வேன். *வமா தவ்ஃபீக்கீ இல்லா பில்லாஹ்.*

முதலில் நான் நேர்மறை வகையான ஹதீஸுகளை எடுக்கின்றேன். நமது கருத்தின்படி, அவற்றின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நிழலான நுபுவ்வத்தின் வழி திறந்துள்ளது நிரூபணமாகின்றது. அதாவது, நமது எஜமானர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (என் உயிர் அன்னாருக்கு

அர்ப்பணமாகட்டும்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்ட எந்தவொரு நபியும் வரமுடியாது; அவர்களின் அருளிலிருந்து சுதந்திரம் பெற்று நேரடியாக நுபுவ்வத்தின் அருளைப் பெற்ற எந்தவொரு ஷரீஅத் அல்லாத சுதந்திரமான நபியும் வர முடியாது எனவும் இதிலிருந்து சான்று கிடைக்கின்றது. **ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளிலிருந்து அருளைப் பெற்ற - அன்னாரின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்ற உம்மத்தீ நபி கண்டிப்பாக வர முடியும்.**

நாம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இந்த வகையான நிழலான, உம்மத்தீயான நபியாகவே நம்பிக்கை கொள்கின்றோம். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மாணவராக இருந்த காரணத்தினாலும், பின்பற்றியவராக இருந்த காரணத்தினாலும் நபித்துவத்தின் இறையருளைப் பெற்றார்கள். எப்படியிருந்த போதிலும், இங்கு முதலில் நேர்மறை வகையிலான ஹதீஸுகள் பற்றி விவாதிக்கப் படுகிறது. எனவே அதற்குப் பிறகு இதே கோட்பாட்டின்படி, நமது எதிர் கருத்து கொண்டவர்கள் தமது கற்பனையின்படி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் எல்லா வகையான நுபுவ்வத்திற்கான வாசலும் அடைபட்டு விட்டது என்பதற்கு சான்றாக எடுத்து வைக்கும் எதிர்மறை ஹதீஸுகளுக்கும் விளக்கம் எடுத்துரைக்கப்படும்.

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மகனாகிய இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாகியிருப்பார்

இந்த முன்னுரை வடிவிலான குறிப்புக்குப் பிறகு தற்போதைய வாதம் பற்றி நான் முதலில் எடுத்து வைக்க விரும்பும் ஹதீஸ் என்னவென்றால், நமது நபி கரீம் (ஸல்) அவர்களின் பாசமிகு மகன் இப்ராஹீம் தொடர்பானதாகும். இப்ராஹீம் ஹஸ்ரத் மாரிய்யா கிப்திய்யா அவர்களின் வயிற்றில் ஹிஜ்ரீ 8-ஆவது ஆண்டில் பிறந்தார்கள். (திப்ரி, ஸர்கானீ, தாரீகே கமீஸ் ஆகியவை காண்க.) அவர் நபித்துவ காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முதல் மகனாக இருந்தார். அதற்கு முன்

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் வயிற்றில் பிறந்த அனைத்து மகன்களும் இறந்து விட்டனர். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இப்ராஹீம் மீது மிகவும் பாசம் இருந்தது. ஆனால் அல்லாஹ்வின் நியதிக்கேற்ப இந்த மகனும் 17, 18 மாதங்களுக்குப் பிறகு இறந்து விட்டார். இவரது இறப்பினால் இயல்பாகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் துவங்கியது. ஆயினும், **இன்னா பிஃபிராக்கிக யா இப்ராஹீம் லமஹ்ஸூனூன்** - அதாவது இப்ராஹீமே! நாம் உமது பிரிவின் காரணமாக மிகவும் துக்கமடைந்துள்ளோம் என்று மட்டுமே கூறினார்கள். அத்துடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

لَوْ عَاشَ إِبْرَاهِيمُ لَكَانَ صِدِّيقًا نَّبِيًّا

**'லவ் ஆஷ இப்ராஹீமு லகான சித்தீகன் நபிய்யா'.** அதாவது எனது இந்த மகன் இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக உண்மையான நபியாக இருந்திருப்பார். ***(இப்னு மாஜா, கிதாபுல் ஜனாயிஸ்)***

## 'சித்தீக்கன் நபிய்யா' என்று சேர்ந்து வரும் மரபுத் தொடரில் நுட்பமான ஞானம்

சித்தீக்கன் நபிய்யா என்று சேர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ள இந்த மரபுத் தொடரில் இப்ராஹீம் அவர்களின் அந்தஸ்தின் உயர்வைச் சுட்டிக் காட்டுவது நோக்கமாகும். அதன் கருத்து, இப்ராஹீம் உயிருடன் இருந்தால், அவர் தன்னிடத்தில் சித்தீகிய்யத் மற்றும் நுபுவ்வத் இரண்டு அருள்களையும், இரண்டு பண்புகளையும் ஒன்று சேர்த்திருப்பார். ஏனெனில் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களைப் பற்றி சித்தீக்கன் நபிய்யா என்ற மரபுத் தொடர் பயன்படுத்தப்பட்டுள்ள அதே சமயத்தில் அவரைப் பற்றித் திருக்குர்ஆன், **'ரஃபஃனாஹு மகானன் அலிய்யா'** என்றும் கூறுகிறது. அதாவது நாம் அவரை உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட நபியாக்கினோம். (திருக்குர்ஆன்19:58)

(மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைத் தவிர ஹஸ்ரத் இத்ரீஸ் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் பற்றி மட்டும்தான் இந்த மரபுத் தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் 19:57 காண்க).

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த ஹதீஸில், இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவரும் மிகப் பெரிய உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருப்பார். ஏனெனில் அவரிடம் இயல்பாகவே மிக உயரிய ஆற்றல்கள் வைக்கப்பட்டிருந்தன என்பது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அது மட்டுமின்றி, சித்தீக்கன் நபிய்யா என்ற வாக்கியத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவ்வாறு ஒரு சித்தீக் தமது அந்தஸ்தைப் பொருத்தவரை நபியை விட கீழே இருக்கிறாரோ அவ்வாறே இப்ராஹீம் நபியானாலும் அவரும் தனது உயர் பதவியைப் பெற்றிருந்தபோதிலும் எனது ஷரீஅத்தைப் பின்பற்றுபவராகவும், என்னை அடியொற்றியே இருப்பார் என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதாவது வேறு சொற்களில் சொல்லப்போனால், நிழலான நபியாகவும், உம்மத்தீ நபியாகவும் இருப்பாரே தவிர ஷரீஅத்துடைய நபியாகவோ, சுதந்திரமான நபியாகவோ இருக்க மாட்டார் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

சுருக்கமாக, சிஹாஹ் சித்தாவின் புகழ்பெற்ற நூலாகிய இப்னு மாஜாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த நுட்பமான ஹதீஸில் நமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் தெளிவான சொற்களில், என் மகன் இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நுபுவ்வத்தின் அந்தஸ்தை அடைந்திருப்பார் எனக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தெளிவான வழிகாட்டலுக்குப் பிறகு நமது எதிரிகளுக்கு இரண்டே வழிகள்தான் திறந்திருக்கின்றன.

ஒன்று, இப்ராஹீம் பெரியவராகி நபி ஆகிவிடக் கூடாது என்பதற்காக இறைவன் அவருக்கு மரணத்தைக் கொடுத்து விட்டான்- நவூது பில்லாஹ். ஆனால் இது ஒரு வீணான, முட்டாள்தனமான விஷயமாகும் என்பதை ஒவ்வொருவராலும் புரிய முடியும். ஏனெனில் இதன் மூலம், இறைவன் மறந்து இப்ராஹீமை உலகத்தில் அனுப்பி விட்டான். ஆனால் நான் எனது தூதரை காத்தமுன் நபிய்யீன் ஆகக் குறிப்பிட்டு விட்டேன் என எப்போது இறைவனுக்கு நினைவு வந்ததோ உடனே ஹஸ்ரத் இப்ராஹீமுக்கு மரணத்தைக் கொடுத்து கதையை முடித்து விட்டான் என்று எண்ணுவது கட்டாயமாகிறது. இந்த ஹதீஸுக்கு இதை விட அறிவுக்குப் புறம்பான விளக்கம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

இரண்டாவது வழி, நமது எதிரிகள் இறையச்சத்தை மேற்கொண்டவாறு தமது பிடிவாதத்தை விட்டு விட்டு காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உம்மத்தில் நபி வரமுடியும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த வசனம் ஷரீஅத்தான நுபுவ்வத்தை, சுதந்திரமான நுபுவ்வத்தை தடுக்கின்றது. ஷரீஅத் அல்லாத, நிழலான நுபுவ்வத்தை ஒருபோதும் தடுக்கவில்லை.

## காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இறங்கியதற்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்ராஹீம் பிறந்தார்

இந்த ஹதீஸ் தொடர்பாக இன்னொரு விஷயத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டில் இறங்கியது. (இப்னு ஹிஷாம், திப்ரி, தாரீகே கமீஸ் ஆகியவை காண்க). ஆனால் இப்ராஹீம் அதற்கு 4, 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஹிஜ்ரி 9 அல்லது 10-ஆம் ஆண்டில் மரணமடைந்தார். (திப்ரி, ஸர்கானீ காண்க). இதன் பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இப்ராஹீமைப் பற்றி லவ் ஆஷ லகான சித்தீக்கன் நபிய்யா (அதாவது இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாகி இருப்பார்) என்ற சொற்களைக் கூறும்போது அதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பே காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இறங்கி விட்டது. மேலும் இறைவன் புறமிருந்து கத்மே நுபுவ்வத் பற்றிய வழிகாட்டல் வந்து விட்டது என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள்.

அப்படியிருந்தபோதிலும் அவர்கள், இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாக இருந்திருப்பார் என்ற சொற்களைக் கூறினார்கள். ஆக, இது அன்னாரின் ஞானத்தில் காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் ஹஸ்ரத் இப்ராஹீம், நபி ஆகும் வழியில் ஒருபோதும் தடையாக இருக்கவில்லை என்பதற்கு திடமான, உறுதியான சான்றாகும்.

இப்போது பாருங்கள். இது எவ்வளவு தெளிவான, விளக்கமான ஹதீஸாக இருக்கிறது! கத்மே நுபுவ்வத் இருந்தபோதிலும் முஹம்மதிய்ய உம்மத்தில் நுபுவ்வத்தின் வாசலைத் திறந்து கொடுக்கிறது. நமது

முஸ்லிம் சகோதரர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

நண்பர்களே! இறைவனுக்காக சிந்தியுங்கள். சீர்தூக்கிப் பாருங்கள். காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இறங்கி விட்டது; நமது எஜமானர் (ஸல்) அவர்கள் கத்மே நுபுவ்வத் என்ற கிரீடத்தால் அலங்கரிக்கப்பட்டு விட்டார்கள். ஆயினும் அதற்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு அன்னாரின் மகன் இப்ராஹீம் இறக்கும்போது அன்னார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

**''எனது இந்த மகன் இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாக இருந்திருப்பார்.''**

## இந்த ஹதீஸைப் பற்றி ஹஸ்ரத் முல்லா அலி காரீ (ரஹ்) அவர்களின் நுட்பமான விளக்கம்

இதிலிருந்து என்ன தெரிகிறது? இதற்குரிய பதிலாக நீங்கள் எங்களின் கூற்றை ஏற்றுக் கொள்ளாவிட்டால், ஹனஃபி பிரிவைச் சேர்ந்த கண்ணியமிக்க இமாம் ஹஸ்ரத் முல்லா அலி பின் முஹம்மது சுல்தானுல் காரீ (இறப்பு ஹிஜ்ரீ1014-ஆம் ஆண்டு) அவர்களின் விளக்கத்தைக் கேளுங்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

لَوْ عَاشَ اِبْرَاهِيْمُ وَصَارَ نَبِيًّا لَكَانَ مِنْ اِتِّبَاعِهِ...

فَلَا يُنَاقِضُ قَوْلَهُ تَعَالٰى خَاتَمَ النَّبِيِّيْنَ اِذَا الْمَعْنٰى اِنَّهُ لَا يَأْتِيْ نَبِيٌّ بَعْدَهُ
يَنْسِخُ مِلَّتَهُ وَلَمْ يَكُنْ فِيْ اُمَّتِهِ

**''லவ் ஆஷ இப்ராஹீமு வசார நபிய்யன் லகான மின் இத்திபாயிஹீ..........ஃபலா யுனாகிஸு கவ்லுஹூ தஆலா காத்தமுன் நபிய்யீன். இஸல் மஃனா அன்னஹூ லா யஃதீ நபிய்யுன் பஅுதஹூ யன்ஸகு மில்லதஹூ வலம் யகுன் ஃபீ உம்மத்திஹீ.''** ***(மவ்ளூஆத்தே கபீர் . பக்கம் 66,67)***

அதாவது, இப்ராஹீம் உயிருடன் இருந்தால் நபியாகி இருப்பார்.

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

அப்போதும் அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களைச் சேர்ந்தவராகவே இருந்திருப்பார். அந்த நிலையில், அவர் நபியாவதனால் காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்தின் கருத்தில் எந்தக் களங்கமும் ஏற்படாது. ஏனெனில், காத்தமுன் நபிய்யீன் என்பதன் பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை ரத்து செய்து விட்டு, அன்னாரின் உம்மத்தைச் சேராத எந்தவொரு நபியும் வர முடியாது என்பது மட்டுமே ஆகும்.''

## ஒரு நபி வராதிருப்பதற்கும், வரமுடியாதிருப்பதற்கும் இடையிலுள்ள நுட்பமான வித்தியாசம்

இந்த சந்தர்ப்பத்தில் சில அவசர புத்திக்காரர்கள், ஹஸ்ரத் முல்லா அலீ காரீ அவர்கள் இந்த பதிலை சாத்தியக்கூறு என்ற வகையில் மட்டுமே கூறியுள்ளார்கள். மற்றபடி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார்கள் என்பதுதான் அவர்களின் சொந்த கொள்கையாக இருந்தது என ஆட்சேபணை செய்கின்றனர். இந்த ஆட்சேபணையைப் பற்றி அடிப்படை விஷயமாக ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, முதலில் ஹஸ்ரத் முல்லா அலி காரீ அவர்கள் இவ்வளவு தெளிவாக வெளிப்படுத்திய பிறகு அவர்களின் சொந்தக் கொள்கை வேறொன்றாக இருந்தது என வாதிப்பது கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். அதனை உறுதியான சான்று இல்லாமல் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இன்னும் சொல்லப்போனால், மேலே எடுத்துரைக்கப்பட்டுள்ள முல்லா அலீகாரீ அவர்களின் மேற்கோளின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் முல்லா அலீ காரீ அவர்களே தமது கையால் அப்படிப்பட்ட சொற்களை அதிகமாக்கியிருக்கிறார்கள். அதிலிருந்து மேலே எழுதப்பட்டதுதான் அவர்களின் சொந்தக் கொள்கையுமாகும்; அதற்கு மாறான எந்தவொரு கொள்கையுமல்ல என்பது தெளிவாக நிரூபணமாகின்றது. ஏனெனில் அதன் முழு வாசகம் இதுவாகும்:

قُلْتُ وَمَعَ هٰذَا لَوْ عَاشَ اِبْرَاهِيْمُ وَصَارَ نَبِيًّا لَكَانَ مِنْ اِتِّبَاعِهِ...
فَلَا يُنَاقِضُ قَوْلُهُ تَعَالٰى خَاتَمُ النَّبِيّٖنَ

( موضوعاتِ کبیر ص 67)

**''குல்த்து வமஅு ஹாஸா லவ் ஆஷ இப்ராஹீமு வசார நபிய்யன் லகான மின் இத்திபாயிஹீ.........ஃபலா யுனாகிஸு கவ்லுஹூ தஆலா காத்தமுன் நபிய்யீன்.''**

**''அதாவது நான் கூறுகிறேன். (நான் கூறுகிறேன் என்ற சொல் கவனிக்கத்தக்கது). இந்த விஷயம் பற்றி கூறப்பட்டுள்ள பல்வேறுபட்ட கூற்றுகள் இருந்தபோதிலும் இப்ராஹீம் நபியானால் அவர் அப்போதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டியவராக இருந்தார். எனவே அந்த நிலையிலும் இப்ராஹீம் நபியாவது இறைவனின் கட்டளையாகிய காத்தமுன் நபிய்யீன் என்பதற்கு மாறுபட்டதாக இருக்காது.''** ***(மவ்ளூஆத்தே கபீர் பக்கம் 67)***

இப்போது **'நான் கூறுகிறேன்'** என்ற சொற்கள் இருக்கும்போது இது, ஹஸ்ரத் முல்லா அலீ காரீ அவர்களின் சொந்த கொள்கைதான் என்பது பற்றி எவராவது சந்தேகம் கொள்ள முடியுமா?

ஆனால் ஹஸ்ரத் முல்லா அலீ காரீ அவர்கள் இந்த சிந்தனையை வெறும் சாத்தியக்கூறு என்ற அளவில் மட்டும் கூறினார் என ஒரு கற்பனைக்காக வைத்துக் கொண்டாலும் நமது மேற்கூறப்பட்ட சான்று எந்நிலையிலும் நிலைத்திருக்கிறது. ஏனெனில் இந்த இடத்தில் ஏதாவதொரு நபி வருவது பற்றியோ அல்லது வர முடியாது என்பது பற்றியோ இங்கு கேள்வி அல்ல. மாறாக, **லவ் ஆஷ இப்ராஹீமு லகான சித்தீக்கன் நபிய்யா (இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாக இருந்திருப்பார்)** என்ற நபிமொழிக்கு அவர் என்ன பொருள் புரிந்து வைத்திருந்தார்? மேலும் காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இருக்கும்போது ஏதாவதொரு ஷரீஅத்தல்லாத, உம்மதீ நபி வருவது பற்றி அல்லது வர முடியும் என்பது பற்றி அவருடைய கொள்கை என்ன இருந்தது? என்பதே கேள்வியாகும். ஆக, இங்கு ஏதாவதொரு நபி வருவது அல்லது வராதிருப்பது பற்றிய கேள்வியல்ல; மாறாக, வர முடியுமா? அல்லது வர முடியாதா என்ற கேள்வியாகும். மேலும் இது தொடர்பாக முல்லா அலி காரீ அவர்களின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த சான்று எத்தகைய தெளிவானதும்,

வெளிப்படையானதுமாகும் என்றால், அதில் எந்த விளக்கமும் கொடுக்க வேண்டிய தேவையே இல்லை. ஏனெனில், **லவ் ஆஷ இப்ராஹீமு லகான சித்தீனன் நபிய்யா (இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாக இருந்திருப்பார்)** என்பதற்கேற்ப ஹஸ்ரத் இப்ராஹீம் நபியானாலும் அவர் நபியாக ஆவது காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்திற்கு ஒருபோதும் மாற்றமானதாக இருக்காது. ஏனெனில் ஹஸ்ரத் முல்லா அலி காரீ (ரஹ்) அவர்களின் பார்வையில், இந்த வசனத்தின் பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியோ, அல்லது இந்த உம்மத்தைச் சேராத நபியோ வர முடியாது என்பது மட்டும் தானே தவிர, எந்தவொரு ஷரீஅத்தில்லாத உம்மத்தீ நபியும் கூட வர முடியாது என்பதல்ல.

எனவே ஒரு கற்பனையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வர மாட்டார் என்பதே ஹஸ்ரத் முல்லா அலி காரீ (ரஹ்) அவர்களின் சொந்தக் கருத்தாக இருந்தது என்றால்,(இதனை நான் ஒரு கற்பனையாகக் கூறுகிறேன்.) அப்போதும் நாம் எடுத்து வைக்கும் சான்றில் எந்த இடையூறும் ஏற்படாது. ஏனெனில் லவ் ஆஷ இப்ராஹீமு லகான சித்தீக்கன் நபிய்யா (அவர் உயிருடன் இருந்தால் உண்மையான நபியாக இருப்பார்) என்பதன்படி, காத்தமுன் நபிய்யீன் என்ற வசனம் இருந்தாலும் முஹம்மதிய்ய உம்மத்தில், உம்மத்தைச் சேர்ந்த ஷரீஅத் அல்லாத நபி வர முடியும் என்பதை ஹஸ்ரத் முல்லா அலி காரீ (ரஹ்) அவர்கள் தெளிவாக ஒப்புக் கொள்கிறார்கள்.

இந்த இடத்தில் நமது வாதம் நபித்துவத்திற்கான சாத்தியக்கூறு உள்ளது என்பதைப் பற்றித்தான் இருக்கிறது. நுபுவ்வத் தோன்றி விட்டதா? இல்லையா? என்பதைப் பற்றி அல்ல. அது ஒரு தனிப்பட்ட தலைப்பாகும். நான் இந்த இடத்தில் எடுத்து வைத்திருக்கும் நுட்பமான வித்தியாசத்தை கவனமாகப் புரிந்து இந்த சந்தர்ப்பத்தில் சில குறைமதியுடைய அல்லது ஏமாற்றுகின்ற, அடிப்படையான கோட்பாடுகளற்ற மக்கள் உருவாக்குகின்ற சந்தேகத்திலிருந்து தப்பிப்பதற்கு நமது நூலைப் படிப்பவர்கள் முயற்சி செய்வார்கள் என நான் நம்புகிறேன். மேலும் இதே அடிப்படையான விளக்கத்தைத்தான்

மார்க்கத்தைச் சேர்ந்த பிற சான்றோர்களின் கூற்றுகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றைப் பற்றி சில சுய நோக்கம் கொண்டவர்கள் சந்தேகத்தை உண்டாக்க விரும்புகின்றனர்.

## ஹஸ்ரத் அபூபக்ர் இந்த உம்மத்தில் மிகச் சிறந்த மனிதராவார் - இனி ஒரு நபி வந்தாலேயொழிய

நான் எடுத்து வைக்க விரும்பும் இன்னொரு ஹதீஸ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழ்பெற்ற ஒரு கூற்றைக் கொண்டதாகும். நமது எஜமானர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

أَبُوْبَكْرٍ أَفْضَلُ هٰذِهِ الْأُمَّةِ إِلَّا أَنْ يَّكُوْنَ نَبِيٌّ

**''அபூபக்ரின் அஃப்ஸலு ஹாஸிஹில் உம்மத்தி இல்லா அன்ய் யகூன நபிய்யுன்.''** ***(தைலமியை சான்றாகக் காட்டி இமாம் மனாவி இயற்றிய குனூஸுல் ஹகாயிக் எனும் நூலில் – எகிப்து பதிப்பு பக்கம் 7)***

**அதாவது, அபூ பக்ர் எனது உம்மத்தில் அனைவரையும் விட மிகச் சிறந்த அந்தஸ்தை கொண்டவராவார் - இனி ஒருநபி தோன்றினாலேயொழிய.**

இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

أَبُوْبَكْرٍ خَيْرُ النَّاسِ إِلَّا أَنْ يَّكُوْنَ نَبِيٌّ

**''அபூபக்ரின் கைருன் நாஸி இல்லா அன்ய் யகூன நபிய்யுன்.** ***(தப்ரானீ கபீர், காமில் பின் அதீயை சான்றாகக் காட்டி ஜாமிவுஸ் ஸகீரில் இமாம் ஸுயூத்தி. எகிப்து பதிப்பு பக்கம் : 5)***

**அதாவது, அபூ பக்ர் இந்த உம்மத்தின் மிகச் சிறந்த மனிதர் ஆவார் - பின்னர் ஒரு நபி தோன்றினாலே தவிர.**

ஒரே கருத்தைக் கொண்ட இந்த இரண்டு ஹதீஸுகளும் மூன்று ஹதீஸ் நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை எவ்வித

விளக்கம் தர வேண்டியவையும் அல்ல. இவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது உம்மத்தில் அபூபக்ரின் அந்தஸ்து மிகவும் உயர்ந்தது; ஆயினும் பின்னர் ஒரு நபி தோன்றினால் வேறு விஷயம் என்பதை எவ்வளவு தெளிவான சொற்களில் கூறுகிறார்கள்! ஏனெனில் ஒரு நபியின் அந்தஸ்து எந்நிலையிலும் நபி அல்லாதவரை விட உயர்ந்ததாகும். இந்த ஹதீஸுகள் தனது சொற்களிலும், தனது கருத்துகளிலும் எவ்வளவு தெளிவானவையும், பரந்தவையுமாகும் என்றால், அவற்றைப் பற்றி எவ்வித ஐயத்திற்கும் இடமே இருக்க முடியாது. மேலும் இந்த ஹதீஸுகள் நம்மால் உருவாக்கப்பட்டவை அல்ல. மாறாக, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இஸ்லாமிய உலகில் வெளியிடப்பட்டும், அறியப்பட்டும் வந்திருக்கின்றன. மேலும் இந்த ஹதீஸுகளை எடுத்துக் கூறுபவர்களும் முஸ்லிம்களில் மிகப் பெரிய சான்றோர்களான இமாம் மனாவி மற்றும் இமாம் ஸுயூத்தி ஆகியோர் ஆவர். மேலும் இந்த ஹதீஸுகளுக்கு இங்கு நாம் கொடுத்திருக்கின்ற பொருளும் அரபி விதிமுறைகளுக்குப் பொருத்தமானதும் சரியானதும் ஆகும். அதனை அரபி தெரிந்த ஒவ்வொருவரும், தானே எளிதாக ஆய்வு செய்து கொள்ள முடியும்.

சந்தேகமின்றி, இந்த ஹதீஸுகளில் நபி என்ற சொல் நபிய்யன் என ஸபருடன் வந்திருந்தால் அதற்கு இவ்வாறு பொருள் ஆகலாம்:

''அபூபக்ர் எனது உம்மத்தில் மிகச் சிறந்த மனிதர் ஆவார் – அவர் பின்னர் நபியானாலே தவிர.''

ஆனால் இந்த நிலையில் இந்த சொற்றொடர் முற்றிலும் பொருளற்ற ஒன்றாகி விடுகிறது. ஏனெனில் இவ்விரு நிலையிலும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களே சிறந்தவராக இருக்க முடியும். இவ்வாறு 'இல்லா' (தவிர) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது முற்றிலும் தேவையற்றதாகவும், இன்னும்சொல்லப் போனால் தவறானதாகவும் ஆகி விடுகிறது. எப்படி இருந்த போதிலும் நாம் கூறியிருப்பது போன்று, ஒவ்வொருவரும் அசல் நூலைப் பார்த்தே ஆறுதல் பெற முடியும். இந்த ஹதீஸில் நபிய்யுன் என்ற சொல் மர்ஃபூ ஆக பயன்படுத்தப்பட்டுள்ளது. மன்ஸூப் ஆக பயன்படுத்தப்படவில்லை!

(அதாவது நபிய்யுன் என வந்துள்ளது; நபிய்யன் என வரவில்லை.)

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எனவே ஹதீஸின் சரியான பொருள் இதுவாகும்:

''அபூபக்ர் எனது உம்மத்தில் மிகச் சிறந்த மனிதர் ஆவார் - இனி எவராவது நபி தோன்றினாலே தவிர.''

இப்போது பாருங்கள். இந்த ஹதீஸ் எவ்வளவு தெளிவானதாக இருக்கிறது! ஆனால் எந்த சமுதாயம் காண்பதற்குத் ஆயத்தமாக இல்லையோ அதற்கு எப்படிக் காட்டுவது? எந்த மனிதர் கேட்பதற்குத் தயாரில்லையோ அவருக்கு எப்படிக் கேட்க வைப்பது? மேலும் எவர் புரிவதற்குத் தயாரில்லையோ அவருக்கு எப்படிப் புரிய வைப்பது? அவர்கள் திருக்குர் ஆனைப் பற்றி சிந்திப்பதில்லையா? அல்லது அவர்களின் உள்ளங்களில் பூட்டு போடப்பட்டுள்ளதா? எனத் திருக்குர்ஆன் எவ்வளவு வருத்தத்துடன் கூறுகிறது? ***(திருக்குர் ஆன் 47: 25).*** *ஃப இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.*

## இறுதி காலத்தில் மீண்டும் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் காலகட்டம் விதிக்கப்பட்டிருந்தது

இப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் பல்வேறு காலகட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்ட ஒரு ஹதீஸை எடுத்துரைக்கிறேன். மேலும் அதில், இஸ்லாம் நபித்துவத்தில் துவங்கி அதற்குப் பிறகு நபித்துவத்தின் வழியில் கிலாஃபத் நிலைபெற்றதைப் போன்று இடையில் ஒரு நீண்ட காலகட்டத்திற்குப் பிறகு மீண்டும் இறுதி காலத்தில் நபித்துவத்தின் வழியிலேயே கிலாஃபத் நிலைபெறும் என விளக்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

تَكُوْنُ النُّبُوَّةُ فِيْكُمْ مَا شَاءَ اللهُ أَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهُ اللهُ تَعَالٰى ثُمَّ
تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ مَا شَاءَ اللهُ أَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهُ اللهُ
تَعَالٰى ثُمَّ تَكُوْنُ مُلْكًا عَاضًّا فَتَكُوْنُ مَا شَاءَ اللهُ أَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهُ
اللهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ مُلْكًا جَبَرِيَّةً فَتَكُوْنُ مَا شَاءَ اللهُ أَنْ تَكُوْنَ ثُمَّ
يَرْفَعُهُ اللهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ ثُمَّ سَكَتَ

''முஸ்லிம்களே! உங்களிடம் இந்த நுபுவ்வத் அல்லாஹ் நாடும் வரை நிலைத்திருக்கும். பிறகு அந்த காலகட்டம் முடிந்து விடும். அதற்குப் பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் காலகட்டம் வரும். (அது அந்த நுபுவ்வத்தின் நிறைவாக இருக்கும்.) பின்னர் சில காலத்திற்குப் பிறகு இந்த கிலாஃபத்தும் சென்று விடும். அதற்குப் பிறகு கடிக்கக் கூடிய (அதாவது மக்களின் மீது கொடுமை இழைக்கக் கூடிய) மன்னர் ஆட்சி காலம் வரும். கொஞ்ச காலத்திற்குப் பிறகு இந்த காலகட்டமும் முடிந்து விடும். அதற்குப் பிறகு பலவந்தமான ஆட்சி இருக்கும். அது கொடுமையின் வழியிலிருந்து விலகி இருந்தாலும் அது மக்களாட்சியின் கொள்கைகளுக்கு மாறானதாக இருக்கும். பின்னர் இந்த மாதிரியான ஆட்சியும் முடிந்து விடும். அதற்குப் பிறகு மீண்டும் கிலாஃபத்தின் காலகட்டம் வரும். அது முந்தைய காலகட்டத்தைப் போன்று நுபுவ்வத்தின் வழியில் நிலைபெறும். ஹதீஸ் அறிவிப்பாளர் இதற்குப் பிறகு கூறுகிறார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பின்னர் மவுனமாகி விட்டார்கள்.'' ***(முஸ்னது அஹ்மது தொகுதி 5 பக்கம் 404)***

## இஸ்லாம் கொடிகட்டிப் பறந்த வரலாற்றின் சுருக்கம்

இந்த நுட்பமான ஹதீஸ் இஸ்லாம் கொடிகட்டிப் பறந்த வரலாற்றைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான, முழுமையான சுருக்கத்தை எடுத்துரைக்கிறது. மேலும் நமது எஜமானர் (ஸல்) அவர்கள் மிகவும் ஞானத்துடன் ஒவ்வொரு காலகட்டத்தையும் தனித்தனியாக படம்பிடித்துக் காட்டுவதற்காக எத்தகைய அரிதான சொற்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் உண்மையில் ஆற்றை ஒரு குவளையில் அடைத்து வைத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: முதன்முதலில் நுபுவ்வத்தின் காலகட்டமாகும். ஆக, அதுவே இந்த எல்லா அமைப்பின் மையப் புள்ளியாகும். அதற்குப் பிறகு கிலாஃபத்திற்கான காலகட்டம் வரும். சில நேரத்தில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பலவந்தமான ஆட்சி செய்யும் அதிகாரிகளுக்கும் கலீஃபா எனப் பெயர் வைக்கப்படுகின்றது. ஆனால் (இந்த ஹதீஸில் கூறப்பட்ட) கிலாஃபத் என்பதன் கருத்து, (அப்படிப்பட்ட) பொதுவான கிலாஃபத் என்பதன்று. மாறாக, நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் என்பது கருத்தாகும். அதாவது,

ஓர் உண்மையான நபிக்குப் பிறகு அவருடைய பணியை முழுமை செய்வதற்காக இறைவன் புறமிருந்து நிலைநாட்டப்படுகின்ற கிலாஃபத். அது நுபுவ்வத்தின் நிறைவாக இருக்கிறது. (நமது தூய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோரின் கிலாஃபத் நிலைபெற்றது போன்று)

இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 'முல்கன் ஆழ்ழன்' காலகட்டம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அது கடிக்கின்ற, கொடுமையிழைக்கின்ற காலகட்டமாக இருந்தது. இந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாசத்திற்குரிய பேரர் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) மற்றும் நபியின் குடும்பத்தைச் சேர்ந்த பல தூய மக்கள் கொடுமைக்குள்ளானார்கள். மேலும் இதே காலகட்டத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட மகள் வழிப் பேரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் அவர்களும் ஷஹீதாக்கப் பட்டார்கள். மேலும் இதே காலகட்டத்தில்தான் ஹஜ்ஜாஜ் பின் யூசுஃபின், இரத்தத்தைக் குடிக்கத் துடித்த வாள் ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்களை சின்னாபின்னமாக்கி விட்டது. எனவே சந்தேகமின்றி இந்த காலகட்டம் நமது எஜமானர் (ஸல்) அவர்களின் சொற்களாகிய முல்கன் ஆழ்ழன் (கடிக்கின்ற, கொடுமையான காலகட்டம்) என்பதன் முழுமையான முன்மாதிரியாக இருந்தது. இதில் கொடுமைக்காரர்களின் இரத்த வெறி கொண்ட பற்கள் தூயவர்களின் உடலை கண்டதுண்டமாக வெட்டுவதில் ஈடுபட்டிருந்தன.

ஆய்வுக்கு எடுத்துள்ள இந்த ஹதீஸில் அதற்குப் பிறகு **'முல்கன் ஜபரிய்யதன்'** என்ற காலகட்டம் கூறப்பட்டுள்ளது. அதாவது அந்த ஆட்சியில் முந்தைய காலகட்டத்தைப் போன்று மிகக் கொடூரமான அநியாயங்கள் நடக்காவிட்டாலும் அது இஸ்லாமிய மக்களாட்சி அமைப்பில் நிலைபெற்றிருக்காது. மாறாக, பலவந்தமான, தன்னாட்சியான முறையில் இருக்கும். அதில் ஆட்சியாளர்கள் பொதுமக்களின் சரியான பிரதிநிதித்துவம் இல்லாமல் வாரிசுரிமையில் அல்லது வல்லமையினால் ஆட்சியாளர்களாக மாறி விடுவார்கள். இதன்படி, இஸ்லாத்தில் பலவந்தமான இந்த ஆட்சி காலகட்டம் பல

நூற்றாண்டுகள் தொடர்ந்தன. அதில் யஸீது பின் முஆவிய்யா, ஹஜ்ஜாஜ் பின் யூஸுஃப் ஆகியோரின் கொடுமைகளைப் போன்று நடக்கவில்லை என்றாலும் அது ஒரு பலவந்தமான தன்னாட்சியான காலகட்டமாக இருந்தது. அதில் சரியான இஸ்லாமிய அமைப்பு இல்லாமற் போய்விட்டது.

## நுபுவ்வத் மற்றும் கிலாஃபத்தின் இரண்டாவது காலகட்டம்

இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: பின்னர் மீண்டும் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்தின் காலகட்டம் நிலைபெறும். அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொண்டர்களைச் சேர்ந்த ஓர் இறையடியாருக்கு நிழலான, பிரதிபிம்பமான நுபுவ்வத் எனும் ஆடையை அணிவித்து அவர் மூலமாக மீண்டும் சரியான இஸ்லாமிய கிலாஃபத்தின் தொடரை ஆரம்பித்து விடுவான்.

இப்போது பாருங்கள். இந்த நுட்பமான ஹதீஸ் தனது பிற பெரும்பான்மையான நுட்பங்களுடன் எவ்வளவு தெளிவாகவும், சந்தேகமற்ற சொற்களிலும், இஸ்லாம் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்துடன் ஆரம்பமானதைப் போன்றே இறுதி காலத்திலும் மீண்டும் அதே மாதிரியான கிலாஃபத் நிலைபெறும் என அறிவிக்கின்றது! அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொண்டர் களிலிருந்து ஒரு நிழலான நபி தோன்றுவார். அவரது காலடிகளில் மீண்டும் கிலாஃபத்தின் காலகட்டம் ஆரம்பமாகி விடும். அடுத்து ஹதீஸ் அறிவிப்பாளர் கூறுகிறார்: **ஸும்ம ஸகத.** ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிறகு மவுனமானார்கள்.

இந்த மவுனத்தில், இந்த இரண்டாவது கிலாஃபத்துடன் இஸ்லாத்தின் முதலாவது காலகட்டம் முடிந்து ஒரு புதிய காலகட்டம் ஆரம்பமாகி விடும் என்பதைச் சுட்டிக் காட்டுவது அன்னாருக்கு நோக்கமாகஇருந்தது. இந்த புதிய காலகட்டம் அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் தோற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள இதே காலகட்டம்தான். ஏனெனில் ஹதீஸின் புகழ்பெற்ற நூலாகிய மிஷ்காத்தில் இந்த ஹதீஸ் குறிப்பிடப்பட்டுள்ள

அந்த இடத்தில் வரிகளுக்கு மத்தியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

الظَّاهِرُ اَنَّ الْمُرَادَ بِهٖ زَمَنُ عِيْسٰى وَالْمَهْدِيِّ

**அழ்ழாஹிரு அன்னல் முராத பிஹீ ஸமனு ஈஸா வல் மஹ்திய்யி.**
***(மிஷ்காத் தபஃ அஸிஹ்ஹுல் மதாபிஃ, கராச்சி பக்கம் 461)***

அதாவது கிலாஃபத்தின் இந்த இரண்டாவது காலகட்டம் என்பது மஸீஹ் மற்றும் மஹ்தியின் காலம் என்பது வெளிப்படையாகும்.

எவர்களுடைய சந்ததிகள் இப்போது நம்மை அழிப்பதற்கு முனைந்து கொண்டிருக்கிறார்களோ அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழி காட்டுவானாக. அவர்களின் சாட்சியாகும் இது. *அல்ஃபஸ்லு மா ஷஹிதத் பிஹில் அஃதாவு.* (எதிரிகளும் எதற்கு சாட்சி பகர்கிறார்களோ அதுவே உண்மையான சிறப்பு ஆகும்.)

## ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் இந்த கிலாஃபத்திற்கு ஒருபோதும் பொருத்தமானவர் ஆக முடியாது

சிலர் இந்த ஹதீஸில் வந்துள்ள கிலாஃபத்தின் இரண்டாவது காலகட்டத்தை பனூ உமய்யாவைச் சேர்ந்த ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களுக்குப் பொருத்தியிருக்கிறார்களே என்று எவருடைய உள்ளத்திலாவது சந்தேகம் எழும் என்றால், அந்த சந்தேகம் ஓர் அறிவற்றவரின் சந்தேகம் ஆகும். ஏனெனில் முதலில் **கிலாஃபத்துன் அலா மின்ஹாஜின் நுபுவ்வத்** (நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்) என்ற சொல், முறைப்படி ஓர் அமைப்பையும், முறைப்படி ஒரு காலகட்டத்தையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. ஆனால் ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களின் கிலாஃபத் வெறும் இரண்டு அல்லது இரண்டே கால் ஆண்டுகள் இருந்து பின்னர் முடிந்து விட்டது. ***(காண்க:திப்ரீ, தாரீகே காமில், இப்னு அஸீர்).*** அப்படி இருக்கும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த சுருக்கமான, தனிப்பட்ட கிலாஃபத்தை ஒரு காலகட்டமாகவும், அமைப்பாகவும் எடுத்துரைத்திருப்பார்களா என்ன? ஒருபோதும் அன்று; ஒருபோதும் அன்று.

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

பிறகு, ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களின் கிலாஃபத் **முல்கன் ஆழ்ழன், முல்கன் ஜபரிய்யதன்** (அதாவது கடிக்கும் ஆட்சி, பலவந்தமான ஆட்சி) ஆகிய காலகட்டத்திற்கு மத்தியில் அவற்றுக் குள்ளேயே ஊடுருவி காணப்பட்டது; அவற்றிற்குப் பிறகு அல்ல என்பதையும் ஒவ்வொரு வரலாற்று அறிஞர்களும் அறிவார்கள். ஏனெனில் ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களுக்குப் பிறகும் பலவந்தமான ஆட்சியின் காலகட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆனால் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட (இந்த) ஹதீஸ் மிகத் தெளிவாக கிலாஃபத்தின் இந்த காலகட்டத்தை பலவந்தமான ஆட்சிக்குப் பிறகுள்ள காலகட்டமாகக் குறிப்பிடுகிறது. இது, கிலாஃபத்தின் இந்த காலகட்டம் என்பது ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களின் கிலாஃபத் எனப் பொருள்பட முடியாது என்பதற்கு உறுதியான சான்றாகும். அதுமட்டுமின்றி, **ஸும்ம ஸகத** (அதாவது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதற்குப் பிறகு மவுனமானார்கள்) என்ற சொற்களும், இங்கு இஸ்லாமிய வரலாறு ஒரு புரட்சியை உருவாக்கவிருந்த, ஒரு புதிய புரட்சி மிக்க காலத்திற்கு அடித்தளமிடவிருந்த அந்த கிலாஃபத் பற்றிய குறிப்பு இருக்கிறது என்பதை உறுதியாக நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களின் காலத்தில் ஒருபோதும் எந்தவொரு புதிய காலத்தின் அடித்தளம் நிலைநாட்டப்படவில்லை. எனவே எவ்விதத்தில் பார்த்தாலும் இந்த ஹதீஸை பனூ உமய்யாவின் கலீஃபாவாகிய ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களுடன் பொருத்துவது ஒரு பலவந்தமான செயலேயன்றி வேறில்லை. மேலும் எவர் அப்படிப் புரிந்து கொண்டாரோ அவர் புரிவதில் ஓர் அபாயகரமான தவற்றைச் செய்துள்ளார்.

சுருக்கமாக, நாம் மேலே குறிப்பிட்டுள்ள இந்த ஹதீஸில் இறுதி காலத்தில் முஸ்லிம்களுக்கு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் பற்றிய வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கிலாஃபத் ஏதாவதொரு நிழலான மற்றும் உம்மத்தைச் சேர்ந்த ஒரு நபி தோன்றி உண்மையான கிலாஃபத்திற்கான அடிப்படையை நிலைநாட்ட வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. அதுவே அதன் கருத்தாகும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## இந்த ஹதீஸில் நுபுவ்வத்தைப் பற்றிய குறிப்பு ஏன் மறைத்து வைக்கப்பட்டுள்ளது?

அதிக சிந்தனை செய்யும் பண்பில்லாத, ஆனால் ஆட்சேபணையின் பக்கம் சீக்கிரம் காலெடுத்து வைக்கின்ற பழக்கம் கொண்ட சிலர் இந்த ஹதீஸைப் பற்றி, இதில் இறுதி காலத்தில் கிலாஃபத்தைப் பற்றிய குறிப்பு மட்டும்தானே உள்ளது? நுபுவ்வத்தைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லையே? எனவே இதிலிருந்து நுபுவ்வத்தைப் பற்றி சான்று எடுப்பது சரியானதல்ல என்ற ஆட்சேபணையையும் எடுத்து வைக்கின்றனர். ஆனால் இந்த ஆட்சேபணையும் முற்றிலும் அர்த்தமற்றதும், பலவீனமானதுமாகும். ஹதீஸில் **'கிலாஃபத்துன் அலா மின்ஹாஜின் நுபுவ்வத்**' (நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்) என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் அல்லது வேறு சொற்களில் பிறகு வரக் கூடிய கிலாஃபத். ஆக, இந்த மாதிரியான கிலாஃபத் பற்றிய குறிப்பில் கண்டிப்பாக நுபுவ்வத்தைப் பற்றிய குறிப்பும் தானாகவே வந்து விடுகிறது. அதனை தனியாகக் குறிப்பிட வேண்டிய தேவை எஞ்சியிருப்பதில்லை என்பதை ஒவ்வொருவரும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் நுபுவ்வத்தே இல்லை என்றால், நுபுவ்வத்தின் நிறைவாக விளங்குகின்ற கிலாஃபத் எவ்வாறு நிலைபெற முடியும்?

அதுமட்டுமின்றி, நமது மாற்று கருத்து கொண்டவர்கள் இன்னொரு விஷயத்தைப் பற்றியும் சிந்திக்கவில்லை. ஆனால் அதுவோ தற்போதைய வாதத்தில் ஓர் அடிப்படையான விஷயமாகும். அதாவது, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருபோதும் எவ்விதமான தனிப்பட்ட நுபுவ்வத் பற்றி வாதிக்கவேயில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத்தின் பகுதியாகவும் அதன் பிம்பமாகவும் இருக்கின்ற நிழலான நுபுவ்வத் பற்றி வாதித்துள்ளார்கள். இந்நிலையில், இந்த இடத்தில் நுபுவ்வத்தை தனியாகக் குறிப்பிட வேண்டிய தேவை ஒருபோதும் இல்லை என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். உண்மையில் இது, திருக்குர்ஆனி லுள்ள சூரா ஜுமுஆவில் மேற்கொள்ளப்பட்ட அதே நிலைதான். அதைப் பற்றி நாம் மேலே குறிப்பிட்டு வந்துள்ளோம்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُو عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ
وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِن كَانُوا مِن قَبْلُ لَفِي ضَلَالٍ مُّبِينٍ ○
وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ

**''ஹுவல்லதீ பஅஸ ஃபில் உம்மிய்யீன ரஸூலன்.......... வஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்''** *(திருக்குர் ஆன் 62:3,4)*

அதாவது, இறைவன் அரபிகளில் ஒரு தூதரை அனுப்பினான்.......மேலும் பின்னர் வரக்கூடிய சமுதாயத்திலும் அந்த தூதரை (அவருடைய ஒரு நிழல் மற்றும் பிரதி பிம்பம் மூலமாக) மீண்டும் வெளிப்படுத்துவான்.

இப்போது பாருங்கள். இந்த வசனத்தில் எவ்வாறு சஹாபாக்களின் ஒப்புமையைக் குறிப்பிடுவதைப் போதுமானதாக்கி, ஒரு நிழலான முஹம்மதின் தோற்றத்தைப் பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது! அவ்வாறே நாம் ஆய்வு செய்யும் ஹதீஸிலும் இஸ்லாத்தின் இறுதி காலகட்டத்தைப் பற்றிய குறிப்பிலும் நுபுவ்வத்தின் குறிப்பை சொல் அளவில் விட்டுவிட்டு **கிலாஃபத்துன் அலா மின்ஹாஜின் நுபுவ்வத்** (நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்) என்பதைச் சுட்டிக் காட்டுவது போதுமானதாகக் கொள்ளப்பட்டுள்ளது. **ஆகரீன மின்ஹும்** என்ற வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று, இறுதி காலத்தில் தோன்றக் கூடிய நபி எவ்வித தனிப்பட்ட நபியாக இருக்க மாட்டார். மாறாக, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தொண்டராகவும், அன்னாரின் மாணவராகவும், அன்னாரின் நிழலாகவுமே இருப்பார் என்ற நுட்பமான உண்மையின் பக்கம் மக்களின் கவனத்தைத் திருப்புவதற்காகவே அவ்வாறு செய்யப்பட் டுள்ளது. ஏனெனில் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மார்க்க உலகில் வேறு எந்த அந்நியருக்கும் இடமில்லை. மாறாக, இப்போது முஹம்மதுர் ரஸூலுலாஹ் (ஸல்) அவர்களின் காலகட்டம் மட்டுமே எஞ்சியுள்ளது. ஆம்! உண்மையில் அந்த காலகட்டம் மட்டுமே எஞ்சியுள்ளது. அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இனி எவர் வந்தாலும் - அவர் நுபுவ்வத்தின் மேன்மையை அடைந்தாலும் - அவர்

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து பயன்பெறுபவராகவும் அன்னாரின் தொண்டராகவும், அன்னாரின் ஒளியிலிருந்து ஒளியைப் பெறுபவராகவும் அன்னாரின் நிழலாகவும் இருப்பார். அவ்வாறல்லாமல் சுதந்திரமான நபியாக இருக்க மாட்டார்.

பாருங்கள். பதினான்காம் இரவின் சந்திரன் எவ்வளவு அருமையாகவும், உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும், எவ்வளவு ஒளிமிக்கதாகவும் இருக்கிறது! ஆயினும் அதன் ஒளி சூரியனுடைய ஒளியின் பகுதியாகவும், அதன் பிம்பமாகவும் இருக்கிறதே தவிர அது தன் தன்மையில் சுதந்திரமான ஒளியாக இருப்பதில்லை. இதே உண்மை நிலையைச் சுட்டிக் காட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாம் யாரைப் பின்பற்றுகின்றார்களோ அந்த முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி எடுத்துரைத்தவாறு எத்தகைய அன்புடனும் பாசத்துடனும் (உருது கவிதையில்) கீழ் வருமாறு கூறுகிறார்கள் பாருங்கள்:

''அந்த ஒளியிடம் நான் என்னை அர்ப்பணித்து விட்டேன். அதற்காகவே நான் தோன்றினேன். எல்லாம் அவர்கள்தான். நான் யார்? இதுதான் இறை தீர்ப்பு!''

சுருக்கமாக, இறுதி காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொண்டர்களிலிருந்து ஒரு நிழலான நபி தோன்றுவார். மேலும் அந்த நபியின் காலடிகளில் மீண்டும் ஒருமுறை **'கிலாஃபத்துன் அலா மின்ஹாஜின் நுபுவ்வத்**' (நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்) நிலைநாட்டப்படும் என்ற நுட்பமான சைகை இந்த ஹதீஸில் உள்ளது. ஆனால் நுபுவ்வத்தைப் பற்றிய குறிப்பு சூசகமாக வைக்கப்பட்டுள்ளது. காரணம், இந்த நுபுவ்வத் உண்மையில் ஹஸ்ரத் ரஸூலே அக்ரம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் நிழலும் பகுதியுமே ஆகும்; எந்தவொரு சுதந்திரமான அல்லது தனியான நுபுவ்வத்தோ அல்ல. ஆனால் அந்தோ! பரிதாபம்!! அறிவற்ற மக்கள் இந்த ஞானம் மிக்க உண்மைகளைப் பார்க்காமல் கண்களை மூடிக் கொண்டு இதே நுட்பமான சைகைகளை ஆட்சேபணைக்குரியதாக ஆக்கி விட்டனர்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## ஹதீஸில், வரக் கூடிய மஸீஹை 'நபி' என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது !

இப்போது நான் ஒரு ஹதீஸை எடுத்து வைக்கிறேன். அதில் தெளிவாக வரக் கூடிய மஸீஹின் பெயர் **'நபி'** என வைக்கப்பட்டுள்ளது. நமது எஜமானர் (என் உயிர் அவர்களுக்கு அர்ப்பணமாகட்டும்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (வரக் கூடிய மஸீஹாகிய) அவரை தாமே தமது அருளுக்குரிய நாவினால் **'நபி'** என்ற பெயரால் அழைத்திருக்கிறார்கள். சஹீஹான ஹதீஸில் இவ்வாறு வருகிறது:

عَنْ اَبِی هُرَیْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ لَیْسَ بَیْنِی وَبَیْنَهُ نَبِیٌّ یَعْنِی عَیْسٰی وَاِنَّهُ نَازِلٌ فَاِذَا رَأَیْتُمُوْهُ فَاعْرِفُوْهُ رَجُلٌ مَّرْبُوْعٌ اِلَی الْحُمْرَةِ وَالْبَیَاضِ... فَیُقَاتِلُ النَّاسَ عَلَی الْاِسْلَامِ فَیَدُقُّ الصَّلِیْبَ وَیَقْتُلُ الْخِنْزِیْرَ وَیَضَعُ الْجِزْیَةَ

''அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **வரக்கூடிய மஸீஹுக்கும் எனக்கும் இடையில் எந்த நபியும் இல்லை.** மேலும் அவர் கண்டிப்பாக உங்கள் மத்தியில் தோன்றுவார். அவர் வரும்போது நீங்கள் அவரைப் பார்த்ததுமே அடையாளம் கண்டு கொள்ளுங்கள். வரக் கூடிய மஸீஹின் உயரம் நடுத்தரமானதாக இருக்கும். நிறம் சிவப்பு கலந்த வெண்ணிறமாக இருக்கும்.........அவர் இஸ்லாத்திற்கு ஆதரவாக பிற மார்க்கங்களை எதிர்த்துப் போட்டியிடுவார். மேலும் சிலுவைக் கொள்கையை முறியடிப்பார். பன்றிகளைப் போன்ற அசுத்தமானவர்களை அழித்தொழிப்பார். அவரது காலத்தில் மார்க்கத்திற்காக வாளைக் கொண்டு போரிட வேண்டியது வராது. எனவே அவர் ஜிஸ்யா வரியையும் நீக்கி விடுவார்.'' ***(அபூதாவூது கிதாபுல் மலாஹிம். பாபு குரூஜித் தஜ்ஜால். ஹதீஸ் எண்: 3766. பைரூத் வெளியீடு)***

விளக்கம் கொடுத்தல், சான்று காட்டி நிரூபித்தல் என்ற பேச்சுக்கே இடமில்லாத அளவுக்கு இந்த ஹதீஸ் தெளிவான, நேரிய சொற்களைக் கொண்டவையாக இருக்கின்றது. ஏனெனில் நமது

எஜமானர் (ஸல்) அவர்கள் தாமே தமது அருளுக்குரிய நாவினால், வரக் கூடிய மஸீஹை **'நபி'** என்ற பெயரால் நினைவூட்டியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்தின் தவறான விளக்கத்தின் காரணத்தினால், வரக் கூடிய மஸீஹ் தொடர்பாக அவர் உண்மையிலேயே நபி அல்ல; மாறாக, கருத்தின் விரிவாக்கத்தை வைத்து அவருக்கு நபி என்ற பெயர் மரபுக்கு அப்பாற்பட்ட வகையில் வழங்கப்பட்டுள்ளது என்ற தவறான எண்ணம் உருவாகிவிடக் கூடாதே என்ற சிந்தனையினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸில் பொதுவான, வழக்கமான முறையை தவிர்த்து, கீழ்வரும் ஞானம் மிக்க சொற்களைக் கையாண்டுள்ளார்கள்:

لَيْسَ بَيْنِيْ وَبَيْنَهُ نَبِيٌّ

**''லைஸ பைனீ வபைனஹூ நபிய்யுன்.'' அதாவது எனக்கும் வரவிருக்கும் அந்த மஸீஹிற்கும் இடையில் எந்த நபியும் இல்லை.**

## இந்த ஹதீஸில் குறிப்பிட்ட கோணத்தில் எடுத்துரைத்திருப்பதன் ஞானம்

ஒரு குறிப்பிட்ட சொற்றொடராக விளங்குகின்ற தனக்கே உரித்தான இந்த எடுத்துரைத்திருக்கும் கோணத்தில், பாருங்கள்! வரவிருக்கின்ற மஸீஹை மரபு அல்லாத வகையில் ஏதோ பெயரளவிலான நபி எனக் கருதிக் கொள்ள வேண்டாம். (நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பொருத்த அளவிலோ அல்லது நுபுவ்வத்தின் வகையைப் பொருத்த அளவிலோ அல்ல) மாறாக, நுபுவ்வத்தின் தன்மையைப் பொருத்த அளவில் நான் நபியாக இருப்பதைப் போன்றே அவரும் இறைவனின் நபியாக இருப்பார் என்பதை சுட்டிக்காட்டுவதே நிச்சயமாக நோக்கமாக இருந்தது. அல்லாஹ்; அல்லாஹ்! நமது தூய நபி (ஸல்) அவர்களின் கூற்றும் எத்தகைய மகத்தான கூற்றாக இருக்கிறது!! அதன் ஒவ்வொரு சொல்லிலும் ஞானம் மற்றும் தத்துவத்தின் கருவூலங்கள் நிரம்பி காணப்படுகின்றன.

ஆம்! சிந்தியுங்கள்; கவனித்துப் பாருங்கள். வரவிருக்கின்ற மஸீஹ் நபியாக இருப்பார் என்ற சாதாரண வார்த்தையில் ஹஸ்ரத் நபி

(ஸல்) அவர்கள் கூறியிருப்பார்கள் என்றால் இந்தப் பிரச்சனையில் உருவாகவிருந்த தவறான எண்ணங்களை கவனத்தில் கொண்டு, சந்தேகிப்பவர்கள் ஒருவேளை இந்த இடத்தில் நபி என்ற சொல் மரபுக்கு அப்பாற்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது; மற்றபடி, இங்கு உண்மையிலேயே நபி என்ற கருத்து அல்ல என்ற சந்தேகத்திற்கு ஆளாக முடியும். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்,**'லைஸ பைனீ வபைனஹு நபிய்யுன்.'** (அதாவது, எனக்கும் அவருக்கும் இடையில் எந்த நபியும் இல்லை) என்ற ஞானம் மிக்க சொற்களைப் பயன்படுத்தி, எவ்வாறு நான் நபியாக இருக்கின்றேனோ அவ்வாறே வரவிருக்கின்ற மஸீஹும் இறைவனின் நபி ஆக இருப்பார் என்பதை உறுதிப்படுத்தி விட்டார்கள். அவர் எனது தொண்டராகவும், மாணவராகவும், நிழலாகவும் இருப்பார். ஆயினும் எந்நிலையிலும் அவர் நபியாக இருப்பதில் எவ்வித ஐயம் கொள்வதற்கும் இடமில்லை. ஏனெனில் முஹம்மதிய்ய உம்மத்தில் ஓர் ஓரத்தில் நான் நிற்கின்றேன்; இன்னோர் ஓரத்தில் வரவிருக்கும் மஸீஹ் இருக்கின்றார். மேலும் எங்களுக்கிடையில் எந்த நபியுமில்லை. எந்தவொரு காழ்ப்புணர்ச்சியற்ற மனிதரும் இந்தக் கருத்து தொடர்பாக ஒரு நொடிப்பொழுது கூட ஐயம் கொள்ள முடியாத அளவுக்கு இந்த ஹதீஸ் அவ்வளவு தெளிவாகவும், விரிவாகவும் இருக்கின்றது.

அதுமட்டுமின்றி,**'லைஸ பைனீ வபைனஹு நபிய்யுன்.' அதாவது எனக்கும் வரவிருக்கும் அந்த மஸீஹிற்கும் இடையில் எந்த நபியும் இல்லை** என்ற சொற்களில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவதற்கு முன் எனது உம்மத்தில் எவராவது நுபுவ்வத்திற்கான வாதம் புரிந்தால் அவரை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள வேண்டாம். ஏனெனில் எனக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கும் இடையில் எந்த நபியும் வர முடியாது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆக, ஒருபக்கம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை உண்மைப் படுத்தியிருக்கின்ற அதே சமயத்தில் மறுபக்கம் வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு முன்னர், நுபுவ்வத்திற்கான வாதம் செய்பவர் எவராவது தோன்றினால் அவர் தஜ்ஜாலும், கஸ்ஸாபும் (பெரும் பொய்யரும்) ஆவார். அவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று உம்மத்திற்கு விழிப்பூட்டியும் இருக்கிறார்கள்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எப்படியிருந்த போதிலும் இந்த ஹதீஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இறைவனின் நபியாக இருப்பார் என்பதை தெளிவான சொற்களில் தெரிவிக்கின்றது! *வஹுவல் முராது.* (அதுவே உண்மையான கருத்தாகும்.)

## இந்த ஹதீஸ் நிச்சயமாக வரவிருக்கின்ற மஸீஹைப் பற்றியதாகும்

ஒரு வேளை இந்த ஹதீஸில் மஸீஹ் நாஸிரீ அதாவது ஈஸா (அலை) அவர்களைப் பற்றிய குறிப்பு இருக்கிறது; வரவிருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி அல்ல என்று எவராவது நினைத்தால், அது முற்றிலும் ஒரு பேதமைத்தனமான சிந்தனையாக இருக்கும். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹதீஸில் மிகத் தெளிவாக இவ்வாறு கூறுகிறார்கள்: '**இன்னஹூ நாஸிலுன்**' **(நிச்சயமாக அவர் வரவிருக்கிறார்). அதாவது, ''மக்களே! நான் இங்கு சென்ற கால மஸீஹைப் பற்றிக் கூறவில்லை! மாறாக, இனிவரவிருக்கின்ற மஸீஹைப் பற்றிக் கூறுகிறேன்.''**

இவ்வளவு தெளிவான, துல்லியமான வழிகாட்டல் இருக்கும்போது இங்கு கடந்த கால மஸீஹைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது என ஐயம் கொள்வது எந்தவோர் அறிவுடைய மனிதரின் வேலையன்று.

அதுமட்டுமின்றி, இந்த ஹதீஸில், '**யுகாத்திலுன்னாஸ அலல் இஸ்லாமி**' என்ற சொற்கள் வருகின்றன. அதாவது, வரவிருக்கின்ற மஸீஹ், மற்ற மார்க்கங்கள் இஸ்லாத்தைத் தாக்கிக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் வருவார். அப்போது அவர் இஸ்லாத்திற்கு ஆதரவாக பிற மார்க்கங்களுடன் போராடுவார். அடுத்து, '**ஃபயதுக்குஸ் ஸலீப**' என்ற சொற்கள் வருகின்றன. அதாவது, இறைவன் புறமிருந்து வரும் இந்த மஸீஹ் கிறித்தவ மார்க்கம் மேலோங்கியிருக்கின்ற நேரத்தில் தோன்றி, சிலுவை கொள்கையை தூள் தூளாக்குவார். இந்த இரு சொற்றொடர்கள், இங்கு முஹம்மதிய்ய தொடரில் வரக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பற்றிய குறிப்பு காணப்படுகிறதே தவிர மூஸாவின் தொடரைச் சேர்ந்த கடந்த கால ஈஸா மஸீஹைப் பற்றி அல்ல என்பதற்கு மேலும் அதிகப்படியான சான்றாக விளங்குகின்றன.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

அன்பர்களே! நண்பர்களே!! இறைவனுக்காக சிந்தியுங்கள்; யோசித்துப் பாருங்கள். ஒரு பக்கம் நமது எஜமானர் நபி (ஸல்) அவர்கள் **'இன்னஹூ நாஸிலுன்' (அதாவது, இந்த மஸீஹ் இனி வரப் போகின்றார்)** என்ற சொற்களைக் கூறி, இங்கு மஸீஹ் நாஸிரியைப் பற்றிய குறிப்பு அல்ல; மாறாக, இனி வரவிருக்கின்ற முஹம்மதிய்ய மஸீஹைப் பற்றிய குறிப்பு ஆகும் என அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்; மறுபக்கம் அன்னார் (ஸல்) அவர்கள்,**'லைஸ பைனீ வபைனஹூ நபிய்யுன்' அதாவது, எனக்கும் வரவிருக்கும் அந்த மஸீஹுக்கும் இடையில் வேறு எந்த நபியும் இல்லை' என்ற சொற்களைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.** ஆக, இந்த இரண்டு உறுதியான, திடமான விளக்கங்கள் இருக்கும்போது நமது எஜமானர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தீர்ப்பிற்கேற்ப, வரவிருக்கும் மஸீஹ் இறைவனின் நபியாவார் என்பதில் அறிவுள்ள எந்த மனிதர் சந்தேகம் கொள்ள முடியும்? நபி என்பதும் எப்படிப் பட்டதென்றால், தெளிவில்லாத , விரிவான கருத்து என்ற வகையில் மரபுக்கு அப்பாற்பட்டு வெறுமனே நபி என்ற பெயர் அவருக்கு தரப்படவில்லை. மாறாக, உண்மையிலேயே நபி ஆவார்; ஆம்! ஆம்!! எப்படிப்பட்ட நபி என்றால், அவரைப் பற்றி அவருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் எந்தவொரு நபியும் இல்லை என்ற சொற்களைக் கூற முடியும். சுருக்கமாக, அபூதாவூதின் இந்த ஹதீஸிலிருந்து கீழ் வரும் மூன்று விஷயங்கள் பட்டப் பகல் வெளிச்சத்தைப் போன்று நிரூபணமாகின்றன. அவை:

1. முஹம்மதிய்ய தொடரின் மஸீஹ் அனைத்துலக தலைவர் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க இறைவனின் நபி ஆவார். அவர், முஹம்மதிய்ய உம்மத்தின் ஆரம்ப எல்லையில் நமது எஜமானர் (ஸல்) அவர்கள் தோற்றமளித்ததைப் போன்றே அதன் கடைசி ஓரத்தில் பாதுகாப்பிற்காக நிற்கின்றார்.

2. **'யுகாத்திலுன்னாஸ அலல் இஸ்லாம்' (அதாவது அவர் இஸ்லாத்திற்கு எதிரான மக்களுடன் போரிடுவார்)** என்ற வழிகாட்டலுக்கிணங்க, இஸ்லாத்தின் தொண்டிற்காக அனுப்பப்பட்டிருக்கின்ற நபி வருவது காத்தமுன் நபிய்யின் என்ற வசனத்திற்கு மாறுபட்டதன்று. ஏனெனில், அவர் ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மீக மகனாகவும், அன்னார் (ஸல்) அவர்களின் ஓர் அங்கமாகவே விளங்குகின்றார்கள். இதன் காரணத்தினாலேயே இந்த வசனம் இருந்த போதிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது அருளுக்குரிய நாவினால் அவரை நபி எனக் குறிப்பிடுகிறார்கள்.

3. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கும் இடையில் எவராவது நுபுவ்வத்திற்கான வாதம் செய்தால் அவர் பொய்யர் ஆவார். ஏனெனில் கோணலான இந்த காலகட்டம் ஆரம்பத்திலிருந்தே தஜ்ஜாலூன கஸ்ஸாபூன் (பெரும் பொய்யர்களான தஜ்ஜால்கள்) தோன்றுவார்கள் என்ற முன்னறிவிப்புக்கேற்ப பொய் நபிகளுக்கென்று விதிக்கப்பட்டிருந்தது.

## நுபுவ்வத்தைப் பற்றி சஹீஹ் முஸ்லிமில் உள்ள சான்று

அபூ தாவூதில் உள்ள இந்த ஹதீஸுக்கு சஹீஹ் முஸ்லிமில் உள்ள ஒரு ஹதீஸின் மூலமாகவும் சான்று கிடைக்கிறது. அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரே சொற்றொடரில் மீண்டும் மீண்டும் **'நபி'** என்ற பெயரால் நினைவூட்டியிருக்கிறார்கள்:

وَيُحْصَرُ نَبِيُّ اللهِ عِيسَى وَأَصْحَابُهُ... فَيَرْغَبُ نَبِيُّ اللهِ عِيسَى وَأَصْحَابُهُ...
يَهْبِطُ نَبِيُّ اللهِ عِيسَى وَأَصْحَابُهُ... فَيَرْغَبُ نَبِيُّ اللهِ عِيسَى وَأَصْحَابُهُ إِلَى اللهِ

''வயுஹ்ஸரு **நபிய்யுல்லாஹி ஈஸா** வஅஸ்ஹாபுஹூ.....ஃபயர்கபு **நபிய்யுல்லாஹி ஈஸா** வஅஸ்ஹாபுஹூ........ஸும்ம யஹ்பிது **நபிய்யுல்லாஹி ஈஸா** வஅஸ்ஹாபுஹூ...... ஃபயர்கபு **நபிய்யுல்லாஹி ஈஸா** வஅஸ்ஹாபுஹூ இலல்லாஹ்....'' ***(சஹீஹ் முஸ்லிம் பாபு ஸிக்ரித் தஜ்ஜால்.) தமிழ் பதிப்பு பாகம் 4 பக்கம் 878 –882 ஹதீஸ் எண்: 5629 காண்க.***

அதாவது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் யஃஜூஜ் மஃஜூஜ் மேலோங்கிய காலத்தில் தோன்றும் போது **அல்லாஹ்வின் நபியாகிய ஈஸா** மற்றும் அவருடைய சஹாபிகள் எதிரிகளின் கூட்டத்தினரால்

முற்றுகையிடப்படுவார்கள்.......பின்னர் **அல்லாஹ்வின் நபியாகிய ஈஸா** மற்றும் அவருடைய சஹாபிகள் அல்லாஹ்வின் பக்கம் துஆவுடனும், மன்றாடியவாறும் திரும்புவார்கள்.......மேலும் இந்த துஆவின் விளைவாக **அல்லாஹ்வின் நபியாகிய ஈஸா** மற்றும் அவருடைய சஹாபிகள் கஷ்டங்களின் சூழலிலிருந்து விடுபட்டு எதிரிகளின் கூடாரத்திற்குள் நுழைந்து விடுவார்கள். ஆனால் அங்கு புதிய கஷ்டங்கள் ஏற்படும்........பின்னர் **அல்லாஹ்வின் நபியாகிய ஈஸா** மற்றும் அவருடைய சஹாபிகள் மீண்டும் இறைவனிடம் துஆ செய்தவாறு குனிவார்கள். மேலும் அல்லாஹ் அவர்களின் கஷ்டங்களை நீக்கி விடுவான்.'' ***(சஹீஹ் முஸ்லிம். பாபு ஸிக்ரித் தஜ்ஜால். தமிழ் பதிப்பு பாகம் 4 பக்கம் 878 முதல் 882 ஹதீஸ் எண்: 5629. ரஹ்மத் பதிப்பகம் வெளியீடு காண்க.)***

இந்த நீண்ட ஹதீஸை விரிவாக இங்கு எடுத்துக் கூற இடமில்லை. (ஆயினும் இது நிச்சயமாக இறுதி காலத்தில் ஏற்படவிருக்கும் குழப்பங்களையும், வரக் கூடிய மஸீஹையும் பற்றியதாகும் என்பதை அசல் ஹதீஸைப் படித்து ஒவ்வொருவரும் தீர்மானித்துக் கொள்ளலாம்.) இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரே சொற்றொடரில் வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி **நான்கு முறை அல்லாஹ்வின் நபி என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள்.** எடுத்துரைக்கும் இந்த முறையும் அபூதாவூதில் வந்துள்ள ஹதீஸைப் போன்று நிச்சயமாக அசாதாரணமானதாக இருக்கிறது. இதிலும் கூட, நிச்சயமாக நான் இறுதி நபியாவேன்; மேலும் எனக்குப் பிறகு எனது அருளிலிருந்து விலகி சுதந்திரமாக வரக் கூடிய அல்லது எனது ஷரீஅத்தை ரத்து செய்யக் கூடிய எந்த நபியுமில்லை என்ற எச்சரிக்கையைத் தவிர வேறு எந்த நோக்கமுமில்லை. ஆனால் வரக்கூடிய மஸீஹ் எனது ஆன்மீக மகனாகவே இருப்பார்; எனது நிழலாகவே இருப்பார். எனவே அவர் வருவது கத்மே நுபுவ்வத்திற்கு மாறுபட்டதன்று. ஏனெனில் அவர் எனது அருளிலிருந்தே அருளைப் பெறுபவராக இருப்பார். அவரது நுபுவ்வத் எனது நுபுவ்வத்தின் பகுதியாக இருக்கும். எனவே நீங்கள் அவரது நுபுவ்வத்தில் சந்தேகம் கொள்ள வேண்டாம். ஏனெனில் கிளை தனது வேரை விட்டும் தனித்தது அல்ல. அவ்வாறே நிழல் தனது அசலை விட்டும்

வேறானதல்ல. இந்த நோக்கத்திற்காகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரே சொற்றொடரில் நான்கு முறை **நபிய்யுல்லாஹ் (அல்லாஹ்வின் நபி)** என்ற பெயரால் நினைவூட்டியுள்ளார்கள். சந்தேகமின்றி, எடுத்துரைக்கும் இந்த முறை சிறப்பான ஞானத்தின் அடிப்படையில் இருக்கிறது. அந்த ஞானம் என்னவென்றால், வருங்காலத்தில் தோன்றவிருந்த தவறான எண்ணங்களை கருத்தில் கொண்டு, பாருங்கள்; பாருங்கள்; தடுமாற்றம் அடைந்து விடாதீர்கள். அவசர புத்தியில் எந்தவோர் உண்மையாளரையும் மறுத்து விடக் கூடாது என முஹம்மதிய்ய உம்மத்தை எச்சரிப்பதேயாகும். இல்லை யென்றால், ஒரே இடத்தில் ஒரே சொற்றொடரில் வாக்களிக்கப்பட்ட மஸீஹை வெளிப்படையில் பார்க்கும்போது தேவையில்லாமல் அல்லாஹ்வின் நபி என நான்கு முறை கூறுவதற்கு எந்த அவசியமும் இருக்கவில்லை; **மேலும் வேறு எந்த நபியைப் பற்றியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறு எந்த இடத்திலாவது அத்தகைய அசாதாரணமான வழிமுறையை மேற்கொள்ளவுமில்லை.** எனவே புரிந்து கொள்ளுங்கள்; சிந்தியுங்கள்; சந்தேகம் கொள்பவர்களைச் சேர்ந்தவர்களாகி விடாதீர்கள்.

## முஹம்மதிய்ய உம்மத்தில் முபஷ்ஷிராத்தின் தொடர்

சில நேரத்தில் நமது எதிரிகள் அவசர புத்தியின் வழிமுறையைக் கையாண்டவாறு தமது கற்பனைக்கு ஆதரவாக எடுத்து வைக்கும் ஒரு ஹதீஸை இப்போது நான் எடுத்துரைக்கிறேன். ஆனால் நான் தற்போது நிரூபிக்கவிருப்பதைப் போன்று, உண்மையில் அது நமக்கு சாதகமாக இருக்கிறது. ஏனெனில் இந்த ஹதீஸிலிருந்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தின் வாசல் மூடப்பட்டுள்ளது; ஆயினும் ஷரீஅத்தில்லாத – உம்மத்தைச் சார்ந்த நுபுவ்வத்தின் வாசல் திறந்துள்ளது. அது ஒருபோதும் மூடப்பட மாட்டாது என்பதைத் தவிர வேறு எதுவும் நிரூபணமாகவில்லை. நமது எஜமானர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

لَمْ يَبْقَ مِنَ النُّبُوَّةِ إِلَّا الْمُبَشِّرَاتِ

**''லம் யப்க மினன் நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத்''** *(சஹீஹ் புகாரி. அப்வாபுர் ருஃயா)*

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்போது நுபுவ்வத்தில் முபஷ்ஷிராத்தைத் தவிர வேறு எந்த அம்சமும் எஞ்சியிருக்கவில்லை. நபித்தோழர்கள் கேட்டனர்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! முபஷ்ஷிராத் என்பதன் கருத்து என்ன? அன்னார் கூறினார்கள்: இதன் கருத்து, ருஃயா சாலிஹா (நல்ல ஆன்மீகக் கனவு) ***(தமிழாக்கம்: புகாரி பாகம் 5 பக்கம் 848 ஹதீஸ் எண்: 6990 ரஹ்மத் பதிப்பகம்).***

இந்த ஹதீஸைப் பற்றிய மேலும் அதிகமான விளக்கம் இன்னொரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது:

إِنَّ النَّبِيَّ ﷺ كَشَفَ السِّتَارَةَ وَرَأْسُهُ مَعْصُوبٌ فِي مَرَضِهِ الَّذِي مَاتَ
فِيهِ وَالنَّاسُ صُفُوفٌ خَلْفَ أَبِي بَكْرٍ فَقَالَ يَا أَيُّهَا النَّاسُ إِنَّهُ لَمْ يَبْقَ...

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு முன்னுள்ள நோயில் தமது தலையை நோயின் கடுமையின் காரணமாக கட்டிக்கொண்டிருந்தார்கள். தமது வாசலிலிருந்து திரையை அகற்றினார்கள். (அப்போது மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்குப் பின்னால் தொழுகைக்காக ஃஸஃப்பில் நின்று கொண்டிருந்தார்கள்.) அன்னார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களை நோக்கி, மக்களே! முபஷ்ஷிராத் மட்டுமே எஞ்சியுள்ளது எனக் கூறினார்கள்.'' ***(சஹீஹ் முஸ்லிம், அபூதாவூது ஆகியவற்றை சான்று காட்டியவாறு ஃபத்ஹுல் பாரீ தொகுதி 12 பக்கம் 305)***

இந்த ஹதீஸை வைத்து நமது எதிரிகள் சில நேரங்களில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் தொடர் முற்றிலும் முடிந்து விட்டது என்றும், இப்போது முஸ்லிம்களுக்கு கனவுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. எப்போதாவது அது ஏதாவதொரு நம்பிக்கையாளருக்கு வரும்; அதைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்கவில்லை என்றும் சான்று காட்டி வருகின்றனர். ஆனால் இந்த சான்று முற்றிலும் தவறானதும், அடிப்படையற்றதுமாகும். இன்னும் சொல்லப்போனால், இந்த ஹதீஸ் நாம் மேலே கூறி வந்துள்ள அதே உண்மையை மட்டும்தான் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தை கொண்ட நுபுவ்வத்தின் வாசலும், சுதந்திரமான நுபுவ்வத்தின் வாசலும் சந்தேகமின்றி முடிந்து விட்டது. ஆனால் நபி (ஸல்) அவர்களைப்

பின்பற்றுவதனாலும், மாணவராக இருப்பதனாலும் கிடைக்கும் நிழலான நுபுவ்வத்தின் வாசல் ஒருபோதும் அடைபடவில்லை; மாறாக, அது திறந்துள்ளது; திறந்தே இருக்கும்.

## மரணத்திற்கு முன்னுள்ள நோயில் முபஷ்ஷிராத் பற்றி அறிவிப்பதில் உள்ள ஞானம்

இதற்கு முதலில், இந்த ஹதீஸில் கூறப்பட்ட சொற்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு முன்னுள்ள நோயின்போது கூறினார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது அவர்கள், நான் எனது நேசத்திற்குரிய தோழர்களிடமிருந்து விடைபெறவிருக்கின்றேன் எனக் கருதினார்கள். அத்தகைய சந்தர்ப்பத்தில் மனிதன் தனக்குப் பின்னால் இருப்பவர்களின் மக்களுடன் தனக்கு இருக்கும் இயல்பான அந்த குறிப்பிட்ட தொடர்பின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றான். மேலும் அந்தத் தொடர்பை முன் நிறுத்தி அவர் அம்மக்களுக்கு பொருத்தமான சொற்களின் மூலமாக ஆறுதல் கூற முயற்சி செய்கின்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது சஹாபாக்களுடன் இருந்த தொடர்பு ஒரு ஷரீஅத்தைக் கொண்ட நபி என்ற அளவில் இருந்தது என்பது வெளிப்படை. எனவே, சந்தேகமின்றி அன்னார் (ஸல்) அவர்கள் இந்த இடத்தில் ஷரீஅத்துடைய நுபுவ்வத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கின்றார்களே தவிர பொதுவான நுபுவ்வத்தைப் பற்றி அல்ல என்பதே இந்த சொற்களின் நோக்கமாகக் கருதப்படும். ஆக, வேறு சொற்களில் சொல்லப்போனால், அன்னார் (ஸல்) அவர்களின் நோக்கம், எனது அன்பிற்குரிய சஹாபிகளே! இப்போது நான் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். எனது மரணத்துடன் என் மூலமாக நடந்து கொண்டிருந்த இறைவனின் ஷரீஅத்தைக் கொண்ட சொற்களும் நின்று விடும். ஆனால் நீங்கள் பயந்து விடக் கூடாது. மாறாக, இறைவனின் பக்கம் கவனம் கொள்ள வேண்டும். அவன் உங்களை மறக்க மாட்டான். மேலும் நம்பிக்கை கொண்டவர்களின் மீது தனது நற்செய்திகள், நல்ல ஆன்மீகக் காட்சிகள் மூலமாக தனது அருளை இறக்கிக் கொண்டே இருப்பான் ஆகியவற்றை எடுத்துக் கூறினார்கள்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எனவே இது அவர்கள் தமது மரணம் நெருங்கி விட்டதைக் கண்டு, குறிப்பிட்ட தமது நுபுவ்வத்தைக் கருத்தில் கொண்டு கூறிய குறிப்பிட்ட விஷயமாகும். மேலும் இதில் அன்னாரின் மரணத்திற்கு பிறகு உடனே வரவிருக்கின்ற குறிப்பிட்ட அந்தக் காலத்தைச் சுட்டிக் காட்டுவது மட்டுமே நோக்கமாக இருந்தது. பொதுவானதன்று. இதுவே இஸ்லாத்தின் மிகப் பெரும் மார்க்க அறிஞர்கள் இந்த ஹதீஸுக்குக் கொடுத்து வந்திருக்கின்ற விளக்கமாகும். உதாரணமாக, ஹதீஸ் கலையில் இமாமாகத் திகழும் **அல்லாமா இப்னு ஹஜர்** அவர்கள் (இறப்பு ஹிஜ்ரி 852-ஆம் ஆண்டு) இந்த ஹதீஸுக்கு விளக்கவுரையாகக் கூறுகிறார்கள்:

اللام في النبوة للعهد والمراد نبوته والمعنى لم يبق بعد
النبوة المختصة بي إلا المبشرات

**‘‘அல்லாமு ஃபின் நுபுவ்வத்தி லில் அஹ்தி. வல் முராது நுபுவ்வத்துஹூ வல் மஃனா லம் யப்க பஃதன் நுபுவ்வத்தில் முக்தஸ்ஸத்தி பீ இல்லல் முபஷ்ஷிராத்.’’** ***(ஃபத்ஹுல் பாரீ தொகுதி 12 பக்கம் 305. ஹதீஸ் எண்: 12545)***

அதாவது, இந்த ஹதீஸில் **அந்நுபுவ்வத்து** என்று வந்திருக்கின்ற சொல்லின் கருத்து, குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத் என்பதாகும். (பொதுவான நுபுவ்வத் அல்ல). மேலும் அதன் பொருள், எனது குறிப்பிட்ட நுபுவ்வத்தில் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத் முடிந்து விட்டது. ஆனால் முபஷ்ஷிராத் எஞ்சியுள்ளது.’’

எனவே இந்த ஹதீஸைப் பொருத்தவரை, நமது முதல் பதில், இந்த ஹதீஸ் பொதுவானதல்ல. மாறாக, முன் பின் உள்ளதை வைத்துப் பார்க்கும் போது வெளிப்படையாகத் தெரிவது போன்றும், உம்மத்தைச் சேர்ந்த முந்தைய மார்க்க அறிஞர்கள் கூறியிருக்கும் விளக்கத்தைப் போன்றும் இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது குறிப்பிட்ட நுபுவ்வத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மேலும் இது அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு உடனே தோன்றவிருக் கும் காலத்தைப் பற்றியதாகும். அதன் மூலம் தமது மரணத்தைப் பற்றிய செய்தியை தம் தோழர்களுக்கு எடுத்துக் கூறி, நான் செல்கின்றேன்; ஆனால் முபஷ்ஷிராத் என்ற நிலையில்

இறைவனின் அருள் மற்றும் கருணையின் நிழல் உங்களுடன் இருக்கும் என ஆறுதல் அளிப்பதற்காக அவ்வாறு கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு சீக்கிரமே எந்தவொரு நபியின் தோற்றமும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே காலத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப முபஷ்ஷிராத் என்பதற்கான விளக்கமாக ருஃயா சாலிஹா (நல்ல ஆன்மீகக் கனவு) எனக் குறிப்பிடுவதைப் போது மானதாகக் கொண்டார்கள்.

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இறையறிவிப்பு குறைவாக இருந்ததற்கான காரணம்

திருக்குர்ஆனின் வஹியுடன் வேறு எந்த வஹியும் கலந்து விடும் அபாயம் ஏற்படாமல் இருப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்திலும், அதற்கு அண்மையிலுள்ள காலத்திலும் வஹி, இல்ஹாம் ஆகியவற்றை அதிகம் விசாலமாக்காமல் இருப்பதும் அவசியமானதாக இருந்தது என்பது அறிவுப்பூர்வமானது எனத் தெரிகிறது.

(இது ஒரு குறிப்பிட்ட நுண்ணிய கருத்தாகும். இதனை நினைவிற் கொள்ள வேண்டும் - நூலாசிரியர்)

எனவேதான் அன்னார் (ஸல்) அவர்கள் இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டவாறு தமது காலத்திற்காக முபஷ்ஷிராத் என்பதற்கான பொருளாக நல்ல கனவுகள் என்ற விளக்கத்தையே போதுமானதாக்கிக் கொண்டார்கள். அதன்படி இது தொடர்பாக **அல்லாமா இப்னு ஹஜ்ர் அஸ்கலானீ** சஹீஹ் புகாரியின் விளக்கவுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

"ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகுள்ள காலத்தில் காணப்படுகின்ற இல்ஹாம்களின் பெரும்பான்மை அன்னார் (ஸல்) அவர்களின் அண்மையில் உள்ள காலத்தில் காணப்படவில்லை. திருக்குர்ஆனின் வஹியுடன் வேறு எந்த வஹியும் கலந்துவிடக் கூடாது என்ற இறை நியதியின் இந்த இரகசியம் அதில் இருந்தது.'' ***(ஃபத்ஹுல் பாரீ தொகுதி 12 பக்கம் 305.) ஹதீஸ் எண்: 12545 காண்க.***

இதுவே இந்த ஹதீஸிலிருந்து நிரூபணமாகும் நுட்பமான

விளக்கமாகும். மேலும் இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு அண்மையிலுள்ள காலத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதும், முபஷ்ஷிராத் என்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ருஃயா சாலிஹா (நல்ல ஆன்மீகக் கனவு) என்ற சொற்களால் விளக்கம் தந்திருப்பது அன்னார் (ஸல்) அவர்களின் காலத்துடன் குறிப்பிட்டதாக இருந்தது; பொதுப்படையானதாக இருக்கவில்லை என்பதும் இந்த ஹதீஸின் சொற்களையும் அதன் முன் பின் தொடரையும் தூய உள்ளத்துடன் சிந்திக்கும் எவருக்கும் மறைவாக இருக்காது.

ஆனால் இந்த ஹதீஸை பொதுவானதாக ஏற்றுக் கொண்டாலும் அதிகமாக எந்த பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்ற கோட்பாட்டின்படி, எந்த வித்தியாசமும் வந்துவிடப் போவதில்லை. ஏனெனில் நாம் வாதத்தின் துவக்கத்தில் எடுத்துக் கூறியிருப்பது போன்று நுபுவ்வத் மூன்று வகைப்படும். ஒன்று, ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்; அதனுடன் ஏதாவதொரு புதிய ஷரீஅத் இறங்குகிறது. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் நமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆகியோருக்கு ஒரு புதிய ஷரீஅத் வழங்கப்பட்டது. இரண்டாவது, சுதந்திரமான நுபுவ்வத். அதனுடன் எந்தவொரு புதிய ஷரீஅத்தும் இருப்பதில்லை; ஆனால் அந்த நபி எந்தவொரு முந்தைய நபியைப் பின்பற்றாமலும், மாணவராக இல்லாமலும் நேரடியாக நபித்துவத்தைப் பெறுகின்றார். அவருடைய நபித்துவம் இன்னொரு நபியின் நபித்துவத்தை ஆதரவாகக் கொண்டு நிலைபெறுவதில்லை. மாறாக, நபித்துவத்தைப் பெறுவதைப் பொருத்தவரை சுதந்திரமானதாக இருக்கிறது. உதாரணமாக, ஹஸ்ரத் தாவூது (அலைஹிஸ் ஸலாம்), ஹஸ்ரத் ஈஸா (அலைஹிஸ் ஸலாம்) ஆகியோரின் நபித்துவம். மேலும் மூன்றாவது நிழலான நபித்துவம். அதனுடன் எந்தவொரு புதிய ஷரீஅத்தும் இருப்பதில்லை; மேலும் அந்த நபி சுதந்திரமான முறையில் நபித்துவத்தைப் பெறுவதுமில்லை. மாறாக, இந்த நபித்துவம் முந்தைய ஷரீஅத்துடைய நபித்துவத்தின் நிழலாகவும், பிம்பமாகவும் இருக்கிறது. ஆக, அது அதன் ஆதரவினாலேயே நிலைபெறுகிறது. அதற்கு தொண்டு செய்வதற்காகவே வருகிறது. உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்களுக்குப் பிறகு வரக் கூடிய நபி. மஸீஹுக்கு ஒப்பானவருக்காக அது நியமிக்கப்பட்டிருந்தது.

எனவே முபஷ்ஷிராத் என்ற சொல்லை பொதுவான பொருளில் எடுத்துக் கொண்டாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியும் வர முடியாது; மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டவாறு அன்னார் (ஸல்) அவர்களின் நபித்துவ ஒளியிலிருந்து அருளைப் பெற்றவாறு நபியாகும் நற்செய்திகளையும், எச்சரிக்கை செய்திகளையும் கொண்ட நபி வர முடியும் என்பது மட்டுமே இந்த ஹதீஸின் கருத்தாகப் புரிந்து கொள்ளப்படும்.

## முபஷ்ஷிராத் அதிகமாகக் காணப்படுவதன் மறு பெயர்தான் நபித்துவம்

உண்மை என்னவென்றால், முபஷ்ஷிராத்,(நற்செய்திகள்) முன்ஸிராத் (எச்சரிக்கைகள்) ஆகியவை சாதாரணமானவை அல்ல.

(ஏனெனில் முபஷ்ஷிராத் என்பதுடன் முன்ஸிராத் என்பதும் ஒன்றையொன்று சேர்ந்திருக்கின்றன-நூலாசிரியர்).

மாறாக, இதே முபஷ்ஷிராத், முன்ஸிராத் தனது எண்ணிக்கையைப் பொருத்த அளவிலும், தரத்தைப் பொருத்த அளவிலும் அதிகமான முறையில் ஒரு நபருக்கு வழங்கப்படுமானால் அந்த நபர்தான் நபி என அழைக்கப்படுகிறார். ஆயினும் மிகக் குறைந்த அளவில் இவை கொஞ்சம் கூடுதலாகவும் குறைவாகவும் எல்லா நம்பிக்கையாளர்களிடமும் காணப்படுகிறது. ஆனால் ஒரு ரூபாயைக் கொண்டவர் செல்வந்தர் என அழைக்கப்பட முடியாததைப் போன்று முபஷ்ஷிராத், முன்ஸிராத் ஆகியவற்றின் அருளிலிருந்து கொஞ்சம் பங்கு பெறுபவரும் நபி என அழைக்கப்பட முடியாது. மாறாக, எவருக்கு இந்த அருட்கொடை இறைவன் புறமிருந்து அசாதாரணமான முறையில் அதிகமாகவும் அசாதாரணமான முறையில் முழுமையாகவும் வழங்கப்படுகிறதோ அவர்தான் நபி என அழைக்கப்படுகிறார். எனவே உண்மையில் அதிகமாகக் கொண்டிருத்தல், குறைவாகக் கொண்டிருத்தல் என்ற வித்தியாசம்தான். மற்றபடி, முபஷ்ஷிராத்,

முன்ஸிராத் ஆகியவை அதிகமாக இருப்பதற்குப் பெயர்தான் நபித்துவமாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَمَا نُرْسِلُ الْمُرْسَلِيْنَ اِلَّا مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ فَمَنْ اٰمَنَ وَاَصْلَحَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ○

''நாம் நபிமார்களையும், ரஸூல்மார்களையும் முபஷ்ஷிராத்(நற்செய்திகள்) மற்றும் முன்ஸிராத் (எச்சரிக்கைகள்) ஆகியவற்றைக் கொண்டு வருபவர்களாகவே அனுப்பி இருக்கிறோம். பின்னர் எவர்கள் நம்பிக்கை கொண்டு சீர்திருத்திக் கொள்கிறார்களோ அவர்கள் இறைவன் புறமிருந்து எல்லா விதமான அச்சத்திலிருந்தும் கவலையிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கின்றார்கள்.'' *(திருக்குர் ஆன் 6:49 காண்க)*

நபித்துவத்தின் தன்மையைப் பொருத்தவரை, முபஷ்ஷிராத், முன்ஸிராத் ஆகியவற்றை அதிகமாகக் கொண்டிருப்பதற்கு மறுபெயர்தான் நபித்துவம் என்பது இந்தத் திருக்குர்ஆன் வசனத்திலிருந்து தெளிவாக நிரூபணமாகின்றது. மற்ற விஷயங்கள் உதாரணமாக, ஷரீஅத்தைக் கொண்டு வருவது, அல்லது சுதந்திரமான முறையில் நபித்துவத்தைப் பெறுவது ஆகிய இவையெல்லாம் அதிகப்படியான விஷயங்களாகும். அவை எல்லா நபிமார்களிடமும் காணப்பட வேண்டியது அவசியமில்லை. மாறாக, சில நபியிடம் காணப்படுகிறது; சில நபியிடம் காணப்படுவதில்லை.

**நபித்துவத்திற்கான இலக்கணத்தைக்** கூறியவாறு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

'' இந்த எல்லா துரதிஷ்டமும் நபி என்பதன் உண்மையான பொருளைப் பற்றி சிந்திக்கப்படாததனால் ஏற்பட்டுள்ளது. நபி என்பதன்

பொருள், இறைவனிடமிருந்து வஹி மூலமாக செய்தியைப் பெறுபவரும், இறைவனுடன் உரையாடும் சிறப்புத் தன்மையைப் பெறுபவரும் ஆவார் என்பது மட்டுமே ஆகும். அவருக்கு ஷரீஅத்தைக் கொண்டு வருவது கண்டிப்பானதன்று. மேலும் ஷரீஅத்தைக் கொண்டுள்ள ஒரு நபியைப் பின்பற்றாதவராக இருக்க வேண்டும் என்பதும் கண்டிப்பு அன்று.'' *(பராஹீனே அஹ்மதிய்யா இணைப்பு தொகுதி 5 பக்கம் 138 – ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 306)*

**மேலும் இன்னோரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

முஜத்திது சர்ஹிந்தி அவர்கள் தமது மக்தூபாத்தில் எழுதியிருப்பதைப் போன்று இந்த உம்மத்தில் சிலர் இறைவனுடன் உரையாடும் நற்பேற்றைப் பெற்றிருப்பதன் மூலம் சிறப்பானவர்களாக இருக்கின்றனர்; அத்தகைய சிறப்பானவர்கள் மறுமை வரை இருப்பார்கள் என்றாலும், எவருக்கு அதிகமாக இறைவனுடன் உரையாடும் இந்த நற்பேறு கிடைக்குமோ அவர் நபி என அழைக்கப்படுவார்.'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 390, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 406)*

எனவே லம் யப்க மினன் நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத் ( நுபுவ்வத்தில் முபஷ்ஷிராத்தைத் தவிர எதுவும் எஞ்சியிருக்கவில்லை) என்ற ஹதீஸை பொதுவானது எனக் கருதினாலும் அடிப்படை ரீதியில் அதன் பொருள், இனி எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியும் வரமுடியாது; மாறாக, ஷரீஅத் அல்லாத உம்மத்தீ நபி வரலாம். அவரது நுபுவ்வத் முபஷ்ஷிராத், முன்ஸிராத் ஆகிய எல்லைக்குட்பட்டதாக இருக்கும் என்பதாகும்.

## முஹம்மதிய்ய உம்மத்தைச் சேர்ந்த சிறப்பானவர்களுக்கு இறையறிவிப்பின் தொடர்

இந்த ஹதீஸைப் பற்றி இன்னொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, இந்த ஹதீஸில் முபஷ்ஷிராத் என்பதற்கு அர்ருஃயத்துஸ் ஸாலிஹா (நல்ல ஆன்மீகக் கனவு) என்ற சொல்லின் மூலமாகக் கொடுத்திருக்கும் விளக்கம் பொதுவான நம்பிக்கை

கொண்டவர்களை கவனத்திற்கொண்டு கொடுக்கப்பட்டதாகும். மற்றபடி, இஸ்லாமிய வரலாற்றில் ஆயிரக்கணக்கான வலிமார்கள் (இறைநேசர்கள்),சாலிஹுகள் (நல்லடியார்கள்) ஆகியோரின் செயல் வடிவிலான சாட்சியத்திலிருந்து நிரூபணமாவதைப் போன்று, இந்த சிறந்த சமுதாயத்தின் பங்கில் இனி கனவுகள் மட்டுமே எஞ்சியுள்ளன; இனி வேறு எவரும் கஷ்ஃப் (ஆன்மீகக் காட்சி) மற்றும் இல்ஹாம் (இறையறிவிப்பு) ஆகியவற்றிலிருந்து பங்கு பெற முடியாது என்ற கருத்து ஒருபோதுமன்று -நவூது பில்லாஹ். ஏனெனில் சுனன் இப்னி மாஜாவின் விளக்கவுரையில் **இமாம் அபுல் ஹஸன்** அர்ருஃயத்துஸ் ஸாலிஹா (நல்ல கனவு) என்ற சொல்லிற்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:

المراد انّها لم تبق على العموم والّا فالالهام والكشف للاولياء فموجودٌ

அதாவது, இந்த ஹதீஸில் அர்ருஃயத்துஸ் ஸாலிஹா (நல்ல கனவு) என்ற சொல் பொதுவான மக்களைக் கருத்தில் கொண்டு கூறப்பட்டிருக்கின்றது. மற்றபடி, இறைநேசர்கள் மற்றும் சிறப்பானவர்களுக்கு இல்ஹாம் (இறையறிவிப்பு), கஷ்ஃப் (ஆன்மீகக் கனவு) ஆகியவற்றின் தொடர் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதும், காணப்படுகின்றதுமான ஒன்றாகும். ***(சுனன் இப்னி மாஜாவிற்கு இமாம் அபுல் ஹஸன் எழுதிய விளக்கவுரை தொகுதி 2 பக்கம் 448)***

**சுருக்கமாக, லம் யப்க மினன் நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத் (நுபுவ்வத்தில் முபஷ்ஷிராத்தைத் தவிர எதுவும் எஞ்சியிருக்கவில்லை)** என்பதில் முதலில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தும், அன்னார் (ஸல்) அவர்களின் காலத்திலுள்ளவர்கள் என்ற கருத்து மட்டுமேயாகும். பொதுவான நுபுவ்வத் அல்ல. ஆனால் இந்த ஹதீஸை பொதுவானதாகக் கருதினாலும் முபஷ்ஷிராத் என்ற சொல்லினால் ஒட்டுமொத்தமான நுபுவ்வத் இல்லை என்ற கருத்து அல்ல. மாறாக, ஷரீஅத்துடைய நுபுவ்வத் மற்றும் சுதந்திரமான நுபுவ்வத் இல்லை என்ற கருத்து ஆகும். மேலும் ஹதீஸின் நோக்கம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியதன் மூலம் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத் மற்றும் சுதந்திரமான நுபுவ்வத்தின் வாசல் சந்தேகமின்றி அடைபட்டு விட்டது;

ஆனால் முபஷ்ஷிராத், முன்ஸிராத்தைக் கொண்ட நுபுவ்வத்தின் வாசல் அடைபடவில்லை என்பதாகும். ஏனெனில் அது அன்னார் (ஸல்) அவர்களுடைய நிழல் ஆகும்; அசலோ சுதந்திரமானதோ அல்ல.

## முபஷ்ஷிராத்தை கொண்ட ஒரு நபி பற்றிய முன்னறிவிப்பு

லம் யப்க மினன் நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத் (நுபுவ்வத்தில் முபஷ்ஷிராத்துகளைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்கவில்லை) என்ற ஹதீஸில் இன்னொரு நுட்பமான சைகையும் இருக்கிறது. அது என்னவென்றால், இதில் கடைசி காலத்தில் மஸீஹுக்கு ஒப்பானவர் தோன்றுவது பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. அதன் விபரம் என்னவென்றால், வாசகர்களுக்குத் தெரிந்திருப்பதைப் போன்று, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இஞ்சீல் இறக்கப்பட்டது. மேலும் எல்லா அகராதிகளிலும் எழுதியிருப்பதைப் போன்று இஞ்சீல் என்றால், நற்செய்தி என்று பொருளாகும். (உதாரணமாக, அக்ரபுல் மவாரிது அகராதியைக் காண்க). ஆக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நுபுவ்வத் ஷரீஅத் அல்லாததாக இருந்தது. அது எத்தகைய இறை வார்த்தைகளைக் கொண்டிருந்தது என்றால், அதற்கு இறைவன் நற்செய்தி எனப் பெயரிட்டான்.

எனவே *லம் யப்க மினன் நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத்* (நுபுவ்வத்தில் தற்போது நற்செய்தியைக் கொண்டது மட்டுமே எஞ்சியுள்ளது) என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியபோது அதில் அவர்கள், நான் செல்கின்றேன்; இனி நீங்கள் எனக்குப் பிறகு இஞ்சீலின் நற்செய்திகளைக் கொண்ட மூஸவிய்ய மஸீஹைப் போன்று நற்செய்திகளைக் கொண்ட முஹம்மதிய்ய மஸீஹின் வழியைப் பார்க்க வேண்டும்; அவர் எனது அடிச்சுவட்டைப் பின்பற்றியவாறு எனது ஒளியிலிருந்தே ஒளியைப் பெற்று தோன்றுவார் என்ற நுட்பமான சைகையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாருங்கள்! நமது எஜமானர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து வெளிவந்த இந்தக் கூற்று எவ்வளவு நுட்பமானது!!

ஆக, அன்னார் (ஸல்) அவர்கள் வேறு சொற்களில் மஸீஹுக்கு

ஒப்பானவர் என்ற முன்னறிவிப்பையே திருப்பிக் கூறியவாறு, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு மூஸவிய்ய ஷரீஅத்திற்கு தொண்டு செய்வதற்காக, இஞ்சீலின் நற்செய்தி வழங்கப்பட்ட மஸீஹே நாஸிரீ வந்ததைப் போன்று, இறுதி காலத்தில் திருக்குர்ஆன் ஷரீஅத்துக்கு தொண்டு செய்வதற்காக ஒரு முஹம்மதிய்ய மஸீஹ் வருவார். அவருக்கும் மஸீஹே நாஸிரீயைப் போன்று முபஷ்ஷிராத் வழங்கப்படும் எனக் கூறியிருக்கிறார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (தமது) நெருக்கமான காலத்தைச் சுட்டிக் காட்டுவதற்காக முபஷ்ஷிராத் என்பதற்கு விளக்கமாக நல்ல கனவுகள் என்ற சொற்களைக் கூறினார்கள். திருக்குர்ஆனின் வஹியுடன் வேறு எந்த வஹியும் கலந்து விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு கூறினார்கள். மேலும் தொலைவிலுள்ள காலத்திற்காக இதே சொற்களில் மஸீஹுக்கு ஒப்பானவர் தோன்றுவார் என்பதன் பக்கம் சுட்டிக் காட்டி விட்டார்கள். அந்தோ! நமது எதிர் வாதத்தினர் தமது மேலோட்டமான அளவில் சான்று எடுப்பதை விடுத்து, திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் நிரம்பிக் காணப்படுகின்ற இந்த நுட்பமான உண்மைகளைப் பற்றி சிந்தித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!!

## எதிர்மறை விதமான ஹதீஸுகளைப் பற்றிய ஆய்வு

### எதிர்மறை விதமான ஹதீஸுகளின் சுருக்கம்

இறுதி நபித்துவம் என்ற விவகாரம் தொடர்பான நேர் மறையான ஹதீஸுகளைப் பற்றி விவாதித்ததை முடித்த பிறகு இப்போது நான் எதிர் மறையான ஹதீஸுகளை எடுத்துக் கூறுகிறேன். எதிர் மறையான ஹதீஸுகள் என்று நான் கூறுவதன் கருத்து, எந்த ஹதீஸுகளின் மூலமாக வெளிப்படையில் பார்க்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபித்துவத்தின் தொடர் அடைபட்டு விட்டதாகக் கருதப்படுகிறதோ அந்த ஹதீஸுகள் ஆகும். அந்த ஹதீஸுகள் பல்வேறு விதமானவையாகும். மேலும் அவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பல்வேறு விதமான சொற்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். உதாரணமாக, சிலவற்றில், 'லா நபிய்ய பஃதீ' என்ற சொற்கள் வருகின்றன; (அதாவது எனக்குப் பிறகு நபி

இல்லை-சஹீஹ் புகாரி, சஹீஹ் முஸ்லிம் ஆகியவற்றில் காண்க.) சிலவற்றில், '**லவ் கான பஃதீ நபிய்யுன் லகான உமரு**' என்ற சொற்கள் வருகின்றன. (அதாவது எனக்குப் பிறகு ஒரு நபி இருக்க முடியும் என்றால் அவர் உமராக இருந்திருப்பார்-திர்மதி, முஸ்னது அஹ்மது ஆகியவற்றில் காண்க.) மேலும் சிலவற்றில், '**இன்னீ ஆகிருல் அன்பியாயி**' என்ற சொற்கள் வருகின்றன; (அதாவது நான் கடைசி நபியாக இருக்கிறேன்-சஹீஹ் முஸ்லிம், நஸயீ ஆகியவற்றில் காண்க.) இன்னும் சிலவற்றில், '**மஸலீ வமஸலுல் அன்பியாயி மின் கப்லீ**' என்ற சொற்கள் வருகின்றன. (அதாவது எனக்கும் எனக்கு முன்னுள்ள நபிமார்களுக்கும் உள்ள உதாரணம் ஒரு வீட்டைப் போன்றதாகும். அதில் ஒரு செங்கல்லுக்கான குறைபாடு இருந்தது. எனது தோற்றத்தால் அந்த செங்கல் தனது பொருத்தமான இடத்தில் பொருந்தி விட்டது-சஹீஹ் புகாரி, சஹீஹ் முஸ்லிம், முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் ஆகியவற்றில் காண்க.) மேலும் சிலவற்றில், '**இன்னர் ரிஸாலத வந்நுபுவத்த கத் இன்கதஅத்**' என்ற சொற்கள் வருகின்றன. (அதாவது இனி தூதுத்துவம் நபித்துவம் ஆகியவற்றின் தொடர் முடிந்து விட்டது-ஃபத்ஹுல் பாரீ ஹதீஸ் எண்: 12545 காண்க). வேறு சிலவற்றில் '**ஸலாஸூன தஜ்ஜாலூன கஸ்ஸாபூன. குல்லுஹும் யஸ்வுமு அன்னஹூ நபிய்யுன்'என்ற சொற்கள் வருகின்றன.**(அதாவது எனக்குப் பிறகு முப்பது பொய்யர்கள் தஜ்ஜால்கள் தோன்றுவர். அவர்களில் ஒவ்வொருவரும் தன்னை நபி என்று வாதிப்பார்கள்-புகாரி, முஸ்லிம் காண்க).

எந்த ஹதீஸுகளின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எல்லா விதமான நபித்துவத்தின் வாசலும் அடைபட்டு விட்டது என வெளிப்படையாகக் கருதப்படுகிறதோ அவற்றின் சுருக்கமாகும் இவை. நான் இப்போது இந்த ஹதீஸுகள் சரியானவையா? அல்லது சரியானவை இல்லையா? என்ற வாதத்திற்கு செல்ல மாட்டேன். ஏனெனில் இந்த மாதிரியான விளக்கத்திற்கு செல்வதற்கு இங்கு இடமில்லை. ஆனால் நான் தற்போது நிரூபிக்கவிருப்பதைப் போன்று இந்த ஹதீஸுகளின் மூலமாக நமது மாற்றுக் கருத்து கொண்டவர்கள் எடுக்கும் முடிவு ஒருபோதும் சரியானதன்று. மாறாக, சிந்தித்துப்பார்த்தால் இந்த ஹதீஸுகளிலிருந்தும், காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களுக்குப்

பிறகு ஷரீஅத்தைக் கொண்ட, சுதந்திரமான நுபுவ்வத் சந்தேகமின்றி முடிந்து விட்டது; ஆனால் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் நிழலாகவும் பிம்பமாகவுமே இருக்கின்ற அதாவது அதன் பகுதியாகவே இருக்கின்ற நிழலான நுபுவ்வத் ஒருபோதும் முடிந்து விடவில்லை என்பது மட்டுமே நிரூபணமாகின்றது. மேலும் இந்த ஹதீஸுகளில் ஒரு ஹதீஸ் கூட இந்த விதமான நிழலான நுபுவ்வத்தின் வாசலை அடைக்கக் கூடியதாக இல்லை. ஆனால் நான் ஹதீஸுகளைப் பற்றி தனித்தனியாக வாதிப்பதற்கு முன் ஒரு ஒட்டுமொத்தமான குறிப்பின் மூலம் வாசகர்களுக்கு ஓர் அடிப்படையான விஷயத்தின் பக்கம் கவனமூட்டுவது அவசியம் எனக் கருதுகிறேன். அதன் மூலமாக இந்த விவகாரத்திற்கு ஓர் எளிய, இலேசான வழியின் மூலமாக தீர்வு கிடைத்து விடும் – இன்ஷா அல்லாஹ்.

## ஹதீஸுகளிலுள்ள முரண்பாட்டை நீக்குவதற்கான வழிமுறை

அந்த அடிப்படையான விஷயம் என்னவெனில், இறுதி நபித்துவ விவகாரம் பற்றிய வாதத்தில் சில ஹதீஸுகள் நம் சார்பாக எடுத்து வைக்கப்படுகின்றன; அவற்றின் மூலமாக நுபுவ்வத்தின் வாசல் திறந்திருப்பது நிரூபணமாகின்றது. மேலும் சில ஹதீஸுகள் நமது எதிரிகளிடமிருந்து எடுத்து வைக்கப்படுகின்றன; அவற்றிலிருந்து அதன் வாசல் மூடி இருப்பதாக தெரிகிறது. வெளிப்படையில் பார்க்கும்போது இது ஒரு மிகப் பெரிய முரண்பாடாகும். அதற்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால், நமது எஜமானரும், அண்ட சராசரங்களின் தலைவரும், ஆதமின் மக்களின் தலைவரும் (என் ஆன்மா அவருக்கு அர்ப்பணமாகட்டும்) ஆகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி, அன்னார் (ஸல்) அவர்கள் முரண்பட்ட கூற்றுகளைக் கூறி விட்டார்கள் என்ற ஆட்சேபணை எழும் – நவூது பில்லாஹ். அதாவது, சில நேரத்தில் எனக்குப் பிறகு நபி இல்லை என்று கூறினார்கள். சில நேரத்தில் எனக்குப் பிறகும் நபி வர முடியும் எனக் கூறினார்கள். மேலும் சில நேரத்தில் நான் கடைசி நபி ஆவேன் என்று கூறினார்கள். மேலும் சில நேரத்தில் எனக்குப் பிறகு எனது உம்மத்தில் ஒரு மஸீஹ் தோன்றவிருக்கிறார். அவர் நபியாக இருப்பார் எனக் கூறினார்கள்.

வெளிப்படையான இந்த முரண்பாட்டை நீக்குவதற்கு

ஏதாவதொரு ஒரு வழி இருக்க வேண்டும். எனவே நமது மற்றும் பிற முஸ்லிம்களின் ஒட்டுமொத்தமான கடமை என்னவென்றால், மிகவும் பொறுமையாகவும், நேர்மையாகவும் சிந்தித்து இந்த முரண்பாடு நீங்குவதற்கான ஒரு வழிமுறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(முரண்பாடு என்பது நிச்சயமாக,வெளிப்படையில் தெரியும் முரண்பாடுதான்; ஏனெனில் நமது எஜமானரின் கூற்றில் உண்மையான முரண்பாடு ஏற்பட முடியாது-நூலாசிரியர்).

மேலும் இந்த வெளிப்படையான முரண்பாட்டை நீக்குவதற்கு கீழ் வரும் இரண்டு சாத்தியக்கூறுகளே இருக்கின்றன. ஒவ்வோர் அறிவுடையவரும் இந்தக் கருத்துக்கு உடன்படுவார்.

**ஒன்று**, ஹதீஸுகளிலுள்ள வெளிப்படையான முரண்பாட்டை அவற்றிக்கு நீதிபதியாக விளங்கும் திருக்குர்ஆனை முன்னிறுத்தி, அந்தக் குர்ஆன் அது பற்றி என்ன கூறுகிறது என்ற தீர்ப்பைப் பெற வேண்டும். பிறகு எந்த ஹதீஸ் திருக்குர்ஆனுக்கு இணக்கமானதாக இருக்கிறதோ அதனை எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றவற்றை மறுத்து விட வேண்டும். இந்த வழிமுறையின் பக்கம்தான் திருக்குர்ஆனே வழிகாட்டி இருக்கிறது. அது இவ்வாறு கூறுகிறது:

فَبِأَيِّ حَدِيثٍ بَعْدَ اللَّهِ وَآيَاتِهِ يُؤْمِنُونَ ○

அல்லாஹ் மற்றும் அவனது வசனங்களுக்கு எதிராக மக்கள் எந்த ஹதீஸை ஏற்றுக் கொள்வார்கள்? ***(திருக்குர் ஆன் 45: 7 காண்க)***

நமது எதிரிகள் இந்த தெளிவான நேரான வழிமுறையை ஒப்புக் கொள்ள முடியாது என்றால், பிறகு இன்னொரு வழிமுறை இருக்கிறது. (பலவீனமானது அல்லது இட்டுக் கட்டப்பட்டது என நிரூபணமாகின்ற ஹதீஸைத் தவிர – அவற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைப்பதற்கு இங்கு இடமில்லை) இரண்டு விதமான ஹதீஸுகளையும் எடுத்துரைத்து அவற்றில் இணக்கமான ஒருமித்த ஒரு வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதாவது, எந்த ஹதீஸுகளில் நபித்துவம் தொடர்கிறது என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளனவோ அவற்றில் எந்த பொருளில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது? அவ்வாறே எந்த ஹதீஸுகளில்

நபித்துவம் மறுக்கப்பட்டுள்ளதோ அவற்றில் எந்த பொருளில் மறுக்கப்பட்டுள்ளது? எனத் தீர்மானிக்க வேண்டும். அப்போது அதன் மூலமாக எவ்வித நீண்ட வாதத்திற்கும் செல்லாமல் இரண்டு விதமான ஹதீஸுகளையும் ஒப்புக்கொள்வதற்கான வழி பிறக்கலாம்.

## திருக்குர்ஆனின் தீர்ப்பு எங்கள் பக்கம் இருக்கிறது

இந்த இரண்டு சாத்தியமான வழிமுறைகளின் மூலமாகத்தான் நாம் இந்த வெளிப்படையான முரண்பாட்டை நீக்க முடியும். மேலும் ஈமானுடன் சம்பந்தப்பட்ட இந்த முக்கியமான விவகாரத்தை மிகவும் பொறுமையுடனும், நேர்மையுடனும் சிந்தித்து இந்தச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கான வழியைத் தேடுவது ஒவ்வோர் உண்மை முஸ்லிமுக்கும் கடமையாகும். திருக்குர்ஆனின் வழிமுறையோ முற்றிலும் தெளிவானதாகும். ஏனெனில் நான் இந்த நூலின் துவக்கத்தில் கூறியிருப்பது போன்று திருக்குர்ஆனின் எந்த ஒரு வசனத்திலும் அல்லது எந்தவொரு வசனத்தின் பகுதியிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபித்துவத்தின் தொடரை மூடிவிட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. மாறாக, நமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு இறை அருட்கொடைகளின், இறை கருணையின் வாசல்கள் முன்னரை விட மிக அதிகமாக பரந்து விரிந்து திறந்துள்ளது. எடுத்ததற்கெல்லாம் நமது எதிரிகள் காத்தமுன் நபிய்யீன் என்ற ஒரு வசனத்தை எடுத்து வைக்கின்றனர். ஆனால் அந்த வசனத்திலும் நபித்துவத்தின் தொடர் அடைபட்டு விட்டதாக ஒருபோதும் நிரூபணமாகவில்லை என்பதை நாம் நிரூபித்துக் காட்டி விட்டோம். மாறாக, எந்த அருட்கொடை முந்தைய நபிமார்களுக்கு நேரடியாகக் கிடைத்து வந்தனவோ அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மிக மிக உயர்ந்த அந்தஸ்தின் காரணமாகவும், முழுமையான அருளின் காரணமாகவும் அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னாரைப் பின்பற்றுதல், மாணவராக இருத்தல், அன்னாரின் உண்மைப்படுத்துதல் என்ற முத்திரை ஆகியவற்றின் மூலமாக கிடைக்கும் என்பது மட்டுமே நிரூபணமாகின்றது. இது நாம் எடுத்து வைக்கின்ற அதே கொள்கைதான்.

எப்படி இருந்த போதிலும், திருக்குர் ஆனின் எந்தவொரு வசனத்திலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு

நபித்துவத்தின் தொடர் நின்று விட்டது என்ற குறிப்பு இல்லை. மாறாக, முந்தைய சமுதாயங்களுக்கு தனித்தனியாக கிடைத்துக் கொண்டிருந்த இறையருள்கள் அனைத்தும் விதிவிலக்கில்லாமல் முஹம்மதிய்ய சமுதாயத்திற்கு முழுமையாகவும், நிறைவாகவும் கிடைக்கும் என்ற மகத்தான கருத்துடனேயே அல்லாஹ் மிக ஞானத்துடன் திருக்குர்ஆனைத் துவக்கியுள்ளான். இப்படிப்பட்ட பரந்த கொள்கையுடன் துவங்கும் இத்தகைய முழுமையான, முழுமைப்படுத்தப்பட்ட வேதம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் இறைவனின் அருள் மற்றும் கருணையின் பரந்த நதியை காய்ந்து போனதாக ஆக்கி விட்டது; முன்னர் ஓடிக்கொண்டிருந்த நதிகள் இப்போது நின்று விட்டன என்ற குறுகிய கொள்கைக்கு ஆதரவளிக்க முடியுமா என்ன? *ஹய்ஹாத்த ஹய்ஹாத்த லிமா யஸிஃபூன்.* (அவர்கள் கூறிக்கொண்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது).

## ஹதீஸுகளில் உண்மையான எந்த முரண்பாடும் இல்லை!

இப்போது ஹதீஸுகளின் விவகாரம் மட்டும் எஞ்சியுள்ளது. எனவே அவற்றின் முரண்பாட்டை நீக்குவது எந்த கடினமான வேலையுமன்று. ஏனெனில் அதன் முரண்பாடு என்பது வெளிப்படையானது தானே தவிர உண்மையானதன்று. சில ஹதீஸுகளை நாம் எடுத்து வைக்கின்றோம். அவற்றிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னார் (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதற்காக அன்னாரின் தொண்டர்களிலிருந்தே, அன்னாரின் ஒளியிருந்தே ஒளியைப் பெற்று, அன்னாரின் பிம்பத்தைக் கொண்டவாறு ஒருவர் நபித்துவத்தின் அந்தஸ்தை அடைய முடியும் என்ற விஷயம் பகல் வெளிச்சம் போன்று நிரூபணமாகின்றது.

இதற்கு எதிராக மற்றொரு கூட்டத்தினர் சில ஹதீஸுகளை எடுத்து வைக்கின்றனர். அதிலிருந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடைசி நபி என்றும், அன்னாருக்குப் பிறகு எந்த நபியும் இல்லை என்றும் வெளிப்படுகிறது. வெளிப்படையாகப் பார்க்கும் போது இது ஒரு பெரிய முரண்பாடாகும். ஆனால் நண்பர்களே! அன்பர்களே!!

நம் இருவருக்கும் பொதுவான எஜமானர் (ஸல்) அவர்களின் பெயரைக் கூறுபவர்களே!!! இறைவன் உங்கள் கண்களைத் திறப்பானாக. இந்த முரண்பாடு பின்வரும் இந்த ஞானம் மிக்க சொல்லினால் நீக்கப்பட முடியாதா என்ன? அதாவது, நமது எஜமானர் (ஸல்) அவர்கள் **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்றும் **'இன்னீ ஆகிருல் அன்பியா' (நான் கடைசி நபியாக இருக்கிறேன்)** என்றும் கூறியிருக்கின்ற இடத்தில் அன்னார் கூற விரும்பியதன் கருத்து, எனக்குப் பிறகு என்னை விட்டு சுதந்திரமான முறையில் எனது ஷரீஅத்தை ரத்து செய்து விட்டு, எனது நபித்துவத்தின் மடியிலிருந்து விலகி நபி என வாதம் செய்பவர் என்பதாகும். மேலும் இந்த பொருளில் நான் கடைசி நபியாக இருக்கிறேன்; எனக்குப் பிறகு எந்த நபியுமில்லை.

ஆனால் இதற்கு நேர் எதிராக **எனக்குப் பிறகு நபி வர முடியும் என்றும், எனது உம்மத்தைச் சேர்ந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நபியாக இருப்பார் என்றும்** ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்றால் அங்கு அன்னார் (ஸல்) அவர்கள் கூற விரும்பிய நோக்கம், எனது ஷரீஅத்திற்கு தொண்டு செய்பவராக மாறி, எனது ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று, அதாவது எனது சூரியனுடன் சந்திரனைப் போன்று தொடர்பை ஏற்படுத்தி எனது ஓர் ஆன்மீக மகன், நபித்துவத்தின் அந்தஸ்தை அடைய முடியும் என்பதாகும். மேலும் அப்படிப்பட்டவர் நபித்துவத்தைக் கொண்டிருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடைசி நபியாக இருக்கிறார்கள். மேலும் **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்பதன் கருத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாது. ஏனெனில் கிளை தனது வேரை விட்டும் தனித்தது அல்ல. மேலும் நிழல் தனது அசலை விட்டும் தனித்தது அல்ல.

## நாங்கள் அடிப்படையில் எல்லா ஹதீஸுகளையும் ஏற்றுக் கொள்கிறோம்

இப்போது பாருங்கள். இது எவ்வளவு எளிதான, எவ்வளவு இலேசான வழியாகும்! அதில் ஹதீஸுகளின் வெளிப்படையான முரண்பாட்டை ஒரு சொல்லைக் கூறுவதன் மூலமாக, ஒரு முள்ளை மாற்றுவதன் மூலமாக முற்றிலும் நீங்கி விடுகிறது. மேலும் நமது எஜமானர் (எனது ஆன்மா அவருக்கு அர்ப்பணமாகட்டும்) அவர்களின்

ஒவ்வொரு ஹதீஸும் நமது கண்களுக்கு குளிர்ச்சியாகவும், உள்ளத்திற்கு ஆறுதலாகவும் அமைகிறது. மேலும் அதிகமான வாதம் செய்வதற்கான தேவையே எஞ்சி இருப்பதில்லை.

இந்த ஹதீஸுகள் சஹீஹானவையா? சஹீஹ் அல்லாதவையா என்பது பற்றி பலர் மிக நீண்ட வாக்குவாதங்களை செய்துள்ளார்கள் என்பதை நான் அறிவேன். மேலும் இந்த களத்தில் இறங்குவதால் நிச்சயமாக கணிசமான அளவுக்கு வாதம் செய்வதற்கான வழி திறக்க முடியும். ஆனால் நான் முன்னரே கூறியது போன்று இந்த இடத்தில் நான் அந்த வாதத்திற்கு செல்ல விரும்பவில்லை. மாறாக, சான்றுக்காக, நான் மேலே சுட்டிக் காட்டிய அந்த எல்லா ஹதீஸுகளையும் ஒப்புக் கொள்கிறேன். **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். **'இன்னீ ஆகிருல் அன்பியா' (நான் கடைசி நபியாக இருக்கிறேன்)** என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் இந்த ஹதீஸுகளுக்கு, எனது எஜமானர் (ஸல்) அவர்கள் கூறிய மற்ற ஹதீஸுகள் தவறானவை என்று ஆகும் அளவிலான அந்த பொருளைக் கொடுக்க முடியாது. நான் இந்த ஹதீஸுகளுக்கு எனது எஜமானர் (ஸல்) அவர்களின் மகத்துவத்திற்கு குறைவை ஏற்படுத்தும் அந்தப் பொருளைக் கொடுக்க முடியாது – நவூது பில்லாஹ். எனவே நான் இந்த ஹதீஸுகளை ஏற்றுக் கொள்கின்ற அதே நேரத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதால், அன்னாரின் மாணவராக இருப்பதால் நபி வரலாம் என்றும், அன்னாரின் ஆன்மீக மகனாகிய, வரக் கூடிய மஸீஹ் நபித்துவத்தின் அந்தஸ்தை அடைவார் என்றும் கூறப்பட்டிருக்கின்ற மற்ற ஹதீஸுகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த இரண்டு விதமான ஹதீஸுகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏனெனில் இவ்வாறு ஹதீஸுகளுக்கிடையிலான முரண்பாடு நீங்குகிறது. மேலும் எனது எஜமானர் (ஸல்) அவர்களின் தொண்டர் அன்னாரின் தொண்டராக இருப்பதன் காரணத்தினால் நபித்துவத்தின் அந்தஸ்தைப் பெற முடியும் என்ற வகையில் அன்னார் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து வெளிப்படுகிறது. நமது எஜமானர் (ஸல்) அவர்கள் முற்றிலும் உண்மையைக் கூறினார்கள்:

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

لَوْ كَانَ مُوسَىٰ وَعِيسَىٰ حَيَّيْنِ لَمَا وَسِعَهُمَا إِلَّا اتِّبَاعِي

**'லவ்கான மூஸா வ ஈஸா ஹய்யய்னி லமா வஸிஅஹுமா இல்லத்திபாயீ'.**

**அதாவது, ''இப்போது மூஸாவும் ஈஸாவும் உயிருடன் இருந்தாலும், அவர்களுக்கும் என்னைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.''** ***(இமாம் ஷுஃரானீ தொகுத்த அல்யவாகீத்து வல் ஜவாஹிர் தொகுதி 2 பக்கம் 20)***

ஆனால் இது ஒரு நாவளவிலான வாதமாகும்; இதற்கு எந்த சான்றுமில்லை என முஸ்லிமல்லாத ஒருவர் கூறலாம் - நவூது பில்லாஹ். ஆனால் இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தொண்டர்களிலிருந்து ஒருவரை மஸீஹுக்கு ஒப்பானவராக்கி அவருக்கு நபித்துவத்தின் அந்தஸ்து வரை சென்றடைய வைத்து, தனது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் வாதம் முற்றிலும் உண்மையானது என்பதை எடுத்துரைத்து விட்டான். அதன் உண்மைக்கு, சம்பவங்கள் சாட்சி முத்திரை இட்டுவிட்டன. நமது மாற்று கருத்து கொண்டவர்கள் சம்பவங்களின் இந்த சாட்சியை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்களா? அவர்கள் இந்த ஹதீஸுகளின் முரண்பாட்டிற்கு தீர்வு காண்பதற்காக நம்மைப் போன்று, நாங்கள் இந்த வாதத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள எல்லா ஹதீஸுகளையும் ஏற்றுக் கொள்கிறோம் என அறிவிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்களா? அவ்வாறு ஆயத்தமாக இல்லை என்றால், திருக்குர்ஆனை அவர்கள் முற்றிலும் விட்டு விட்டார்கள். ஹதீஸிலுள்ள பாதி சிறந்த பகுதியிலிருந்து முகந்திருப்பி விட்டார்கள் என்பதை அவர்களே சிந்தித்துக் கொள்ளட்டும். அப்படியிருந்தும் அவர்கள் தமது இறைதூதரின் மகத்துவத்தைக் குறைத்து, இறைவனின் அருட்கொடைகளின் ஆறுகளை வற்றச் செய்து விட்டார்கள் என்ற பேறிழப்பைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை. அகக் கண் கொண்டவர்களே! படிப்பினை பெறுங்கள்!!

## லா நபிய்ய பஃதீ என்ற ஹதீஸுக்கான விளக்கம்

இதற்குப் பிறகு நான் மிகவும் சுருக்கமாக, எதிர்மறை கருத்துகளைக் கொண்ட ஹதீஸுகளை ஒவ்வொன்றாக

எடுத்துரைக்கிறேன். இந்தக் களத்தில் முதன் முதலில் நமக்கு முன்னால் **'லா நபிய்ய பஃதீ (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்ற ஹதீஸ் வருகிறது. இந்த ஹதீஸுக்கு நமது எதிர் தரப்பினர் மிக அதிகமாக அழுத்தம் கொடுக்கின்றனர். பாருங்கள்! எனக்குப் பிறகு எந்த நபியும் வர முடியாது என்று நமது தூதர் (ஸல்) அவர்கள் எவ்வளவு தெளிவாகக் கூறியிருக்கிறார்கள் எனக் கூறுகின்றனர். மேலும் அவர்கள் இந்த ஹதீஸை தமது எழுத்துகளிலும், சொற்பொழிவுகளிலும் மீண்டும், மீண்டும் எடுத்துரைத்து, அதற்கு தவறான விளக்கத்தைத் தந்து பொது மக்களின் உள்ளத்திலும், சிந்தனையிலும் ஒருவகையான மாயையை ஏற்படுத்தி விட்டனர். ஆனால் இறைவனின் அருளாலும், அவனது தூதரின் பரகத்தாலும் இந்த ஏமாற்று வேலை அதிகமாக நிலைத்திருக்க முடியாது - இன்ஷா அல்லாஹ்.

விஷயம் என்னவெனில், **'லா நபிய்ய பஃதீ'** என்பதன் சொற்பொருள், சந்தேகமின்றி, **'எனக்குப் பிறகு எந்த நபியுமில்லை** என்பதுதான். ஆனால் சில நேரங்களில் **'லா' (அதாவது இல்லை)** என்று சொல்வதன் மூலம் ஒரு விஷயம் மட்டும் மறுக்கப்படுகிறது. ஆனால் அதன் மூலம் பொதுவாக எல்லா விஷயங்களும் மறுக்கப்பட்டது என்ற கருத்து அல்ல; மாறாக, குறிப்பிட்ட வகை மறுக்கப்பட்டது என்ற கருத்தாகும். இதனை ஒவ்வொரு கல்வியறிவுள்ளவரும் அறிவார். அதனை அரபி விதிமுறை வழக்கின்படி நஃபியே ஜின்ஸ் என்று கூறப்படுகிறது.

உருது மொழியில் அதற்குரிய உதாரணத்தை இப்படிப் புரிந்து கொள்ளலாம். உதாரணமாக, ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியர் குறிப்பிடத்தக்க உயர்ந்த, தனிச் சிறப்பான தகுதியைக் கொண்டிருப்பார் என்றால், அவருக்கு எதிராக அந்த ஊரில் உள்ள மற்ற தலைமையாசிரியர்கள் சாதாரணமான தகுதி கொண்டவராக இருப்பார்கள் என்றால், **'தலைமையாசிரியர் என்றால் இவர்தான்; இவரைத் தவிர வேறு எந்த தலைமையாசிரியரும் இல்லை'** என்ற சொற்கள் சில நேரத்தில் கூறப்படுகின்றன. அதற்காக அவரைத் தவிர வேறு எந்த தலைமையாசிரியருமே இல்லை என்று அதற்கு ஒருபோதும் பொருள் அன்று. மாறாக, அந்த ஊரில் அந்த தகுதியைக் கொண்ட அல்லது அந்த மாதிரியான அல்லது அந்த மகத்துவமிக்க தலைமையாசிரியர்

வேறு யாருமில்லை என்று மட்டுமே பொருளாகும். ஒவ்வொருவருடைய மொழியிலும் காணப்படுகின்ற இந்த சொல்வழக்கு அறிவுத்திறன் கொண்ட எவராலும் மறுக்க முடியாத அளவுக்கு பொதுவானதும் கண்டறியப்பட்டதுமாகும். ஆயினும் நாம் இந்த வாதத்திற்கு பிற மக்களின் சொல் வழக்கின் ஆதரவைத் தேடி அலைய வேண்டிய தேவையில்லை. ஏனெனில் நமது எஜமானர் (ஸல்) அவர்களே இந்த சொல் வழக்கிற்கு ஓர் உதாரணத்தை வழங்கி இருக்கிறார்கள்; அதன் மூலம் இந்த எல்லா வாதத்திற்கும் ஒரு முற்றுப் புள்ளி கிடைத்து விடுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

إِذَا هَلَكَ قَيْصَرُ فَلَا قَيْصَرَ بَعْدَهُ وَإِذَا هَلَكَ كِسْرَى
فَلَا كِسْرَى بَعْدَهُ

**'இஸா ஹலக கய்ஸரு ஃபலா கய்ஸர பஃதஹூ. வ இஸா ஹலக கிஸ்ரா ஃபலா கிஸ்ரா பஃதஹூ.'** ***(புகாரி கிதாபுல் ஈமான் வன்னுஸ்ர்)***

**பொருள்: (தற்போதைய ரோம் நாட்டு மன்னர்) கய்ஸர் மரணித்து விட்டால், அவருக்குப் பிறகு வேறு எந்த கய்ஸரும் வர மாட்டார்; மேலும் (தற்போதைய ஈரான் நாட்டு மன்னர்) கிஸ்ரா மரணித்து விட்டால், அவருக்குப் பிறகு வேறு எந்த கிஸ்ராவும் தோன்ற மாட்டார்.**

***(புகாரி தமிழாக்கம் தொகுதி 2 ஹதீஸ் எண்: 3027, தொகுதி 3 ஹதீஸ் எண்: 3618; முஸ்லிம் தொகுதி 4 ஹதீஸ் எண்: 5594 -மொழிபெயர்ப்பாளர்)***

இப்போது பாருங்கள். இந்த ஹதீஸில் கய்ஸர், கிஸ்ரா மன்னர்கள் பற்றிய சொற்கள் வெளிப்படையில் பார்க்கும்போது முற்றிலும் சாதாரணமாகவும், பொதுவானதாகவும் வந்துள்ளது. அத்துடன் எந்தவொரு நிபந்தனையோ, விதிக்குட்பட்டதாகவோ, எல்லைக்குட்பட்டதாகவோ வரவில்லை. ஆயினும் இந்த இடத்தில் குறிப்பிட்ட கய்ஸர், கிஸ்ரா மன்னர் என்ற கருத்துதானே தவிர பொதுவாக கருத்தில் அல்ல. ஏனெனில் எந்த கய்ஸர், கிஸ்ரா மன்னர்களின் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்களைக் கூறினார்களோ அவர்களுக்குப் பிறகும் பல கய்ஸர்கள், கிஸ்ராக்கள் தோன்றிக் கொண்டிருந்தனர். இன்னும் சொல்லப்போனால், கய்சரின் ஆட்சி அதற்கு ஐநூறு, அறுநூறு

ஆண்டுகளுக்குப் பிறகு வரை நீடித்திருந்தது என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது. எனவே இந்த இடத்தில் எல்லா ஆய்வாளர்களும் ஒன்றுபட்ட கருத்தில் எழுதி இருப்பது என்னவென்றால், இந்த சொற்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்தியதன் நோக்கம், தற்போதைய கய்ஸர், கிஸ்ரா மரணித்து விட்டால் அவர்களுக்குப் பிறகு வேறு எந்த கய்ஸர், கிஸ்ராவும் தோன்றவே மாட்டார்கள் என்பதன்று; மாறாக, அவர்களுக்குப் பிறகு இந்த மதிப்பைக் கொண்ட, இந்த மகத்துவத்தைக் கொண்ட, இந்தவிதமான பரந்த ஆட்சியைக் கொண்ட கய்சர், கிஸ்ரா தோன்ற மாட்டார்கள் என்பதுதான். ***(ஃபத்ஹுல் பாரீ தொகுதி 6 பக்கம் 407 காண்க).***

இதே போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், **'லா நபிய்ய பஃதீ'** **(எனக்குப் பிறகு நபி இல்லை)** எனக் கூறியிருக்கும்போது அதற்கும் அன்னாரின் கருத்து, எனக்குப் பிறகு என்னைப் போன்று எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியோ, அல்லது சுதந்திரமான நபியோ தோன்ற மாட்டார் என்பதுதானே தவிர, எந்த நபியும் தோன்றவே மாட்டார் என்ற கருத்து அல்ல. இந்த சிந்தனைக்கு விளக்கமாக அன்னார் (ஸல்) அவர்களே உதாரணம் கூறி தெளிவுபடுத்தி விட்டார்கள்.அதாவது, பாருங்கள். நான் **'லா நபிய்ய பஃதீ (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்ற சொற்களைப் பயன்படுத்தி இருப்பதைப் போன்று நான், **'இஸா ஹலக கய்ஸரு ஃபலா கய்ஸர பஃதஹூ (இந்த கய்ஸருக்குப் பிறகு வேறு எந்த கய்ஸரும் இல்லை)** என்ற சொற்களையும் பயன்படுத்தி இருக்கிறேன். எனவே இந்த கய்ஸருக்குப் பிறகு வேறு எந்த கய்ஸரும் இல்லை என்பதன் பொருள் எல்லைக்குட்பட்டதாக இருந்ததைப் போன்று, அதாவது தற்போது இருக்கும் கய்ஸருக்குப் பிறகு அந்த அந்தஸ்தையுடைய, அல்லது அந்த மாதிரியான கய்ஸர் எவரும் தோன்ற மாட்டார் என்ற பொருளில் மட்டுமே இருந்ததைப் போன்று எனக்குப் பிறகு எந்த நபியும் இல்லை என்பதன் கருத்தும் எனக்குப் பிறகு என்னைப் போன்று ஷரீஅத்தைக் கொண்ட, சுதந்திரமான தகுதியைக் கொண்ட எந்த நபியும் இல்லை என்பதாகும்.

இது எவ்வளவு தெளிவான, நேரிய விஷயமாகும் என்றால், எந்தவோர் அறிவுள்ளவரும் இதில் சந்தேகம் கொள்ள மாட்டார்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## 'பஃதீ' என்ற சொல்லுக்கான விளக்கம்

இது மட்டுமல்லாமல் இந்த ஹதீஸில் 'பஃதீ' (எனக்குப் பிறகு) என்ற சொல்லும் குறிப்பாக கவனிக்கத்தக்கதாகும். இது தொடர்பாக தெரிய வேண்டியது என்னவெனில், அரபு மொழியில் 'பஃத்' என்ற சொல் கீழ் வரும் மூன்று மாறுபட்ட பொருள்களில் பயன்படுத்தப் படுகிறது:

**1. ழர்ஃபே மகானீ (இடத்தைப் பொருத்தது)** என்ற வகையில் பஃத் பயன்படுத்தப்படுகிறது. இந்த வகையில் ப ஃத் என்பதன் பொருள் **பின்னால்** என்பதாகும். உதாரணமாக, ஒரு கட்டடத்திற்குப் **பின்னால்**. அதாவது, அதனை ஒட்டி இன்னொரு கட்டடம் இருக்கிறது.

**2. ழர்ஃபே மகானீ (இடத்தைப் பொருத்தது)** என்பதிலேயே இன்னொரு நிலை. அதில் **'பஃத்'** என்ற சொல் உருவகமாக, '**எதிராக**' என்ற பொருளில் பயன்படுகிறது. அதாவது, ஒன்றை விட்டு விட்டு - அதாவது அதையும் கடந்து சென்று அதற்குப் பின்னால் உள்ள இன்னொன்றை மேற்கொள்வது. உதாரணமாக, திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

'ஃபபி அய்யி ஹதீஸின் **பஃதல்லாஹி** வஆயாதிஹீ யுஃமினூன்'. அதாவது. அல்லாஹ் மற்றும் அவனது வசனங்களுக்குப் பிறகு (அதாவது அவற்றை விட்டு விட்டு அல்லது அவற்றிற்கு எதிராக) மக்கள் எந்த ஹதீஸை ஏற்றுக் கொள்வார்கள் ? (திருக்குர்ஆன் 45:7காண்க).

**3.** காலத்தைப் பொருத்த அளவில் 'பஃத்' என்ற சொல் பயன்படுத்தப்படுதல். அதனை அரபி மொழியில் **ழர்ஃபே ஸமானீ** எனக் கூறுகின்றனர். உதாரணமாக, ஒன்று கடந்து விட்ட பிறகு - அதன் காலம் முடிந்து விட்ட பிறகு இன்னொன்று வருவது.

இந்த மூன்று பொருள்களும், அரபி அகராதி மற்றும் அரபி மொழி வழக்கின்படி உறுதியான முறையில் நிரூபணமாகின்றன. மேலும் எந்த நபரும் இவற்றை மறுக்க தைரியம் கொள்ள முடியாது.

எனவே இந்த இடத்தில் முதல் பொருளின் பக்கம் செல்ல வேண்டிய தேவையே நமக்கு இல்லை. ஏனெனில், தற்போதைய வாதத்தைப் பொருத்தவரை, இந்தப் பொருள் ஒரு குறிப்பிட்ட

ஹதீஸுடன் தொடர்புடையதாகும். அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தபூக் போருக்குச் செல்லும்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், நீர் இந்தப் பயணத்தில் எனக்கு ஹாரூனைப் போன்றவராக இருக்கின்றீர். (அதாவது ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது ஒரு பயணத்தில் தமக்குப் பிறகு ஹாரூன் நபியை விட்டுச் சென்றதைப் போன்று நான் உம்மை இந்தப் பயணத்தில் எனக்குப் பின்னால் விட்டுச் செல்கின்றேன்.) **கைர அன்னஹூ லாநபிய்ய பஃதீ –** ஆனால் வித்தியாசம் என்னவென்றால், மூஸா (அலை) அவர்களின் பயணத்தில் அவர்களுக்குப் பிறகு ஒரு நபி பிரதிநிதியாக இருந்தார். ஆனால் இந்தப் பயணத்தில் நான் எனக்குப் பிறகு எவரையும் நபியாக விட்டுச் செல்லவில்லை எனக் கூறினார்கள்.(சஹீஹ் முஸ்லிம். ஃபஸாயிலுஸ் ஸஹாபா. ஹதீஸ் எண்: 4419 காண்க).

இந்த ஹதீஸில் **'பஃத்' (பிறகு)** என்ற சொல் மிகத் தெளிவான முறையில் **ழர்ஃபே மகானீ (இடத்தைப் பொருத்தது)** என்ற அளவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கருத்தும் மிகத் தெளிவானதாகும். அதாவது, இந்த இடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு மதீனாவில் தங்கியிருந்த ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை நபி அல்லாதவர் என்பது மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஹதீஸ் ஒரு தனிப்பட்ட, குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகும். மேலும் இதை தவிர '**லா நபிய்ய பஃதீ**' என்ற சொற்கள் மற்றும் சில ஹதீஸுகளில் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக அல்லாமலும் வந்துள்ளன. எனவே இந்தக் குறிப்பிட்ட'**பஃத்**'என்ற சொல் ஹதீஸின் வாதத்திற்கு செல்ல வேண்டிய தேவையோ, அதனை தஞ்சமாக எடுத்து வைக்க வேண்டிய தேவையோ எனக்கு இல்லை. இந்த குறிப்பிட்ட சம்பவத்தைத் தவிரவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சில இடங்களில் '**லாநபிய்ய பஃதீ**' என்ற சொற்களை அல்லது இதற்கு ஒப்பான சொற்களைக் கூறியிருக்கிறார்கள். மேலும் நமது அசல் வாதம், அந்த மாதிரியான பொதுவான சந்தர்ப்பங்களைப் பற்றியதாகும்; ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி வருகின்ற இந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைப் பற்றி அல்ல.

'**பஃத்**'என்ற சொல்லின் **இரண்டாவது பொருள்**, ஒரு விஷயத்தை விட்டு விட்டு இன்னொரு விஷயத்தை மேற்கொள்ளுதல். உதாரணமாக

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: 'ஃபபி அய்யி ஹதீஸின்ம் ப ஃதல்லாஹி வஆயாதிஹீ யுஃமினூன்'. அதாவது மக்கள் அல்லாஹ் மற்றும் அவனது ஆயத்துகளை விட்டு விட்டு எந்த ஹதீஸை ஏற்றுக் கொள்வார்கள்?

இந்த அர்த்தங்களின்படியும் 'லா நபிய்ய பஃதீ' என்ற ஹதீஸின் கருத்து முற்றிலும் தெளிவாகிறது. ஏனெனில் இந்த வகையில் இந்த ஹதீஸின் பொருள், இனி என்னுடைய ஷரீஅத்தை விட்டு விட்டு, அதனை ரத்து செய்து விட்டு வேறொரு ஷரீஅத்தை கொண்டு வரும் எந்தவொரு நபியும் வர மாட்டார். மாறாக, எவர் வந்தாலும் அவர் என்னைப் பின்பற்றியவராகவும், எனது ஷரீஅத்திற்கு தொண்டாற்றுபவராகவும் வருவார். மேலும் அவர் எனது கொடியின் கீழ் இருப்பார்.

ழர்ஃபே ஸமானீ என்பதுடன் தொடர்புடைய 'பஃத்' என்பதற்கான மூன்றாவது பொருள், ஒன்று கழிந்து விட்ட பிறகு - அதற்கான காலம் முடிந்து விட்ட பிறகு இன்னொன்று தோன்றுதல் என்பதாகும். அதாவது காலத்தைப் பொருத்த அளவில் இரண்டும் முன்னால், பின்னால் இருப்பது. இந்த வகையில் 'லா நபிய்ய பஃதீ' என்பதன் பொருள், எனது காலம் கழிந்து விட்ட பிறகு வேறு எந்த நபியும் இல்லை என்பதாகும். இப்போது பாருங்கள். இந்தப் பொருளும் எவ்வளவு தெளிவானதும் துல்லியமானதுமாக இருக்கின்றது!

ஏனெனில் இதன் கருத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னாரின் காலத்தை முடித்து விட்டு புதிய காலகட்டத்தைத் துவக்கி விடுகின்ற எந்தவொரு நபியும் வர மாட்டார் என்பதாகும். மேலும் இந்த வகையிலும் உறுதியாக எந்தவொரு ஆட்சேபணையும் தோன்றுவதில்லை. ஏனெனில் நமது எஜமானர் (ஸல்) அவர்கள் ஒரு நிரந்தரமான ஷரீஅத்துடன் தோன்றினார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தி இருப்பதைப் போன்று அன்னார் (ஸல்) அவர்களின் காலம் மறுமை வரை பரவிக் கிடக்கின்றது. ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) அவர்கள் தமது புனித விரல்களை ஒன்றிணைத்து,

بُعِثْتُ اَنَا وَالسَّاعَةُ كَهَاتَيْن

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

*புயிஸ்த்து அன வஸ்ஸாஅத்து கஹாத்தைன்* எனக் கூறினார்கள். அதாவது, எனது கையின் இந்த இரு விரல்களும் இணைந்திருப்பதைப் போன்று நானும், மறுமையும் இணைந்திருக்கிறோம். அவற்றுக்கிடையில் எந்தவோர் இடைவெளியும் இல்லை. ***(புகாரி. கிதாபுத் தஃப்ஸீர் .சூரா நாஸிஆத்)***

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் தொடர் மறுமை வரை பரவி இருக்கின்றது

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலம் மறுமை வரை பரவி இருக்கின்றதென்றால், கண்டிப்பாக **ழர்ஃபே ஸமானீ** (காலத்தைப் பொருத்தவரை கடைசி) என்ற நிலையில் **'லா நபிய்ய பஃதீ'** என்பதற்கு, எனது காலத்தை முடித்து விட்டு ஒரு புதிய காலகட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டக் கூடிய அப்படிப்பட்ட எந்தவொரு நபியும் எனக்குப் பிறகு வர மாட்டார்; ஏனெனில் எனது காலம் மறுமை வரை இருக்கிறது என்றே பொருள் கொள்ளப்படும். ஆனால் நமது எதிரிகள் தமது குறைபாடுள்ள பார்வையினால் **'பஃதீ' (எனக்குப் பிறகு)** என்ற கருத்தை தேவையில்லாமல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பௌதீக வாழ்க்கையோடு எல்லைக்குட்பட்டதாக்குகின்றனர் என்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் கூறியதன் நோக்கம், எனது நபித்துவத்தின் காலம் மறுமை வரை பரந்திருக்கிறது. மேலும் அதற்குப் பிறகு அதாவது அந்த உறவைத் துண்டித்து இந்த காலகட்டத்தை முடித்து விட்டு வேறு எந்த நபியும் வர முடியாது என்பதேயாகும். மேலும் இதுவே அன்னாரின் உயரிய மகத்துவத்திற்குப் பொருத்தமானதுமாகும்.

எனவே அன்பர்களே! சகோதரர்களே! சிந்தியுங்கள். பிறகு என்பதன் கருத்து, அன்னார் (ஸல்) அவர்களின் நபித்துவ காலகட்டத்தை முடித்து விட்டு - அன்னாரின் ஷரீஅத்தை ரத்து செய்து விட்டு வேறொரு நபி தோன்றுவது என்பதைத் தவிர வேறெதுவுமில்லை. ஆனால் அவ்வாறு ஒருபோதும் நடக்க முடியாது. ஏனெனில் அன்னார் (ஸல்) அவர்களின் நபித்துவம் மறுமை வரை தொடரும். அது ஒருபோதும் முடிவுறாது. **'லாநபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸில் கூறப்பட்ட நுட்பமான, ஞானம் நிறைந்த

கருத்து இதுதான். ஆனால் வெளிப்படையைப் பார்க்கின்ற, குறை மதியுள்ள இந்தக் காலத்தைச் சேர்ந்த மக்கள் இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பௌதீக வாழ்க்கையுடன் எல்லைக்குட்பட்டதாக்கி அதனை அதன் உயரிய அந்தஸ்தை விட்டும் கீழே இறக்கி விட்டது மிக வருத்தத்திற்குரியதாகும்.

சுருக்கமாக, நாங்கள் **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்ற ஹதீஸின் மீது முழு மனதுடன் ஈமான் கொள்கின்றோம். மேலும் நமது எஜமானர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உண்மையில் எந்த நபியும் இல்லை என நாங்கள் பகிரங்கமாக அறிவிக்கின்றோம். ஆனால் அன்னார் (ஸல்) அவர்களின் நீரூற்றுகளின் நீர் வரண்டு விட்டது என்பது ஒருபோதும் பொருளன்று - நவூது பில்லாஹ். மாறாக, அன்னாரின் நபித்துவத்தின் போர்வை மறுமை வரை பரவிக் கிடக்கின்றது. மேலும் இனி எவர் வந்தாலும் அன்னாரின் நபித்துவத்தின் போர்வையால் போர்த்தப் பட்டவாறு வருவார். ஆனால் அவரது நுபுவ்வத் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்திற்குள் இருக்கும்; அவர்களுக்குப் பிறகோ வெளியிலோ இருக்காது. ஏனெனில் இனி எந்த தாயின் மகனுக்கும் - அவர் ஈஸாவாக இருந்தாலும் அல்லது வேறு எவராக இருந்தாலும் - அவர் மறுமைக்கு முன்னர் அன்னாரின் நுபுவ்வத்தின் காலகட்டத்தை உடைத்து விட்டு, அன்னாரின் நபித்துவ முத்திரையை உடைத்து விட்டு தூதுத்துவ அந்தஸ்தில் நிலை பெற முடியாது.

இவர்தான் நமது எஜமானரும், முந்தையவர்களுக்கும் பிந்தையவர்களுக்கும் தலைவரும், ஆதமின் மக்களின் எஜமானருமாவார்கள். இவர்களுக்கு முன் தோன்றிய நபிமார்கள் இந்த நபி (ஸல்) அவர்களுக்கான ஆயத்தம் செய்வதற்காகவே வந்தனர். இது பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே கூறியிருக்கிறார்கள்:

كُنْتُ نَبِيًّا وَّ اٰدَمُ بَيْنَ الْمَاءِ وَالطِّيْنِ

**''குன்த்து நபிய்யன் வஆதமு பைனல் மாயி வத்தீன்.''**

பொருள்: ஆதம் (அலை) அவர்கள் தண்ணீருக்கும் களி மண்ணிற்கும் நடுவில் இருக்கும் போதே நான் நபியாக இருக்கின்றேன். ***(அல் ஜாமிவுத் திர்மிதியின் விளக்கவுரையாகிய துஹ்ஃபத்துல் அஹ்வஸீ. கிதாபுல் மனாகிப் அன் ரஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். ஹதீஸ் எண்: 7345 காண்க).***

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

மேலும் எவர் இதற்குப் பிறகு வருவாரோ அவர் இவருக்குத் தொண்டராகவும், நிழலாகவும் வருவார். மேலும் இதுதான் காத்தமுன் நபிய்யீன் என்ற வசனத்திற்கும் லா நபிய்ய ப ஃதீ என்ற ஹதீஸுக்கும் உண்மையான தஃப்ஸீர் ஆகும். ஆனால் வெளிப்படையைப் பார்க்கும் இந்தக் காலத்து மக்கள் இந்த உயரிய உண்மைகளை விட்டு விட்டு மேலோட்டமான விஷயங்களில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

சுருக்கமாக, **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸ் சந்தேகமின்றி சரியானதும், உண்மையானதுமாகும். மேலும் நாம் அதில் நம்பிக்கை கொள்கின்றோம். ஆனால் அதன் பொருள் இது மட்டும்தான்:

1. எனது ஷரீஅத்தை விட்டு விட்டு, அதை ரத்து செய்து விட்டு வேறு ஒரு ஷரீஅத்தை நிலை நாட்டும் எந்தவொரு நபியும் வர மாட்டார். ஏனெனில் எனது ஷரீஅத் நிரந்தரமானதாகும். அதற்குப் பிறகு வேறு எந்த நபியுமில்லை.

2. எனது நுபுவ்வத்தின் காலகட்டத்தை துண்டித்து விட்டு வேறொரு புதிய காலகட்டத்தை ஆரம்பிக்கக் கூடிய எந்தவொரு நபியும் வர முடியாது. மாறாக, எவர் வந்தாலும் எனது கிளையாக மாறியே வருவார். மேலும் எனது நுபுவ்வத்தின் ஒளியிலிருந்தே அருளைப் பெற்றவராவார். எனவே அவருடைய நுபுவ்வத் எனது நுபுவ்வத்திற்கு உட்பட்டதாக இருக்குமே தவிர அதற்குப் பிறகோ அல்லது வெளியிலோ இருக்காது.

## உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்களின் தீர்ப்புக்குரிய வழிகாட்டல்

இந்த நுட்பமான விளக்கத்திற்குத்தான் முஹம்மதிய்ய சமுதாயத்தின் மாபெரும் சாலிஹீன், மார்க்க அறிஞர்கள் எல்லாக் காலங்களிலும் ஆதரவளித்து வந்துள்ளனர். எதுவரையென்றால், நமது எஜமானர் நபி (ஸல்) அவர்களின் நேசத்திற்குரிய மனைவி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் இவ்வாறு கூறுகின்றார்கள்:

قُوْلُوْا اِنَّهٗ خَاتَمُ الْاَنْبِيَآءِ وَلَا تَقُوْلُوْا لَا نَبِيَّ بَعْدَهٗ

**''கூலூ இன்னஹூ காத்தமுல் அன்பியாயி வலா தகூலூ லாநபிய்ய பஃதஹூ.''** *(தக்மிலா மஜ்மவுல் பிஹார் பக்கம் 85, துர்ரே மன்சூர் தொகுதி 5)*

அதாவது, ''நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை **காத்தமுல் அன்பியா என்று கூறுங்கள்.** ஆனால் **அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் இல்லை என்று நீங்கள் கூறாதீர்கள்.''**

அல்லாஹ்! அல்லாஹ்!! பரிவுகொண்ட நமது தாயார் (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் சிந்தனை எங்கு சென்றிருக்கிறது! அதன் அருகில் கூட இன்றைய மவ்லவிமார்கள் செல்ல முடியாது. எவ்வளவு நுட்பமான கோணத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்!! லா நபிய்ய பஅதீ (எனக்குப் பிறகு நபி இல்லை) என்பதை வைத்து, அவசர புத்திக்காரர்களுக்கு தவறு ஏற்படலாம்; இதன் ஆழம் வரை சென்றடைய முடியாததனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் வாசல் முற்றிலும் அடைக்கப்பட்டு விட்டது என்று கருதி விடலாம் என்பதைப் புரிந்து, முஸ்லிம்களே! இந்தத் தடுமாற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். **'லாநபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸுக்குப் பதிலாக **காத்தமுன்னபிய்யீன்** என்ற வசனத்தின் பக்கம் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கூறி இருக்கிறார்கள். இதில் எல்லா உண்மைகளின் சுருக்கம் வந்து விட்டது.

**'லாநபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸுக்கு இரண்டு பொருள்களே சாத்தியமானதாக இருக்க முடியும் என்பது வெளிப்படை.

**1. ஒன்று,** நமது மாற்று கருத்து கொண்டவர்கள் கொடுக்கின்ற பொருள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எல்லா விதமான நுபுவ்வத்தின் வாசலும் முற்றிலும் அடைபட்டு விட்டது என்பதாகும்.

**2. இரண்டாவது,** நாம் கொடுக்கின்ற பொருள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னாரின் நுபுவ்வத்தின் கால கட்டத்தை ரத்து செய்யக் கூடிய நபி எவரும் வர முடியாது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு அவர்களின் மாணவராக அவர்களின் உண்மைப்படுத்தும் முத்திரையுடன் நிழலான,

உம்மத்தைச் சேர்ந்த நபி வர முடியும். மேலும் இது காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ள அதே கருத்துதான். இதைப் பற்றி நாம் மேலே விவாதித்து வந்துள்ளோம்.

இப்போது பாருங்கள்! நமது அன்பிற்குரிய தாயார் ஹஸ்ரத் ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்கள் எவ்வளவு தெளிவாகவும், நுட்பமாகவும் நாம் கொடுக்கும் பொருளை உண்மைப்படுத்தியவாறு கூறுகிறார்கள்!! அதாவது மக்களே! **'லாநபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸின் சொற்களினால் நீங்கள் தவறான கருத்தின் பக்கம் சென்று விடலாம். எனவே அந்த இடத்தில் காத்தமுன் நபிய்யீன் என்ற கருத்தைக் கவனத்தில் கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் தடுமாற்றத்திலிருந்து தப்பிக்க முடியும். மேலும் **'காத்தமுன்னபிய்யீன்'** என்ற வசனத்தின் பொருள் என்ன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களுக்கு முத்திரையாக இருக்கிறார்கள் என்பதே அதன் பொருளாகும். அன்னாருக்குப் பிறகு எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியோ அல்லது சுதந்திரமான நபியோ வர முடியாது. ஏனெனில் அதனால் கத்மே நுபுவ்வத்தின் முத்திரை உடைகிறது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளியினால் ஒளியைப் பெறுகின்ற நிழலான, உம்மத்தீ நபி அன்னார் (ஸல்) அவர்களின் அருளிலிருந்து அருளைப் பெற்றவாறு வர முடியும். ஏனெனில் அவருடைய நுபுவ்வத் அன்னார் (ஸல்) அவர்களின் ஷரீஅத்திற்குக் கட்டுப் பட்டதாகவும், அன்னார் (ஸல்) அவர்களின் பகுதியாகவுமே இருக்கிறது.

அந்த கண்ணியத்திற்குரிய பெண்மணி நம்பிக்கை கொண்டவர்களின் பரிவுள்ள தாய் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சிந்தனை எவ்வளவு ஆழமாக சென்றுள்ளது! இதை நினைத்து நான் மிகவும் ஆச்சரியமடைகின்றேன். எனது வியப்பிற்கு எல்லையே இல்லை!! வரக் கூடிய அபாயத்தை 1400 ஆண்டுகளுக்கு முன்பே அனுமானித்து கூறுகிறார்கள்: பாருங்கள். **'லாநபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸுக்கு **'காத்தமுன்னபிய்யீன்'** என்ற வசனத்திற்கு மாற்றமான பொருளைக் கொடுக்காதீர்கள். மாறாக, இந்த வசனத்திற்குப் பொருத்தமான பொருளைக் கொடுங்கள். மேலும் இவ்வாறு **'காத்தமுன்னபிய்யீன்'** என்ற வசனத்திற்கு விளக்கமும் அத்துடன் கொடுத்து விடுகின்றார்கள். அதாவது இந்த வசனத்தில்

நுபுவ்வத் முடிந்து விடுவது பற்றிய குறிப்பு இல்லை. மாறாக, அனைத்து உலகங்களின் தலைவர் (ஸல்) அவர்களின் உண்மைப்படுத்தும் முத்திரையுடன் அன்னாரின் மூலமாகஇறை அருள்கள் தொடர்வதற்கான குறிப்பைக் கூறியிருக்கிறார்கள். *அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ் வஅலா ஆலி முஹம்மதின்வ் வஅலா அஸ்வாஜி முஹம்மதின்வ் வபாரிக் வஸல்லிம்.*

## ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ அவர்களின் சான்று

எனது இந்தக் கட்டுரை எனது அனுமானத்தின்படி மிகவும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே இப்போது நான் இந்த ஹதீஸ் பற்றிய வாதம் தொடர்பாக இன்னொரு சான்றை எடுத்து வைத்து மற்ற ஹதீஸுகளை எடுக்கின்றேன்.

**ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ (ரஹ்) அவர்கள் (இறப்பு ஹிஜ்ரி 976) கூறுகிறார்கள்:**

قولهٗ صلّی اللہ علیہ وسلّم فلا نبیّ بعدی ولا رسول المُراد بہٖ لا

مشرّع بعدی ( الیواقیت و الجواہر جلد 2 ص 27)

**அதாவது ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்குப் பிறகு எந்த நபியும் ரஸூலும் இல்லை எனக் கூறியதன் கருத்து எனக்குப் பிறகு எந்த புதிய ஷரீஅத்தைக் கொண்டவரும் ரஸூலும் வர முடியாது என்பதேயாகும்.''**

ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ அவர்களின் இந்த விளக்கம் முற்றிலும் தெளிவானதும், விளக்கமானதுமாகும். இதில் எந்தவோர் அறிவுடையவரும் ஒரு நொடிப்பொழுது கூட சந்தேகம் கொள்ள முடியாது. இந்த இடத்தில் ஏதாவதொரு வரட்டு வாதம் செய்பவர், லவ் **ஆஷ இப்ராஹீம லகான ஸித்தீகன் நபிய்யா (இப்ராஹீம் உயிருடன் இருந்தால் அவர் கண்டிப்பாக நபியாக இருந்திருப்பார்)** என்று நாம் முன்னர் எடுத்து வைத்த சான்றைப் போன்று நுபுவ்வத் பற்றி ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ அவர்களின் சொந்த கொள்கை இதுவாகும் அல்லது அதுவாகும் என்ற வாதத்தின் பக்கம் நம்மை இழுக்க நினைப்பாரென்றால், ஒரு நபி வருவதைப் பற்றி அல்லது வராததைப் பற்றி இமாம் ஷஃரானீ அவர்களின் கொள்கை என்ன என்ற வாதத்தைப் பற்றி நமக்கு இங்கு

எந்த நோக்கமும் இல்லை. மாறாக, இமாம் அவர்களின் பார்வையில்‘**லாநபிய்ய பஃதீ**’ **(எனக்குப் பிறகு நபியில்லை)** என்பதற்கு என்ன விளக்கம் இருந்தது என்ற கேள்வி பற்றி மட்டுமே நமக்கு நோக்கமாகும். மேலும் அந்த விளக்கம் நிச்சயமாக **லா முஷர்ரிஅ பஃதஹூ** என்பதேயாகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்தவொரு புதிய ஷரீஅத்தைக் கொண்ட நபியும் வர முடியாது என்பதாகும். எனவே இறைவனுக்காக இறை அடியார்களை ஏமாற்றும் பழக்கத்தை கையாளாதீர்கள். ஏனெனில் இந்த இடத்தில் நமது வாதம் இமாம் ஷஃரானீ அவர்களின் மற்ற கொள்கைகளைப் பற்றியதல்ல. மாறாக, அவர்களின் பார்வையில், ‘**லாநபிய்ய பஃதீ**’ **(எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸுக்கு என்ன விளக்கம் என்ற எல்லைக்குட்பட்ட கேள்வி தொடர்பானதாகும். மேலும் இந்த விஷயம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவர்களின் இந்த சான்றின் மூலமாக சூரியனை விட மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியும் வர முடியாது என்பது மட்டுமே அவர்களின் விளக்கமாக இருந்தது. அதுவே அதன் கருத்தாகும்.

## ஒவ்வொரு நபிக்கும் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருவது அவசியமில்லை

மற்றபடி, ஒரு வாதத்திற்காக,(இதனை நான் ஒரு வாதத்திற்காகக் கூறுகிறேன்.) புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருபவரே நபியாவார் என்பது இமாம் ஷஃரானீ அவர்களின் சொந்த கருத்தாக இருந்தது என்றால், அந்தக் கருத்து எவ்விதத்திலும் சரியானதன்று. ஏனெனில், திருக்குர்ஆன் தெளிவான சொற்களில் இவ்வாறு கூறுகிறது:

وَلَقَدْ آتَيْنَا مُوسَى الْكِتَابَ وَقَفَّيْنَا مِنْ بَعْدِهِ بِالرُّسُلِ

إِنَّا أَنْزَلْنَا التَّوْرَاةَ فِيهَا هُدًى وَنُورٌ يَحْكُمُ بِهَا النَّبِيُّونَ الَّذِينَ أَسْلَمُوا لِلَّذِينَ هَادُوا

“நாம் மூஸாவுக்கு வேதத்தை வழங்கினோம். பின்னர் மூஸாவுக்குப் பிறகு அவரைப் பின்தொடர்ந்து தொடர்ச்சியாக இறைதூதர்களை அனுப்பினோம்........... மேலும் நாம் மூஸாவுக்கு தவ்ராத்தை இறக்கி இருந்தோம். அதில் இஸ்ராயீல் மக்களுக்கு நேர்வழியும் ஒளியும் இருந்தது. மேலும் அவருடைய ஷரீஅத்தை ஒப்புக்கொண்டு அதனுடைய நேர்வழிக்கு ஏற்ப மூஸாவுக்குப் பிறகு வரக் கூடிய நபி யூத சமுதாயத்திற்கு மார்க்க விவகாரங்களுக்கு தீர்ப்பு வழங்கி வந்தனர்.’’ ***(காண்க: திருக்குர்ஆன் 2:88 & 5:45)***

இது மிகவும் தெளிவான, விளக்கமான வசனமாகும். இதன் கருத்து பற்றி எந்தவொரு சந்தேகத்திற்கும் மூஸாவுக்குப் பிறகு அவரைப் பின்தொடர்ந்து அடுத்து அடுத்து இறைதூதர்களை அனுப்பினோம்........... மேலும் நாம் மூஸாவுக்கு தவ்ராத்தை இறக்கி இருந்தோம். அதில் இஸ்ராயீல் மக்களுக்கு நேர்வழியும் ஒளியும் இருந்தது. மேலும் அவருடைய ஷரீஅத்தை ஒப்புக்கொண்டு அவருடைய நேர்வழிக்கு ஏற்ப மூஸாவுக்குப் பிறகு வரக் கூடிய நபி யூத சமுதாயத்திற்கு மார்க்க விவகாரங்களுக்கு தீர்ப்பு வழங்கி வந்தனர்.’’ ***(காண்க: திருக்குர்ஆன் 2:88 & 5:45)***

இது மிகவும் தெளிவான, விளக்கமான வசனமாகும். இதன் கருத்து பற்றி எந்தவொரு சந்தேகத்திற்கும் இடமில்லை. மாறாக, திருக்குர்ஆனின் மற்ற பல வசனங்களும் இதனை உண்மைப்படுத்துகின்றன. மேலும் ஹதீஸிலிருந்தும் இதற்கான சான்று கிடைக்கிறது. உதாரணமாக, ஹதீஸில் வருகிறது. உலகத்தில் 1,24,000 நபிமார்கள் வந்திருக்கின்றனர். அவர்களில் ஷரீஅத்தைக் கொண்டு வந்த நபிமார்கள் 315 பேர்கள் மட்டுமே ஆவார்கள். ***(முஸ்னது அஹ்மது, மிஷ்காத் பாபு பதயில் கல்க் வ ஸிக்ரில் அன்பியா மற்றும் மிஷ்காத்தின் விளக்கவுரையான மிர்காத் தொகுதி 5 பக்கம் 352)***

மேலும் சம்பவங்களின் சாட்சிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. ஏனெனில் உலக வரலாற்றில் ஷரீஅத் வழங்கப்படாத நபிமார்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். அவர்கள் முந்தைய ஷரீஅத்துக்கு தொண்டு

செய்வதற்காகவும், மக்களின் நம்பிக்கை, செயல் ஆகியவற்றை சீர்திருத்துவதற்காகவும் நியமிக்கப்பட்டார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் தாவூது, ஹஸ்ரத் சுலைமான், ஹஸ்ரத் ஸகரிய்யா, ஹஸ்ரத் யஹ்யா (அலைஹிமுஸ் ஸலாம்) ஆகியோர் தோன்றினார்கள். மேலும் அறிவுப்பூர்வமாகவும் இதுவே சரியானதாகவும் தெரிகிறது.

ஏனெனில் நபிமார்களின் தொடரை தொடர்வதில் எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். அவர்கள் முந்தைய ஷரீஅத்துக்கு தொண்டு செய்வதற்காகவும், மக்களின் நம்பிக்கை, செயல் ஆகியவற்றை சீர்திருத்துவதற்காகவும் நியமிக்கப்பட்டார்கள். உதாரணமாக், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் தாவூது, ஹஸ்ரத் சுலைமான், ஹஸ்ரத் ஸகரிய்யா, ஹஸ்ரத் யஹ்யா (அலைஹிமுஸ் ஸலாம்) ஆகியோர் தோன்றினார்கள். மேலும் அறிவுப்பூர்வமாகவும் இதுவே சரியானதாகவும் தெரிகிறது.

ஏனெனில் நபிமார்களின் தொடரை தொடர்வதில் இறைவனின் உண்மையான குறிக்கோள் மக்களின் சீர்திருத்தமாகும் - அந்த சீர்திருத்தம் புதிய ஷரீஅத்தை இறக்குவதன் மூலமாக இருந்தாலும் சரி; அல்லது முந்தைய ஷரீஅத்தை புதுப்பிப்பதன் மூலமாக இருந்தாலும் சரியே. எனவே திருக்குர்ஆன், ஹதீஸ், வரலாறு மற்றும் அறிவு ஆகிய எல்லாவற்றின் ஒருமித்த சாட்சி முத்திரை பதித்திருக்கின்ற இந்த உறுதியான தீர்மானம் இருக்கும்போது, ஒவ்வொரு நபிக்கும் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருவது அவசியம் என்ற ஒரு கொள்கை இமாம் ஷஃரானி அவர்களுக்கோ அல்லது வேறு எந்தவொரு பொறுப்பான சான்றோருக்கோ இருக்க முடியும் என ஒருபோதும் நினைத்துப் பார்க்க முடியாது. மாறாக, நாம் மேலே விளக்கி வந்திருக்கின்ற நமது மரபுச் சொல்லின்படி, (*வலி குல்லின் அன்ய் யஸ்தலிஹ* - ஒவ்வொருவருக்கும் ஒரு மரபுச் சொல் உண்டு) உண்மையில் உண்மையான நுபுவ்வத் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தேயாகும் என்பதே இமாம் ஷஃரானீ அவர்களின் கொள்கையாக இருந்திருக்கும் என்பது அதிக நம்பிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஷரீஅத்திலிருந்தே ஒவ்வொரு நுபுவ்வத்தின் தொடர் ஆரம்பமாகிறது. மேலும் நுபுவ்வத்தின் மற்ற வகைகள் அதற்குப் பின்னால் வருகின்றன என்பதே அல்லாமல் நுபுவ்வத்தின் பிற வகைகள் என்பதே இல்லை என்பதன்று.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

சுருக்கமாக, '**லாநபிய்ய பஃதீ**' (**எனக்குப் பிறகு நபியில்லை**) என்ற ஹதீஸ் முற்றிலும் உண்மையாகும். மேலும் நாம் அதனை திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவத்தின் தொடர் முற்றிலும் அடைபட்டு விட்டது என்று ஒருபோதும் பொருள் அன்று. மாறாக, இதன் கருத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத் மறுமை வரை பரவிக் கிடக்கின்றது. எனவே அன்னாருக்குப் பிறகு அன்னாரின் ஷரீஅத்தை ரத்து செய்யக் கூடிய அல்லதுஅன்னாரின் உம்மத்திலிருந்து அல்லாமல் எந்தவொரு நபியும் வர முடியாது என்பதாகும். மாறாக, சுவர்க்கத்துப் பெண்மணி உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கொள்கைப்படி '**காத்தமுன்னபிய்யீன்**' என்ற வசனத்தின் மூலமாக திறக்கப்பட்ட வாசல் வழியாக வருபவர் மட்டுமே ( நபியாக) வரமுடியும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முத்திரையைப் பெற்று நுபுவ்வத்தின் அந்தஸ்தை அடையும் நிழலான, உம்மத்தீ நபி.

إِنِّيْ آخِرُ الْأَنْبِيَاءِ وَإِنَّ مَسْجِدِيْ آخِرُ الْمَسَاجِدِ

## இன்னீ ஆஹிருல் அன்பியா (நான் கடைசி நபியாக இருக்கிறேன்) என்ற ஹதீஸின் விளக்கம்

நமது மாற்று கருத்து கொண்ட சகோதரர்களிடமிருந்து எடுத்து வைக்கப்படுகின்ற இன்னொரு ஹதீஸ், '**இன்னீ ஆகிருல் அன்பியா (நான் கடைசி நபியாக இருக்கிறேன்)**' என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றைக் கொண்டதாகும். இந்த ஹதீஸை எடுத்து வைத்து, பாருங்கள்! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே நான் கடைசி நபியாவேன் எனக் கூறி விட்டார்கள். அன்னாரின் தீர்ப்பிற்குப் பிறகு எந்த கேள்விக்காவது இடமிருக்கிறதா? எனக் கூறப்படுகின்றது. இதற்குரிய பதிலாக நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவ காலம் கடந்து விட்ட பிறகு எந்தவொரு நபியும் வர முடியாது என்று நாங்கள் நம்புவதைப் போன்றே உண்மையில் அன்னார் (ஸல்)

அவர்கள்தான் கடைசி நபியாவார்கள் என்பதையும் திறந்த மனதுடன் ஈமான் கொள்கிறோம். மேலும் நாங்கள் ஒருபோதும் இதை மறுக்கவில்லை. ஆனால் நமது மாற்று கருத்து கொண்ட சகோதரர்கள் நமது கொள்கையைப் புரிந்து கொள்ளாமலேயே - இன்னும் கூறுவதென்றால் சில நேரங்களில் தெரிந்து கொண்டே நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கடைசி நபி என ஏற்றுக் கொள்வதில்லை என குற்றம்சாட்டிக் கொண்டே செல்கிறார்கள் என்பதே மிக வருத்தத்திற்குரியதாகும். உண்மையில் எந்த பொருளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்மைத்தாமே கடைசி நபி என்று குறிப்பிட்டார்களோ அதே பொருளில் நாமும் அன்னார் (ஸல்) அவர்களை சந்தேகமின்றி கடைசி நபி என உறுதி கொள்கிறோம். *வலஃனத்துல்லாஹி அலா மன் கஸிப ( பொய் கூறுபவர் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக.)*

## மூன்று விதமான நபி

நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரை எப்படிப்பட்ட நபியாக ஏற்றுக்கொள்கிறோம் என்பதைப் பற்றி நிதானமாக ஒருபோதும் சிந்திக்கப்படவில்லை என்ற காரணத்தினாலேயே உண்மையில் இந்த எல்லா ஏமாற்றமும் நடந்திருக்கிறது. நபி என்ற சொல்லை மட்டும் கேட்டு விட்டு, பாருங்கள்; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத் (நபித்துவ முத்திரை) உடைந்து விட்டது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இடத்தில் இன்னொரு நபரை கடைசி நபி எனக் கூறப்பட்டு விட்டது என கூச்சலிடத் தொடங்கி விட்டனர். அந்தோ! நமது வழிதவறிய நண்பர்கள் சில மணித் துளிகள் சகிப்புத் தன்மையையும், பொறுமையும் கையாண்டவாறு, தங்களின் உள்ளத்தை தூய்மைப்படுத்தி, நுபுவ்வத் என்பது எதற்குப் பெயர்? மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த நதியை அடைத்தார்கள்? எந்த நதியைத் திறந்தார்கள்? என்பதைப் பற்றி இவர்கள் சிந்தித்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!! நமது வாசகர்கள் மறந்து விட்டால் திருக்குர்ஆன், ஹதீஸ், வரலாறு ஆகியவற்றிலிருந்து நிரூபணமாகின்றது போன்று நுபுவ்வத் மூன்று வகைப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை எடுத்துரைக்கின்றேன்.

**ஒன்று, ஷரீஅத்துடைய நுபுவ்வத்.** அதனுடன்ஏதாவதொரு ஷரீஅத் இறங்குகிறது. மேலும் நுபுவ்வத்திலிருந்து ஒரு புதிய காலகட்டம்

ஆரம்பமாகி விடுகிறது. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நுபுவ்வத். அவர்களுக்கு தவ்ராத் என்ற ஷரீஅத் இறங்கியது. அல்லது நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் முழுமையான, நிறைவான நுபுவ்வத். அவர்களுக்கு திருக்குர்ஆன் எனும் நிரந்தரமான ஷரீஅத் இறங்கியது.

இந்த விதமான நுபுவ்வத் ஷரீஅத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது; சுதந்திரமானதாகவும் இருக்கிறது. ஷரீஅத் என்பது அவருடன் புதிய ஷரீஅத் இறங்குகிறது என்ற வகையில். மேலும் சுதந்திரமானது என்பது அது முந்தைய நபியைப் பின்பற்றுதல் இல்லாமல் நேரடியாக வழங்கப்படுகிறது. மேலும் இந்த வகையான நுபுவ்வத் சில நேரங்களில் **உண்மையான நுபுவ்வத்** என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

**இரண்டாவது, ஷரீஅத் அல்லாத சுதந்திரமான நுபுவ்வத்.** இதனுடன் எந்த புதிய ஷரீஅத்தும் இறங்குவதில்லை. ஆனால் அது முந்தைய எந்த நபியையும் பின்பற்றாமல் நேரடியாகவே இறைவனிடமிருந்து கிடைக்கிறது. எனவேதான் அதற்கு **சுதந்திரமான நுபுவ்வத்** எனப் பெயர் வைக்கப்படுகின்றது. ஏனெனில் அந்த நுபுவ்வத் எந்தவொரு முந்தைய நுபுவ்வத்தின் ஆதரவின் அடிப்படையில் நிலை பெறுவதில்லை. மாறாக, தானாக சொந்தக் காலில் நிற்கிறது. மேலும் இந்த இடத்தில் நிரந்தமானது என்பது தற்காலிகமானது என்பதற்கு எதிர்ச்சொல்லாக வரவில்லை. மாறாக, சுதந்திரமானது என்ற பொருளில் வந்துள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நுபுவ்வத்திற்கு உதாரணம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு வந்த ஹஸ்ரத் தாவூது, சுலைமான், யஹ்யா, ஈஸா (அலைஹிமுஸ் ஸலாம்) ஆகியோரின் நுபுவ்வத் ஆகும். இந்த நபிமார்கள் சந்தேகமின்றி,மூஸாவின் ஷரீஅத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களுக்கு மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றியதன் காரணமாக நுபுவ்வத் கிடைக்கவில்லை. மாறாக, சுதந்திரமான முறையில், தனிப்பட்ட முறையில் நுபுவ்வத் கிடைத்திருந்தது. மேலும் அவர்கள் இறைவனிடமிருந்து மூஸவிய்ய ஷரீஅத்திற்கு தொண்டு செய்வதற்காக நியமிக்கப்பட்டனர்.

**மூன்றாவது, ஷரீஅத் அல்லாத, சுதந்திரமல்லாத நுபுவ்வத்.** அதுவே வேறு சொற்களில் **நிழலான நுபுவ்வத்** என அழைக்கப்படுகிறது. அத்தகைய

நுபுவ்வத்துடன் எந்தவொரு புதிய ஷரீஅத்தும் இருப்பதில்லை; அந்த நுபுவ்வத் எந்தவொரு முந்தைய ஷரீஅத்துடைய நபியைப் பின்பற்றுவதை விட்டும் சுதந்திரமான முறையில் நேரடியாகக் கிடைப்பதுமில்லை. மாறாக, அது முற்றிலும் முந்தைய நபியைப் பின்பற்றுவதனாலும், அவருடைய சீடராக இருப்பதனாலும் அவருடைய அருளிலிருந்து அருளைப் பெற்று நிழலாகக் கிடைக்கிறது. மேலும் நிழல் என்பது பிரதிபிம்பத்திற்குக் கூறப்படும். எனவே அத்தகைய நபித்துவம் முந்தைய நபித்துவத்தின் பகுதியேயாகும்; தனிப்பட்ட ஒன்றன்று. நபித்துவத்தின் இந்த வகையைக் கொண்டவர் உம்மதீ நபி என்று அழைக்கப்படுகிறார். இந்த உம்மதீ நுபுவ்வத் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகே வெளிப்பட்டது. ஏனெனில் அன்னார் (ஸல்) அவர்களுக்கு முன்னர் எந்தவொரு நபியும் இந்த அந்தஸ்தை அடையவுமில்லை; எந்தவொரு ஷரீஅத்திற்கும் அப்படிப்பட்ட சிறப்பு கிடைக்கவுமில்லை. அதனைப் பின்பற்றுவது ஒருவரை நுபுவ்வத் வரை கொண்டு செல்லக் கூடியதாக இருக்கவில்லை.

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்நிலையிலும் இறுதி நபியாவார்கள்

நாம் இந்த நூலில் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்திருக்கும் இந்த விளக்கத்தின் மூலமாக முதலில் கூறிய இரண்டு நுபுவ்வத்தைப் பொருத்த வரை (அதாவது ஷரீஅத்துடைய நுபுவ்வத், சுதந்திரமான நுபுவ்வத்) அவற்றில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறுதி நபியாக இருக்கிறார்கள் என்பது தெளிவானதும், வெளிப்படையானதுமாகும். அதில் எவரும் மறு பேச்சு பேச முடியாது. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு எந்தவொரு ஷரீஅத்துடைய நபியும் வர முடியாது என்பதும், அன்னாரைப் பின்பற்றாமல் நேரடியாக எவரும் நுபுவ்வத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதும் இரு பிரிவினரும் ஒப்புக் கொண்டுள்ள விஷயமாகும். இந்த வகையில் அன்னார் (ஸல்) எந்நிலையிலும் இறுதி நபியாவார்கள்.

மற்றபடி, மூன்றாவது நுபுவ்வத் பற்றிய விஷயத்தைப் பொருத்தவரை (அதாவது நிழலான நுபுவ்வத்) கொஞ்சம் சிந்தித்தால் இந்நிலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் இறுதி நபியாக இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும்.

ஏனெனில், அன்னாரைப் பின்பற்றியதனால், அன்னாரின் அருளால் நுபுவ்வத்தைப் பெறுபவர் அன்னாரின் கிளையாகவும், அன்னாரின் அங்கமாகவும் இருக்கிறார். வேறு ஒருவரல்லர். அவர், 14-ஆவது இரவின் சந்திரனைப் போன்று, சூரியனின் ஒளியை பிரதிபலிக்கின்ற ஒரு கண்ணாடியைப் போன்றவரேயன்றி வேறொன்றுமில்லை. எனவே இந்நிலையிலும் அன்னார் (ஸல்) அவர்களையே இறுதி நபி எனக் கூறப்படுமே தவிர அன்னாரின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று ஒளியைக் கொடுப்பவரை அல்ல. அவர் நிழல் ஆவார்; அசல் அல்ல. இதற்குரிய உதாரணம் இவ்வாறும் கூறலாம்: ஒருவர் ஒரு தோட்டத்தை உருவாக்கினார். அதில் பல விதமான மரங்களை நட்டார். பிறகு அந்த தோட்டத்தை முழுமைப்படுத்துவதற்காக மிகவும் உயர்ந்த, எல்லாவற்றையும் விட சிறந்த, எல்லாவற்றையும் விட பெரிய, எல்லாவற்றையும் விட அதிக கனி தருகின்ற இறுதி மரத்தை நட்டார். ஆனால் இதற்குப் பிறகு அந்த இறுதி மரத்தின் வேரிலிருந்து அதன் இன்னொரு கிளை முளைத்தது. அது அதன் பகுதியாகவே இருந்தது. அதன் குழந்தையாகவே இருந்தது. இந்நிலையில் அந்தக் கிளையின் காரணமாக அந்த மரம் இறுதியாக இருப்பது பொய்யாகி விடுமா என்ன? ஒருபோதுமன்று; ஒருபோதுமன்று. மாறாக, அந்தக் கிளை இருந்தாலும், உண்மையான மரம்தான் இறுதி மரமாகக் கருதப்படுமேயொழிய அதன் பகுதியாகவும், அதனுடன் இணைந்துள்ள அந்தக் கிளை அன்று. நமது மாற்று கருத்து கொண்ட சகோதரர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தி இந்த சிறிய, நுண்ணிய கருத்தை புரிந்து கொண்டால், அவர்கள் தமது விதண்டா வாதத்தினால் உருவாக்கி வைத்துள்ள அனைத்து பிரச்சனைகளும் பகல் வெளிச்சம் போல் நமக்கு முன்னால் வந்து விடும். மேலும் எந்த ஐயமும் எஞ்சியிருக்காது என்று நான் நம்புகிறேன்.

## இறுதி நபி மற்றும் இறுதி பள்ளிவாயில்

இந்த விஷயத்திலும் நம் சார்பாக எதுவும் சொல்ல வேண்டிய தேவையில்லை. ஏனெனில் இந்த ஹதீஸுக்கு நமது எஜமானர் (ஸல்) அவர்கள் எத்தகைய விளக்கத்தை தாமே கொடுத்துள்ளார்கள் என்றால், அதன் பிறகு அதிக விளக்கத்திற்கு எந்த தேவையும் எஞ்சியிருப்பதில்லை. **இன்னீ ஆகிருல் அன்பியாயி (நான் இறுதி நபியாக இருக்கிறேன்)** என்ற சொற்கள் வந்துள்ள இந்த ஹதீஸ் தனது

முழுமையான முறையிலும், சரியான முறையிலும் சஹீஹ் முஸ்லிமில் வந்துள்ளது. சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

إِنِّي آخِرُ الْأَنْبِيَاءِ وَإِنَّ مَسْجِدِي آخِرُ الْمَسَاجِدِ

''**இன்னீ ஆகிருல் அன்பியாயி வஇன்ன மஸ்ஜிதீ ஆகிருல் மஸாஜிதி**'' ***(சஹீஹ் முஸ்லிம் பாபு ஃபழ்லிஸ் ஸலாத்தி ஃபீ மஸ்ஜிதில் மதீனா).***

பொருள்: ''**நான் இறுதி நபியாக இருக்கிறேன்; எனது இந்த (மதீனா) பள்ளிவாயில் இறுதி பள்ளிவாயிலாக இருக்கிறது.**'' ***(தமிழ் மொழியாக்கம் சஹீஹ் முஸ்லிம் பாகம் 2 பக்கம் 610 ஹதீஸ் எண்:2694 காண்க-மொழிபெயர்ப்பாளர்)***

நமக்காக ஒவ்வொரு இருளின் மூலையிலும் நேர்வழிக்கான விளக்கை ஏற்றி வைத்த நமது தூய நபியின் மீது ஆயிரக்கணக்கான சலவாத்தும் சலாமும் உண்டாவதாக. அன்னார் தடுமாற்றம் அடையவிருக்கும் ஒவ்வொரு குழியிலிருந்தும் நேரான வழியைக் காட்டி நம்மை கீழே விழுவதிலிருந்தும் காப்பாற்றி விட்டார்கள். இப்போது **இன்னீ ஆகிருல் அன்பியாயி (நான் இறுதி நபியாக இருக்கிறேன்)** என்ற இந்த நபிமொழியைப் பற்றியே அவசரப்படும் தன்மை கொண்ட, குறைபாடுள்ள பார்வை கொண்டவர்கள், ஒருவேளை இந்த சொற்றொடரின் கருத்து, நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவ்வகையிலும், எவ்விதமான நபியும் வர முடியாது -அவர் அன்னார் (ஸல்) அவர்களின் தொண்டராகவும், அன்னாரின் ஒரு பகுதியாகவே இருந்தாலும் சரியே என்றாகுமோ என மக்கள் தடுமாற்றம் அடையும் சாத்தியம் இருந்தது. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் இந்த சாத்தியக்கூறான இடத்திற்கு அருகிலும் ஓர் ஒளிமிக்க விளக்கை ஏற்றி வைத்து தமது உம்மத்தை எச்சரித்து விட்டார்கள். அதாவது இந்த இடத்தில் **இன்னீ ஆகிருல் அன்பியாயி (நான் இறுதி நபியாக இருக்கிறேன்)** என்று நான் கூறுவதன் கருத்து, எனது இந்த மதீனா பள்ளிவாயில் இறுதி பள்ளிவாயில் என்று நான் கூறியது போன்றே நானும் இறுதி நபியாக இருக்கிறேன். **இன்ன மஸ்ஜிதீ ஆகிருல் மஸாஜிதி** (எனது இந்த மதீனா பள்ளிவாயில் இறுதி பள்ளிவாயிலாக இருக்கிறது) என்பதற்கு இனி வருங்காலத்தில் உலகில் எந்தவொரு பள்ளிவாயிலும் கட்டப்படவே

மாட்டாது என்ற பொருள் ஒருபோதுமன்று. மாறாக, இனி எனது பள்ளிவாயிலுக்கு எதிராக, போட்டியாக எந்த பள்ளிவாயிலும் கட்டப்பட மாட்டாது. எந்த பள்ளிவாயில் கட்டப்பட்டாலும் அது எனது பள்ளிவாயிலுக்கு கட்டுப்பட்டவாறும், அதனைப் பின்பற்றியவாறும், அதன் நிழலாகவும் இருக்கும். ஏனெனில்,எனது ஷரீஅத் நிரந்தரமானது. எனக்குப் பிறகு எந்த ஷரீஅத்தும் இல்லை என்றால், பின்னர் கண்டிப்பாக, **இன்னீ ஆகிருல் அன்பியாயி (நான் இறுதி நபியாக இருக்கிறேன்)** என்பதற்கும், என்னை விட்டு விலகி சுதந்திரமான முறையில் நுபுவ்வத்தின் அருளைப் பெறும் எவரும் எனக்குப் பிறகு தோன்ற மாட்டார்; மாறாக, எவர் வந்தாலும் அவர் எனது மாணவராகவும், பின்பற்றியவராகவும், நிழலாகவும் வருவார் என்பதே பொருளாகும். அல்லாஹ்! அல்லாஹ்!! இது எத்தகைய மகத்தான சொல்லாகும். அன்னாரின் தூரப் பார்வை எங்கு வரை சென்றிருக்கிறது. **இன்னீ ஆகிருல் அன்பியாயி (நான் இறுதி நபியாக இருக்கிறேன்)** என்ற சொற்களினால் எப்படிப்பட்ட தவறான எண்ணம் கொள்ள சாத்தியக்கூறு இருந்ததோ அதைக் கண்டறிந்து எந்த பொருளில் எனது இந்த மதீனா பள்ளிவாயில் இறுதியாக இருக்கிறதோ அதே பொருளில்தான் நானும் இறுதி நபியாக இருக்கிறேன் என்று கூறியதன் மூலம் அதை அகற்றி விட்டார்கள்.

நண்பர்களே! அன்பர்களே! இறைவன் உங்கள் கண்களை திறப்பானாக. சிந்தியுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாயிலுக்குப் பிறகு இஸ்லாமிய நாடுகளில் இலட்சக்கணக்கான, கோடிக்ககணக்கான பள்ளிவாயிகள் கட்டப்பட்டும் **இன்ன மஸ்ஜிதீ ஆகிருல் மஸாஜிதி** (எனது இந்த மதீனா பள்ளிவாயில் இறுதி பள்ளிவாயிலாக இருக்கிறது) என்ற கருத்து நிலைபெற்றிருக்கிறதென்றால், அதில் எந்த இடையூறும் ஏற்படவில்லை என்றால் அன்னாரின் உம்மத்திலிருந்து அன்னாரின் தொண்டர், மாணவர், அன்னாரைப் பின்பற்றியதனால் - கட்டுப்பட்டதனால் அன்னாரின் நிழலாக மாறி நுபுவ்வத்தின் அருளைப் பெறுவதை **இன்னீ ஆகிருல் அன்பியாயி (நான் இறுதி நபியாக இருக்கிறேன்)** என்ற கருத்துக்கு மாற்றமானதாக எப்படிக் கூற முடியும்? நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நாம் மேலே எழுதி வந்ததுதான் உண்மையாகும். அதாவது, நமது எஜமானர் எந்நிலையிலும் இறுதி நபியாவார்கள். ஏனெனில், நுபுவ்வத்தின் எந்த வகை (அதாவது ஷரீஅத்துடைய நுபுவ்வத், சுதந்திரமான நுபுவ்வத்)

அன்னார் (ஸல்) இறுதி நபி என்பதன் கருத்தை அபத்தமாக்குமோ அவற்றின் வழி அடைபட்டு விட்டது. அதற்கெதிரில் எந்தவகை நுபுவ்வத்தின் வாசல் திறந்துள்ளதோ (அதாவது நிழல் வகையான நுபுவ்வத்) அதன் காரணமாக அன்னார் இறுதி நபியாக இருப்பதில் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. மற்ற முஸ்லிம்கள் இந்த நுண்ணிய கருத்தைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அந்தோ! அவர்கள் புரியட்டுமே!!

## ‘இறுதி’ என்பதன் பொருள் முழுமை என்பதுமாகும்

அது மட்டுமின்றி, ஆகிர் (இறுதி) என்பது அரபியில் தனது திறமையில் இறுதி எல்லை அதாவது முழுமையை அடைந்தவருக்கும் கூறப்படும். இதற்கான உதாரணங்கள் நமக்கு அரபி உரைநடைகளிலும், கவிதைகளிலும் கிடைக்கின்றன. ஆனால் ஏற்கனவே கணிசமான அளவிற்கு அதிகமாகி விட்ட இந்த வாதத்தை நாம் மேலும் அதிகமாக நீட்ட விரும்பவில்லை. எனவே டாக்டர் சர். முஹம்மது இக்பால் அவர்களின் உருது கவிதையிலிருந்து ஓர் உதாரணத்தை எடுத்துரைப்பதைப் போதுமானதாகக் கொள்கிறோம். அநேகமாக, வாசகர்களில் அதிகமானோர் இக்பாலின் கவிதை மற்றும் தத்துவத்தால் கவரப்பட்டவர்களும் இருப்பார்கள். எனவே அவர்கள் இந்த உதாரணத்திலிருந்து கண்டிப்பாக பலன் பெறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**அல்லாமா இக்பால் கூறுகிறார்:**

**“தாக் என்ற கவிஞரும் காலம் சென்று விட்டார். அந்தோ! அவருடைய உடல் தோளில் ஏந்தப்பட்டது. (தில்லியில் உள்ள) ஜஹானாபாதில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இறுதி கவிஞர் அமைதி கொண்டவராகி விட்டார்.”** ***(காண்க:பாங்கே தரா என்ற கவிதைத் தொகுப்பு நூல்)***

இங்கு இறுதி கவிஞர் என்று கூறியது உண்மையிலேயே இறுதி கவிஞர் என்ற பொருளில் அல்ல. ஏனெனில் தாக் என்ற கவிஞருக்குப் பிறகும் கூட கவிஞர்கள் தொடர்கின்றனர். எப்போதும் தொடர்ந்து கொண்டுமிருப்பர். இன்னும் கூறுவதென்றால், நமது நாட்டின் இலக்கிய அறிஞர்கள் டாக்டர் இக்பாலைக் கூட தாக் கவிஞரை விட பல மடங்கு மேலான கவிஞராகக் கருதுகின்றனர். எனவே இங்கு அதன் பொருள்,

டாக்டர் இக்பாலின் பார்வையில் சென்ற கால கவிதை களத்தில் தாக் கவிஞர் கவிதைத் திறமையில் இறுதி எல்லையை அதாவது முழுமையை அடைந்திருந்தார் என்பது மட்டுமே ஆகும். இந்த அடிப்படையில், **ஆகிருல் அன்பியாயி (நபிமார்களில் இறுதி)** என்பதன் பொருள், நமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்தின் களத்தில் நுபுவ்வத்தின் முழுமைத்தன்மையில் அதன் இறுதி எல்லையை அடைந்திருந்தார்கள் என்பதாகும். இதுவும் தன்னிடத்தில் முற்றிலும் சரியான, மிகவும் நுண்ணிய கருத்தாகும்.

## لَوْ كَانَ بَعْدِي نَبِيٌّ لَكَانَ عُمَرَ

## என்ற ஹதீஸின் விளக்கம்

நமது எதிரிகளிடமிருந்து எடுத்து வைக்கப்படும் மூன்றாவது ஹதீஸின் வாசகம் இதுவாகும்: **'லவ் கான பஃதீ நபிய்யுன் லகான உமரு'.** ***(காண்க:சுனன் திர்மிதி).*** அதாவது எனக்குப் பிறகு ஒரு நபி இருப்பாரென்றால் அவர் உமர் ஆவார். இதை சான்றாக் காட்டி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வர முடியாது எனக் கூறப்படுகிறது. ஏனெனில் எனக்குப் பிறகு ஒருவர் நபி ஆக முடியும் என்றால் கண்டிப்பாக உமர் நபியாகியிருப்பார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே கூறி விட்டார்கள். ஆனால் உமர் நபியாகவில்லை. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் தொடர் முற்றிலும் முடிந்து விட்டது எனத் தெரிகிறது.

ஆனால் சிந்தித்துப் பார்த்தால், இந்த விளக்கமும் ஆய்வுடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும் கூடிய தொலை நோக்குப் பார்வையுடன் பார்க்கும்போது சரியானதென்று நிரூபணமாவதில்லை. **'லாநபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபியில்லை)** என்ற ஹதீஸுக்கு விளக்கமளிக்கும்போது நாம் குறிப்பிட்டது வாசகர்களுக்கும் நினைவிருக்கும். அதாவது, அரபி மொழியில் **பஃத் (பிறகு)** என்ற சொல்லுக்கு **ழர்ஃபே மகானீ (இடத்தைப் பொருத்தது)** என்ற வகையில் ஒன்றை விட்டு விட்டு இன்னொன்றை மேற்கொள்ளுதல் என்றும் பொருள் உண்டு. உதாரணமாக, திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**'ஃபபிஅய்யி ஹதீஸின் பஃதல்லாஹி வஆயாதிஹீ யுஃமினூன்'.**

| இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை |
|---|

அதாவது அல்லாஹ் மற்றும் அவனது வசனங்களுக்குப் பிறகு (அதாவது அவற்றை விட்டு விட்டு அல்லது அவற்றிற்கு எதிராக) மக்கள் எந்த ஹதீஸை ஏற்றுக் கொள்வார்கள்? *(திருக்குர்ஆன் 45:7)*.

**பஃத் (பிறகு)** என்ற சொல்லின் இந்த மரபுத் தொடர் அரபு மொழியில் எந்த அளவுக்கு பொதுவானதாகவும், புகழ்பெற்றதாகவும் இருக்கிறதென்றால், அதற்குப் பிறகு வேறு அதிக விளக்கம் தருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. மேலும் உண்மையும் அதுதான். அதாவது, திருக்குர்ஆனின் சாட்சியத்திற்குப் பிறகு வேறு எந்த சான்றின் தேவையுமில்லை.

எனவே இந்த விளக்கத்தின் அடிப்படையில் **'லவ் கான பஃதீ நபிய்யுன் லகான உமரு'** அதாவது எனக்குப் பிறகு ஒரு நபி இருப்பாரென்றால் அவர் உமர் ஆவார் என்பதன் கருத்து, நான் நபி ஆகாமலிருந்தால் என்னுடைய இடத்தில் உமர் (ரலி) நபி ஆகியிருப்பார் என்பதாகும். மேலும் நிச்சயமாக இந்த கருத்தே சரியானதும், பொருத்தமானதுமாகும். மேலும் இதற்கான சான்று என்னவெனில், ஒரு ஹதீஸினால் தவறு ஏற்பட சாத்தியமிருக்கும் இடத்தில் இன்னொரு ஹதீஸ் மூலமாக நீக்குவது நமது எஜமானர் (ஸல்) அவர்களின் நடைமுறையில் இருந்ததைப் போன்று, அன்னார் இன்னோரித்தில் இந்த ஹதீஸை இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:

لَوْلَمْ اُبْعَثْ فِيْكُمْ لَبُعِثَ عُمَرُ

(ابن عدى ، كنوز الحقائق جلد 2 ص 151)

**முஸ்லிம்களே! நான் உங்களிடத்தில் அனுப்பப்படாதிருந்தால் என்னுடைய இடத்தில் உமர் அனுப்பப்பட்டிருப்பார்.**

இப்போது இந்த இரண்டு ஹதீஸையும் இணைத்துப் பார்க்கும்போது விஷயம் முற்றிலும் தெளிவாகி விடுகிறது. ஏனெனில், எனக்குப் பிறகு ஒரு நபி இருப்பாரென்றால் அவர் உமராக இருப்பார் என நான் கூறினேன் என்றால் அதன் கருத்து என்னை தவிர்த்து ஒருவர் நபி ஆக முடியுமென்றால் அவர் உமர் ஆகியிருப்பார் என்ற விளக்கத்தை தாமே கூறி விட்டார்கள்.

## உமர் (ரலி) அவர்களிடம் ஷரீஅத்துடைய நுபுவ்வத்திற்கான ஒளி இருந்தது

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்தக் கூற்றில் உள்ள ஞானம் என்னவெனில், ஒரு புறம் அவர்களே ஒரு ஷரீஅத்தைக் கொண்ட நபியாக இருந்தார்கள்; மேலும் தன்னுடன் ஒரு புதிய இறை சட்டத்தைக் கொண்டு வந்திருந்தார்கள். மறு பக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமும் சட்டத்தை இயற்றும் திறமை அசாதாரணமான முறையில் அதிகமாக இருந்தது என வரலாற்றிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் நிரூபணமாகின்றது. இதற்கு அவர்களின் கிலாஃபத்தின் முழு காலம் மட்டும் சாட்சியாக இருக்கவில்லை; மாறாக,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிக உயர்ந்த சட்ட வல்லுநராக திகழ்ந்தார்கள் என்பதற்கு அவருடைய வாழ்க்கைச் சம்பவங்கள் தெளிவான சான்றை எடுத்துரைக்கின்றன. அவர்களிடம் சட்டத்தை இயற்றும் திறமை நிரம்பி காணப்பட்டது.

ஹதீஸில் வருகிறது: ஒரு விவகாரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஓர் ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். மற்ற நபித்தோழர்கள் இன்னோர் ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய கருத்திற்கேற்ப இறை வசனம் இறங்கியது. அவ்வாறு பலமுறை நடந்துள்ளது. *(புகாரி, முஸ்லிம், ஸுர்கானீ ஆகியவை காண்க)*

எனவே என்னுடைய இடத்தில் இன்னொருவர் நபியாக இருப்பாரென்றால் அவர் உமர் ஆவார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றால் நிச்சயமாக அதில் உமர் (ரலி) அவர்களின் இந்த சிறப்பான, குறிப்பிட்ட பண்பைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான். அதன் கருத்து, இந்த காலத்தில் புதிய ஷரீஅத்துடைய தேவை இருந்தது.எனவே நான் வராதிருந்தால் என்னுடைய இடத்தில் உமர் வந்திருப்பார் என்பதாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சட்டமியற்றும் பண்பு எந்த அளவுக்கு வெளிப்படையாகக் காணப்பட்டதென்றால், மாபெரும் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் கூட அவர்களின் திறமையையும் சாதனைகளையும் நினைத்து வியந்து நிற்கின்றனர்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் அனுப்பப்படாதிருந்தால் உமர் அனுப்பப்பட்டிருப்பார் என்று இன்னொரு ஹதீஸ் மூலமாக தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது மட்டுமின்றி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளும், இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியது நிச்சயமாக உமர் (ரலி) அவர்களின் சட்டமியற்றுவதில் புலமை பெற்ற அந்த பண்பைத்தான் என்பதற்கு சான்றாக விளங்குகிறது. இந்த பண்பு அவர்களை மற்ற சஹாபிகளை விட்டும் தனித்தன்மை வாய்ந்ததாக்கிக் காட்டியது.

## சஹாபாக்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்தஸ்து அனைவரையும் விட மிகச் சிறந்ததாக இருந்தது

நமது இந்த விளக்கத்திற்கு மேலும் அதிகப்படியான சான்று என்னவெனில், பொதுவான பண்புகளைப் பொருத்தவரை நபித்தோழர்களிடம் அனைவரையும் விட மிகப் பெரிய அந்தஸ்தைக் கொண்டவராக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) இருந்தார்கள் என ஒருமித்த கருத்து இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் நபித்தோழர்களில் மிகச் சிறந்தவர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றுகளிலிருந்தும் நிரூபணமாகின்றது. இது தொடர்பாக ஒரு ஹதீஸை முன்னர் எடுத்துக் கூறியிருந்தோம். அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பின்னர் ஒரு நபி தோன்றினாலேயொழிய இந்த உம்மத்தில் அனைவரையும் விட மிகச் சிறந்தவர் அபூபக்ர் ஆவார் எனக் கூறினார்கள். அப்படியிருந்தும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட்டு விட்டு,எனக்குப் பிறகு ஒருவர் நபியாக இருப்பார் என்றால் அவர் உமர் ஆவார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுவது, குறிப்பிட்ட ஒரு பண்பில் சிறப்புத் தன்மையாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் காணப்பட்டதை எடுத்துரைப்பது நோக்கமாகும் என்பதற்கு இது உறுதியான, திட்டவட்டமான சான்றாகும். அது சட்டமியற்றும் அந்த வல்லமைதான். அதற்கு உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் சான்று பகர்ந்து சென்றிருக்கிறார்கள். அவர்களின் கிலாஃபத்தின் காலகட்டத்தில் இந்த பண்பு மேலும் அதிக ஒளிமயமானது. ஆக, எப்படிப் பார்த்தாலும், இந்த ஹதீஸின் பொருள், இங்கு **பஃது (பிறகு)** என்ற சொல்லின் மூலமாக காலத்தால் பிறகு என்ற

பொருள் அன்று. மாறாக அதன் பொருள், என்னை விட்டு விட்டு நுபுவ்வத் ஒருவருக்குக் கிடைத்திருக்குமென்றால் அது உமருக்குக் கிடைத்திருக்கும்; ஏனெனில் அவரிடம் ஒரு ஷரீஅத் நபியாகும் திறமை இருந்தது என்பதாகும்.

சுருக்கமாக, இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு தோன்றுவதைப் பற்றி கேள்வி அன்று; மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிரதிநிதியாக தோன்றுவதைப் பற்றிய கேள்வியாகும். அதற்கு கீழ்வரும் 4 உறுதியான சான்றுகள் சாட்சிகளாக இருக்கின்றன. அவற்றை யாராலும் மறுக்க முடியாது.

அரபி மொழியில் பஃது (பிறகு) என்ற சொல் அதிகமான முறையில் கீழ்வரும் பொருளில் வருகிறது:

**1.** பஃது என்ற சொல் அரபி மொழியில் ஒன்றை விட்டு விட்டு இன்னொன்றை மேற்கொள்ளுதல் என்ற பொருளில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. இந்த இடத்திலும் பஃது என்பதற்கு, என்னுடைய இடத்தில் வேறு ஒருவர் நபியாக இருப்பாரென்றால் உமர் இருந்திருப்பார் என்பதே பொருளாகும்.

**2.** ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இன்னொரு ஹதீஸும் இதனையே உண்மைப்படுத்துகிறது. ஏனெனில், அந்த இன்னொரு ஹதீஸில், நான் அனுப்பப்படாதிருந்தால் உமர் அனுப்பப்பட்டிருப்பார் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சட்டமியற்றும் பண்பு மிகவும் தனிச் சிறப்பான முறையிலும்,தெளிவாகவும் காணப்பட்டது என அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களிலிருந்து நிரூபணமாகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷரீஅத்தைக் கொண்ட நபியாக இருந்தார்கள். எனவே இந்த ஹதீஸில் அவர்கள் சுட்டிக்காட்டியது என்னவெனில், இது ஷரீஅத் இறங்கும் காலகட்டமாகும்; எனவே நான் அனுப்பப்படாதிருந்தால் என்னுடைய இடத்தில் உமர் அனுப்பப்பட்டிருப்பார்.

4. உம்மத்தின் ஒருமித்த கருத்தினால் மட்டுமின்றி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கிணங்கவும் சஹாபாக்களின் ஜமாஅத்தில் ஒட்டுமொத்தமான முறையில் அனைவரையும் விட முதல் அந்தஸ்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருந்தது. எனவே நுபுவ்வத்

என்ற முழுமையான விவகாரமாக இருந்திருக்குமென்றால், நிச்சயமாக அதற்கு உரிமை பெற்றவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் இருந்தார்களேயன்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லர். எனவே ஓர் அம்சத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட முன்னேற்றமடைந்திருந்த ஒரு பண்பைச் சுட்டிக்காட்டுவது இந்த ஹதீஸின் நோக்கமாக இருந்தது என்பதற்கு இது மேலும் அதிகப்படியான சான்றாக விளங்குகிறது.

إِنَّ النُّبُوَّةَ قَدِ انْقَطَعَتْ

## (நுபுவ்வத் முடிந்து விட்டது) என்ற ஹதீஸின் விளக்கம்

எனது இந்த கட்டுரை மிக நீண்டு விட்டது. எனவே எஞ்சியுள்ள ஹதீஸுகளைப் பற்றி சுருக்கமாக சுட்டிக்காட்ட முயற்சி செய்வேன். ஆயினும், இதுவரை குறிப்பிட்டு வந்திருக்கின்ற அடிப்படையான வாதம் ஒவ்வோர் அறிவுள்ளவருக்கும், தூய உள்ளம் கொண்டவருக்கும் போதுமானதாக இருக்கும் என நான் நம்புகிறேன் - இன்ஷா அல்லாஹ். ஏனெனில் இந்த அடிப்படையான வாதத்தின் உதவியினால் நமது எதிரிகளின் சார்பாக எடுத்து வைக்கப்படுகின்ற அனைத்து ஹதீஸுகளுக்கும் தீர்வு காணலாம். உண்மை என்னவெனில், மேலே கூறிய வாதத்தில் திருக்குர்ஆனின் வசனங்கள், நபிமொழிகள் ஆகியவற்றிக்கான அடிப்படையான விளக்கம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதில் அல்லாஹ்வின் அருளால் ஒரு மாஸ்டர் கீ இருக்கிறது. அதன் மூலமாக இந்தக் களத்தில் உள்ள எல்லா மூடியிருக்கும் பூட்டையும் திறக்க முடியும். எனவே இனி நான் சுருக்கமாகச் சுட்டிக்காட்டுவதைப் போதுமானதாகக் கொண்டவாறு எனது எஞ்சிய கட்டுரையை சில பக்கங்களில் நிறைவு செய்ய முயற்சி செய்வேன். *வமா தவ்ஃபீகீ இல்லா பில்லாஹில் அழீம்.* (மகத்தான அல்லாஹ்வின் மூலமாகவேயன்றி எனக்கு எந்த தவ்ஃபீக்கும் இல்லை.)

இந்த விஷயம் தொடர்பாக நமது மாற்றுக் கருத்து கொண்ட சகோதரர்கள் சார்பாக எடுத்து வைக்கப்படும் இன்னொரு ஹதீஸின் சொற்கள் இதுவாகும்: ''**இன்னர் ரிஸாலத்த வந்நுபுவ்வத்த கதின்கதஅத். ஃபலா ரஸூல பஃதீ வலா நபிய்ய.**''அதாவது இனி ரிஸாலத் (தூதுத்துவம்) நுபுவ்வத் (நபித்துவம்) முடிந்து விட்டது. எனக்குப் பிறகு எந்த ரஸூலும் எந்த நபியும் வர மாட்டார்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

இந்த ஹதீஸை எடுத்து வைத்து, பாருங்கள். நுபுவ்வத்தின் தொடர் முடிந்து விட்டது என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே கூறி விட்டார்கள் என வாதம் செய்யப்படுகிறது.

ஆனால் இந்த ஹதீஸில் எந்தவொரு புதிய கருத்தும் எடுத்துக் கூறபடவில்லை; மாறாக, முந்தைய ஹதீஸுகளில் பல்வேறு கோணங்களில் எடுத்துரைக்கப்பட்ட அதே கருத்துதான் இருக்கிறது என்பதை ஒவ்வோர் அறிவுள்ளவரும் மிக எளிதாக புரிந்துகொள்ள முடியும். எனவே '**லா நபிய்ய பஃதீ**' மற்றும் '**இன்னீ ஆகிருல் அன்பியாயி**' ஆகிய ஹதீஸுகளுக்கு என்ன விளக்கம் முன்பு கூறப்பட்டுள்ளதோ அதுவே நிச்சயமாக இதற்குப் போதுமானதும் மனநிறைவு தருவதுமாகும். மேலும் அதிகமாக விளக்கம் தர வேண்டிய தேவை இல்லை.

உண்மையில் இந்த ஹதீஸில் **அர்ரிஸாலத்து** மற்றும் **அந்நுபுவ்வத்து** என்ற சொற்கள் 'அலிஃப் லாம்' என்பதுடன் வந்திருக்கின்றன. அது (தனிச் சிறப்பான ஒன்றைக் குறிப்பிடும்) *தஷ்கீஸ்* ஆக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து ஹதீஸ் கலை வல்லுநர்களின் தலைவராக விளங்கும் அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள், '**லம் யப்க மினந்நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத்**' என்ற ஹதீஸின் கீழ் விளக்கமளித்து விட்டார்கள். ***(ஃபத்ஹுல் பாரீ தொகுதி 12 பக்கம் 305 காண்க).*** இதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் போன்று ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத் இல்லை என்ற கருத்தாகும்; பொதுவான நுபுவ்வத் என்பதன்று. ஏனெனில் இந்த ஹதீஸிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் '**ஃபலா ரஸுல பஃதீ வலா நபிய்ய**' என்ற சொல்லை அதிகமாக எடுத்துரைத்து இங்கேயும் எனது கருத்து '**லாநபிய்ய பஃதீ**' என்ற ஹதீஸில் எடுத்துக் கூறிய அதே கருத்துதான் என்பதை சுட்டிக்காட்டி விட்டார்கள். எப்படி இருந்தாலும், திட்டவட்டமாக இந்த ஹதீஸில் முந்தைய ஹதீஸுகளில் உள்ளதை விட அதிகப்படியான வேறு எந்த விஷயமும் இல்லை. மாறாக, '**லா நபிய்ய பஃதீ**' '**இன்னீ ஆகிருல் அன்பியாயி**' ஆகிய ஹதீஸுகளில் கூறப்பட்ட அதே கருத்துதான் இருக்கிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்தினால் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத், சுதந்திரமான நுபுவ்வத் ஆகியவற்றின் வாசல் மட்டுமே மூடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் ஒரு

பகுதியாகவும் அதன் நிழலாகவுமே இருக்கின்ற நுபுவ்வத் மூடப்படவில்லை.

## ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் நுட்பமான சான்று

இந்தக் கருத்தைத்தான் இஸ்லாத்தின் மாபெரும் மார்க்கப் பெரியார்கள், நல்லார்கள் எப்போதும் கொடுத்து வந்திருக்கின்றனர். உதாரணமாக, **ஹஸ்ரத் ஷேக் அக்பர் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் (மறைவு ஹிஜ்ரி 638) கூறுகிறார்கள்:**

إِنَّ النُّبُوَّةَ الَّتِي انْقَطَعَتْ بِوُجُودِ رَسُولِ اللهِ ﷺ إِنَّمَا هِيَ
نُبُوَّةُ التَّشْرِيعِ لَا مُقَامُهَا ---- وَهٰذَا مَعْنٰى قَوْلِهِ ﷺ أَنَّ
الرِّسَالَةَ وَالنُّبُوَّةَ قَدِ انْقَطَعَتْ فَلَا رَسُولَ بَعْدِي وَلَا نَبِيَّ
أَيْ لَا نَبِيَّ بَعْدِي يَكُونُ عَلٰى شَرْعٍ يُخَالِفُ شَرْعِي بَلْ
إِذَا كَانَ يَكُونُ تَحْتَ حُكْمِ شَرِيعَتِي

**“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நுபுவ்வத்தின் தொடர் முடிந்து விட்டது என்று கூறப்பட்டதன் கருத்து, ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத் என்பதாகும்.** ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அத்தகு நுபுவ்வத்திற்கு இடமில்லை. இதுவே இந்த ஹதீஸுக்கான விளக்கமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இனி ரிஸாலத் முடிந்து விட்டது; நுபுவ்வத் முடிந்து விட்டது. எனக்குப் பிறகு எந்த ரஸூலும் இல்லை; எந்த நபிய்யுமில்லை என்றுகூறியதில் இந்தக் கருத்துதான் இருக்கிறது. **இதில் அவர்கள் கூறிய கருத்து, எனது ஷரீஅத்திற்கு மாற்றமாக வேறொரு ஷரீஅத்தைக் கொண்டு வரும் எந்த நபியும் இருக்க மாட்டார்;**

**மாறாக, எவராவது வந்தாலும் எனது ஷரீஅத்தின் கீழ் வருவார் என்பதாகும்."** *(ஃபுதூஹாத்தே மக்கிய்யா தொகுதி 2 பாப் 73 எகிப்து வெளியீடு)*

இப்போது பாருங்கள். இந்த சான்று எவ்வளவு தெளிவாகவும் துல்லியமானதாகவும் இருக்கிறது! மேலும் இந்த சான்று இன்றையதல்ல ; மாறாக இன்றிலிருந்து 700 ஆண்டுகளுக்கு முன்னுள்ளதாகும். சான்றும் இஸ்லாத்தில் ஓர் இமாமின் அந்தஸ்தைக் கொண்டவருடையதாகும். மேலும் இந்த சான்றைப் பற்றி, எவருடைய உள்ளத்திலாவது ஹஸ்ரத் முல்லா அலிய்யுல் காரீ மற்றும் ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ ஆகியோரின் சான்றுகளைப் பற்றி சென்ற பக்கங்களில் கூறப்பட்டது போன்ற சந்தேகங்கள் எழுமென்றால் அவர்கள் '**லவ் ஆஷ இப்ராஹீமு லகான சித்தீகன் நபிய்யா**' என்ற ஹதீஸ் மற்றும் '**லா நபிய்ய பஃதீ**' என்ற ஹதீஸின் வாதத்தில் நான் அடிப்படையாக எடுத்துக் கூறிய குறிப்பை மீண்டும் படியுங்கள். அதில் இது மாதிரியான ஆட்சேபணைகளுக்கு மறுப்புரையாக எழுதப்பட்டுள்ளது. அதற்குப் பிறகும் அவருக்கு சந்தேகம் இருக்குமென்றால் அவருடைய விவகாரம் இறைவனோடு உள்ளது. *வ இன்னக லா தஹ்தீ ம அஹ்பப்த்த வலாகின்னல்லாஹ யஹ்தீ மன்ய் யஷாவு* (நீர் நாடியவருக்கு நீர் நேர்வழி காட்ட முடியாது; ஆயினும் அல்லாஹ், தான் நாடுபவருக்கு நேர்வழி காட்டுகிறான். (திருக்குர் ஆன் 28:57)

## மஸலீ வமஸலுல் அன்பியாயி மின் கப்லீ (எனக்கும் எனக்கு முன்னுள்ள நபிமார்களின் உதாரணம்) என்ற ஹதீஸின் விளக்கம்

இந்த ஹதீஸுக்குப் பிறகு இன்னொரு ஹதீஸை நான் எடுக்கிறேன். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

إِنَّ مَثَلِي وَمَثَلَ الأَنْبِيَاءِ مِنْ قَبْلِي كَمَثَلِ رَجُلٍ بَنَى بَيْتًا
فَأَحْسَنَهُ وَأَكْمَلَهُ، إِلا مَوْضِعَ لَبِنَةٍ مِنْ زَاوِيَةٍ فَجَعَلَ النَّاسُ
يَطُوفُونَ وَيَعْجَبُونَ لَهُ وَيَقُولُونَ: هَلا وُضِعَتْ هَذِهِ اللَّبِنَةُ؟ قَالَ

فَأَنَا اللَّبِنَةُ، وَأَنَا خَاتَمُ النَّبِيِّينَ

“எனக்கும் எனக்கு முன்னர் வந்த நபிமார்களுக்கும் உள்ள உதாரணம், ஒருவர் ஒரு வீட்டைக் கட்டினார். அதில் அவர் எல்லாவிதமான அழகையும் கவனத்திற் கொண்டார். அதனை நன்றாக அழகுபடுத்தினார். ஆனால் அதன் ஒரு மூலையில் ஒரு செங்கல்லிற்கான இடம் வெற்றிடமாக இருந்தது. மக்கள் அந்த வீட்டைச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். அதைக் கண்டு வியப்படைந்தனர். இந்த ஒரு செங்கலுக்கான இடம் ஏன் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது எனக் கூறினர். எனவே நானே அந்த செங்கல் ஆவேன். மேலும் நான் காத்தமுன்னபிய்யீன் ஆவேன்.” ***(புகாரி, முஸ்லிம்)***

இந்த ஹதீஸை எடுத்து வைத்து நமது மாற்று கருத்து கொண்டவர்கள், பாருங்கள். நுபுவ்வத்தின் கட்டடத்தில் ஒரு செங்கல்தான் எஞ்சியிருந்தது. அதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோற்றம் நிறைவேற்றி விட்டது. அதற்குப் பிறகு வேறு என்ன எஞ்சியிருக்கிறது? எனக் கூறி வருகின்றனர். ஆனால் வழிதவறிய நமது சகோதரர்கள் நமது எதிர்ப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்தஅந்தஸ்தையும் மறந்து விட்டனர். மேலும் இந்த ஹதீஸுக்கு தவறான விளக்கமளித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்தை குறைக்கின்றனர். ஆனால் இந்த ஹதீஸில் கூறப்பட்ட உதாரணத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பற்றிக் கூறுவது ஒருபோதும் நோக்கமன்று. மாறாக, ஷரீஅத்தை முழுமையாக்குவதன் பக்கம் குறிப்பிடுவது நோக்கமாகும்.

இந்த ஹதீஸின் பொருள், உலகில் ஷரீஅத்தைக் கொண்ட பல நபிமார்கள் வந்திருக்கின்றனர். ஒவ்வொரு புதிய ஷரீஅத் இறங்கியதனால் நுபுவ்வத்தின் கட்டடத்தில் ஒரு அதிகப்படியான செங்கல் வைக்கப்பட்டு வந்தது. எதுவரை என்றால் நமது நபி கரீம் (ஸல்) அவர்களின் தோற்றத்தினால் கடைசி செங்கல் வைக்கப்பட்டு ஷரீஅத்தின் கட்டடம் முழுமையாக்கப்பட்டு விட்டது. மேலும் இஸ்லாமிய ஷரீஅத் முந்தைய ஷரீஅத்துகளின் நிரந்தரமான உண்மைகளை தன்னகத்தே கொண்டிருப்பதுமட்டுமின்றி, எதிர்காலத் தேவைக்கான வழிகாட்டல்களையும் இணைத்து ஷரீஅத்திற்கான

வழிகாட்டலின் ஒரு நிரந்தரமான, உலகளாவிய கட்டடத்தை எழுப்பி விட்டது.

## இந்த ஹதீஸில் ஷரீஅத் முழுமையடைந்தது பற்றிய குறிப்பு மட்டுமே உள்ளது

எனவே இந்த ஹதீஸில் ஷரீஅத் முழுமையடைந்து விட்டது பற்றி சுட்டிக்காட்டுவது நோக்கமாக இருந்தது. மேலும் நுபுவ்வத்தின் மற்ற விவகாரங்களுடன் இதற்கு எந்தத் தொடர்பும் இல்லை. இந்த ஹதீஸைப் பற்றி இஸ்லாத்தின் சென்ற கால இமாம்கள் புரிந்து வந்திருக்கும் நுட்பமான ஞானம் இதுதான். சஹீஹ் புகாரிக்கு புகழ்பெற்ற விளக்கவுரையாக ஃபத்ஹுல் பாரீ என்ற நூலை எழுதியவர் அல்லாமா இப்னு ஹஜர் (மறைவு ஹிஜ்ரி 852 ஆம் ஆண்டு) ஆவார்கள். இவர் ஹதீஸ்கலையில் இமாமின் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஹதீஸுக்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

المراد هنا النظر الى الاكمل بالنّسبة إلى الشّريعة المحمّديّة مع ما

مضى من الشرائع الكاملة (فتح الباری جلد 6 ص 361)

**அதாவது ''இந்த இடத்தில் முந்தைய ஷரீஅத்துகள் தத்தமது காலத்திற்கேற்ப முழுமையானவையாக இருந்தன. எனினும் முஹம்மதிய்ய ஷரீஅத் இறை ஷரீஅத்தை நிரந்தரமான முறையில் முழுமையானதாகவும் முழுமைப்படுத்தக் கூடியதாகவும் ஆக்கி விட்டது என்பதை வெளிப்படுத்துவதே நோக்கமாகும்.''** ***(ஃபத்ஹுல் பாரீ தொகுதி 6 பக்கம் 361)***

## ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நுபுவ்வத் தொடரின் மையப் புள்ளியாக இருந்தார்கள்

எனவே உண்மை என்னவெனில், இந்த ஹதீஸில் ஷரீஅத் முழுமையடைந்து விட்டது பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மற்றபடி, இந்த உதாரணத்தை பொதுவானதாகக் கருதினால் நமது எஜமானர் (ஸல்) அவர்களுக்கு மிகப் பெரும் அவமரியாதை ஏற்படும்-நவூதுபில்லாஹ். அதாவது நுபுவ்வத் எனும் பரந்த கட்டடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து வெறும் ஒரு செங்கலுக்கான இடம்தான் என்றாகி விடும். ஆனால் அவர்களோ, *குன்த்து நபிய்யன் வ*

*ஆதமு முன்ஜதிலுன் பைனல் மாயி வத்தீன்* என்று கூறினார்கள். அதாவது இந்த உலகத்தில் முதல் நபி ஆதம் பிறப்பதற்கு முன்பே நான் நபியாவேன்; நான் நுபுவ்வத்தின் மையப் புள்ளியாக இருக்கிறேன் என்று கூறினார்கள்.

இந்த நுட்பமான ஹதீஸில் இறைவன் மற்ற எல்லா நபிமார்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழுமையான, நிறைவான நுபுவ்வத்திற்கு ஆயத்தமாக்குவதற்காகத்தான் உருவாக்கினான் என்ற நுட்பமான கருத்து சுட்டிக்கட்டப்படுவது நோக்கமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் தூதுத்துவத்தின் தொடரின் மையப் புள்ளியாக விளங்கினார்கள். மேலும் அவர்களின் மூலமாகவே இறைவனுடைய ஷரீஅத் தனது முழுமையை அடையவிருந்தது. ஆதமின் மக்களின் தலைவரும், உம்மைப் படைக்கும் நோக்கம் இல்லாதிருந்தால் இந்த உலகத்தைப் படைத்திருக்க மாட்டேன் என்பதற்குப் பொருத்தமானவருமான அப்படிப்பட்ட மிக உயர்ந்த, மிக மேலான, மிகச் சிறந்த ஒருவரைப் பற்றி நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பொருத்தவரை நுபுவ்வத்தின் அந்த பரந்த கட்டடத்தில் வெறும் ஒரு செங்கலுக்கான அந்தஸ்தை அவர் பெற்றிருந்தார் என்று இந்த ஹதீஸுக்கு விளக்கம் தருவது முற்றிலும் அபத்தமான, மறுக்க வேண்டிய விளக்கமாகும். அதை எந்தவொரு தன்மானமுள்ள முஸ்லிமும் ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மை என்னவெனில், இங்கு ஷரீஅத் முழுமையாக்கப்பட்டது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதைத் தவிர வேறொன்றுமில்லை.

## ஷரீஅத்தைக் கொண்ட நபிமார்களின் ஆர்வமூட்டும் குடும்பம்

இன்றைய அரசியல் சொல் வழக்கில் கூறுவதென்றால், இந்த ஹதீஸில் ஒவ்வொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியையும் ஒவ்வொரு தனித்தனியான யூனிட் (அதாவது குடும்பம்) என்ற முறையில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் கருத்து என்னவென்றால், ஷரீஅத்தைக் கொண்ட நபிமார்களை பல்வேறு குடும்பமாக கருதினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதாரணம் கடைசியில் வந்து தனது சந்தர்ப்பத்தில் சேர்ந்து விடுகின்ற அந்த செங்கலை ஒத்திருக்கிறது. மேலும் அது ஷரீஅத்தின் கட்டடத்தை நிரந்தரமாக முழுமை செய்து

விட்டது. இந்தக் கட்டடம் முழுமையடைவதற்கு, இந்த மூலையில் உள்ள கல் ஏன் முழுமையாக்கப்படவில்லை ? என்று ஹதீஸில் வந்துள்ள சொல்லில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது இதுதான். இதன் பொருள், உலகில் ஓர் உலகளாவிய ஷரீஅத்தை இறக்கி ஷரீஅத்தின் கட்டடத்தை முழுமையாக்க வேண்டும். அப்படிப்பட்ட காலம் வந்து விட்டது என மனித இயல்பு உணர்ந்தது; அதை எதிர்பார்த்துக் காத்திருந்தது. அவ்வாறல்லாமல், நுபுவ்வத் பற்றிய விஷயமாக மட்டுமிருந்திருந்தால், இந்த இயல்பான வேண்டுதல், இயல்பான எதிர்பார்ப்பைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு எந்த சந்தர்ப்பமும் இல்லை.

எனவே உண்மை என்னவென்றால், இந்த நுட்பமான ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷரீஅத்தைக் கொண்டு வரும் நபிமார்களில் ஒரு யூனிட்டாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். யூனிட்டின் எண்ணிக்கையில் எல்லா பொருள்களின் எண்ணிக்கை சரிசமமாக இருக்கிறது. சிறியது, பெரியது என எந்த வித்தியாசமும் பாராட்டப்படுவதில்லை என்பதை ஒவ்வோர் அறிவுள்ளவரும் அறிவார். இந்த உதாரணத்தினால் இன்னொரு விஷயமும் தெளிவாகிறது. யூனிட்டைப் பொருத்தவரை ஒவ்வொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியையும், சுதந்திரமான நபியையும் மட்டுமே கணக்கில் கொள்ள முடியும். அங்கு எந்தவொரு நிழலான மற்றும் உம்மதி நபி என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் ஒரு உம்மத்தி நபியின் தகுதி ஒரு கிளையைப் போன்றதாகும். அது தனித்த சுதந்திரமான மரத்தைப் போன்றது அன்று.

அது மட்டுமின்றி, நமது எஜமானர் (ஸல்) அவர்களே இந்த ஹதீஸில் இறுதியில் **காத்தமுன்னபிய்யீன்** என்ற ஞானம் நிறைந்த சொற்களைக் கூறி எல்லா விவகாரத்திற்கும் தீர்ப்பளித்து விட்டார்கள். மேலும் இந்த சொற்களில் முஸ்லிம்களுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். அதாவது, இந்த ஹதீஸிலிருந்து திருக்குர்ஆனின் வசனமாகிய **காத்தமுன்னபிய்யீன்** என்பதற்கு மாற்றமான எந்தப் பொருளையும் நீங்கள் புரிந்து விடக் கூடாது. ஏனெனில் நான் எனக்கு முன் வந்த நபிமார்களைப் பொருத்தவரை ஷரீஅத்தைக் கொண்ட இறுதி செங்கல் என்றால், காத்தமுன்னபிய்யீன் ஆக இருப்பதைப் பொருத்தவரை நான் வருங்கால அமைப்பின் முதல் செங்கலும் ஆவேன். இனி மறுமை வரை எனது முத்திரையே செல்லுபடியாகும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

சுருக்கம் என்னவென்றால், இந்த ஹதீஸின் ஞானம் நிறைந்த சொற்களிலிருந்து தெளிவாவதைப் போன்று, இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் அந்தஸ்தைக் குறிப்பிடுவது ஒருபோதும் நோக்கமன்று; மாறாக, ஒரு யூனிட் என்ற முறையில் தனிச் சிறப்பான முறையில் அவர்களின் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தைச் சுட்டிக்காட்டுவது உண்மையான நோக்கமாகும். நோக்கம் என்னவெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மனித இயல்பு உலக நிலைமைகளின் காரணமாக ஓர் உலகளாவிய, நிரந்தரமான ஷரீஅத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. மேலும் அந்த இயல்பான எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத் நிரந்தரமாக நிறைவேற்றி விட்டது. இந்த விளக்கம்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக உயர்வான மகத்துவத்திற்கும் திருக்குர்ஆனுடைய ஷரீஅத்தின் மிக மேலான அந்தஸ்திற்கும் ஏற்ப பொருத்தமானதாக இருக்கிறது. அவ்வாறில்லையென்றால், ஒரு பரந்த கட்டடத்தில் அவர்களின் அந்தஸ்து ஒரு செங்கல்லை விட அதிகமானதன்று என்று நம்ப வேண்டியது வரும் – நவூது பில்லாஹ்.

## முப்பது பொய்யர்கள் என்ற ஹதீஸுக்கான விளக்கம்

இப்போது நான் எதிர்மறையான கருத்தைக் கொண்ட ஹதீஸுகளில் கடைசி ஹதீஸை எடுத்துக் கூறுகின்றேன். அதில் உண்மையில் நமது கொள்கைக்கு எதிரான எந்த விஷயமுமில்லை. ஆனால் அறிவற்றவர்கள் இதை வழக்கப்படி எள்ளிநகையாடுவதற்கான ஆயுதமாக ஆக்கிக் கொள்கின்றனர். இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

سَيَكُونُ فِي أُمَّتِي ثَلَاثُونَ كَذَّابُونَ كُلُّهُمْ يَزْعُمُ أَنَّهُ نَبِيٌّ وَأَنَا
خَاتَمُ النَّبِيِّينَ لَا نَبِيَّ بَعْدِي

**ஸயகூனு ஃபீ உம்மதீ ஸலாஸூன கஸ்ஸாபூன். (வஃபீ ரிவாயத்தின் ஸலாஸூன தஜ்ஜாலூன்) குல்லுஹூம் யஸ்வுமு அன்னஹூ நபிய்யுன். வஅனா காத்தமுன்னபிய்யீன். லா நபிய்ய பஃதீ.**

அதாவது, மிக அண்மையில் எனது உம்மத்தில் 30 பொய்யர்கள் தஜ்ஜால்கள் தோன்றுவார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தன்னை நபி என வாதிப்பார். ஆனால் நான் காத்தமுன் நபிய்யீன் ஆக இருக்கிறேன். எனக்குப் பிறகு (அதாவது எனக்கு எதிராக) எந்த நபியுமில்லை. ***(சுனன் திர்மிதி. கிதாபுல் ஃபித்ன் காண்க).***

இந்த ஹதீஸை எடுத்து வைத்து நமது எதிர் தரப்பு மவ்லவிகள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபி என வாதிக்கும் ஒவ்வொருவரும் தஜ்ஜாலும் பொய்யரும் ஆவார் என கூச்சலிடுகின்றனர். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களையும் இந்த ஹதீஸுக்குப் பொருத்திக் காட்டி அவர்களின் கற்பனைப்படி ஏசிப்பேசியும், பழித்துரைத்தும் வருகின்றனர். ஆனால் இது தற்போது நிரூபணமாகவிருப்பதைப் போன்று, இந்த ஆட்சேபணை முட்டாள்தனத்தின் மேலெழுந்தவாரியான ஒரு கொதிப்பு ஆகும். அது வெறும் அவசரபுத்தியினாலும், பார்வைக் குறைபாட்டினாலும் உருவானதாகும். மற்றபடி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்துடன் இதற்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இது தொடர்பாக முதன் முதலில் நாம் நினைவிற் கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே இந்த ஹதீஸில், **அனா காத்தமுன்னபிய்யீன்** மற்றும் **லா நபிய்ய பஃதீ** என்ற சொற்களை பயன்படுத்தி, இந்த இடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை ரத்து செய்து அவர்களின் நுபுவ்வத்திற்கான காலகட்டத்தை முறித்து ஒரு புதிய மார்க்கத்தை, ஒரு புதிய ஷரீஅத்தைக் கொண்டு வந்ததாக வாதிக்கும் நுபுவ்வத் வாதிகளாவர் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரின் விவகாரம் எந்நிலையிலும் இந்த ஹதீஸின் கீழ் வர முடியாது.

இன்னொரு விஷயம் கவனத்திற் கொள்ளத் தக்கதாகும். இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனது உம்மத்தில் 30 தஜ்ஜால், பொய்யர்கள் தோன்றுவார்கள்; அவர்கள் நுபுவ்வத்திற்கான வாதம் செய்வார்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எவர் நுபுவ்வத்திற்கான வாதம் புரிந்தாலும் அவர் பொய்யர் ஆவார் என

ஒருபோதும் கூறவில்லை. இவ்விரு விஷயங்களிலும் மிகப் பெரும் வித்தியாசம் இருக்கிறது. எந்தவோர் அறிவுள்ளவரும் இவ்விரண்டையும் ஒன்று எனக் குறிப்பிட மாட்டார். எனது உம்மத்தில் 30 தஜ்ஜால், பொய்யர்கள் தோன்றுவார்கள்; அவர்கள் நுபுவ்வத்திற்கான வாதம் செய்வார்கள் என்று கூறிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுருக்கமாக எனது உம்மத்தில் எவர் நுபுவ்வத்திற்கான வாதம் செய்தாலும் அவர் பொய்யர் ஆவார் என்று கூறியிருக்க முடியாதா என்ன? இவர்களின் அறிவுகளின் மீது எந்த அளவுக்கு திரை விழுந்திருக்கின்றது? ஒரு தெளிவான நேரான விஷயத்திலிருந்து முற்றிலும் நேர்மாற்றமான கருத்து கொள்ளப்படுகிறது! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ, எனது உம்மத்தில் 30 பொய்யான நுபுவ்வத்தை வாதம் செய்பவர்கள் தோன்றுவார்கள் எனக் கூறுகிறார்கள். ஆனால் இந்த சொற்களில் பேராசையூட்டியவாறு,எவர் நுபுவ்வத்தை வாதித்தாலும் அவர் பொய்யரும், தஜ்ஜாலும் ஆவார் என்ற கருத்து திணிக்கப்படுகிறது! ஹதீஸின் தெளிவான சொற்களைக் கண்டவாறு தெரிந்து கொண்டே செய்யும் இந்த தைரியத்தைப் பற்றி, 'தன் கையில் விளக்கையும் ஏந்திக்கொண்டு திருடும் திருடன் எவ்வளவு தைரியசாலியாக இருக்கிறான்?' என்று கூறுவதைத் தவிர நாம் வேறு என்ன சொல்ல முடியும்?

## எண்ணிக்கையை வரையறுத்துக் கூறியதில் உள்ள ஞானம்

அது மட்டுமின்றி, இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள 30 என்ற எண்ணிக்கையும், இங்கு பொய் நபிமார்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டும்,வரையறுத்தும் கூறுவது உண்மை நோக்கமேயன்றி, எவர் வந்தாலும் அவர் பொய்யர் ஆவார் என்பதைக் குறிப்பிடுவது அன்று என்பதற்கு சாட்சியாக இருக்கிறது. இன்னும் கூறுவதாயின், மேலும் சிந்தித்தால், இந்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டதில், பாருங்கள். எல்லா வாதிகளையும் மறுத்து விடக் கூடாது; மாறாக, சில வாதிகள் உண்மையாளர்களாகவும் இருப்பார்கள் என்ற மறைமுகமான சுட்டிக்காட்டுதலும் உள்ளது. சகோதரர்களே! சிந்தியுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு வரும் எல்லா நபித்துவ வாதியும் பொய்யர் என்பது அவர்கள் கூற வந்த கருத்து என்றால், அவர்கள் 30 என்று வரையறுத்துக் கூறியிருக்க மாட்டார்கள். மாறாக, எனக்குப் பிறகு எவர்

நுபுவ்வத்திற்கான வாதம் செய்தாலும் அவர் பொய்யராவார் எனக் கூறியிருப்பார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு கூறவில்லை. மாறாக, எனக்குப் பிறகு 30 பொய்யர்கள் தோன்றுவார்கள் எனக் குறிப்பிட்டார்கள். இதில் அந்த பொய்யர்கள் நீங்கலாக சில வாதிகள் உண்மையாளர் களாகவும் இருப்பார்கள் என்ற தெளிவான சைகை இருக்கிறது. இது சுனன் அபீ தாவூதில் உள்ள ஹதீஸில் கூறப்பட்டுள்ள அதே நிலைதான். அதனை நாம் முன்னர் எடுத்துக் கூறியிருக்கிறோம். அந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ بَيْنِيْ وَبَيْنَهٗ نَبِيٌّ وَاِنَّهٗ نَازِلٌ

**லைஸ பைனீ வபைனஹூ நபிய்யுன். வ இன்னஹூ நாஸிலுன்.**

*(அபூதாவூது, கிதாபுல் மலாஹிம்)*

அதாவது, ''**எனக்கும் வரவிருக்கும் மஸீஹுக்கும் இடையில் எந்த நபியும் இருக்க மாட்டார்.**''

இந்த நுட்பமான ஹதீஸ், எவ்வளவு தெளிவாகவும், கருத்துச் செறிவுடனும் ஸலாஸூன தஜ்ஜாலூன் (30 பொய்யர்கள்) என்ற ஹதீஸுக்கு விளக்கமளித்தவாறு சந்தேகத்திற்கிடமின்றி, முஹம்மதிய்ய உம்மத்தில் 30 பொய் நபித்துவ வாதிகளும் தோன்றுவர். ஆனால் ஓர் உண்மையான நபியும் தோன்றுவார். அவரே இறுதி காலத்தில் மஸீஹுக்கு ஒப்பானவராகத் தோன்றுப வராவார் என்பதை விளக்கமாக எடுத்துரைக்கிறது! ஆக, இந்த இரண்டு ஹதீஸுகளினாலும் கூற வந்த கருத்து, வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு முன்னர் பல பொய்யான நபித்துவ வாதிகள் தோன்றிக் கொண்டிருப்பார்கள். ஆனால் பின்னர் பொய் வாதிகளின் தோற்றம் முடிவுக்குக் கொண்டு வரப்படும். உண்மையான வாதி தோன்றுவார்.

## முப்பது பொய்யர்களின் எண்ணிக்கை நிறைவடைந்து விட்டது

இந்த 30 பொய் வாதிகளின் எண்ணிக்கை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தோன்றுவதற்கு முன்னரே நிறைவேறி விட்டது என வரலாற்றிலிருந்து திட்டவட்டமாக நிரூபணமாகின்றது. உதாரணமாக,

அல்லாமா கஸ்தலானீ அவர்கள் தமது புகழ் பெற்ற நூலாகிய மவாஹிபுல் லதுன்யா என்பதில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“காஸீ இயாஸ் அவர்கள் கூறுகிறார்கள். இந்த ஹதீஸின் உண்மை வெளிப்பட்டு விட்டது. ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து இன்று வரை தெளிவாக வெளிப்பட்ட பொய்யான நுபுவ்வத் வாதிகளை கணக்கிட்டுப்பார்த்தால் இந்த எண்ணிக்கை நிறைவடைகிறது. வரலாற்றைப் படிப்பவர்களுக்கு இந்தக் கூற்றின் உண்மை புலப்பட்டு விடும்.” ***(மவாஹிபுல் ல துன்யா தொகுதி 2 பக்கம் 198)***

## ஹஸ்த் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையான அறிவிப்பு

இதே மாதிரியான சாட்சியம் சஹீஹ் முஸ்லிமின் விளக்கவுரையான இக்மாலுல் இக்மால் என்பதிலும் அஹ்லே ஹதீஸின் தலைவர் நவாப் சித்தீக் ஹஸன் கான் எழுதிய ஹுஜ்ஜுல் கராமா என்பதிலும் காணப்படுகிறது. ஆனால் மீண்டும் மீண்டும் புரிய வைத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக மவ்லவிகள், அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்த 30 தஜ்ஜால்களில் ஒருவராவார் என கூக்குரலிடுகின்றனர் - நவூது பில்லாஹ். எனவே கடைசியில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஈமானிய தன்மான உணர்வு மற்றும் முஃமினுக்குரிய கம்பீரத்தை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:**

“சில அரைவேக்காட்டு முல்லாக்கள் என் மீது ஆட்சேபணை செய்தவாறு, உங்களிடம் 30 தஜ்ஜால் தோன்றுவார்கள் என நமது நபி (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள் எனக் கூறுகின்றனர். அதற்குரிய விடை என்னவெனில், அறிவிலிகளே! பேறிழந்தவர்களே!! உங்களுடைய விதியில் 30 தஜ்ஜால் மட்டும்தான் எழுதப்பட்டிந்தனவா? (வேறு எந்த உண்மையான சீர்திருத்த வாதியும் உங்களின் தலைவிதியில் இருக்கவில்லையா?) 14-ஆம் நூற்றாண்டின் 5-ஆம் பகுதியும் கழியவிருக்கின்றது. கிலாஃபத்தின் சந்திரன் தனது முழுமையான 14 படித்தரங்களையும் முழுமையாக்கி விட்டது.

இதனையே *வல் கமரு கத்தர்னாஹு மனாஸில* என்பதும் சுட்டிக்காட்டுகிறது.(அதாவது நாம் சந்திரனாகிய அதற்கு பல நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளோம். 36:40 காண்க.). உலகம் முடியப் போகின்றது. ஆனால் உங்களின் தஜ்ஜால் முடிவுக்கு வர மாட்டேன் என்கிறான், ஒருவேளை அவன் உங்கள் மரணம் வரை உங்களுடன் இருப்பான் போலும். அறிவிலிகளே! ஷய்த்தான் என அழைக்கப்படும் தஜ்ஜால் உங்களிடத்தில் இருக்கிறான். எனவே நீங்கள் காலத்தை அடையாளம் கண்டு கொள்வதில்லை.உங்கள் மீது எவ்வளவு வருத்தம்! என்னைப் போன்று மூஸாவுக்குப் பிறகு பதினான்காவது நூற்றாண்டில் தோன்றியவருக்கும் தீய யூதர்கள் தஜ்ஜால் என்றே பெயர் வைத்தனர்.

فالقُلوب التشبهت اللّهمّ ارحم

அவர்களின் உள்ளங்கள் ஒன்றுபோல் ஆகி விட்டன. அல்லாஹ்வே! கருணை காட்டுவாயாக." ***(ரிவியூ பர் முபாஹிஸா பட்டால்வி வ சக்டால்வி பக்கம் 7)***

அல்லாஹ்! அல்லாஹ்!! இது எவ்வளவு உருக்கமான, வேதனை மிக்க கூற்றாகும்!!! தமது சமுதாயத்தின் இழப்பிற்குரிய நிலையைக் கண்டு பல ஆண்டுகளாக அமிழ்ந்து கிடந்த உணர்வு பொங்கி எழுந்திருக்கிறது. ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில், எள்ளிநகையாடுபவர்கள் இதன் பிறகும் அமைதியாகவில்லை. நம்பாதவர்கள், பிறகும் நம்பவில்லை. உறங்குபவர்கள், பிறகும் விழித்தெழவில்லை. சமுதாயம் எனும் கப்பல் வெள்ளத்தின் ஒரு சுழற்சியிலிருந்து வெளியேறி இன்னொரு சுழற்சியில் சிக்கிக் கொண்டே சென்றது.

சுருக்கமாகக் கூறுவதென்றால், 30 தஜ்ஜால் என்ற ஹதீஸில், 30 பொய் வாதிகள் தோன்றுவார்கள் என்றுதான் கூறப்பட்டிருக்கின்றதே தவிர உண்மையாளர் எவருமே தோன்ற மாட்டார் எனக் கூறவில்லை. மேலும் இந்த 30 பொய்யர்கள் தத்தமது காலத்தில் தோன்றி முடிந்து விட்டனர் என்றும் நாம் நிரூபித்து விட்டோம். மேலும் நமது எஜமானர் (ஸல்) அவர்களின் இன்னொரு முன்னறிவிப்புக்கேற்ப இறைவனிடமிருந்து சீர்திருத்தவாதியும் தோன்றி விட்டார். அவரைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கும் அவருக்கும் இடையில்

நபியில்லை என்று கூறினார்கள். இனியும் நமது சகோதரர்களுக்கு தமது சமுதாயத்தில் தஜ்ஜாலைத்தான் இன்னும் எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்றால் அவர்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய கீழ் வரும் சொற்களைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? அவர்கள் (பாரசீகக் கவிதையில்) கூறுகிறார்கள்:

“இன்று எனது சமுதாயம் எனது அந்தஸ்தை புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ஒருநாள் வரும். அப்போது மக்கள் இந்த காலத்தை அழுதவாறு நினைவு கூருவார்கள்.”

இப்போது இறைவனின் அருளாலும் அவனால் வழங்கப்பட்ட நல்வாய்ப்பினாலும் இந்த எளியவன் ‘இறுதி நபித்துவம்’ என்ற இந்த விவகாரம் தொடர்பான வாதத்தை நிறைவு செய்கிறேன். இந்த வாதத்தில் 6 ஹதீஸுகள் நேர்மறை அம்சத்தைக் கொண்டவையாகவும், 6 ஹதீஸுகள் எதிர்மறை அம்சத்தைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. இது தற்செயலாக அமைந்த ஒரு நல்வாய்ப்பாகும். மேலும் இந்த 12 ஹதீஸுகளில் செய்யப்பட்டுள்ள வாதங்கள் ஒரு தூய உள்ளம் கொண்ட மனிதருக்குப் போதுமானவையாகவும், திருப்தியளிக்கக் கூடியவையாகவும் இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இன்னும் கூறுவதாயின், இந்த வாதத்திற்கு இடையில் எப்படிப்பட்ட அடிப்படையான விஷயங்களும் வந்து விட்டனவென்றால் அவற்றின் மூலம் இந்த ஹதீஸின் கருத்துடன் ஒன்றுபட்ட அதிகப்படியான ஹதீஸுகளுக்கும் எளிதான முறையில் தீர்வு காணலாம். ஆனால் சுருக்கமாகக் கூற வேண்டும் என்பதனால் அவை இந்த ஆய்வில் இணைக்கப்படவில்லை.

உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவிக்கும் திருக்குர்ஆனின் நேர்வழி எல்லாவற்றையும் விட உயர்ந்ததும், எல்லாவற்றிற்கும் தீர்ப்பளிக்கக் கூடியதுமாகும். அது அதிகப்படியானதாகும். ஆயினும் எவ்வாறு கண்ணொளியின்றி சூரிய ஒளி பயனற்றதோ அவ்வாறே திருக்குர் ஆன், ஹதீஸின் ஒளியும் எவர் தன் உள்ளத்தில் தூய எண்ணத்தையும், உண்மையைத் தேட வேண்டும் என்ற ஒளியையும் கொண்டிருக்கிறாரோ அவருக்கே பயன் தர முடியும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

எனவே நான் இந்த கட்டுரையின் அடுத்த பகுதியை துவக்குவதற்கு முன், நமது வாசகர்களிடம், நீங்கள் இறையச்சத்தை முன்னிறுத்தியவாறு உண்மையைத் தேடுபவர்களாக மாறி, (இந்த உண்மை அவர்களின் தற்போதைய கொள்கைக்கு ஏற்றதாக இருந்தாலும் அல்லது மாற்றமானதாக இருந்தாலும் சரியே) திருக்குர்ஆன், ஹதீஸின் சான்றுகளை பொறுமையுடன் சிந்தியுங்கள் என மீண்டும் ஒருமுறை வேண்டுகிறேன். ஏனெனில் ஈமான் தொடர்பான விஷயங்கள் மிகவும் நுட்பமானவையாக இருக்கின்றன. இதில் கொஞ்சம் தடுமாற்றமடைந்தாலும் அது மனிதனை இறை கோபத்திற்கு ஆளாக்கி விடுகிறது. எனவே அன்பர்களே! நண்பர்களே!! உங்களுடைய தற்போதைய கொள்கைகள் என்ன? என்றோ அல்லது நீங்கள் உங்கள் மூதாதையர்களிடமிருந்து என்ன கேள்விப்பட்டீர்கள்? என்றோ அல்லது உங்களின் மவ்லவிகள் என்ன கூறுகின்றனர் என்றோ பார்க்காதீர்கள். மாறாக, திருக்குர்ஆன் என்ன வழிகாட்டுகிறது? ஹதீஸ் என்ன மார்க்கத் தீர்ப்பு கூறுகிறது? உங்களுடைய ஒளிமிக்க உள்ளம் என்ன நேர்வழி காட்டுகிறது எனப் பாருங்கள். உங்களுடைய உள்ளங்களின் நிலைமைகளை அல்லாஹ் அறிகிறான். நமக்கு மனத்தூய்மை, அன்பு, உண்மையைப் பரப்புவது ஆகிய உணர்வைத் தவிர வேறெந்த சிந்தனையுமில்லை. எங்களின் இமாம் முன்னரே எங்களுக்கு இவ்வாறு கூறியிருக்கிறார்கள்:

''நமக்கு எவ்வித வெறுப்புமில்லை சகோதரர்களே! இது தாழ்மையான அறிவுரையாகும். ஏதாவது தூய உள்ளம் இருந்தால் அதன் மீது உள்ளமும், உயிரும் தியாகமாகும்.''

## மார்க்க சான்றோர்களின் கூற்றுகளின் அடிப்படையில் இறுதி நபித்துவம் என்பதற்கான தீர்வு

### இந்தக் கூற்றுகளை எடுத்து வைப்பதில் உள்ள இரு குறிக்கோள்கள்

ஹதீஸுகளைப் பற்றி விவாதித்த பின்னர் இப்போது நான் மிகவும் சுருக்கமாக சென்ற கால சான்றோர்களின் கூற்றுகளை எடுத்துரைக்க விரும்புகிறேன். அவற்றில் அவர்கள், இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக எடுத்து வைக்கப்படும் அதே மாதிரியான கூற்றுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நமக்கோ அல்லது நமது

எதிரிகளுக்கோ இந்த சான்றோர்களின் எல்லா கூற்றும் சான்றாக ஒப்புக் கொள்ளத்தக்கது என்ற நோக்கத்தில் எடுத்து வைக்கப்படவில்லை. (ஏனெனில் இந்த அந்தஸ்து இறைவனுக்கும், அவனது தூதருக்கும் உரியதாகும். அவர்களைத் தவிர வேறு யாருக்குமில்லை). மாறாக, நான் இந்தக் கூற்றுக்களை ஏன் எடுத்துரைக்கிறேன் என்றால், நாம் இந்த விஷயத்தில் எந்தவொரு புதிய விஷயத்தையும் எடுத்துரைக்கவில்லை. மாறாக, நமக்கு முன்னர் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்து சென்ற இந்த உம்மத்தைச் சேர்ந்த சான்றோர்கள், நல்லடியார்கள் கூறி வந்த அதே விஷயத்தைத்தான் நாம் கூறியிருக்கிறோம்.

அது மட்டுமின்றி, தொன்மையான நடைமுறையின்படி, ஒரு காலத்திற்குப் பிறகு எனது உம்மத்தின் சிந்தனைகள் மற்றும் செயல்களிலும் குழப்பம் தோன்றும். ஆயினும் எனது உம்மத் ஒருபோதும் முழுவதுமாக மோசமாகி விடாது. இதன் ஏதாவதொரு பகுதி உண்மை மற்றும் சத்தியத்தில் நிலைத்திருக்கும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

**லா தஸாலு தாயிஃபத்துன் மின் உம்மத்தீ அலல் ஹக்கி லா யழுர்ருஹும் மன் காலஃபஹும் ஹத்தா யஃதிய அம்ருல்லாஹ்.**

“ எனது உம்மத்தின் ஏதாவதொரு பகுதி எப்போதும் உண்மையில் நிலைத்திருக்கும். மேலும் அவர்களின் எதிர் கருத்து கொண்ட மக்களும் அவர்களின் பலவீனமான காலகட்டத்தில் அவர்களுக்கு எந்த நஷ்டத்தையும் ஏற்படுத்த முடியாது. எதுவரையென்றால், அல்லாஹ் அவர்களின் வெற்றிக்கான எல்லா வழிகளையும் திறந்து விடுவான்.” ***(அபூதாவூது – கிதாபுல் ஃபிதன்)***

எனவே நூலாசிரியராகிய இந்த எளியவன் இந்த இரு நோக்களுக்காகத்தான் சென்ற கால மார்க்க சான்றோர்களின் கூற்றுகளை கீழே எடுத்துரைக்கிறேன்:

1. கத்மே நுபுவ்வத் கொள்கை பற்றி தற்காலத்தில்அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக எடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற இதே கருத்தைத்தான் இஸ்லாத்தின் தனிச்சிறப்பான பல சான்றோர்கள், எல்லா காலத்திலும் ஏறக்குறைய வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். எனவே

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை இந்த சிந்தனைகளின் காரணத்தினால் காஃபிராகவோ இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேறியவராகவோ கூறி முடியாது. அவ்வாறில்லையென்றால், நமக்கு முன்னர் இதே மாதிரியான சிந்தனைகளை வெளிப்படுத்திய அந்த சான்றோர்களைப் பற்றி இவர்கள் என்ன கூறப் போகிறார்கள்?

**2.** இந்தக் கொள்கைகள் நிலைபெற்றிருப்பது, இந்த குறிப்பிட்ட விவகாரத்திலும் நமது எஜமானர் (ஸல்) அவர்களின் 'எனது உம்மத்தின் ஏதாவதொரு பகுதி எப்போதும் உண்மையில் நிலைத்திருக்கும்' என்ற அருளுக்குரிய கூற்று நிறைவேறி இருக்கிறது என்பதற்கு தெளிவான சான்றாகும். மேலும் அல்லாஹ்வின் அருளினாலும், கருணையினாலும் இக்காலத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தே **லா யழுர்ருஹும் மன் காலஃபஹும் ஹத்தா யஃதிய அம்ருல்லாஹ்** என்ற இந்த நற்செய்திக்கு பொருத்தமானதாகும். அதாவது இடைப்பட்ட சோதனைகள் இருந்தபோதிலும் கடைசி வெற்றி அதற்கே கிடைக்கும்.

## நுபுவ்வத் விவகாரத்தில் எப்போது எவ்வாறு தவறான எண்ணம் ஏற்பட்டது?

தனி நபர்களின் சான்றுகளை எடுத்துரைப்பதற்கு முன், கத்மே நுபுவ்வத் விவகாரம் தொடர்பாக முஸ்லிம்களிடம் எப்போது, எவ்வாறு தவறான எண்ணம் ஏற்பட்டது என்ற ஒரு கேள்விக்கு விடையளிப்பதும் அவசியமானதாகும். இந்தக் கேள்விக்குரிய விடையாக நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், திருக்குர்ஆன், ஹதீஸிலிருந்து நமது எஜமானர் (ஸல்) அவர்கள் தூதுத்துவ தொடரின் மையப் புள்ளி ஆவார்கள் என நிரூபணமாகின்றது. ஏனெனில் அவர்களே, **குன்த்து நபிய்யன் வ ஆதமு முன்ஜதிலுன் பைனல் மாயி வத்தீன்** எனக் கூறினார்கள். அதாவது, ஆதம் உருவாவதற்கு முன்பே நான் நபியாக இருக்கிறேன்.

இந்த ஞானம் நிறைந்த கூற்றின் கருத்து, இந்த அனைத்து நுபுவ்வத், ரிஸாலத் ஆகியவற்றின் தொடரை இறைவன் உருவாக்கியதன் நோக்கமே அதனை கடைசியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழுமையான, நிறைவான நுபுவ்வத்தில் அதன் உயர்ந்த இடம் வரை கொண்டு செல்ல வேண்டும் என்பதேயாகும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

அவ்வாறே அல்லாஹ் அவர்களிடம் **லவ் லாக்க லமா கலக்த்துல் அஃப்லாக்** என்றும் கூறியிருக்கிறான். அதாவது முஹம்மதே! நீர் இல்லையென்றால் நான் இந்த வானம் பூமி ஆகியவற்றைப் படைத்திருக்க மாட்டேன். இதன் கருத்து, ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் நுபுவ்வத் தொடருக்கு மட்டும் இறுதி எல்லையை எட்டியவரும் குறிக்கோளும் அல்லர். மாறாக, ஆன்மீக உலகத்தின் இறுதி எல்லையை எட்டியவரும் அதன் குறிக்கோள் ஆவார்கள்.

எனவேதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்

أَنَاسَيِّدُوَلَدِآدَمَ وَلَافَخْرَ – وَأَنَا أَكْرَمُ الْأَوَّلِيْنَ وَالْآخِرِيْنَ وَلَافَخْرَ

**அன ஸய்யிது உல்தி ஆதம வலா ஃபக்ர்.** *(முஸ்லிம். அல்ஃபஸாயில் ஹதீஸ் எண்: 4225)* **வ அன அக்ரமு அவ்வலீன வல் ஆகரீன். வ லா ஃபக்ர்***(திர்மிதி. அல்மனாகிப். ஹதீஸ் எண்: 3549)* எனக் கூறினார்கள். அதாவது நான் ஆதமின் மக்கள் அனைவருக்கும் தலைவராக இருக்கிறேன். ஆனால் இதன் காரணமாக நான் எந்தப் பெருமையும் கொள்வதில்லை; நான் முன்னவர்களிலும், பின்னவர்களிலும் இறைவனிடம் அனைவரையும் விட சிறந்தவனாக இருக்கிறேன். ஆயினும் இதன் காரணமாக நான் எந்தப் பெருமையும் கொள்வதில்லை என அவர்கள் மீண்டும் மீண்டும் அறிவிப்பதை நாம் பார்க்க முடிகிறது. இதன் காரணமாகத்தான் அவர்களுக்கு அனைத்து ஷரீஅத்துகளை விடவும் சிறப்பான, நிரந்தரமான, உலகளாவிய ஷரீஅத் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்குப் பிறகு மறுமை வரை வேறு எந்த ஷரீஅத்தும் இல்லை.

ஆக, இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்து என்றால், அவர்களின் ஷரீஅத்திற்கு இந்த நிகரற்ற மகத்துவம் என்றால் அவர்கள் இறைவனால் வழங்கப்பட்ட இந்த பதவியைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கும் அதே மாதிரியான சிறப்பான சொற்களை பயன்படுத்துவது அவசியமாக இருந்தது. அப்போதுதான் தூதுத்துவத்தின் முந்தைய அனைத்து இணைப்பும் அன்னாருடன் வந்து சேர்ந்து முடிந்து விடுகிறது என்பதும் இனி அனைத்து இணைப்புகளும் அவர்களுடன் இணைந்து வெளிவரும் என்பதும் உலகிற்கு தெளிவாக முடியும். இதன்படி நுபுவ்வத்தைப் பற்றி அவர்கள் கூறிய அத்தனை அறிவிப்புகளும், எவ்வித விதிவிலக்குமின்றி, ஆன்மீக உலகில்

தலைமைப் பொறுப்பு அவர்களுக்கே இருக்கிறது என்ற கருத்தையே சுற்றி வருகின்றன. சென்ற கால எல்லா முழுமைத்தன்மையும் அவர்களிடம் ஈர்க்கப்பட்டு முடிவடைந்தது. மேலும் இனி ஒவ்வோர் ஒளியும் அவர்களிடமிருந்தே வெளிப்படும். இதற்கு மின்மாற்றியை (Transformer) உதாரணமாகக் கருதலாம். அதில் ஒரு புறமிருந்து மின்சாரத்தின் அலை உள்ளே நுழைகிறது. பின்னர் மறு பக்கம் அது ஒரு புதிய நிலையாக மாறி புதிய மின்சாரமாக மாறி வெளியேறுகிறது.

## ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்தஸ்து பற்றிய தவறான எண்ணம்

அவர்களின் இந்த நிகரற்ற அற்புதமான அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்காக திருக்குர்ஆன் காத்தமுன்னபிய்யீன் என்ற **கருத்துகளை ஒருங்கே கொண்ட மரபுச் சொல்லைக்** கையாண்டுள்ளது. ஆனால் ஹதீஸ் சந்தர்ப்பத்திற்கேற்ப பல்வேறு விதமான சொற்கள் மற்றும் உவமைகளை பயன்படுத்தி, இந்த அரிய உண்மையை தெளிவுபடுத்த முயற்சி செய்திருக்கிறது. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சில நேரத்தில், நான் இறுதி நபியாவேன் எனக் கூறினார்கள். சில நேரத்தில் எனக்குப் பிறகு எந்த நபியுமில்லை எனக் கூறினார்கள். சில நேரத்தில் நுபுவ்வத்தும் ரிஸாலத்தும் என்னுடன் முற்றுப் பெற்று விட்டது என்று கூறினார்கள். இன்னும் சில நேரத்தில் நான் நுபுவ்வத் எனும் மாளிகையின் இறுதி செங்கல் ஆவேன் எனக் கூறினார்கள். **உண்மையில் இந்த அனைத்து சொற்களும் ஒரே கருத்தைக் கொண்டவையும், ஒரே உண்மையை எடுத்துக் கூறுபவையுமாகும். மேலும் இந்த உண்மையை திருக்குர்ஆன் தனது கருத்துகளை ஒருங்கே கொண்ட சொல்லாகிய காத்தமுன்னபிய்யீன் என்பதில் விளக்கிக் கூறி விட்டது.** அதன் கருத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆன்மீக உலகின் மையப் புள்ளி ஆவார்கள் என்பதேயாகும். சென்ற கால அனைத்து இணைப்புகளும் அன்னாரிடம் வந்து முடிவடைந்தன. இனி வருங்காலத்தில் ஒவ்வோர் இணைப்பும் அன்னாரிடமிருந்து வெளிப்பட்டு புதிய கோணத்தில் வெளிப்படும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேரடியான தர்பிய்யத்தின் கீழ் இருந்த சஹாபாக்களின் தூய ஜமாஅத் முழுமையான

முறையில் இந்த அரிதான உண்மையை, ஆன்மீக தத்துவத்தை நன்றாக அறிந்திருந்தது; புரிந்திருந்தது. அவர்களுக்கு இந்த விவகாரத்தில் எந்த தவறான எண்ணமும் இருக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் அரபு நாட்டின் வெகு தொலைவிலுள்ள பகுதிகளிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவினார்கள். *யத்குலூன ஃபீதீனில்லாஹி அஃப்வாஜா* (மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் இணைவார்கள்) என்ற காலம் வந்தது. அப்போது புதிதாக முஸ்லிம் ஆனவர்களில் ஒரு பகுதியினர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த அறிவிப்புகள், மரபுச் சொற்கள் ஆகியவற்றிலுள்ள உண்மை நிலையை புரியாதவாறு தமது கற்பனைக் கேற்ப சுய விளக்கங்களைக் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். சஹாபிகளுக்குப் பின்னர் வந்த இந்த புது முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஞானம் நிறைந்த கூற்றாகிய **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்றும், **'இன்னீ ஆகிருல் அன்பியா' (நான் இறுதி நபியாவேன்)** என்றும் கேள்விப்பட்டு வந்தனர். இந்த சொற்களின் உண்மை நிலை என்ன என்பதில் சிலர் குழம்பிப் போயிருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த பொருளில் முந்தைய, பிந்தைய இணைப்புகளுக்கு தலைமையாக தம்மைக் குறிப்பிட்டார்கள் என்ற ஆழமான, ஆன்மீகத் தத்துவத்தின் அடிப்படையான உண்மையைப் புரியாதிருந்தார்கள். மேலும் இஸ்லாமிய போதனையின் தலையாய போதனை கலிமா தய்யிபாவாகிய லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதாகும். மேலும் இந்த கலிமா தய்யிபாவில் கத்மே நுபுவ்வத் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. மேலும் எந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஐந்து தூண்களைக் குறிப்பிட்டார்களோ அதிலும் கத்மே நுபுவ்வத் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. எனவே அவர்கள் இந்த வாதத்தை ஒரு அதிகப்படியான அறிவு பற்றிய விவகாரமாகக் கருதி மவுனமாக இருந்தார்கள்.

## இஸ்லாத்தின் வெளிப்படையான எல்லைக்குட்பட்ட விஷயம் பற்றிய குறிப்பு

இன்னொரு விஷயமும் குறிப்பாக கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தி இருப்பது போன்று, இஸ்லாத்தின்

வெளிப்படையான எல்லைக்குட்பட்ட விஷயம், கலிமா தய்யிபாவாகிய லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பது மட்டுமேயாகும். எனவே எவர் இந்த கலிமாவின் மீது ஈமான் கொள்கிறாரோ இறைவனை ஒருவன் என்று நம்புவாரோ முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை உண்மைப்படுத்துவாரோ அவர் இஸ்லாம் என்பதன் வெளிப்படையான இலக்கணத்தின் அடிப்படையில் முஸ்லிம் என அழைக்கப்படுவதற்கும் முஹம்மதிய்ய உம்மத்தின் உறுப்பினர் எனக் கருதப்படுவதற்கும் உரிமை பெற்றவராகி விடுகிறார். மற்ற விஷயங்கள் மார்க்கத்தின் முழுமைத்துவம் மற்றும் உட்புறமான உண்மைத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புடவையாகும். அவற்றிக்கு இஸ்லாத்தின் வெளிப்படையான எல்லைக்குட்பட்ட விஷயத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை.

எனவே கலிமா கூறும் ஒருவர் - அவர் எவராக இருந்தாலும், எந்த பிரிவுடன் தொடர்புடையவராக இருந்தாலும் அரசு உரிமைகளின் அடிப்படையில் அவர் முஸ்லிம் எனக் கருதப்படுவார். அவரை அவருடைய மற்ற மார்க்க குறைபாடுகள் மற்றும் குறைவுகளின் காரணமாக முழுமையான அல்லது உண்மையான முஸ்லிம் எனக் கருதாவிட்டாலும் சரியே. இதுவே திருக்குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் நிரூபணமாகும் உண்மையாகும். மேலும் இதற்கேற்பவே இஸ்லாத்தின் வெளிப்படையான, அரசு அளவிலான அமைப்பு நிலைநாட்டப்பட்டுள்ளது. எனவேதான் ஆரம்ப கால முஸ்லிம்கள் இன்னும் கூறுவதாயின், ஆய்வு செய்யும் மார்க்க அறிஞர்கள் கத்மே நுபுவ்வத்தின் வாதத்தில் ஈடுபடாமல் இஸ்லாத்தின் வெளிப்படையான எல்லைக்குட்பட்ட விஷயமாக கலிமா தைய்யிபாவை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இந்த விவகாரத்தில் மற்ற விஷயங்களை ஒருபோதும் கருத்தில் கொள்ளவில்லை. இதன் காரணமாகவே ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களும் எங்கெல்லாம் இஸ்லாத்தின் வெளிப்படையான விளக்கத்தை - இலக்கணத்தைக் கூறினார்களோ அங்கு கலிமா தய்யிபாவாகிய லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதையே இஸ்லாத்தின் மையக் கருத்தாகக் கொண்டார்கள். மேலும் அதன் விளக்கமாக அல்லாஹ்வின் மலக்குகள், வேதங்கள், இறைதூதர்கள், மரணத்திற்குப் பின் எழுப்பப்படுதல் மற்றும்

நன்மை தீமை பற்றிய இறை நியதி ஆகியவற்றை ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டு போதுமானதாகக் கொண்டார்கள். எந்நிலையிலும் திருக்குர்ஆனின் வழிகாட்டலின்படி ஒவ்வோர் உண்மையான முஸ்லிமும் கத்மே நுபுவ்வத் கொள்கை மீது உள்ளத்தாலும் உயிராலும் ஈமான் கொள்கிறார். ஆயினும் கத்மே நுபுவ்வத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. இது ஒரு சிறப்பிற்குரிய நுண்ணிய கருத்தாகும். அதனை நமது நண்பர்கள் எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும்.

## சஹாபாக்களின் வாழ்விலேயே இந்த தவறான எண்ணம் ஆரம்பமாகி விட்டது

இந்த சிறு குறிப்புக்குப் பிறகு நான் எனது அசல் கட்டுரையின் பக்கம் திரும்புகிறேன். மேலே தெளிவுபடுத்தப்பட்டது போன்று கத்மே நுபுவ்வத் பற்றிய விளக்கம் பற்றியும், லாநபிய்ய பஃதீ என்பதன் உண்மை பற்றியும் சஹாபாக்களின் காலத்திலேயே ஆரம்பகால முஸ்லிம்களின் சிந்தனைகளில், புதிதாக முஸ்லிமான தாபியீன்களின் ஒரு பிரிவினரிடம் ஒரு வகையான கருத்து வேறுபாடு ஆரம்பமாகி விட்டது. ஆனால் இந்தக் கருத்து வேறுபாடு ஓர் எல்லைக்குட்பட்ட, குறைவான பிரிவினரிடம் இருந்தது. எனவே அது இயல்பாக பகிரங்கமாக வெளிப்படவில்லை. மேலும் இந்தக் கருத்து வேறுபாடு பற்றிய உணர்வும் குறிப்பிட்ட சஹாபிகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் அதனை தத்தமது கோணத்தில் மறைக்கவும் அழிக்கவும் முனைந்தனர்.

கீழே நாம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஆகிய இரு சான்றோர்களின் அறிவிப்புகளை எடுத்துரைக்கிறோம். இந்த இரு சான்றோர்களும் இந்த தவறான கருத்தை எவ்வாறு உணர்ந்து அதனை சீர்திருத்துவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதற்கு அவை சான்றாக விளங்குகின்றன. ஆனால் அது அப்போது ஒரு சிறிய விதையைப் போன்று இருந்தது. புதிய முஸ்லிம்களாகிய தாபியீன்கள் என்ற ஒரு சிறிய பகுதியினர் வரையே இருந்தது. அநேகமாக இந்த பிரிவினர் இஸ்லாத்தின் தலைமையகத்திலிருந்து தொலைதூரத்தில் இருந்தனர். எனவே இந்த தவறான எண்ணத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை; தற்காலிக நிலைமைகள் என்ற வகையில் அதன் பக்கம் அதிக கவனம் செல்லவுமில்லை. அதன் விளைவாக

உள்ளுக்குள்ளேயே முஸ்லிம்களின் ஒரு பிரிவினரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எல்லாம் முடிந்து விட்டது. இனி அவர்களுக்குப் பிறகு எவரும் எந்த வகையிலும் நுபுவ்வத்தின் அருளைப் பெற முடியாது என்ற இந்த தவறான கருத்துகள் உறுதியாக வேரூன்ற ஆரம்பித்தன. பிறகு நுபுவ்வத்தின் காலத்திலிருந்து தூரம் செல்லச் செல்ல இந்த தவறான எண்ணம் அதிகமாக வேரூன்ற ஆரம்பமானது. அதிகமாக பரவ ஆரம்பித்தது.

ஆனால் முஸ்லிம்களின் மார்க்க அறிஞர்கள், நல்லார்கள் ஆகியோரின் ஒரு பகுதி ஒவ்வொரு காலத்திலும் பொதுவான முஸ்லிம்களை இந்த தவற்றின் பக்கம் கவனமூட்டி வந்தது. அதை நாம் தற்போது நிரூபிப்போம். மேலும் சிந்தனைகளின் இந்த குழப்பம் தொடர்ந்து நிலைபெற்று வந்தது. எதுவரை என்றால், ஆலிம்கள் வானத்தின் கீழ் மிகக் கெட்டவர்களாக இருப்பார்கள் என்று முன்னறிவிக்கப்பட்ட அந்த காலத்தில் இந்த தவறு எந்த அளவுக்கு தலைதூக்கி விட்டது என்றால், அகப்பார்வை கொண்ட குறிப்பிட்ட மக்களைத் தவிர பொது மக்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் முன்னர் பின்னர் அனைத்தும் முடிந்து விட்டது. அவர்களுக்குப் பிறகு எல்லா வகையான நுபுவ்வத்தின் வாசலும் முடிவுற்றது என்ற கருத்தில் உறுதியாக நின்று விட்டார்கள். இந்தத் தவறான கொள்கை ஆரம்பத்தில் ஒரு விதையைப் போன்று வளர்ந்து படிப்படியாக பொது மக்களின் உள்ளத்திலும், மூளையிலும் இடம்பிடித்துக் கொண்டது.

நுபுவ்வத்தின் இந்த காலகட்டத்திலிருந்து தொலைதூரம் சென்று விட்டதன் காரணமாக முஸ்லிம் பொது மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மை, அவர்கள் புதிய ஆன்மீக ஆறுகளை திறந்து விடுபவர்களாக இருப்பதில் இல்லை. மாறாக, முந்தைய எல்லா ஆறுகளும் அவர்களிடம் வந்து முடிந்து விடுவதில்தான் இருக்கிறது எனக் கருதத் தொடங்கி விட்டனர் - நவூது பில்லாஹ். எவர் இந்த விவகாரத்தில் தமது சொந்த சிந்தனைகளை அப்புறப்படுத்தி விட்டு சரியான உள்ளத்துடன் சிந்திப்பாரோ அவர் நாம் கூறிய இந்தக் கருத்தின் பக்கமே கண்டிப்பாக வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையான அந்தஸ்தைப்

புரியாததன் காரணமாக இந்த எல்லா தவறான எண்ணங்களும் உருவாகி இருக்கின்றன. நமது எதிர்கருத்து கொண்ட சகோதரர்கள் இந்த உண்மையைப் புரிய முயற்சி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! *வமா அலைனனா இல்லல் பலாக்.* (தூதுச் செய்தியை எடுத்துரைப்பது மட்டுமே நமது பணியாகும்.)

## ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் நுட்பமான வழிகாட்டல்

இதற்குப் பிறகு நான் மிகச் சுருக்கமாக தனிப்பட்டவர்களின் சான்றுகளை எடுத்துரைக்கிறேன். நமது எஜமானர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மகனும், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் கணவரும், இஸ்லாத்தின் நான்காவது கலீஃபாவுமாகிய ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கூற்றை முதலில் எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உயர்ந்த மகத்துவத்தைக் குறித்து, *அன மதீனத்துல் இல்ம். வ அலிய்யுன் பாபுஹா* அதாவது நான் ஞானம் எனும் நகரமாக இருக்கிறேன். அலி அதன் வாயிலாக இருக்கிறார் என்று கூறியிருக்கிறார்கள். ஆக, அத்தகைய ஞானம் மிக்க, அகப் பார்வை கொண்டவரைப் பற்றி ரிவாயத் வருகிறது: அவர்கள் தமது மகன்களான ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன் ஆகியவர்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்காக ஹஸ்ரத் அபூ அப்திர் ரஹ்மான் பின் சல்மா என்ற பெயரைக் கொண்ட ஒருவரை நியமித்திருந்தார்கள். அபூ அப்திர் ரஹ்மான் அறிவிக்கின்றார்கள்:

كُنْتُ أَقْرِءُ الْحَسَنَ وَالْحُسَيْنَ رضى الله عنهما فَمَرَّ بِيْ عَلى بن ابى
طالب رضى الله عنه وانا أُقرءهما وقال لى أُقْرِءهما وخاتَمَ
النَبِيِّيْنَ بفَتحِ التّاءِ

"நான் ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன் ஆகியோருக்கு திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்து வந்தேன். ஒருமுறை நான் அவர்களுக்கு ஓதக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள். என்னை நோக்கி, பாருங்கள்! இவர்களுக்கு காத்தமுன்னபிய்யீன் என்பதில் உள்ள ***'தா'*** என்ற எழுத்தை ஸபருடன் ஓதிக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்." ***(இமாம் சுயூத்தி இயற்றிய துர்ரே மன்ஸூர். காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்திற்கு விளக்கவுரையில்)***

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**

காத்தம் என்ற சொல் கா, அலிஃப், தா, மீம் ஆகியவற்றின் தொகுப்பாகும் என்பதை வாசகர்கள் அறிவார்கள். இது அரபி மொழியில் இரு வகையில் வருகிறது. ஒன்று *'தா'* என்பதில் ஸபருடன் காத்தம் என்று வருகிறது. அதன் பொருள் முத்திரை மற்றும் மோதிரம் என்பதாகும். இன்னொன்று *'தா'* என்பதில் ஸேருடன் காத்திம் என வருகிறது. அதன் பொதுவான பொருள் இறுதி என்பதாகும். ஆனால் அது சில நேரங்களில் முத்திரை என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டு விடுகிறது. ஆனால் *'தா'* என்ற எழுத்தை ஸேருடன் படிப்பதால் தவறான எண்ணம் கொள்ள சாத்தியக்கூறு இருந்தது. எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மிகவும் அறிவுப்பூர்வமாகவும், தொலைநோக்குப் பார்வையுடனும் இந்த அபாயத்தைப் புரிந்து அபூ அப்திர் ரஹ்மான் அவர்களிடம், பாருங்கள். எனது குழந்தைகளுக்கு காத்தம் என்பதிலுள்ள *'தா'* என்ற எழுத்தை ஸபருடன் கற்றுக் கொடுங்கள்; ஸேருடன் (காத்திம் எனக்) கற்றுக் கொடுக்காதீர்கள். அப்போதுதான் நபிமார்களின் முத்திரை என்ற கருத்து கொள்ள முடியும். வேறு எந்த தவறான கருத்தும் உருவாகாது என்ற வகையில் வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த அற்புதமான ரிவாயத்திலிருந்தே ஆரம்ப காலத்திலேயே புதிதாக முஸ்லிமான தாபியீன் மத்தியில், காத்தம் என்ற சொல் ஒருவேளை *'தா'* என்ற எழுத்தின் ஸேரில் அமைந்திருக்கிறது என்ற தவறான எண்ணத்தின் பக்கம் சென்றுவிடத் தொடங்கி விட்டது எனவும் இதன் கருத்து, நபிமார்களின் தொடரை முடிப்பவர் என்பது போலும் என்ற தவறான எண்ணத்தின் பக்கம் சென்று விடத் தொடங்கி விட்டது எனவும் தெரிகிறது. எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை உடனே அபூ அப்திர் ரஹ்மான் அவர்களைத் திருத்தி, நேரிய கூற்றை எடுத்துரைத்து சரியான வழிக்கு கொண்டு வந்தார்கள்.

இப்போது சிந்தியுங்கள். காத்தம் என்ற சொல் *'தா'* என்ற எழுத்தில் ஸபர் (காத்தம்) என்று இருந்தாலும், ஸேர் (காத்திம்) என்றிருந்தாலும் எந்நிலையிலும் ஒரே பொருளையே தருகின்றன. இதில் உறுதியாக எவ்வித வித்தியாசமும் இல்லை என்றால் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அபூ அப்திர் ரஹ்மான் பின் சல்மா அவர்களிடம் இந்த சொல்லை *'தா'* என்பதன் ஸபருடன் (காத்தம் என) ஓதிக் கொடுங்கள்; (காத்திம் என) ஸேருடன் ஓதிக் கொடுக்காதீர்கள் என ஏன் கூறினார்கள்?

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

நிச்சயமாக அந்த புனித மகன்கள் மற்றும் அந்த ஆசிரியரின் உள்ளத்தில் '**நபிமார்களின் முத்திரை**' என்ற அந்த சிந்தனையை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான். இதன் பொருள் கடைசி நபி என்பதன் பக்கம் அவர்களின் சிந்தனை செல்லக் கூடாது என்பதற்காகத்தான். எவ்விதமான தவறான கருத்திற்கும் சாத்தியக்கூறு இல்லாதிருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த பரிவான எச்சரிக்கை இருந்தும் இன்றைய முஸ்லிம்கள், காத்தமுன்னபிய்யீன் என்பதன் பொருள் இறுதி நபி என்பதாகும்; அவர்களுக்குப்பிறகு எல்லா விதமான நுபுவ்வத்தின் வாசலும் அடைக்கப்பட்டு விட்டது என்பதிலேயே பிடிவாதமாக இருக்கின்றனர். எப்படியிருந்தபோதிலும், இது இஸ்லாமிய வரலாற்றில் நமது கொள்கைக்கு சாதகமாகக் காணப்படும் முதல் சாட்சியாகும். மேலும் சாட்சியும் யாருடையது? நமது எஜமானர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையினுடைய மகனும், மருமகனும், குலஃபாயே ராஷிதீனில் நான்காவது கலீஃபாவும் ,அறிவிலும் இறைஞானம் எனும் நகரத்தின் வாசலுமாகத் திகழ்ந்த ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சாட்சியாகும். அவர்களுக்கு முன்னால் அஹ்லே சுன்னத்து வல் ஜமாஅத் மற்றும் ஷியாக்கள் இரு பிரிவினரின் கழுத்துக்கள் (மரியாதையினால்) குனிகின்றன.

## ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வழிகாட்டல்

இதற்குப் பிறகு நம்பிக்கை கொண்டவர்களின் பரிவுள்ள தாய் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வழிகாட்டல் வருகிறது. அவர்கள் நமது எஜமானர் (ஸல்) அவர்களுக்கு அதிகமான நேசத்திற்குரியவரும், அனைவரையும் விட மார்க்க ஞானம் பெற்ற பெண்மணியும் ஆவார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் தீர்வு கிடைக்கப் பெறாத எந்தவொரு மார்க்கப் பிரச்சனையும் சஹாபாக்களிடம் இருந்ததில்லை என அறிவிப்பு வருகிறது. ***(காண்க: ஸாதுல் மஆது)***. அப்படிப்பட்ட ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

قُوْلُوْا اِنَّهٗ خَاتَمُ الْاَنْبِيَآءِ وَلَا تَقُوْلُوْا لَا نَبِيَّ بَعْدَهٗ

**''கூலூ இன்னஹூ காத்தமுல் அன்பியாயி. வலா தகூலூ லாநபிய்ய பஃதஹூ.''**

**''நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்று கூறுங்கள்; ஆனால் அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் இல்லை என்று கூறாதீர்கள்.''** *(துர்ரே மன்ஸூர் தொகுதி 5 பக்கம் 204 மற்றும் தக்மிலா மஜ்மயில் பிஹார் தொகுதி 4 பக்கம் 85)*

இந்த சாட்சி, காலத்தைப் பொருத்தவரை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சாட்சிக்குப் பிறகுள்ளது எனத் தெரிகிறது, அப்போது அநேகமாக நுபுவ்வத் விவகாரம் தொடர்பான தவறாக கருத்து கொஞ்சம் அதிகமாகி விட்டிருந்தது. ஏனெனில் இதில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சாட்சியத்தை விட மிக அதிகமாக தெளிவும், அதிகமான விரிவும் காணப்படுகிறது. மார்க்கத்தைப் பற்றி அதிகம் அறியாத புதிய முஸ்லிகள் சிலர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் **லா நபிய்ய பஃதீ (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்ற ஹதீஸுக்கு தவறான விளக்கம் தந்து, இனி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த விதமான நபியும் வர முடியாது; அவர்களுக்குப் பிறகு இந்த வாசல் முற்றிலுமாக அடைக்கப்பட்டு விட்டது என்ற சிந்தனையின் பக்கம் சென்று விட்டனர் என்ற செய்தி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடும். எனவே அவர்கள் ஒரு கருணையுள்ள ஆசிரியையின் நிலையில் இருந்தவாறு உடனே இதன் பக்கம் கவனம் செலுத்தினார்கள். நீங்கள் **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்பதன் உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை. எனவே இந்த ஹதீஸுக்கு பதிலாக **'காத்தமுன்னபிய்யீன்'** என்ற வசனத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அதன் பொருள் நபிமார்களின் முத்திரை என்பதாகும் என வழிகாட்டினார்கள். மேலும் இந்த ஒரு சொல்லில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத் அந்தஸ்தின் அனைத்து தத்துவமும் வந்து விடுகிறது. மேலும் **'லா நபிய்ய பஃதீ' (எனக்குப் பிறகு நபி இல்லை)** என்ற சொற்களினால், குறைபாடுள்ள இயல்புகொண்ட சிலரிடம் உருவாகுவதற்கு சாத்தியமாகவிருந்த தவறான கருத்தின் வாசலையும் அடைத்து விட்டது.

இப்போது பாருங்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் இந்த வழிகாட்டல் எவ்வளவு தெளிவானதும், அகப்பார்வை வழங்கக்

கூடியதுமாக இருக்கிறது! இதற்குப் பிறகு எந்தவொரு சந்தேகத்திற்கும், ஐயத்திற்கும் இடமில்லை. ஆனால் முன்னால் கூறப்பட்ட வாதத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் இந்தக் கூற்றுக்குப் போதுமான அளவுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டு விட்டது. எனவே நமக்கு இங்கு அது குறித்து அதிகமாக எழுத வேண்டிய தேவையில்லை. எந்நிலையிலும், நுபுவ்வத்தைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஆரம்ப காலத்திலேயே ஒரு தவறான கருத்து இருப்பதை உணந்திருந்தார்கள். மேலும் அதனை திருத்துவதன் பக்கம் உடனே கவனம் செலுத்தினார்கள் என்பது வெளிப்படையான விஷயமாகும்.

## ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் சாட்சி

ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஆரம்பகால வழிகாட்டல்களை எடுத்துரைத்த பிறகு இஸ்லாத்தின் மத்திய காலத்தின் பெரிய ஒரு சான்றோராகிய ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி ரஹ்மத்துல்லாஹி அலைஹி (மறைவு ஹிஜ்ரி 638) அவர்களின் சான்றை எடுத்து வைக்கிறேன். அதில் அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தின் வாசல் மூடப்பட்டுள்ளது. பொதுவான நுபுவ்வத்தின் வாசல் ஒருபோதும் மூடப்படவில்லை என்பதை மிகத் தெளிவாகவும், மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். **ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:**

إِنَّ النُّبُوَّةَ الَّتِي انْقَطَعَتْ بِوُجُوْدِ رَسُوْلِ اللهِ ﷺ إِنَّمَا هِيَ
نُبُوَّةُ التَّشْرِيْعِ لَا مُقَامُهَا ---وَهٰذَا مَعْنٰى قَوْلِهٖ ﷺ أَنَّ
الرِّسَالَةَ وَالنُّبُوَّةَ قَدِ انْقَطَعَتْ فَلَا رَسُوْلَ بَعْدِيْ وَلَا نَبِيَّ
أَيْ لَا نَبِيَّ بَعْدِيْ يَكُوْنُ عَلٰى شَرْعٍ يُخَالِفُ شَرْعِيْ بَلْ
إِذَا كَانَ يَكُوْنُ تَحْتَ حُكْمِ شَرِيْعَتِيْ

இன்னன்னுபுவ்வத் தல்லத்தீ இன்கதஅத் பிவஜூதி ரஸூலில்லாஹி ஸல்லாஹு அலைஹி வஸல்லம இன்னஹா ஹிய நுபுவ்வத்துத் தஷ்ரீஅ. லா மகாமுஹா ஃபலா ஷர்வுன் நாஸிகன் லிஷர்யிஹீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். வலா யஸீது ஃபீ ஷர்யிஹீ ஹுக்மன் ஆகர. வஹாஸா மஃனா கவ்லுஹூ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம இன்னர் ரிஸாலத்த வன்னுபுவ்வத்த கதின்கதஅத் ஃபலா ரஸூல பஃதீ வலா நபிய்ய. அய் லா நபிய்ய பஃதீ யகூனு அலா ஷர்யின் யுகாலிஃபு ஷர்யீ. பல் இஸா கான யகூனு தஹ்த ஹுக்மி ஷரீஅத்தீ.

**பொருள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் முடிவு பெற்ற நுபுவ்வத்தின் வகை என்பது ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத் ஆகும்.** ஏனெனில் இப்போது (ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தாகிய) அதற்கு எந்த இடமுமில்லை. எனவே இனி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்தின் ஏதாவதொரு கட்டளையை ரத்து செய்கின்ற அல்லது அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தில் ஏதாவதொரு கட்டளையை அதிகமாக்குகின்ற எந்தவொரு ஷரீஅத்தும் வர முடியாது. இனி நுபுவ்வத் மற்றும் ரிஸாலத்தின் தொடர் முடிவு பெற்று விட்டது; எனக்குப் பிறகு எந்த நபியுமில்லை; எந்த ரஸூலுமில்லை என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றின் பொருளும் இதுவேயாகும். **இதன் மூலமாக அவர்கள் கூற வந்த கருத்து, எனது ஷரீஅத்திற்கு மாற்றமான ஒரு ஷரீஅத்தில் நிலைபெறுகின்ற எந்தவொரு நபியும் இனி வர மாட்டார். மாறாக, எப்போது எவர் வந்தாலும் எனது ஷரீஅத்திற்கு கீழ்ப்பட்டவராகவே இருப்பார்.''** ***(ஃபுதூஹாத்தே மக்கிய்யா தொகுதி 2 பக்கம் 3 எகிப்து வெளியீடு)***

பிறகு இதே கருத்து பற்றி இதே நூலில் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

فالنبوة سارية الى يوم القيامة فى الخلق وان كان
التشريع قد انقطع فالتشريع جزء من اجزاء النبوة

**''அந்நுபுவ்வது ஸாரியத்துன் இலா யவ்மில் கியாமத்தி ஃபில் கல்கி. வஇன் கானத் தஷ்ரீயி கதின்கதஅ. ஃபத்தஷ்ரீவு ஜுஸ்வுன் மின் அஜ்ஸாயின்னுபுவ்வத்தி.**

**பொருள்: ''உலகில் நுபுவ்வத் என்பது மறுமை நாள் வரை திறந்தும் நீடித்தும் இருக்கும். ஷரீஅத் இறங்குவது நின்று விட்டது. மேலும் ஷரீஅத் என்பது நுபுவ்வத்தின் பகுதிகளில் ஒரு பகுதியாகும்.''** ***(ஃபுதூஹாத்தே மக்கிய்யா தொகுதி 2 பக்கம் 100 எகிப்து வெளியீடு)***

அவ்வாறே ஹஸ்ரத் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் இன்னொரு நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்:

اما نبوة التشريع والرسالة فمنقطعة وفى محمّد صلّى الله عليه
وسلم قد انقطعت فلا نبىّ بعده مشرّعًا ... الا انّ الله لطف
بعباده فابقى لهم النبوة العامة لا تشريع فيها

''அம்மன்னுபுவ்வத்துத் தஷ்ரீவு வர்ரிஸாலத்து ஃபமுன்கதிஅத்துன் வஃபீ முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம கதின்கதஅத் ஃபலா நபிய்ய பஃதஹு முஷர்ரிஅன்.......இல்லா அன்னல்லாஹத் தஆலா லதஃப பிஇபாதிஹீ ஃபஅப்கா லஹுமுன்னுபுவ்வத்தல் ஆம்மத்த. லா தஷ்ரீவுன் ஃபீஹா.''

**''ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தும், ரிஸாலத்தும் முடிந்து விட்டது. ஏனெனில், அது முஹம்மது (ஸல்) அவர்களிடம் நிறைவடைந்து விட்டது. எனவே அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்ட எந்த நபியும் வர முடியாது. .....ஆனால் அல்லாஹ் தன் அடியார்களுக்காக ஷரீஅத் அல்லாத பொதுவான நுபுவ்வத்திற்கான வாசலைத் திறந்து அவர்கள் மீது கருணை புரிந்திருக்கிறான்.''** ***(ஃபுஸூஸுல் ஹகம் பக்கம் 140,141)***

இஸ்லாத்தின் மிகப் பெரிய மார்க்க அறிஞரும், தனிச் சிறப்பான சான்றோருமாகிய இவருடைய எழுதுகோலினால் இன்றிலிருந்து 750

ஆண்டுகளுக்கு முன்னால் வெளிப்படுத்தப்பட்ட இந்த மூன்று சான்றுகளின் மூலமாக கீழ்வரும் 4 விஷயங்கள் நிரூபணமாகின்றன:

**1.** ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் பார்வையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு புதிய ஷரீஅத் இறங்குவது நின்று விட்டதே தவிர எல்லா வகையான நுபுவ்வத்தும் நின்று விட்டது என்பதன்று.

**2.** ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் பார்வையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத் அல்லாத நுபுவ்வத்தின் வாசல் திறந்துள்ளது. மேலும் அது மறுமை வரை திறந்திருக்கும். மேலும் (ஷரீஅத் அல்லாத) இவ்வகையான நுபுவ்வத்தற்கு முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள்பொதுவான நுபுவ்வத் என்ற பெயரை வைக்கின்றார்கள்.

**3.** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவர் வந்தாலும் அவர் எந்நிலையிலும் அவர்களின் ஷரீஅத் மற்றும் அவர்களின் கூற்றுக்குக் கட்டுப்பட்டவராக இருப்பார்.

**4.** நுபுவ்வத்திற்கு பல பகுதிகள் இருக்கின்றன. மேலும் ஷரீஅத் இறங்குவது என்பது அந்தப் பகுதிகளில் ஒருபகுதியாகும். ஷரீஅத் மட்டுமே நுபுவ்வத் என்பதன்று.

இந்த நான்கு விஷயங்கள் மேற்கூறிய சான்றுகளிலிருந்து திட்டவட்டமாக நிரூபணமாகின்றது. எவருக்காவது நமது மொழியாக்கத்தைப் பற்றி சந்தேகம் இருக்குமென்றால், அவர் தமது மவ்லவியிடம் கேட்டு திருப்தியடைய முடியும். இப்போது பாருங்கள்! இந்த சான்றுகள் எவ்வளவு தெளிவானவையாகவும், துல்லியமானவையாகவும் இருக்கின்றன!!

ஹஸ்ரத் ஷேக் அக்பர் (முஹ்யுத்தீன் இப்னு அரபி ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தின் வாசலை அடைத்திருக்கிறார்கள் எனவும் ஷரீஅத் என்பது நுபுவ்வத்தின் ஒரு பகுதியாகும்; அதுவே நுபுவ்வத் என்றாகி விடாது. எனவே அவர்களுக்குப் பிறகு பொதுவான நுபுவ்வத்தின் வாசல் திறந்திருக்கிறது. அது ஒருபோதும் மூடப்படாது

எனவும் குறிப்பிடுகிறார்கள். (முஹ்யுத்தீன் இப்னு அரபி ரஹ்மத்துல்லாஹி அவர்களின் கூற்றாகிய) இது நாம் கூறுகின்ற அதே விஷயம்தான்.

ஆனால் பெரும்பாலார், தாம் நிலைபெற்றிருக்கின்ற கொள்கைக்கு எதிரான ஒரு சிந்தனையை ஒப்புக்கொள்வதற்கு உடனே ஆயத்தமாவதில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் சந்தேகத்தை ஏற்படுத்தும் முறையைக் கையாள்கின்றனர். எனவே ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களும் இந்த இடத்தில் நுபுவ்வத்தே ஆம்மா (பொதுவான நுபுவ்வத்) என்பதற்கு வலியுல்லாஹ் என்ற கருத்தில் குறிப்பிட்டுள்ளதாக சிலரிடமிருந்து சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கின்றது. மேலும் (முஹ்யுத்தீன் இப்னு அரபி ரஹ்மத்துல்லஹி அலைஹி) அவர்களுடைய பார்வையில் ஒவ்வொரு நபியும் ஷரீஅத்தைக் கொண்டுவருவது கட்டாயமானதாகும் என்பதே அவர்களுடைய கொள்கையாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு மறுமை வரை எந்த ஷரீஅத்தும் இல்லை. எனவே அவர்களுக்குப் பிறகு உண்மையான பொருளில் எந்த நபியும் வர முடியாது எனக் கூறப்படுகிறது.

இந்த சந்தேகத்திற்குரிய விடையாக, அடிப்படையான ஒரு விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். நாம் ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்கோ அல்லது இஸ்லாத்தின் வேறு எந்த சான்றோருக்கோ அவர்களின் எல்லா விஷயங்களையும் நாம் ஒப்புக்கொள்வதற்கு Blank Cheque ஒன்றும் கொடுக்கவில்லை. Blank Chequeக்கான அந்தஸ்து இறைவனுக்கும், இறைதூதருக்கும்தான் இருக்கிறது. ஏனெனில் இறைவன் மற்றும் அவனது தூதரின் விஷயங்கள் மட்டுமே எல்லா நிலையிலும் ஒப்புக்கொள்வது கட்டாயமாக இருக்கிறது. அவர்களைத் தவிர வேறு எவருக்கும் இந்த அந்தஸ்து இல்லை. இன்னும் கூறுவதென்றால், மற்ற அனைவருக்கும், அவர்களின் அந்தஸ்திற்கு ஏற்ப *குஸ் மாஸஂஃபா வதஂஃ மா கதுர* என்ற விதிமுறை செயல்படும். எனவே எந்த விஷயம் திருக்குர்ஆன், ஹதீஸுக்கு ஏற்ப இருக்கிறதோ அதனை எடுத்துக் கொள்ளுங்கள்; எது திருக்குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமானதாக இருக்கிறதோ அதை மறுத்து விடுங்கள். எனவே நாம் இந்த இடத்தில் ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு

அரபி அவர்களின் சாட்சியை அவர்களின் எல்லா கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை உண்மைப்படுத்துவதற்காக எடுத்துரைக்கவில்லை. மாறாக,எங்களைப் போன்றே ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி அவர்களின் பார்வையிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத் அளவிலான நுபுவ்வத்தின் வாசல் மூடப்பட்டுள்ளதே தவிர எல்லா வகையான நுபுவ்வத் அன்று என்ற எல்லைக்குட்பட்ட அந்த சாட்சிக்காக மட்டுமே நாம் எடுத்து வைத்துள்ளோம். மேலும் இந்த பகுதியில் எடுத்து வைத்துள்ள சாட்சி முற்றிலும் தெளிவானதும், துல்லியமானதுமாகும். எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை.

மேலும் ஒரு கற்பனைக்காக (இங்கு நான் ஒரு வாதத்திற்காக எடுத்துக் கூறுகிறேன்). ஒவ்வொரு நபிக்கும் ஷரீஅத்தைக் கொண்டு வருவது கண்டிப்பானதாகும் என்பது ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபியின் கொள்கையாக இருந்தது என்றால் அதனால் நமது தற்போதைய சான்றுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஏனெனில் ஒன்று, நாம் எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக இந்த சான்றை எடுத்து வைத்துள்ளோமோ அந்த அடிப்படையில் இது ஒரு அதிகப்படியான, சம்பந்தமில்லாத விஷயமாகும்.

இரண்டாவது, ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ அவர்களுடைய மேற்கோளை எடுத்துரைத்து விவாதித்தபோது நாம் ஒவ்வொரு நபிக்கும் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருவது கண்டிப்பானதன்று என்பதை திருக்குர்ஆன், ஹதீஸ், வரலாறு, அறிவுப்பூர்வமான சான்றுகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தமான சாட்சிகளால் நிரூபித்துக் காட்டியுள்ளோம். எப்படி இருந்தாலும், ஹஸ்ரத் ஷேக் அக்பர் அவர்களின் கருத்து, அவர்கள் ஷரீஅத் வகையிலான நுபுவ்வத்தை **நுபுவ்வத்தே காஸ்ஸா (சிறப்பான நுபுவ்வத்)** என்ற பெயரைக் கொடுத்து, அதன் வாசல் அடைபட்டு விட்டது எனக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அதற்கு மாற்றமாக,நுபுவ்வத்தின் மற்ற வகைகளை **நுபுவ்வதே ஆம்மா (பொதுவான நுபுவ்வத்)** என்ற சொல்லால் குறிப்பிட்டு அதன் வழியை எப்போதும் திறந்ததாகக் கருதுகிறார்கள். அதுவே சரியான கருத்தாகும்.

ஆனால் உண்மை என்னவென்றால், ஒவ்வொரு நபிக்கும் புதிய

ஷரீஅத்தைக் கொண்டு வருவது கட்டாயம் என்று ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் ஒருபோதும் கூறவில்லை; மேலும் ஒவ்வொரு நபிக்கும் ஒரு புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருவது கண்டிப்பானதாகும் என்ற கொள்கையையும் அவர்கள் எங்கேயும் கூறவில்லை. இன்னும் கூறுவதாயின் அவர்களோ தெளிவான சொற்களில் இவ்வாறு அறிவிக்கிறார்கள்:

التشريعُ جزءٌ مّن اجزاء النبوة

''அத்தஷ்ரீவு ஜுஸ்வும் மின் அஜ்ஸாயின்னுபுவ்வத்.''

''ஷரீஅத் இறங்குவது என்பது நுபுவ்வத்தின் பகுதிகளில் ஒரு பகுதியாகுமே தவிர அதுவே நுபுவ்வத் ஆகி விடாது.'' ***(ஃபுதூஹாத்தே மக்கிய்யா தொகுதி 2 பக்கம் 100 எகிப்து வெளியீடு)***

ஆக, ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் பார்வையில் நுபுவ்வத்துடன் ஷரீஅத் இறங்குவது கட்டாயமானதன்று எனும்போது ஒவ்வொரு நபிக்கும் ஷரீஅத்தைக் கொண்டு வருவது அவசியமானதாகும் என்ற கருத்தை ஷேக் அவர்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்திக் கூற முடியும்? எனவே அவர்கள் ஏதாவதோர் இடத்தில் நுபுவ்வத்தே ஆம்மா எனும் பொதுவான நுபுவ்வத்தை (அதாவது ஷரீஅத் அல்லாத நுபுவ்வத்தை) வலி (இறை நேசர்) என்ற சொல்லில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், நிச்சயமாக அது ஒரு உவமையான முறையில்தான் பயன்படுத்தி இருக்கிறார்கள். அதை அவர்கள் தமது முறையில் பொது மக்களுக்கு ஷரீஅத் அல்லாத நுபுவ்வத்தின் உண்மை நிலையை புரிய வைப்பதற்காக மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நோக்கம், ஒவ்வொரு நபி கண்டிப்பாக வலியுல்லாஹ் ஆகவும் இருக்கிறார்; மேலும் ஷரீஅத் இல்லாத பொதுவான நுபுவ்வத் என்பது உண்மையில் வலியுல்லாஹ் என்பதன் முன்னேற்றமடைந்த ஓர் அந்தஸ்து என்பதை வெளிப்படுத்துவதே ஆகும். *வலி குல்லி அன்ய்யஸ்தலிஹ. ஃபஃப்ஹம். வததப்புர். வலா த(க்)கும் மினல் மும்தரீன்.* (ஒவ்வொருவரும் ஒரு மரபுத் தொடரை கையாள்கிறார். எனவே புரிந்து கொள்ளுங்கள். மேலும் சந்தேகம் கொள்பவர்களைச் சேர்ந்தவர்களாகிவிட வேண்டாம்.). எனவே ஹஸ்ரத் முஹ்யுத்தீன் அரபி (ரஹ்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரூன் நபி அவர்கள் எந்த ஷரீஅத்தையும்

கொண்டு வரவில்லை; மாறாக மூஸாவின் ஷரீஅத்தைப் பின்பற்றுபவராக இருந்தார் என்பதை ஏற்றுக் கொண்டபோதிலும், *'வவஹப்னா லஹூ ஹாரூன நபிய்யா'* என்ற திருக்குர்ஆனின் வசனத்தின்படி, ஹாரூன் அவர்களை நபி எனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ***(ஃபுதூஹாத்தே மக்கிய்யா தொகுதி 2 பக்கம் 3,4 எகிப்து வெளியீடு)***

## ஹஸ்ரத் மவ்லானா ரூமீ (ரஹ்) அவர்களின் சாட்சி

இஸ்லாத்தின் மத்திய காலத்திலுள்ள இரண்டாவது சாட்சி ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ரூமீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி (மறைவு ஹிஜ்ரி 672) அவர்களில் கூற்றில் கிடைக்கிறது. ஆனால் இந்த இடத்தில் எனது நோக்கம் அனைத்து சான்றையும் எடுத்து வைப்பது அன்று. மாறாக, நான் உதாரணமாக சில சான்றுகளை எடுத்து வைக்கிறேன். கத்மே நுபுவ்வத் பற்றிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை புதிய கொள்கை அன்று; மாறாக, ஒவ்வொரு காலத்திலும் இஸ்லாத்தின் உயர்ந்த அறிஞர்களும் நல்லார்களும், சூஃபிகளும் ஏறக்குறைய இந்த சிந்தனைகளையே வெளிப்படுத்தி இருக்கின்றனர் என்பதை நிரூபிப்பதாகும். இந்த நோக்கத்திற்காக சில சான்றுகள் மேலே எடுத்துக் கூறப்பட்டன. மேலும் சில சான்றுகள் கீழே தரப்படுகின்றன.

மவ்லானா ரூமீ அவர்களின் வெண்பா முஸ்லிம்களின் எல்லா பிரிவினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கின்து. மேலும் அது உயர்தரமான ஞானங்களையும், நன்னெறிகளையும் கொண்டதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மவ்லானா ரூமீ அவர்கள் கூறுகிறார்கள்:

“ஒருவர் வாரிவழங்குவதில் இறுதி எல்லையை அடைந்து விட்டால் அவரைப் பற்றி காத்தம் எனக் கூறுகிறோம். அதாவது அவரைப் போன்று இதற்கு முன் பிறந்ததுமில்லை; இனி பிறக்கப் போவதுமில்லை. அவ்வாறே ஒருவர் ஒரு கலையில் திறமையை அடைந்து விட்டால் உம்முடன் இந்தக் கலை முடிந்து விட்டது எனக் கூறுவதில்லையா?” ***(மஸ்னவி மவ்லானா ரூம் அதிகாரம் 6 பக்கம் 8)***

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயர் காத்தமுன்னபிய்யீன் என ஏன் வைக்கப்பட்டுள்ளதென்றால்,

அவர்களுக்கு நிகரான எந்த நபரும் முந்தைய மக்களில் தோன்றியதுமில்லை; இனி தோன்றப் போவதுமில்லை. பாருங்கள். ஒரு கலையில் திறமை கொண்ட ஒருவர், அனைவரையும் விட முந்திச் சென்று விடும்போது இந்தக் கலை உங்களுடன் முடிந்து விட்டது என்று கூறுவதில்லையா? எனவே இந்த பொருளில்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நுபுவ்வத் முடிந்து விட்டது என்பதுமாகும் எனப் புரிந்து கொள்ளுங்கள்.

இப்போது பாருங்கள். இந்த சான்று எவ்வளவு தெளிவானதும், துல்லியமானதுமாகும். ஹஸ்ரத் மவ்லானா ரூமீ (அலைஹிர் ரஹ்மா) அவர்கள் கூறுகிறார்கள்: காத்தமுன்னபிய்யீன் என்ற சொல்லிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவனின் அருட்கொடைகள் என்னும் ஆற்றை மூடக் கூடியவர்கள் எனக் கருதாதீர்கள்; மாறாக, இதன் பொருள், அவர்கள் இறைதூதர்களில் மிகச் சிறந்தவர்கள். மேலும் அவர்கள் தம்மிடம் நுபுவ்வத்தின் மேன்மைகளை மிக அழகிய முறையிலும், நிறைவாகவும் ஒன்று சேர்த்திருக்கின்றார்கள் என்பதாகும். பிறகு உதாரணம் காட்டி விளக்குகிறார்கள்: எவ்வாறு ஒரு கலையில் நிகரற்ற திறமை கொண்ட ஒருவரைப் பற்றி இவருடன் இந்த கலை முடிந்து விட்டது என்று கூறப்படுகிறதோ அவ்வாறே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்திற்கும் இந்த பொருளேயாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்திற்கு இவ்வாறான விளக்கமளிப்பதனால் காஃபிர் எனக் கூறுபவர்களே! சற்று சிந்தியுங்கள். (மவ்லானா ரூமி அவர்களின் விளக்கமாகிய) இது நாங்கள் எடுத்துக் கூறுகின்ற விளக்கம் இல்லையா? மேலும் இந்த விளக்கம் நமது நபி கரீம் (ஸல்) அவர்களின் மகத்துவதற்கு ஏற்றதாக இருக்கிறதா? அல்லது ஓடிக்கொண்டிருக்கின்ற ஆறுகளை நிறுத்துவது என நீங்கள் கொடுக்கின்ற பொருள் ஏற்றதா? என நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நாம் நம்மிடமிருந்து எதையும் கூறுவதில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் தமது உள்ளத்தில் மார்க்கத் தீர்ப்பு கேட்கட்டும். இறைவனை முன்னிறுத்தி பதில் கூறட்டும்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

## ஹஸ்ரத் இமாம் முஹம்மது தாஹிர் அவர்களின் சாட்சி

இதற்குப் பிறகு மத்திய காலத்து இன்னொரு தனிச்சிறப்பான சான்றோர் ஹஸ்ரத் இமாம் முஹம்மது தாஹிர் (மறைவு ஹிஜ்ரி 986) அவர்களின் சாட்சியை எடுத்து வைக்கிறேன். இவர்களை சிலர் தமது காலத்தின் இமாமாகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஹதீஸ் சொல் அகராதியாகிய மஜ்மவுல் பிஹார் என்பது இவர்களின் நூலாகும். இது மிகவும் நம்பத்தகுந்ததாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இமாம் முஹம்மது தாஹிர் அவர்கள் எழுதுகின்றார்கள்:

وعن عائشہ قولوا انہ خاتم الانبیاء ولا تقولوا لا نبی بعدہ
وھذا ناظرا الی نزول عیسیٰ وھذا ایضاً لا ینافی حدیث لا نبی
بعدی لانہ اراد لا نبی ینسخ شرعہ

**அன் ஆயிஷத்த ரழியல்லாஹு அன்ஹா கூலூ இன்னஹூ காத்தமுல் அன்பியாயி. வலா தகூலூ லா நபிய்ய பஃதஹூ. வஹாஸா நாஸிருன் இலா நுஸூலி ஈஸா வ ஹாஸா அய்ழன் லா யுனாஃபீ ஹதீஸின் லா நபிய்ய பஃதீ லிஅன்னஹூ அராத அன்லா நபிய்ய யன்ஸகு ஷர்அஹூ.** ***(துர்ரே மன்ஸூர்; தக்மிலா மஜ்மயில் பிஹார் பக்கம் 85)***

அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்களே! நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா எனக் கூறுங்கள். ஆனால் அவர்களுக்குப் பிறகு நபி இல்லை எனக் கூறாதீர்கள். இந்த விஷயம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றுவதை கவனத்திற்கொண்டு கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த ஹதீஸ் *'லா நபிய்ய பஃதீ (எனக்குப் பிறகு நபி இல்லை)* என்ற ஹதீஸின் நோக்கத்திற்கு முரண்பட்டதும் அன்று. ஏனெனில் இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கருத்து, என்னுடைய ஷரீஅத்தை ரத்து செய்யும் எந்த நபியும் வர முடியாது என்பதாகும். ஒட்டுமொத்தமாக நுபுவ்வத் நின்று விட்டது என்ற பொருள் அன்று.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

இமாம் முஹம்மது தாஹிர் அவர்களின் இந்த நுட்பமான சான்று இந்த விவகாரத்தில் இரண்டு சாட்சிகளை எடுத்து வைக்கின்றது.

1. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத்தின் வாசல் மட்டுமே அடைபட்டு விட்டது. எல்லா வகையான நுபுவ்வத்தின் வாசல் அன்று.

2. இஸ்லாத்தில் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி முன்னறிவிப்பு இருக்கிறதோ அவர் இறைவனுடைய நபியாக இருப்பார். ஆனால் அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்துக்குக் கட்டுப்பட்டவராக இருப்பார். எனவே அவர் வருவது *'லா நபிய்ய பஃதீ (எனக்குப் பிறகு நபி இல்லை)* என்ற ஹதீஸின் நோக்கத்திற்கு மாற்றமானதாகாது.

இந்த இரண்டு விஷயங்களும் கத்மே நுபுவ்வத் தொடர்பாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக எடுத்துரைக்கப்படுகின்ற அதே கருத்துகள்தான். ஆனால் இந்த சான்றோர்களின் சாட்சியம் இருந்தும் இந்த சிந்தனைகளின் காரணமாக எம்மை காஃபிர் என்றும், இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்த சான்றில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு 600 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ராயீல் சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட ஈஸா (அலை) அவர்களைப் பற்றியல்லவா கூறப்பட்டுள்ளது? என்ற சிந்தனை எவருடைய உள்ளத்திலாவது தோன்றினால், அது இரட்டை அநீதியாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைகளை, மாணவர்களை, ஆன்மீக மகன்களைச் சேராத ஒருவரை நபி என ஏற்றுக் கொள்வதும், இன்னும் சொல்லப்போனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பதிலாக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஒருவரை ஏற்றுக்கொள்வதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமையும், மாணவரும், ஆன்மீக மகனுமாகிய ஒருவரை இந்த கண்ணியத்திற்கு பாத்திரமானவராக ஏற்றுக் கொள்ளாதிருப்பதும் மிகக் கொடுமையாகும்.

எனவே நண்பர்களே! அன்பர்களே!! இறைவனுக்காக சிந்தியுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு இஸ்ராயீல் சமுதாயத்தின் சென்ற கால ஒரு நபியின் நுபுவ்வத் ஹஸ்ரத் நபி (ஸல்)

அவர்களின் அருளினால் இல்லாதிருக்கும் நிலையில் தனது முந்தைய நுபுவ்வத்தின் அந்தஸ்தில் நிலைநின்று முஸ்லிம்களுக்கு இமாம் ஆக முடியுமென்றால், நபி என அழைக்கப்பட முடியுமென்றால் மனிதர்களின் தலைவரும் நபிமார்களில் பெருமைக்குரியவருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஓர் அடிமை, மாணவர் அவர்களின் அருளிலிருந்து அருளைப் பெற்று, அவர்களின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று இந்த அந்தஸ்தை ஏன் பெற முடியாது? வழிதவறிவிட்ட நமது சகோதரர்கள் நமது எஜமானர் (ஸல்) அவர்களின் அந்தஸ்தை முற்றிலும் புரியவில்லை. மேலும் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் பனீ இஸ்ராலின் அருளின் கீழ் உள்ளவராக இருப்பதைத்தான் விரும்புகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைகளில், மாணவர்களில் ஒருவர் அவர்களின் பரக்கத்தினால் அவர்களின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று நுபுவ்வத்தின் அந்தஸ்தை அடைவதை விரும்பவில்லை. ஒருவர் உண்மைதான் கூறினார்: (அந்த பாரசீக கவிதையின் பொருள்:)

*''மற்றவர்கள் மீது எனக்கு எந்த முறையீடும் இல்லை. ஏனெனில் என்னுடன் நடந்து கொண்டவர்கள் என்னைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.''*

## ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ மற்றும் இமாம் அலி பின் முஹம்மது சுல்தானுல் காதிரி ஆகியோரின் சான்று

ஹஸ்ரத் இமாம் ஷஃரானீ (மறைவு ஹிஜ்ரி 976) மற்றும் இமாம் முஹம்மது சுல்தானுல் காதிரி (மறைவு ஹிஜ்ரி 1014) ஆகியோரின் சான்றுகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே அவற்றை மீண்டும் எடுத்துக் கூறி கட்டுரையை தேவையில்லாமல் அதிகமாக்க வேண்டியதில்லை. வாசகர்கள் விரும்பினால் **'லா நபிய்ய பஃதீ'** மற்றும் **'லவ் ஆஷ இப்ராஹீமு லகான சித்தீக்கன் நபிய்யா'** ஆகிய ஹதீஸுகள் பற்றிய வாதத்தை மீண்டும் படித்துப் பார்த்து திருப்தி கொள்ளலாம். *வமா அலைனா இல்லல் பலாக். (தூதுச் செய்தியை எடுத்துக் கூறுவது மட்டுமே எமது பணியாகும்.)*

## ஹஸ்ரத் முஜத்திது அல்ஃப் ஸானீ (ரஹ்) அவர்களின் வழிகாட்டல்

இஸ்லாத்தின் மத்திய காலத்து இமாம்களின் சான்றுகளை எடுத்துக் கூறிய பின்னர் இப்போது இஸ்லாத்தின் தற்போதைய காலத்தின் துவக்கப் பகுதிக்கு வருவோம். அது ஹிஜ்ரி 11 – ஆவது நூற்றாண்டிலிருந்து துவங்குகிறது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சான்றோர் ஹஸ்ரத் ஷேக் அஹ்மது சர்ஹிந்தீ. முஜத்திது அல்ஃப் ஸானீ (ரஹ்) ஆவார். அவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னர் தோன்றுவதாக விதிக்கப்பட்டிருந்த அனைத்து முஜத்திதுகளிலும் (மார்க்க சீர்திருத்த வாதிகளிலும்) உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டவராக பெரும்பாலான முஸ்லிம்கள் நம்புகின்றனர். ஹஸ்ரத் முஜத்திது அல்ஃப் ஸானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி (மறைவு ஹிஜ்ரி1032) அவர்கள் கூறுகிறார்கள்:

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கு அவர்களைப் பின்பற்றியதன் காரணத்தால் அவர்களின் ஆன்மீக வாரிசு என்ற முறையில் நுபுவ்வத்தின் மேன்மையை அடைவது கத்மே நுபுவ்வத்திற்கு மாற்றமானதன்று.எனவே நீங்கள் இந்த விவகாரத்தில் சந்தேகம் கொள்பவர்களைச் சேர்ந்தவர்களாகி விட வேண்டாம்.” ***(மக்தூபாத்தே அஹ்மதிய்யா தொகுதி 1 மக்தூப் 271)***

இந்தக் கொள்கை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக எடுத்து வைக்கப்படும் அதே கொள்கை இல்லையா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்துடன் ஷரீஅத்தைக் கொண்ட நுபுவத்தும், நேரடியாகப் பெறும் நிரந்தரமான நுபுவ்வத்தின் வாசலும் என்றென்றைக்கும் அடைக்கப்பட்டு விட்டது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மாணவர் மற்றும் அவர்களைப் பின்பற்றுவதன் அருளினால் ஆன்மீக வாரிசாகக் கிடைக்கும் நுபுவ்வத்தின் வாசல் ஒருபோதும் அடைபடவில்லை என்பதைத் தவிர நாங்கள் வேறு ஏதும் கூறுகிறோமா என்ன? மாறாக, இந்த நுபுவ்வத்தினால் நமது எஜமானர் (ஸல்) அவர்களின் உயரிய மகத்துவத்திற்கும், மேலான அந்தஸ்திற்கும் சான்று கிடைக்கிறது. அதாவது அவர்களின் மாணவரும் நுபுவ்வத்தின் படித்தரத்தைப் பெற முடியும். எனவே முஜத்திது அல்ஃப் ஸானீ

அவர்களைப் போன்று நாங்களும், 'எனவே நீங்கள் சந்தேகம் கொள்பவர்களைச் சேர்ந்தவர்களாக ஆகி விட வேண்டாம்' என்பதைத்தான் கூறுகிறோம். இதுவே உண்மையாகும்.

### ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) முஹத்தஸ் தஹ்லவி அவர்களின் கூற்று

இதற்குப் பிறகு ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் முஹத்தஸ் தஹ்லவி (மறைவு 1176) அவர்களின் காலம் வருகிறது. ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) அவர்கள் 12 - ஆம் நூற்றாண்டின் முஜத்திதாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தியா, பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம் சிறுவர்களும் கூட இவர்களின் பரந்த அறிவையும், ஞானத்தையும் பற்றி அறிந்திருக்கின்றனர். அவர்களைப் பாராட்டுகின்றனர். அவர்கள் கூறுகிறார்கள்:

وخُتِم به النّبيّون اي لا يوجد بعده من يامـــــــره الله سبحانه
بالتشريع على الناس

**குதிம பிஹின்னபிய்யூன அய் லா யூஜது பஃதஹூ மன்ய் யுஃமரஹுல்லாஹு சுப்ஹானஹூ பித்தஷ்ரீயி அலன்னாஸி**

"ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நுபுவ்வத் முடிந்து விட்டது என்பதன் கருத்து, அவர்களுக்குப் பிறகு அல்லாஹ் ஒரு புதிய ஷரீஅத்தைக் கொடுத்து நியமிக்கும் இறைவனின் எந்தவொரு சீர்திருத்தவாதியும் வர முடியாது என்பதேயாகும்." ***(தஃப்ஹீமாத்தே இலாஹிய்யா, தஃப்ஹீம் எண்: 53)***

ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) அவர்களின் இந்த சான்றுக்கு எவ்வித விளக்கமும் தேவை இல்லை. ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) அவர்கள் எந்த நுபுவ்வத்தின் வாசல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அடைபட்டு விட்டது என்று குறிப்பிடுகிறார்களோ அது புதிய ஷரீஅத் இறங்குவதாகும். இதுவே நமது கொள்கையாகும். மேலும் ஒவ்வொரு நபிக்கும் ஷரீஅத்தைக் கொண்டு வருவது கண்டிப்பானதன்று என்பதையும் நாம் நிரூபித்திருக்கிறோம்.

**ஏனெனில் ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள், ஷரீஅத் என்பது நுபுவ்வத்தின் ஒரு பகுதியேயன்றி**

**அதுவே நுபுவ்வத் ஆகி விடாது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.** மேலும் எந்த புதிய ஷரீஅத்தையும் கொண்டு வராத பல நபிமார்கள் உலகில் தோன்றியுள்ளார்கள்; மாறாக, அவர்கள் முந்தைய ஷரீஅத்திற்கு தொண்டு செய்வதற்காகவே அனுப்பப் பட்டிருந்தனர் என திருக்குர்ஆன், வரலாற்றிலிருந்தும் தெரிய வருகிறது. எனவே ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் அவர்களை கண்ணியத்துடன் பார்க்கும் ஒவ்வொரு முஸ்லிம்களுக்கும் இது ஒரு தீர்ப்பளிக்கக் கூடிய சான்றாக இருக்கிறது. மேலும் ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) அவர்களின் அந்தஸ்து எப்படிப்பட்டது என்றால் அவர்கள் மட்டுமின்றி, அவர்களின் குடும்பம் அனைத்தும் தமது ஞானம், அருள் ஆகியவற்றின் காரணமாக துணைக் கண்டமாகிய இந்தியா, பாகிஸ்தானில் மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் பார்க்கப்படுகின்றார்கள். எனவே விரும்பினால் இந்த சாட்சியை ஏற்றுக் கொள்ளுங்கள்.

## ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது காஸிம் நானோத்வி அவர்களின் சாட்சி

இப்போது நமது காலத்திற்கு வருவோம். இந்த காலத்தின் சான்றோர்களைப் பார்த்தவர்கள் பலர் இப்போதும் உயிருடன் இருப்பார்கள்.(இந்த நூல் 1953-ல் இயற்றப்பட்டது- மொழிபெயர்ப்பாளர்)

நான் இப்போது எடுத்து வைக்கவிருக்கின்ற சாட்சி தற்காலத்துடன் தொடர்புடையதாக இருந்தாலும் இது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்னுள்ள சான்றாகும். எனவே அகப் பார்வை கொண்டவர்களுக்கு இந்த சாட்சியில் சிறப்பான உறுதி இருக்க வேண்டும். இந்த சாட்சி மத்ரஸதுல் உலூம் தேவ்பந்தை நிறுவிய புகழ்பெற்ற **ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது காஸிம் நானோத்வி (மறைவு கி.பி.1889) அவர்களுடையதாகும். அவர்கள் கூறுகிறார்கள்:**

“பொது மக்களின் கருத்தின்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தம் ஆக இருப்பதன் பொருள், அவர்களின் காலம் முந்தைய நபிமார்களின் காலத்திற்குப் பிறகுள்ளது; மேலும் அவர்கள் அனைவரிலும் கடைசி நபியாவார்கள் என்பதாகும். ஆனால் காலத்தால்

முன்னால் இருப்பதாலும், பின்னால் இருப்பதாலும் தனிப்பட்ட எந்த சிறப்பும் இல்லை என்பது அறிவுள்ளவர்களுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது வலாகின் ரஸூலல்லாஹி வ காத்தமன்னபிய்யீன் என புகழ்ந்துரையாக வந்திருப்பது எவ்வாறு சரியானதாக இருக்க முடியும்? ஆயினும், இந்த பண்பை புகழ்ந்துரையாகக் கூறாமல் இந்த அந்தஸ்தை புகழுக்குரிய அந்தஸ்தாகக் குறிப்பிடாமல் இருந்தால் காத்தமிய்யத் என்பது காலத்தால் இறுதி என்ற வகையில் சரியானதாக இருக்க முடியும். ஆனால் இஸ்லாத்தைச் சேர்ந்தவர்களில் எவரும் இதை விரும்ப மாட்டார் என்பதை நான் அறிவேன்." *(தஹ்ஸீருன்னாஸ் . சஹாரன்பூரில் அச்சிடப்பட்டது. பக்கம் 3)*

**பிறகு இதே நூலில் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

**"ஒரு வாதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகும் ஒரு நபிதோன்றினாலும் முஹம்மதிய்ய காத்தமிய்யத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது."** *(தஹ்ஸீருன்னாஸ் பக்கம் 28)*

தேவ்பந்து ஆலிம்கள் தமது கண்ணியத்திற்குரிய தோற்றுநரின் இந்த சான்றைப் பற்றி சிந்திப்பார்களா? கத்மே நுபுவ்வத்திற்கு விளக்கம் கொடுப்பதில் அவர்களின் மதிப்பிற்குரிய சான்றோர் காட்டிய பரந்த உள்ளத்தையும், பரந்த பார்வையையும் தேவ்பந்து ஆலிம்கள் காட்டுவார்களா?

இங்கு ஹஸ்ரத் மவ்லானா நானோத்வி அவர்கள் சந்தேகத்தை வெளிப்படுத்தும் சொல்லாகிய 'ஒரு வாதத்திற்காக' என்ற சொல்லையும், 'வந்தால்' என்ற சொல்லையும் கையாண்டிருக்கிறார்களே என்றும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியுமில்லை என்ற கருத்தையும் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்களே என்றும் எவருக்காவது சந்தேகம் எழுமென்றால் இதற்கு நான் இந்த நூலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ள அதே பதிலைத் தான் கூறுவேன். அதாவது, தடுமாறி இருக்கின்ற சகோதரர்களே! இறைவன் உங்களுக்குப் புரியும் திறனை வழங்குவானாக. மவ்லானா அவர்களின் பார்வையில் **ஒரு நபி வரவிருக்கிறார்** என்பதற்காக நாம்

இந்த சான்றை எடுத்து வைக்கவில்லை. மாறாக, *காத்தமுன்னபிய்யீன் என்ற வசனமும், லா நபிய்ய பஃதீ என்ற ஹதீஸும்* இருந்தாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் **பிறகு நபி வர முடியும்** என்பதற்காக எடுத்து வைத்திருக்கிறோம். எனவே இங்கு எவராவது ஒருவர் வருவதைப் பற்றிய கேள்வியன்று; மாறாக, வர முடியும் என்பதற்கான கேள்வியாகும். மேலும் இந்த கேள்விக்கு இந்த சான்று முற்றிலும் தெளிவானதும், துல்லியமானதுமாகும். நமது கருணையுள்ள மாற்று கருத்து கொண்டவர்கள் அவசரத்தன்மைக்கு பதிலாக பொறுமையுடனும் அமைதியுடனும் சிந்திக்கும் பழக்கத்தை உருவாக்கினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

இப்போது நான் கத்மே நுபுவ்வத் வாதம் தொடர்பாக உதாரணமாக இங்கு எடுத்து வைக்க விரும்பிய சான்றுகளை இறையருளால் நிறைவு செய்கிறேன். (இந்த சான்றுகள் அல்லாஹ்வின் அருளால் 10 ஆகும்). நமது கண்ணியத்திற்குரிய வாசகர்கள் பார்த்தது போன்று, நான் இந்த சான்றுகளை இஸ்லாமிய வரலாற்றின் எல்லா காலத்திலிருந்தும் எடுத்து வைத்திருக்கிறேன். ஆரம்ப காலம், மத்திய காலம், இறுதி காலம் ஆகிய எந்த காலத்திலிருந்தும் ஏதாவதொரு சான்றோரின் சாட்சியை எடுத்து வைக்காமல் இல்லை.

முதல் காலத்தின் சான்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலமாகும். அது முற்றிலும் ஆரம்ப காலமாகும். அது சஹாபாக்களின் காலமாகும். மேலும் கடைசி சான்று எமது ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து கட்டளையினைப் பெற்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை நிறுவிய அந்த காலமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத் அல்லாத நுபுவ்வத்தின் வாசல் திறந்துள்ளது என்பதே சஹாபாக்களுக்குப் பிறகு எல்லா முஸ்லிம்களின் கொள்கையாக இருந்தது என்பது ஒருபோதும் எனது வாதமன்று. ஏனெனில் அப்படி இருந்தால் பிறகு கருத்து வேறுபாடு பற்றிய பேச்சுக்கே இடமில்லை. ஆனால் ஒன்றை நான் கண்டிப்பாகக் கூறுவேன். மேலும் இதனை உறுதியான சான்றுகளின் மூலமாக பகல் வெளிச்சம் போல் நிரூபித்துக் காட்டி இருக்கிறேன். அதாவது நமது ரஸூல் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத் எந்தவொரு

ஷரீஅத் அல்லாத நபி தோன்றும் வழியில் தடையாக இல்லை. மாறாக, ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் ஒளியின் வழி முன்னரை விட அதிகமாக பரந்து விரிந்து விட்டது. இதனை ஒவ்வொரு காலத்தின் ஏதாவதோர் இஸ்லாமிய சான்றோர் இந்தக் கொள்கையை பகிரங்கமாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அதுவே உண்மையான கருத்தாகும்.

## அனைத்து முஸ்லிம்களின் ஒருமித்த சாட்சி

இதுவரை நான் குறிப்பிட்ட சான்றோர்களின் கூற்றுகளை எடுத்துரைத்து வந்தேன். ஆனால் இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு குறைந்தது ஷரீஅத் அல்லாத ஒரு நபி முஸ்லிம்களிடம் கண்டிப்பாக வரவிருக்கிறார் என்ற நம்பிக்கையில் முஸ்லிம்களில் ஒவ்வொருவரும் ஒருவகையில் நம்பிக்கை கொண்டு வந்திருக்கிறார் என்பதை நான் எடுத்துக் கூறுகிறேன்.

இதன் விளக்கமாவது, ஒவ்வொருவரும் அறிந்திருப்பது போன்று, இறுதி காலத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றுவார்கள். அவர்களின் மூலமாக இஸ்லாத்திற்கு அசாதாரணமாக ஆற்றல் கிடைக்கும். மேலும் இஸ்லாம் மார்க்கம் மற்றெல்லா மார்க்கங்களின் மீதும் வெற்றி கொண்டு விடும். தஜ்ஜால் கொலை செய்யப்பட்டு விடுவான். சிலுவை உடைக்கப்படும். நிராகரிப்பவர்கள் வெற்றி கொள்ளப்படுவார்கள். உட்புறமான கருத்து வேறுபாடுகளுக்கு உண்மையான தீர்ப்பு கிடைத்து விடும் ஆகியவை. இந்த முன்னறிவிப்பு சூசகமாக திருக்குர்ஆனிலும் (24:56) விரிவாக ஹதீஸின் எல்லா நூல்களிலும் காணப்படுகிறது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பை மிகவும் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இஸ்லாமிய முன்னறிவிப்புகளில் முதலிடத்தைப் பெறும் அளவில் அதிகமாக அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இஸ்லாத்தின் ஒவ்வொரு சிறுவரும் இதனை அறிவார். மேலும் இந்த முன்னறிவிப்பு எந்த அளவுக்கு புகழ் பெற்றதாக விளங்குகிறதென்றால், அதை விட அதிக புகழ் கற்பனையிலும் வர முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் இந்த முன்னறிவிப்பின் மீது எந்த அளவுக்கு உறுதியான நம்பிக்கை இருந்ததென்றால், எந்த அளவுக்கு அழுத்தம் கொடுக்க விரும்பினார்கள் என்றால் அவர்கள் இதை அல்லாஹ்வின் மீது

ஆணையிட்டுக் கூறியிருக்கிறார்கள். அதிக சஹீஹான ஹதீஸ் நூலாகிய புகாரியில் இவ்வாறு வருகிறது:

وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَيُوشِكَنَّ أَنْ يَنْزِلَ فِيكُمُ ابْنُ مَرْيَمَ حَكَمًا عَدْلًا
فَيَكْسِرُ الصَّلِيبَ وَ يَقْتُلُ الْخِنْزِيرَ وَ يَضَعُ الْجِزْيَةَ

வல்லதீ நஃப்ஸீ பியதிஹீ லயூஷிகன்ன அன் யன்ஸில ஃபீக்குமுப்னு மர்யம் ஹகமன் அத்லன். ஃபயக்ஸிருஸ் ஸலீப வ யக்துலுல் கின்ஸீர வ யழவுல் ஜிஸ்யா. (புகாரி. கிதாபு பத்யில் கல்க். பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம்.)

“ எவன் கையில் என் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! உங்களிடத்தில் கண்டிப்பாக மஸீஹ் இப்னு மர்யம் இறங்குவார். அவர் எல்லா மார்க்க விவகாரங்களிலும் தீர்ப்பளிப்பவராக மாறி தீர்ப்பு வழங்குவார். மேலும் அவருடைய தீர்ப்பு உண்மையின் அடிப்படையில் இருக்கும். அவர் சிலுவை குழப்பத்தை தூள் தூளாக்குவார். மேலும் பன்றியின் அசுத்தங்களை அழித்து விடுவார். அவர் ஜிஸ்யாவையும் நீக்கி விடுவார்.” ***(சஹீஹ் புகாரி கிதாபு பத்யில் கல்க். பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம்) புகாரி பாகம் 2 பக்கம் 1381 ஹதீஸ் எண்: 3448 ரஹ்மத் பதிப்பகம் காண்க)***

## ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் தமது நுபுவ்வத்துடன் இறங்குவார்கள்

இதுதான் மஸீஹ் இறங்குவது பற்றி இஸ்லாத்தில் காணப்படுகின்ற மகத்தான முன்னறிவிப்பாகும். இந்த முன்னறிவிப்பில் மஸீஹுக்கு ஒப்பான ஒருவரைப் பற்றி கூறப்பட்டுள்ளதே தவிர அசல் மஸீஹிப்னு மர்யமைப் பற்றியல்ல என்பது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கையாகும். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு 600 ஆண்டுகளுக்கு முன் மூஸாவின் சமுதாயத்தில்

தோன்றிய அதே ஈசா (அலை) தான் என தற்போதைய முஸ்லிம்களின் அனைத்து பிரிவினரும் நம்புகின்றனர். அத்துடன் இந்த மஸீஹ் தனது நுபுவ்வத்துடன் வருவார்; நுபுவ்வத்தின் அந்தஸ்தை இழந்து வர மாட்டார் என்றும் நம்புகின்றனர். **இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி அவர்கள் கூறுகிறார்கள்:**

من قال بسلب نبوته كفر حقًّا فانه نبيٌ لا يذهب وصف النبوة

“மன் கால பிஸல்பி நுபுவ்வத்திஹீ கஃபர ஹக்கன். ஃபஇன்னஹூ நபிய்யுன். லா யுஸ்ஹபு அன்ஹூ வஸ்ஃபுன் நுபுவ்வத்தி.”

“ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறுதி காலத்தில் நுபுவ்வத்தை இழந்து வருவார் என்று எவர் கூறினாரோ அவர் உறுதியான காஃபிர் ஆவார். ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சந்தேகமின்றி இறைவனின் ஒரு நபியாக இருந்தார். மேலும் நுபுவ்வத் என்ற இந்த பண்பு அவர்களை விட்டும் எவ்விதத்திலும் நீங்க முடியாது.” ***(ஹுஜஜுல் கராமா என்ற நூலில் பக்கம் 431-ல் குறிப்பிட்ட சான்றின்படி)***

எனவே இறுதி காலத்தில் மஸீஹ் தோன்றுவது விதிக்கப்பட்டுள்ளது என்பது எல்லா முஸ்லிம்களின் ஒன்றுபட்ட கொள்கையாகும். மேலும் இந்த மஸீஹ், நுபுவ்வத்தின் அந்தஸ்தில் வருவார் என்பதிலும் அனைத்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டிருக்கும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபியை எல்லா முஸ்லிம்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற இயல்பான விஷயத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு வகையில் நுபுவ்வத்தின் வாசல் திறந்திருக்கிறது என்பதில் உம்மத்திலுள்ள சிறப்பானவர்களின் சாட்சி மட்டுமின்றி, ஒவ்வொரு முஸ்லிமின் சாட்சியும் இருக்கிறது.

எனவே அன்பர்களே! நண்பர்களே!! சிந்தியுங்கள் கவனியுங்கள். ஒரு பக்கம் இறுதி காலத்தில் மஸீஹ் இறங்குவதைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்கள் என்பதில் எல்லா முஸ்லிம்களும் ஈமான் கொண்டிருக்கிறார்கள். மறு பக்கம், வரக் கூடிய

மஸீஹ் நுபுவ்வத்தை இழந்து வர மாட்டார்; மாறாக, நபி என்ற நிலையிலேயே வருவார் என்றும் நம்பிக்கை கொள்கின்றனர். இவ்விரண்டு விஷயங்களிலிருந்தும், எல்லா முஸ்லிம்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபி வருவதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன முடிவை எடுக்க முடியும்? அதுவே கருத்தாகும்.

மற்ற முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபி வருவதை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு 600 ஆண்டுகளுக்கு முன்னர் நுபுவ்வத்தின் பதவியில் இருந்தவராவார். எனவே அவர் வருவது கத்மே நுபுவ்வத்தில் எந்த இடையூறையும் ஏற்படுத்தாது. ஆனால் பின்னர் பிறக்கும் ஒரு நபர் நபியாவது கண்டிப்பாக இடையூறை ஏற்படுத்தும் எனக் கூறப்பட்டால், நான் கூறுவேன்: தடுமாறிக் கொண்டிருக்கும் நமது சகோதரர்களே! அல்லாஹ் உங்களின் கண்களைத் திறப்பானாக. இங்கு முன்னர் தோன்றுகின்ற நபி அல்லது பின்னர் தோன்றுகின்ற நபி என்பதைப் பற்றிய கேள்வியன்று. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் நபி என்ற வகையில் தோன்றுபவர் மற்றும் அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் கடமைகளை நிறைவேற்றுவது பற்றிய கேள்வியாகும். எனவே ஈஸா (அலை) முன்னர் தோன்றியவராக இருந்தாலும் உங்கள் கொள்கைப்படி அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு உலகில் தோன்றி நுபுவ்வத்தின் கடமைகளை நிறைவேற்றுவார். எனவே நுபுவ்வத்தின் வாசல் முற்றிலும் அடைக்கப்பட்டுவிட்டதென்றால், ஈஸா வருவது எந்நிலையிலும் கத்மே நுபுவ்வத்திற்கு மாற்றமானதாகும். அந்தோ! நீங்கள் புரிந்தால் நன்றாக இருக்குமே!!

இன்னும் சொல்வதென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தை சேர்ந்தவராகவோ, அவர்களின் மாணவராகவோ இல்லாதிருக்கின்றவரும், அவர்களைப் பின்பற்றி அவர்களின் அருளிலிருந்து நுபுவ்வத்தைப் பெறாதவருமாகிய அப்படிப்பட்ட ஒருவர் நபியாக வருவது இஸ்லாத்தின் எல்லா அமைப்பையும் தவிடுபொடியாக்கி விடும். கத்மே நுபுவ்வத்தும் எஞ்சியிருக்காது; நமது எஜமானர் (ஸல்) அவர்கள் நபிமார்களில்

காத்தமாக (நபிமார்களில் இறுதியாக) இருப்பதும் சரியானதாக இருக்காது.

ஆனால் இதற்கு நேர்மாற்றமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மாணவர்களிலிருந்து, ஆன்மீக மகன்களிலிருந்து ஒருவர் அவர்களின் அருளிலிருந்து அருளைப் பெற்று அவர்களின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று நுபுவ்வத்தின் அந்தஸ்தில் நிலைபெறுவது ஒருபோதும் எந்த இடையூறையும் ஏற்படுத்தாது. மாறாக, இதிலிருந்து அவர்களின் உயர்ந்த மகத்துவத்திற்கான சான்று கிடைக்கிறது. எவ்வாறு அவர்களின் ஆன்மீக சூரியன் அவர்களுக்குப் பிறகு ஓர்ஆன்மீக சந்திரனை உருவாக்கி உலகின் இருண்ட காலத்தில் ஒளிக்கான வழிவகையை உருவாக்கியிருக்கிறது! *அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் இன்னக ஹமீதும் மஜீது.*

### அறிவுப்பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் கத்மே நுபுவ்வத்திற்கான தீர்வு

### நமது கொள்கை இறைவனின் நடைமுறைக்கு முற்றிலும் ஏற்றதாகும்

உம்மத்தின் சென்ற கால சான்றோர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்களின் சாட்சியை எடுத்துரைத்த பிறகு இப்போது நான் எனது கட்டுரையின் கடைசி பகுதிக்கு வருகிறேன். அது அறிவுப்பூர்வமான சான்றுடன் தொடர்புடையதாகும். நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போன்று மனிதனின் அறிவு சில நேரத்தில் வெளிப்புறத்திலுள்ள இருள்களின் காரணமாக உருவாகும் தனது தடுமாற்றங்களைக் கொண்டபோதிலும் அந்த அறிவு ஓர் உயரிய இயல்பான ஒளியுமாகும். அது மனிதனுக்கு உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவதற்காக இறைவன் புறமிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் உலகின் பெரும்பாலான பிரச்சனைகளுக்கு இதன் மூலமாகவே தீர்வு கிடைக்கின்றது. எனவே இது தொடர்பாக முதன் முதலில் அறிய வேண்டிய விஷயம் என்னவெனில், உலக வரலாற்றைப் படிக்கும்போது நிரூபணமாவது போன்று, எப்போதெல்லாம் உலகில் தவறான சிந்தனைகள், தீய செயல்கள் தலைதூக்குகின்றனவோ அப்போதெல்லாம் அல்லாஹ் தன் புறமிருந்து தனது ஒரு தூய

அடியாரை மக்களின் சீர்திருத்தத்திற்காக அனுப்புகிறான். இது அல்லாஹ்வின் தொன்மையான நடைமுறையாகும். மேலும் சீர்திருத்தத்திற்கான வழிமுறை நிலைமைகளுக் கேற்றவாறு இருக்கிறது. அதாவது எந்த காலத்திலாவது புதிய ஷரீஅத்தின் தேவை இருக்குமென்றால், அவன் புதிய ஷரீஅத்தை இறக்கி சீர்திருத்தத்திற்கான ஏற்பாட்டை செய்கின்றான். புதிய ஷரீஅத்திற்கான தேவை இல்லையென்றால், ஷரீஅத் அல்லாமல் நபியை அனுப்பி, சீர்திருத்தம் செய்கின்றான். இது உலகம் தோன்றிய நாள்தொட்டு தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. ஒருபோதும் நின்று விடவில்லை. ஓர் இலட்சத்து இருபத்தினான்காயிரம் நபிமார்களில் 315 நபிமார்கள் மட்டுமே ஷரீஅத்தைக் கொண்ட நபியாக இருந்தார்கள். ***(முஸ்னது அஹ்மது, மிஷ்காத் பாபு பத்யில் கல்க் காண்க).*** இந்த நிரந்தரமான உண்மைக்கு இது ஒரு வலுவான சான்றாகும். இறைவன் ஒவ்வொரு பெரிய குழப்பமான காலத்திலும் தன் சார்பாக ஒருவரை நுபுவ்வத்தின் அந்தஸ்தில் நியமித்து மக்களின் சீர்திருத்தத்திற்காக அனுப்புவது அவனுடைய பழமையான நடைமுறையாக இருந்து வந்திருக்கும்போது, இந்தக் காலத்தில் இந்த நிரந்தரமான நடைமுறையை ஏன் முடிந்து விட்டதாகக் கருத வேண்டும்?

இதற்கு விடையாக, சந்தேகமின்றி முன்னர் அப்படித்தான் இருந்தது; ஆனால் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு இந்தத் தொடர் நின்று விட்டது என்று கூற முடியாது. ஏனெனில், முதலில், காத்தமுன்னபிய்யீன் என்ற சொற்றொடரின் கருத்து, இனி நுபுவ்வத்தின் தொடரே நின்று விட்டது என்பதன்று; மாறாக, முதலில் ஒவ்வோர் ஆறும் சுதந்திரமாகவும் தனித்தனியாகவும் ஓடிக் கொண்டிருந்தன. இப்போது அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமாக அவர்களிடமிருந்தே வெளிவரும் என்பதேயாகும். இதனை நாம் காத்தமுன்னபிய்யீன் வசனத்தின் விளக்கவுரையில் நிரூபித்திருக்கிறோம்.

இரண்டாவது, நான் இப்போது குறிப்பிட்டிருப்பது போன்று, இங்கு முன்னர் கூறப்பட்ட திருக்குர்ஆன், ஹதீஸ் பற்றிய வாதமன்று; மாறாக, அறிவுப்பூர்வமான சான்றுகள் மட்டுமேயாகும். மக்களின் சீர்திருத்தத்திற்காக என்ன வழிமுறை, நபிமார்களின் தோற்றம் பற்றிய

என்ன நடைமுறை, துவக்கத்திலிருந்தே நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருகிறதோ அதை இப்போது நின்று விட்டதாக ஏன் கருத வேண்டும்? என்ற இந்த சான்று முற்றிலும் சரியானதும் தெளிவானதுமாகும். இந்த பழமையான ஆற்றை நிறுத்தி அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு என்ன அறிவுப்பூவமான சான்று இருக்கிறது?

எனவே நண்பர்களே! அன்பர்களே!! சற்று சிந்தியுங்கள். புரியுங்கள். உலகம் தோன்றிய நாளிலிருந்து இறைவன் நபிமார்களை அனுப்புவதன் மூலம் மக்களை சீர்திருத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட முறையை நிலைநாட்டி இருக்கிறான். மேலும் மக்களின் உள்ளங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்காக ஒரு நிரந்தரமான ஆற்றை ஓடச் செய்துள்ளான். இப்போது இந்தக் காலத்தில் இந்த பழமையான நடைமுறையை ஏன் முடிந்து விட்டதாகக் கருத வேண்டும்? இது எத்தகைய உறுதியான, நம்பத்தகுந்த சான்று என்றால், காழ்ப்புணர்ச்சியற்ற ஒவ்வொரு மனிதனின் அறிவும், அவனது மனசாட்சியின் ஒளியும் ஒப்புக்கொள்ளும் கட்டாயத்தில் இருக்கிறது. மேலும் இதற்கு எதிராக வேறு எந்த அறிவுப்பூர்வமான சான்றும் சிந்தனையில் வர முடியாது.

## சான்று காட்ட வேண்டிய பொறுப்பு நமது மாற்று கருத்து கொண்டவர்களுக்கே இருக்கிறது

பிறகு இந்த சான்றின் ஒரு கிளை என்னவென்றால், இறைவன் எல்லா பெருங் குழப்பமான காலத்திலும் ஒரு நபியை அனுப்பி சீர்திருத்தம் செய்ய வைக்கிறான் என்ற இந்த பழமையான அவனது நடைமுறை முடிந்து விட்டது என எவராவது வாதிக்கிறார் என்றால், அதற்கான சான்றைத் தருவது அவ்வாறு வாதிப்பவரின் பொறுப்பாகும். எமது வாதத்திற்கு எந்நிலையிலும் எவ்வித சான்றும் தேவையில்லை. ஏனெனில் அது இறைவனுடைய நடைமுறைக்கும் தொடர்ந்து இருந்து வருகின்ற வழிமுறைக்கும் ஏற்றதாகும். ஆனால் இறைவனது நடைமுறைக்கு மாற்றமாக ஒரு புதிய விஷயத்தை வாதிப்பவர்களின் மீது தான் அதற்கான சான்றைக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு இருக்கிறது. எனவே நமது மாற்று கருத்து கொண்டவர்கள் தமது கொள்கைக்கு சான்றாக ஏதாவதோர் அறிவுப்பூர்வமான சான்றை எடுத்து

வைக்க இயலாதென்றால் – இறையருளால் அவர்கள் ஒருபோதும் எடுத்து வைக்க இயலாது – பிறகு இந்த விவகாரத்தில் தர்க்க அளவிலான நிலை என்னவென்றால், இந்நிலையில் நமது சார்பாக ஒருபோதும் எந்த சான்றும் எடுத்து வைக்கத் தேவையில்லை. ஏனெனில், சான்றை எடுத்து வைப்பது நமது எதிர்கருத்து கொண்டவர்களின் பொறுப்பாக இருக்கும்போது அவர்களின் சார்பாக எந்தவோர் அறிவுப்பூர்வமான சான்றை எடுத்து வைக்காதிருப்பது அனைத்து வாதத்தையும் முடித்து விடுகிறது.

## தற்போதைய காலத்தின் மிகப் பெரிய குழப்பம் ஒரு நபியின் தேவையை உணர்த்துகிறது

அறிவு எனும் களத்தில் இன்னொரு சான்றும் மிக உறுதியானதாகும். அதாவது தற்காலத்தின் நிலைமையில் மார்க்க உலகிலும் கொள்கைகளிலும், செயல்களிலும் அசாதாரணமான குழப்பம் உருவாகி இருக்கிறது. மேலும் உலகாதாயம் மற்றும் மார்க்கமிழந்த நிலை எனும் வலை நாலாப்புறமும் பரவி இருக்கிறது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கேற்ப எல்லா நபிமார்களும் எச்சரித்து வந்த தஜ்ஜாலிய குழப்பம் எல்லா சமுதாயங்களையும் எல்லா மார்க்கங்களையும் கிரகணத்தைப் போன்று விழுங்கிக் கொண்டிருக்கிறது. இந்த எல்லா நிலைமைகளும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாணவராகவும், மகனாகவும் இருந்து அவர்களின் ஆன்மீக சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று உலகிற்கு ஒளியூட்டும் ஒரு நபியின் தேவையை உணர்த்துகின்றன. சந்தேகமின்றி சென்ற காலத்திலும் இருண்ட காலங்கள் வந்தன. ஆனால் எப்படிப்பட்ட அசாதாரணமான இருளும், ஈமான் மற்றும் செயல்கள் ஆகியவற்றின் களத்தில் அசாதாரணமான முறையில் குழப்பமும் இக்காலத்தில் வெளிப்பட்டதோ அதற்குரிய உதாரணத்தை வேறு எந்த காலத்திலும் காண முடியாது. எனவே சென்ற கால நூற்றாண்டுகளில் பொதுவான முஜத்திதுகளின் பணி நடைபெற முடியுமென்றால் தற்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளிலிருந்து நுபுவ்வத்தின் அந்தஸ்து வரை சென்றடைந்து நுபுவ்வத்தின் ஆற்றல்களினால் அழகைப் பெற்று

உலகிற்கு சீர்திருத்தத்திற்கான பணியை செய்கின்ற ஒரு மகத்தான முஜத்திதின் தேவை இருந்தது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இறுதி காலத்தின் அசாதாரணமான இருள்கள் மற்றும் குழப்பங்களை கவனத்தில் கொண்டு கூறினார்கள்: சந்தேகமின்றி, ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்திது (சீர்திருத்தவாதி) தோன்றுவார். ஆனால் தஜ்ஜாலிய குழப்பங்களின் காலத்தில் எப்படிப்பட்டவர் தோன்றுவார் என்றால், ***லய்ஸ பைனீ வபைனஹு நபிய்யுன்.அதாவது எனக்கும் அவருக்கும் இடையில் நபியில்லை.*** *(அபூ தாவூது)*

## அல்லாமா இக்பால் மற்றும் மவ்லவி மவ்தூதி ஆகியோரின் சாட்சி

இந்த இருண்ட காலத்தைப் பற்றித்தான் கவிஞர் **அல்லாமா இக்பால்** முஸ்லிம்களின் மார்க்க வீழ்ச்சியைக் கண்டு இவ்வாறு கூறினார்:

“உம்மத்தைச் சேர்ந்தவர்கள் நபி (ஸல்) அவர்களை அவமானப்படுத்தி விட்டனர். அவர்களின் கைகள் பலவீனமடைந்து விட்டன. மார்க்கமிழந்த நிலையை உள்ளம் விரும்புகிறது. சிலையை உடைப்பவர்கள் முடிந்து விட்டனர். இப்போது சிலைகளை உருவாக்குபவர்கள்தான் எஞ்சியுள்ளனர். இப்ராஹீம் நபியின் மகன் ஆஸரைப் போன்று இவர்கள் மாறி விட்டனர்.

முஸ்லிம்கள் அழிந்து விட்டனர் எனக் கூக்குரல் எழுகிறது. முஸ்லிம்களும் ஒரு காலத்தில் இருந்தார்களா என நாம் கேட்கிறோம்.

நாகரிகத்தில் நீங்கள் கிறித்தவர்களாக இருக்கிறீர்கள் என்றால் சம்பிரதாயத்தில் நீங்கள் இந்துக்களாக இருக்கிறீர்கள். இவர்கள்தான் முஸ்லிம்கள்; இவர்களைப் பார்த்து யூதர்கள் வெட்கப்படுகின்றனர்.’’ ***(பாங்கே தரா என்ற கவிதை நூலில்)***

இந்தக் கவிதைகளில் அல்லாமா இக்பால் ஆவேசமான நிலையில் சற்று கடினமான சொற்களை பயன்படுத்தி விட்டார்கள். ஆயினும் அதைப் பொருட்படுத்தக் கூடாது. ஏனெனில் சில நேரத்தில் சீர்திருத்தத்தின் எண்ணத்தில் கசப்பான சொற்களை பயன்படுத்த

வேண்டியது வருகிறது. எனவே நமது வாசகர்கள் இந்த சொற்களில் உள்ள கடினத்தைப் பார்க்கக் கூடாது. மாறாக, அதன் ஆன்மாவை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் அந்த ஆன்மா நல்ல எண்ணத்தைக் கொண்டதாக இருக்கிறது.

எப்படி இருந்தாலும் இப்படிப்பட்ட இருள் நிறைந்த காலத்தில் அதன் பாதிப்பு முஸ்லிம்களின் மீது மட்டுமின்றி, ஒவ்வொரு மார்க்கத்தின் மீதும் ஏற்படும்போது, மக்கள் தமது நாவினால் கூறாவிட்டாலும் நிலைமை என்னவென்றால், இப்போது இறைவன் புறமிருந்து (சாதாரண) ஒரு சீர்திருத்தவாதியல்ல; நுபுவ்வத்தின் ஆற்றல்களைக் கொண்ட சீர்திருத்தவாதி தேவைப்படுகிறார் எனக் கூறுகின்றனர். மற்றவர்கள் போகட்டும்; தற்போது நமது எதிர்ப்பில் மிகவும் முன்னணியில் இருக்கும் அபுல் அஃலா மவ்தூதியும் இவ்வாறு கூறுகிறார்:

“பெரும்பாலான மக்கள் மார்க்கத்தை நிலைநாட்டத் தூண்டுவதற்காக **முழுமையான ஓர் ஆண்மகனைத் தேடுகின்றனர்.** அவர்களில் ஒவ்வொரு நபரின் முழுமையான சிந்தனையின் தோற்றமாக அவர் விளங்க வேண்டும் எனவும் அவருடைய எல்லா அம்சமும் முற்றிலும் ஆற்றல் மிக்கதாக இருக்க வேண்டும் எனவும் விரும்புகின்றனர். **வேறு சொற்களில் சொல்வதென்றால், இவர்கள் ஒரு நபியை வேண்டுகின்றனர்.** நாவினால் கத்மே நுபுவ்வத்தை ஏற்றுக் கொண்டாலும் எவராவது நுபுவ்வத் தொடர்கிறது என்ற பெயரைக் கூறினாலும் அவருடைய நாவை இழுத்து அறுத்து விடவும் ஆயத்தமாகி விடுவார்கள். **ஆனால் உள்ளுக்குள்ளே அவர்களின் உள்ளம் ஒரு நபியை வேண்டுகிறது. நபியை விட குறைவான எவர் மீதும் அவர்களுக்கு திருப்தி இல்லை.”** ***(தர்ஜுமானுல் குர்ஆன் பாபத் டிசம்பர்1942, ஜனவரி 1943 பக்கம் 406)***

## வானம், பூமி ஆகியவற்றின் வலுவான சாட்சி

திருக்குர்ஆனின் வழிகாட்டல்களை ஒருபுறம் வைத்தாலும், ஹதீஸின் விளக்கங்களை ஒருபுறம் வைத்தாலும், சென்ற கால சான்றோர்களின் சாட்சிகளை ஒருபுறம் வைத்தாலும் காலத்தின் நிலைமையும், மக்களுடைய உள்ளங்களின் ஓசையும் இக்காலத்தில் ஒரு நபியின் தேவை இருக்கிறது என்பதற்கு சாட்சி பகர்கிறது. **ஹஸ்ரத்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (ஒரு பாரசீகக் கவிதையில்) என்ன அருமையாகக் கூறியிருக்கிறார்கள்!**

"உண்மையை தேடும் மக்களே! காது கொடுத்துக் கேளுங்கள். இக்காலத்தில் இறைவன் புறமிருந்துள்ள ஒரு சீர்திருத்தவாதியின் தேவை இருக்கிறது என்ற குரல் மறைவிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் எல்லா இடத்திலும் மார்க்கத்தில் குழப்பம் மட்டுமே எழுந்துள்ளது. பாருங்கள். வானம் மேலேயிருந்து அடையாளங்களை பொழிந்திருக்கின்றது. மேலும் இந்தக் காலம் இறைவன் புறமிருந்துள்ள ஒரு சீர்திருத்தவாதியின் காலம் என்பதை பூமி கீழேயிருந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.வானமும், பூமியும் ஆகிய இந்த இரண்டு சாட்சிகளும் எனது உண்மைக்கு சான்றளிப்பதற்காக சுறுசுறுப்பாக நிற்கின்றன." ***(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 114)***

பிறகு தனது மஸீஹிய்யத்தின் குறிப்பிட்ட வாதத்தைப் பற்றி (ஓர் உருது கவிதையில்) கூறுகிறார்கள்:

"காலம் மஸீஹுக்குரியதாக இருந்தது; வேறு யாருடைய காலமாகவும் இருக்கவில்லை. நான் வராதிருந்தால் வேறு யாராவது வந்திருப்பார்." ***(துர்ரே ஸமீன்).***

அதாவது இந்தக் காலம் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், இந்தக் காலத்தில் மார்க்கமற்ற நிலை, உலகாதாயம், தஜ்ஜாலிய குழப்பங்கள் மற்றும் இஸ்லாத்திற்கு எதிரான தாக்குதல்களின் காரணமாக ஒரு சாதாரண சீர்திருத்தவாதி போதுமானதாக இருக்கவில்லை. மாறாக, ரஸூலுக்குப் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் தேவைப்பட்டார். அவர் மஸீஹுக்கு ஒப்பானவராக அனுப்பப்பட வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றியது போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அவர்களின் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதற்காக ஒரு மஸீஹுக்கான தேவை இருந்தது. எனவே காலமே ஒரு மஸீஹை அழைத்துக் கூறிக் கொண்டிருக்கும்போது இந்தக் காலத்தில் நான் வராதிருந்தால் நிச்சயமாக இன்னொருவர் ரஸூலுக்குப் பிரதிநிதியாக மஸீஹாக நியமிக்கப்பட்டிருப்பார்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

சுருக்கமாக, நமது எஜமானர் (ஸல்) அவர்களின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று அவர்களுடைய அருளிலிருந்து அருளைப் பெற்று உலகை சீர்திருத்தக் கூடிய ஒரு மகத்தான சீர்திருத்தவாதியை காலத்தின் தேவையும், நேரத்தின் சாட்சியும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அதன் மறு பெயரே நிழலான நபி அல்லது உம்மதி நபி என்பதாகும். ஏனெனில் அவர் நமது நபி (ஸல்) அவர்களின் ஆன்மீக மகனும், அவர்களின் தூய மரத்தின் கிளையும், அவர்களின் பகுதியுமே ஆவார். அந்தோ!நமது சகோதரர்கள் இந்த நுட்பமான கருத்தைப் புரிந்தால் எவ்வளவு என்றாக இருக்கும்!!

## எந்தக் கொள்கை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு ஏற்றதாகும்?

இதற்குப் பிறகு அறிவுப்பூர்வமான சான்றுகளில் இறுதியான சான்றை எடுத்துக் கூறுகிறேன். அது அறிவுப்பூர்வமான சான்றில் (ஏனெனில் இந்த இடத்தில் அறிவுப்பூர்வமான சான்று பற்றிய வாதமாகும். திருக்குர்ஆன், ஹதீஸ் பற்றிய வாதமன்று.) கத்மே நுபுவ்வத் தொடர்பாக எந்தக் கொள்கை சரியானதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்துக்கு அதிகம் ஏற்றதாகவும் இருக்கிறது? அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எடுத்து வைக்கும் கொள்கையா?அல்லது இக்காலத்தில் நமது எதிர் கருத்து கொண்ட சகோதர்களின் கொள்கையா? என்பதுடன் தொடர்புடையதாகும். இது தொடர்பாக நமக்கு நீண்ட வாதம் செய்ய வேண்டிய தேவையில்லை. மாறாக, இரண்டு கொள்கைகளையும் ஒன்றுக்கு முன்னால் இன்னொன்றை வைத்து ஒரு பார்வை செலுத்தினால் போதுமானதாகும். எனவே உண்மை, யாருடன் இருக்கிறது என்பதை வாசகர்கள் தமது உள்ளத்திடம் மார்க்கத் தீர்ப்பு கேட்டு தீர்ப்பு பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் இறைவனை முன்னிறுத்தியவாறு இந்த எதிரும் புதிருமான கட்டத்தைப் பாருங்கள். இது மார்க்கம் பற்றிய விவகாரமாகும். இதில் மிகவும் நிதானமாக செயல்பட வேண்டிய தேவை இருக்கிறது.

| இக்காலத்திலுள்ள பிற முஸ்லிம்களின் கொள்கை | அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை |
|---|---|
| ஹஸ்ரத் நபி (ஸல்) காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள். அதன் பொருள், அவர்கள் நபிமார்களை முடிப்பவர்கள் ஆவார்கள். அவர்களுக்குப் பிறகு நுபுவத்தின் எல்லா விதமான வாசலும் முற்றிலுமாக அடைபட்டு விட்டது. இனி எவரும் எந்நிலையிலும் நுபுவ்வத்தின்அருளைப் பெற முடியாது.வரவிருந்த நபிமார்கள் அனைவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னரே வந்து விட்டனர். அவர்களுக்குப் பிறகு அவருடைய உம்மத்திலோ உம்மத்திற்கு வெளியிலிருந்தோ எந்த நபியுமில்லை. ஏனெனில் அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு நுபுவ்வத்தின் எல்லா ஆறுகளும் நின்று விட்டன. எனவே அவர்களின் தொண்டர்களிலிருந்து, அடிமைகளிலிருந்து எவரும் நபியாக முடியாது. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள். அதன் பொருள், அவர்கள் நபிமார்களின் முத்திரை ஆவார்கள். அவர்களிடம் நுபுவ்வத்தின் மேன்மைகள் இறுதி எல்லையை அடைந்திருந்தன. எனவே அவர்களுக்குப் பிறகு நேரடியாக நுபுவ்வத்தைப் பெறும் வாசல் அடைபட்டு விட்டது. ஏனெனில் இனி எல்லா அருளையும் பெறுவதென்பது அவர்களைப் பின்பற்றுவதுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கத்மே நுபுவ்வத்தின் அந்தஸ்தின் காரணமாக இறையருள்களின் ஆறு நின்று விடவில்லை. மாறாக, அதன் வழி மாறி அவர்களிடத்தில் அந்த நீர் தேக்கப்பட்டுள்ளது. இனி எவராவது நபி ஆவார் என்றால், அவர்களின் அடிமைத்தனத்தில் அவர்களின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று அவர்களின் நிழலாகத் தோன்றி வருவார். அது இல்லாமல் ஒருபோதும் வர முடியாது. |

இது இந்த விவகாரம் தொடர்பான எதிரும் புதிருமான கொள்கைகளாகும். ஒரு கொள்கை அஹ்மதி அல்லாதவர்களின் கொள்கை. அவர்கள் எல்லா விதமான நுபுவ்வத்தின் வாசலையும்

அடைக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னர் மனித குலத்திற்கு நபி, சித்தீக், ஷஹீது, சாலிஹ் ஆகுவதற்கான வழி திறந்திருந்தது. ஆனால் அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு சித்தீக், ஷஹீது, சாலிஹ் ஆவதற்கான வழி மட்டும் திறந்திருக்கிறது. நுபுவ்வத்தின் வழி மூடப்பட்டு விட்டது எனக் கருதுகிறார்கள்.

இன்னொரு கொள்கை அஹ்மதிகளின் கொள்கையாகும். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகும் இறைவனின் எல்லா அருள்களின் வாசலையும் திறந்திருப்பதாக ஒப்புக்கொள்வது மட்டுமின்றி, அவர்களின் உயரிய கம்பீரம் மற்றும் முழுமையான அந்தஸ்து ஆகியவற்றை கருத்தில் கொண்டு அந்த வாசல் முன்னரை விட மிக அதிகமாகத் திறந்து விட்டது என உறுதி கொள்கின்றனர். மேலும் இறையருள்கள், ஆன்மீக ஒளிகள் ஆகியவற்றின் நீரூற்றுகள் பீரிட்டு எழத் தொடங்கி விட்டன. ஆயினும் இந்த இறையருள் இதற்கு முன்னர் சுதந்திரமான முறையில் வெளிப்பட்டது. இனி இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்துடன் தொடர்புடையதாக்கப்பட்டு விட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (ஓர் உருது கவிதையில்) தனது எஜமானராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விளித்து என்ன அருமையாக கூறுகிறார்கள்:

“இறைதூதர்களில் மேலானவரே! தங்கள் மூலமாகவே நாங்கள் சிறந்த உம்மத்தானோம். தாங்கள் காலெடுத்து வைத்ததனால்தான் நாங்கள் முன்னே காலெடுத்து வைத்தோம்.” ***(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம்)***

அன்பர்களே! நண்பர்களே! இறைவனுக்காக உங்களது காழ்ப்புணர்ச்சிகளை விட்டும் விலகி சிந்தியுங்கள்; கவனியுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து எதில் இருக்கிறது? அவர்களின் தோற்றத்தின் விளைவாக எல்லா விதமான நுபுவ்வத்தின் வாசலையும் அடைத்து அவர்களை ஓடிக்கொண்டிருக்கும் ஓர் ஆற்றை வற்றச் செய்பவராகக் குறிப்பிடுவதிலா? அல்லது அவர்களின் அருளுக்குரிய தோற்றத்திலிருந்து நுபுவ்வத்தின் நீரூற்று பீரிட்டெழுவதிலா? மேலும்

இதற்கு முன்னர் எந்த அருட்கொடை முந்தைய எந்த நபியையும் பின்பற்றாமல் நேரடியாகக் கிடைத்ததோ அது இனி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்தில் அவர்களின் உண்மைப்படுத்தும் முத்திரையுடன் கிடைக்கும் என்பதிலா? ஆம். ஆம். இறைவனுக்காக சாட்சி கூறுங்கள். எந்த இறைவனின் வல்லமையின் கீழ் நம் அனைவரின் உயிர் இருக்கிறதோ எந்த இறைவன் முன்னால் நாம் அனைவரும் ஒரு நாள் மரணித்து நமது செயல்களுக்கு பதில் கூறுவதற்காக நிற்கவிருக்கிறோமோ அந்த இறைவனை முன்நிறுத்திக் கூறுங்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து எதில் இருக்கிறது? அவர்களுக்குப் பிறகு அவர்களின் உம்மத்தில் நுபுவ்வத் நின்று விடுவதிலா? அல்லது அவர்களின் உம்மத்திற்கு வெளியே நின்று விடுவதிலா? மேலும் அவர்களின் அடிமைத்தனம் என்ற ஆற்றின் கீழ் ஓடுவதிலா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உண்மையான அன்பு இருக்கின்ற,தராதரத்தின் உயர்ந்த அந்தஸ்தை புரியும் திறன் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளம், நமது எஜமானர் (ஸல்) அவர்களின் அடிமைகளிலிருந்து தொண்டர்களுக்கு நிழலான நுபுவ்வத்தின் வாசல் திறந்திருக்கிறது என்றே சாட்சி கூறும். அவருடைய மனதின் ஒளி இதையே எடுத்துக் கூறும். பாருங்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு எத்தனை நபிமார்கள் வந்தனர்! நபிமார்களின் கூட்டமே இருந்தது. ஆனால் அந்த நபிமார்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றியதன் அருளினால் நுபுவ்வத்தைப் பெறவில்லை. ஆயினும் மூஸா (அலை) அவர்களின் கீழ் உள்ளவர்களாக வைக்கப்பட்டனர். மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கு தொண்டர்களாக ஆக்கப்பட்டனர். ஆனால் உங்களைப் பற்றி என்ன சொல்வது? நீங்கள் புரிந்து கொண்டது பற்றி என்ன சொல்லி அழுவது? உங்களுக்கு உங்கள் எஜமானர் இறைதூதர்களுக்கெல்லாம் சிறந்தவர் ஆதமின் மக்களில் மேலானவர் (ஸல்) அவர்களின் தொண்டர்களிலிருந்து ஒருவரை நபி என ஏற்றுக் கொள்வதைக் கூட நீங்கள் விரும்பவில்லை! மேலும் அவர் உங்களுடைய கண்களுக்கு முட்களைப் போன்று குத்துகிறார்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

### நுபுவ்வத் என்றால் நமது கருத்து, மற்ற முஸ்லிம்களின் சிந்தனையில் இருக்கும் அந்தக் கருத்து அன்று

கடைசியாக மீண்டும் ஒருமுறை இந்தக் கருத்து தெளிவுபடுத்தப்படுகிறது. ஏனெனில் துரதிஷ்டவசமாக இந்த விஷயத்தின் காரணமாகவே மற்ற முஸ்லிம்களுக்கு நமது கொள்கை பற்றி தவறான எண்ணம் உருவாகியிருக்கிறது. எமது ஜமாஅத்தின் தோற்றுநர் எந்த பொருளில் தம்மை நபி எனக் கூறியிருக்கிறார்களோ அல்லது எந்த பொருளில் நாங்கள் அவர்களை நபி என ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ அது ஒருபோதும் ஒருபோதும் இக்காலத்து முஸ்லிம்களின் சிந்தனையில் இருக்கின்ற அந்தப் பொருள் அன்று. நபி என்றால் ஒரு புது ஷரீஅத்தைக் கொண்டுவருபவர்; அல்லது முந்தைய ஷரீஅத்தில் ஏதாவது அதிகமாக்குபவர் அல்லது குறைப்பவர்; அல்லது முந்தைய நபியை விட்டு சுதந்திரமாக நுபுவ்வத்தைப் பெறுபவராக வாதிடுபவர் அல்லது தனக்கென்று ஒரு புதிய கலிமாவை உருவாக்குபவர் அல்லது புதிய மார்க்கத்தை உருவாக்குபவர் ஆகிய தவறான கருத்துகள் துரதிஷ்டவசமாக இன்றைய பாமர முஸ்லிகளிடம் நுழைந்து விட்டன.இப்படிப்பட்டவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களில் நுபுவ்வத் வாதத்தைப் படிக்கும்போது அல்லது அஹ்மதிகளின் இமாம் இறைவன் புறமிருந்து நுபுவ்வத்திற்கான அந்தஸ்தைப் பெற்றார் என ஏதாவதோர் அஹ்மதியின் வாயிலிருந்து கேள்விப்படும்போது அஹ்மதியல்லாதவர்கள் தமது சிந்தனையில் வைத்திருக்கின்ற நுபுவ்வத் பற்றிய தவறான இலக்கணத்தின் காரணமாக இங்கேயும் இதே மாதிரியான ஒரு நுபுவ்வத் பற்றிய வாதம்தான் என சட்டென்று கருதி விடுகின்றனர். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு புதிய மார்க்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு புதிய கலிமாவை கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை எனக் கருதுகின்றனர். நிச்சயமாக இது ஒருபோதும் சரியானதன்று.

எந்த இறைவன் மீது பொய் சத்தியம் செய்வது சாபத்திற்குரியவர்களின் வேலையோ அந்த இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகிறோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்கள் அப்படிப்பட்ட எந்த வாதமும் செய்யவில்லை; நாங்கள் அவர்களை அப்படிப்பட்ட நபியாக ஏற்றுக் கொள்ளவுமில்லை. மாறாக, அவர்கள் தமது நூல்களில் பலமுறை தெளிவுபடுத்தியிருப்பது போன்று, அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்திலும், மாணவராக இருந்ததனாலும் இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதற்காக அனுப்பப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் எந்த புதிய மார்க்கத்தையும் கொண்டு வரவில்லை. அவர்கள் எந்த புது கலிமாவையும் உருவாக்கவில்லை. மாறாக, அவர்களுடைய, அவர்களைப் பின்பற்றுபவர்களுடைய கலிமா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதே கலிமாதான். அதாவது லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார்.

வானமே! பூமியே! ஜின்களே! மனிதர்களே! நீங்கள் சாட்சியாக இருங்கள். நாங்கள் இறைவன் மீது ஆணையிட்டு இந்த சாட்சியைக் கூறியிருக்கின்றோம். மேலும் இந்த சாட்சியுடனேயே நாங்கள் இவ்வுலகை விட்டுச் செல்வோம். எங்கள் மார்க்கம் இஸ்லாம்தான்; எங்கள் வேதம் திருக்குர்ஆன்தான்; எங்கள் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள்தான். அவர்கள் காத்தமுன்னபிய்யீனும், எல்லா நபிமார்களையும் விட சிறந்தவர்களும், முந்தையவர்களுக்கும், பிந்தையவர்களுக்கும் தலைவர் ஆவார்கள். மேலும் நாங்கள் அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவர்களேயாவோம். எவர் இந்தக் கொள்கையைத் தவிர வேறு ஏதாவது கொள்கையை எங்களுடன் தொடர்புபடுத்திக் கூறுவாரோ அவர் எங்கள் மீது பொய்யை புனைந்து கூறுகிறார். அவர் எங்கள் மீது அநீதி இழைக்கிறார். நிச்சயமாக அவர் அதற்கு இறைவனுக்கு முன்னால் பதில் சொல்ல வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நுபுவ்வத் என்பதன் கருத்து ஒருபோதும் நமது எதிர் கருத்து கொண்டவர்களின் சிந்தனையில் இருக்கின்ற அந்த நுபுவ்வத் அன்று. மாறாக, இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் அவர்களின் மாணவராக இருந்ததால் அவர்களின் உயர்ந்த மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக இறைவன் புறமிருந்து வழங்கப்பட்ட ஓர் ஆன்மீக அந்தஸ்தாகும். இதன் கருத்து, இறைவனுடன் அதிகமாக

உரையாடுதல் மற்றும் இறைவனிடமிருந்து மறைவான செய்திகள் கிடைப்பதுமாகும். அதைத் தவிர வேறேதுமில்லை. மேலும் நாம் மேலே குறிப்பிட்டு வந்திருப்பது போன்று உண்மையில் நுபுவ்வத் என்பதன் கருத்து இதுதான். எந்தவொரு புதிய ஷரீஅத் இறங்குதல் என்பதன்று. அது (நுபுவ்வத்தில்) முற்றிலும் அதிகப்படியான விஷயமாகும். நமது நண்பர்கள் இந்த உண்மையைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

## வாதத்தின் சுருக்கமும் நூலின் முடிவும்

இப்போது நான் இறைவனின் அருளாலும் அவன் வழங்கிய நல்வாய்ப்பினாலும் இந்தக் கருத்து தொடர்பான எல்லா பகுதிகளின் வாதத்தை நிறைவு செய்து விட்டேன். அதாவது ஆரம்ப முன்னுரைக்குப் பிறகு முதன் முதலில் **திருக்குர்ஆனின் வசனங்களின் ஒளியில்** கத்மே நுபுவ்வத்திற்கான தீர்வு எடுத்து வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு **ஹதீஸுகளின் ஒளியில்** இந்த விவகாரம் பற்றி வாதம் செய்யப்பட்டது. அதன் பின்னர் நமது கொள்கைக்கு ஆதரவாக **சென்ற கால சான்றோர்களின் கூற்றுகள்** குறிப்பிடப்பட்டன. பிறகு **அறிவுப்பூர்வமான சான்றுகளினால்** நிரூபிக்கப்பட்டது. அதாவது இந்த உம்மத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்தில் மாணவராக இருக்கும் நிலையில் நிழலான உம்மத்தீ நபி ஆக முடியும் என்பது மட்டுமல்லாமல் இக்காலத்தில் நபித்துவத்தின் ஆற்றல்களைக் கொண்ட ஒரு சீர்திருத்தவாதியின் தேவை இருக்கிறது என காலமே அழைத்துக் கூறிக் கொண்டிருக்கிறது.

இந்த நான்கு சாத்தியமான வழிமுறைகளின் மூலமாகவே இஸ்லாத்தின் ஏதாவதொரு வாதத்திற்குட்பட்ட விவகாரத்திற்கு விளக்கமளிக்க முடியும்.மேலும் இந்த நான்கு அளவுகோலும் ஒட்டுமொத்தமாக நமது கொள்கைக்கு சான்று பகர்ந்திருக்கின்றன. *அல்ஹம்து லில்லாஹ்.* மிகச் சிறந்த உம்மத் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தில் சென்ற கால உம்மத்துகளை விட அதிகமாக ஆன்மீக அருட்கொடைகளின் வாசல் திறந்திருக்கின்றன என திருக்குர்ஆன் உரத்த குரலில் சாட்சி பகர்ந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் மற்ற உம்மத்துகளில் எவர் நுபுவ்வத்தைப் பெற்றாரோ அவர் முன்னர் சென்ற எந்த நபியையும் பின்பற்றியதனால் பெறவில்லை. மாறாக, நேரடியாகப்

பெற்றார். அதே நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கத்மே நுபுவ்வத்தின் அந்தஸ்தின் அருளினால் முஹம்மதிய்ய உம்மத்தில் இந்த வாசல் அவர்களின் மாணவராக இருக்கும் நிலையில்- அடிமையாக இருக்கும் நிலையில் திறக்கப்பட்டுள்ளது.

பிறகு ஹதீஸின் களத்தைப்பார்க்கும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தில் ஷரீஅத் அல்லாத நபி வர முடியும் என்பதற்கு பல ஹதீஸுகள் சாட்சி பகர்வது மட்டுமல்லாமல், எந்த ஹதீஸுகள் சந்தேகத்திற்குரியவையாக கருதப்படுகின்றனவோ அவற்றைப் பற்றி சிந்திக்கும்போதும், ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத், சுதந்திரமான நுபுவ்வத்தின் வாசல் மட்டும் அடைபட்டுள்ளது; நிழலான நுபுவ்வத்தின் வாசல் ஒருபோதும் அடைபடவில்லை என்பதே நிரூபணமாகின்றது.நிழலான நுபுவ்வத் என்பதன் கருத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொண்டர்களில் ஒருவர் அவர்களின் அருள்களிலிருந்து அருளைப் பெற்றவாறு அவர்களின் ஒளிகளிலிருந்து பிரதிபிம்பத்தை எடுத்து நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பெறுவதாகும். இறைதூதரிடம் தன்னை அர்ப்பணித்தவாறு பெறும் அந்த நுபுவ்வத் உண்மையில் அவர்களின் நுபுவ்வத்தின் பகுதியாகும்; வேறொன்றல்ல. எனவே இந்த விதமான நுபுவ்வத் இருந்தாலும் அவர்களே கடைசி நபியாக இருக்கிறார்கள்.

ஹதீஸுகளுக்குப் பிறகு சான்றோர்களின் கூற்றுகளின் அந்தஸ்து வருகின்றது. நபித்தோழர்களின் காலத்திலிருந்து தற்போதைய காலம் வரை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எடுத்து வைக்கும் ஏறக்குறைய அதே கருத்தை இஸ்லாமிய சான்றோர்கள் எடுத்து வைக்காத எந்த காலமும் செல்லவில்லை. இந்த சான்றோர்களின் தொடரில் முதல் கட்டமாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஆகியோரிலிருந்து ஆரம்பமாகிறது. மேலும் ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்), முஜத்தித் ஷேக் அஹ்மது சர்ஹிந்தி, ஹஸ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் முஹத்தஸ் தஹ்லவி ஆகிய மகத்தான சான்றோர்களின் காலத்தைக் கடந்து சென்றவாறு, கடைசியாக மத்ரஸத்துல் உலூம் தேவ்பந்து தோற்றுநர் மவ்லானா முஹம்மது காஸிம் நானோத்வி என்பவருடன் முடிவடைகிறது. இந்த காலத்திற்குப் பிறகு

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலம் ஆரம்பமாகி விடுகிறது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஷரீஅத் அல்லாத உம்மதி நபி தோன்றுவதை ஏற்றுக் கொண்டதன் காரணமாக நம்மை காஃபிர் என்றும், முர்தத் (மார்க்கத்தை விட்டு முகந்திருப்பி விட்டவர்) என்றும், இஸ்லாத்தின் வட்டத்தை விட்டும் வெளியேறியவர் என்றும் கூறப்படுகிறதென்றால், பிறகு ஏறக்குறைய நமது கொள்கையையே வெளிப்படுத்தி இருக்கின்ற இந்த பெரியார்களைப் பற்றி நமது எதிரிகள் என்ன கூறப்போகிறார்கள்?

இறுதியாக, அறிவுப்பூர்வமான சான்று என்ற களம் இருக்கிறது. இந்த களத்திலும் நமது கொள்கை இறைவனது தொன்மையான நடைமுறைக்கு ஏற்ப இருப்பது மட்டுமல்லாமல், காலத்தின் சாட்சியும், இயல்பின் அழைப்பும் எங்களுக்கு சாதகமாக இருக்கிறது என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டி விட்டோம். இந்த சாட்சி எத்தகையது என்றால், இதற்கு சாதகமாக அல்லாமா இக்பால், மவ்லவி அபுல் அஃலா மவ்தூதி வரையிலானவர்களின் தெளிவான சொற்களை நாம் அறிவித்திருக்கிறோம்.

இந்த நான்கு மகத்தான சாட்சிகள் இருக்கும்போது அவற்றில் ஒவ்வொரு சாட்சியும் உண்மையின் உயர்ந்த மினாராவாக இருக்கும்போது நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தை மறுப்பவர்களாவோம் என்றும், அவர்களை அவமதிப்பவர்களாவோம் என்றும், இஸ்லாத்தை விட்டு விட்டு புதிய ஒரு மார்க்கத்தை உருவாக்கிக் கொண்டோம் என்றும் ஒரு புதிய கலிமாவை உருவாக்கிக் கொண்டோம் என்றும் நம் மீது குற்றம் சாட்டுவது எவ்வளவு பெரிய பொய்யும், எவ்வளவு கொடுமையும், வற்புறுத்தலுமாகும்! *நவூது பில்லாஹ்.* எங்கள் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வளவு வேதனையுடன் (ஓர் (ஓர் உருது கவிதையில்) கூறுகிறார்கள்:

‘‘நாங்கள் முஸ்லிம்களின் மார்க்கத்தைக் கொண்டிருக்கிறோம்.

உள்ளத்தால் தூதர்களில் சிறந்தவரின் தொண்டர்களாவோம்

ஷிர்க்கையும் பித்அத்தையும் நாங்கள் வெறுக்கின்றோம்.

அஹ்மது (ஸல்) அவர்களின் பாதையின் மண்ணை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

## இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை

அனைத்து கட்டளைகளின் மீதும் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்.

இந்த வழியில் உள்ளத்தாலும் உயிராலும் நாங்கள் அர்ப்பணமாகின்றோம்.

உள்ளத்தைக் கொடுத்து விட்டோம்; இனி வெறும் உடல் மட்டுமே எஞ்சியுள்ளது.

அதுவும் அர்ப்பணமாகட்டும் என்றே ஆசைப்படுகிறோம்.

நீங்கள் எங்களுக்கு காஃபிர் என்ற பட்டத்தை சூட்டுகிறீர்கள்.

தண்டனை பற்றிய அச்சம் உங்களுக்கு ஏன் இல்லை?''

இதுதான் எங்கள் ஜமாஅத்தின் தோற்றுநரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றாகும். அதன் ஒவ்வோர் எழுத்தின் மீதும் நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம். *வ லஃனத்துல்லாஹி அலா மன் கஸிப (எங்கள் ஈமானுக்கு எதிராக பொய் கூறியவர் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்).* உலகம் இப்போது ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ ஆனால் உண்மை வெற்றி மேலோங்கியே தீரும் – இன்ஷா அல்லாஹ். இன்று எவர்களைப் பற்றி இஸ்லாத்தின் எதிரிகள் என்றும் தூய ரஸூல் (ஸல்) அவர்களை அவமதிப்பவர்கள் என்றும் கூறப்படுகிறதோ அவர்கள்தான் கடைசியில் உண்மையாளர்கள் என நிரூபணமாவார்கள். மேலும் இஸ்லாத்தின் வெற்றிக்கான ஓசை இவர்களின் பெயரிலேயே மேலோங்கும். இப்போது உலகம் எத்தகைய இக்கட்டான நிலையில் இருக்கிறதென்றால், இதற்கு அப்பால் செல்லும் வழிகள் பிரிந்து விடுகின்றன. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத் வெற்றியின் வழியிலேயே அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கும். இதை இறைவனின் பழமையான நியதி (தக்தீர்) நியமித்து விட்டிருக்கிறது.

நமது தூய ரஸூல் (ஸல்) அவர்களின் (என் உயிர் அவர்களுக்கு அர்ப்பணமாகட்டுமாக) மகத்துவத்தின் உயர் தகுதியும், இஸ்லாத்தின் உயர்வும் நமது எதிரிகள் கூறும் அந்த கொள்கையில் இல்லை; மாறாக, நாங்கள் கூறும் அந்தக் கொள்கையில் இருக்கிறது என உலகமும், (இன்று எம்மை) காஃபிர் எனக் கூறுகின்றவர்களின் சந்ததிகளும் கூக்குரலிட்டுக் கூறக் கூடிய நாள் வெகு தூரத்தில் இல்லை. கத்மே நுபுவ்வத் என்பது நமக்கும் மற்ற முஸ்லிம்களுக்கும் மத்தியில் தடையாக

இருக்கின்ற கடைசி அகழ் ஆகும். மேலும் நாம் அல்லாஹ்வின் அருளால் இந்த அகழை வெற்றியுடன் கடந்து விட்டால் அடுத்த களம் தெளிவானதாகும் - இன்ஷா அல்லாஹ். அந்த நாளை அல்லாஹ் அண்மையில் வரவைப்பானாக. நாம் கண்ட அந்த ஒளியை தடுமாறியிருக்கும் நமது சகோதரர்களுக்கும் அல்லாஹ் காணச் செய்வானாக. நாம் சுவைத்த வாழ்வின் நீரை அவர்களுக்கும் சுவைக்க வைப்பானாக. மேலும் ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன், அஃப்ஸலுர் ருஸுல், ஸய்யிது உல்தி ஆதம் அவர்களின் உயர்ந்த மகத்துவத்தையும், அவர்களின் உண்மையான உயர் தகுதியையும் அடையாளங்கண்டு உலகில் இஸ்லாத்தின் கூற்று மேலோங்கும் பொருட்டு இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதில் அவர்கள் நமக்கு உதவி செய்வார்களாக. உலகின் இறைவன் ஒருவனாக இருப்பதைப் போன்று இறைவனின் வேதமும், அவனுடைய தூதரும் ஒருவராக இருக்கும் வகையில் இதை அவர்கள் செய்வார்களாக. மற்றவையெல்லாம் இந்தக் கொடியின் கீழ் இருக்கின்றன. *வஸாலிக தக்தீருல் அஸீஸில் ஹகீம். வ ஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். (பொருள்: இது வல்லோனும் நுண்ணறிவுள்ளவனுமாகிய அல்லாஹ்வின் நியதியாகும். எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே உரியது என்பதே எமது இறுதி வாதமாகும்.)*

எளியவன்

**மார்க்கத் தொண்டன்**

**மிர்ஸா பஷீர் அஹ்மது**

27 வெள்ளிக்கிழமை மார்ச் 1953

ரப்வா

## பைஅத் நிபந்தனைகள்

### வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் உறுப்பினராக சேருபவர் பின்வரும் பத்து விஷயங்களில் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்:

1. நான் மரணமடைகின்ற வரை ஷிர்க் என்னும் இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வேன்.

2. பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமலிருத்தல், அநீதியிழைத்தல், ஏமாற்றுதல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகிய தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை அடக்கிக் கொள்வேன்.

3. இறைவனின் கட்டளையின்படியும், அவனுடைய தூதரின் கட்டளையின்படியும் ஐந்து வேளை தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். என்னால் இயன்றவரை தஹஜ்ஜுது என்னும் நடு இரவுத் தொழுகை, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது சலவாத்து ஓதுதல், நாள்தோறும் எனது பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டல் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபடுவேன். இறைவனின் பேருதவிகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனை நாள்தோறும் புகழ்ந்து வருவேன்.

4. பொதுவாக எல்லா மக்களுக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ, கைகளினாலோ, வேறு வகையாலோ தகாத எந்தத் தொல்லையும் கொடுக்க மாட்டேன்.

5. துக்கம், மகிழ்ச்சி, பணக்கஷ்டம், பணவசதி, இறைவனிடமிருந்து கிடைக்கும் அருள், அவனால் தரப்படும் சோதனை ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எந்த நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும்,

இன்னல்களையும் ஏற்க ஆயத்தமாக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகஞ்சுளிக்காமல் முன்னேறிச் செல்வேன்.

6. சடங்கு சம்பிரதாயங்களிலிருந்தும், மனத்தின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்வேன். திருக்குர்ஆனின் ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, இறைவனின் போதனையின்படியும், அவன் தூதரின் போதனையின்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக ஆக்கிக் கொள்வேன்.

7. தற்பெறுமையையும், அகம்பாவத்தையும் முற்றாக விட்டு விடுவேன். பணிவாக நடத்தல், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை அகியவற்றையே மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்.

8. மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்கு தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.

9. இறைவனின் படைப்புகளாகிய எல்லாருக்கும் தொண்டு செய்வதில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல் இறைவனுக்காகவே தொடந்து தொண்டு செய்வதில் ஈடுபட்டிருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களாலும் அருள்களாலும் என்னால் முடிந்தவரை மனிதகுலம் பயன்பெறும் வகையில் பணியாற்றுவேன்.

10. இறைவனுக்காக நல்ல விஷயங்களில் கட்டுப்படுவேன் என இந்த எளியவனுடன் நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலக தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கையே உயர்ந்ததாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.

**இஷ்திஹார் தக்மீலே தப்லீக்**

**12, ஜனவரி 1889**

**இறுதி நபித்துவம் என்பதன் உண்மை நிலை**